# ஊருணி'11

TACT

**TAMIL ACADEMY OF CULTURE AND TECHNOLOGY**

**தமிழ்க்கலை – தொழில்நுட்பக் கல்லூரி**




ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு

*With Best Complements of*

# Bala Mohan

**Real Estate Professional**

**For all your investments in real estate**

நம்பிக்கை திருப்தி முழுமையான சேவை



RED CARPET®
Royal Realty Ltd., Brokerage
Independently owned and operated

880 Ellesmere Road
Suite 204
Toronto, Ontario
M1P 2W6

**Bus: 416-284-5555**
**Cell: 416-301-1232**

தமிழ்க்கலை – தொழில்நுட்பக் கல்லூரி
TAMIL ACADEMY OF CULTURE AND TECHNOLOGY

# ஊருணி'11

19 ஆவது ஆண்டு மலர்

TACT

முயன்று வரலாற்றைப் படி
இயன்றால் வரலாற்றைப் படை
முடிந்தால் வரலாறாகவே வாழ்

TACT

# கல்லூரிப் பண்

வாழிய உலகத் தமிழர் கல்லூரி
வாழிய வாழிய வாழியவே
வளமார் தமிழும் கவின்கலை தொழில்நுட்பம்
தமிழினம் பெறவே வாழியவே

உலகத் தமிழினம் ஒன்றுபடவும்
ஒற்றுமை பெறவும் வாழியவே
யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்பதெம் இலக்கு வாழியவே

கனடாத் தமிழர் பல்கலை பெற்றே
ஒன்றாய் வளர்வோம் வாழியவே
இனமாய் அன்னை மொழியில் வளர்வோம்
நன்றாய் உலகில் வாழியவே

தமிழ்க்கலை – தொழில்நுட்பக் கல்லூரி
TAMIL ACADEMY OF CULTURE AND TECHNOLOGY
TACT
3150 Eglinton Ave, East, Suite 6, Scarborough, ON M1J 2H2 Tel : (416) 757-2006 Fax : (416) 757-2541

# தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரி – ஓர் அறிமுகம்

தமிழ்க்கலை தொழில்நுட்பக் கல்லூரியானது, கனடாத் தமிழ் மக்கள் சிறப்பாக இளந்தலைமுறை தமிழ்மொழியை, தமிழர் வரலாற்றை, தமிழிலக்கியங்களை அறிந்திருக்க வேண்டும். தமிழ்ப் பண்பாட்டை, தமிழ் விழுமியங்களை மறவாதிருக்க வேண்டும். அவற்றைப் போற்றிப் புரக்க வேண்டும் என்ற நோக்கோடு *1993* ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. இது வருவாய் நோக்கற்ற, பதிவு செய்யப் பெற்ற ஒரு நிறுவனமாகும். இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை மக்களாட்சி முறையில் தெரிவு செய்யப்படும் இயக்குநர் அவை இதனை நிருவகித்து வருகிறது. இதில் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட பகுதிநேர ஆசிரியர் பணிபுரிகின்றனர். இது தமிழ்த் தொடக்க நிலை பிரிவு, தமிழ்த் திறமை நெறிப் பிரிவு, தமிழ் நுண்கலைப் பிரிவு, பாடத்திட்டம் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுப் பிரிவு தேர்வுப் பிரிவு என ஆறு பிரிவுகளைக் கொண்டு இயங்கி வருகின்றது.

1. **தொடக்கப் பிரிவு**

மழலையர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை உள்ளடக்கிய தொடக்கநிலைதமிழ்ப் பிரிவைப் பதினான்கு வளாகங்ளில் நடாத்தி வருகின்றோம். இவ்வகுப்புகளில் தமிழ்ச் சிறார் தூய தமிழை ஒழுங்கான முறையில் கற்க வேண்டும் என்ற நோக்கோடு புலம்பெயர்ந்த மாணவருக்கெனப் பன்னாட்டு அடிப்படையில் ஆக்கப் பாடநூல்களைக் கற்பித்து வருகின்றோம். இந்நூல்கள் தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, தமிழர் விழுமியங்கள், தமிழர் வாழ்வியல் முதலியவற்றை புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் மாணவருக்குக் கற்பிப்பதற்கென ஆக்கப் பெற்றவை ஆகும். இப்பிரிவில் *1500* மாணவர் தமிழ் கற்கின்றனர்.

2. **தமிழ்த் திறமை நெறிப் பிரிவு**

ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையான மாணவருக்குத் தமிழ்த் திறமை நெறி வகுப்புகளைப் பத்து இடங்களில் நடத்தி வருகின்றோம். கல்லூரியின் நோக்கங்களை நிறைவேற்றும் வண்ணம் பன்னாட்டு அடிப்படையில் ஆக்கப் பெற்ற பாட நூல்களையே இவ்வகுப்புகளிலும் கற்பிக்கிறோம். இவ்வகுப்புகளில் கற்பதால் வழமையான பள்ளி வேலை பளுவைக் குறைக்கவும் நான்கு திறமைத் தேர்ச்சிகளைப் பெறவும் பல்கலைகழக நுழைவுக்கான சராசரி மதிப்பெண்களை உயர்த்தவும் பல்கலைகழகத்தில் தாம் விரும்பிய துறையைத் தெரிவு செய்யவும் புலமைப் பரிசில்களைப் பெறவும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இவை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ், தமிழர் பற்றிய ஆழ்ந்து அகன்ற அறிவைப் பெறவும் முடிகிறது என்பது குறிப்பிடத்தக்கது. *1996* ஆம் ஆண்டு இரண்டு வகுப்புகளோடு தொடங்கிய இத்துறை இப்பொழுது *42*வகுப்புகளோடும் *1300*க்கு மேற்பட்ட மாணவரோடும் இயங்கி வருவது இத்துறையின் வளர்ச்சிக்குத் தக்கசான்றாகும். இப்பிரிவைக் கல்விச்சபையோடு இணைந்து நடத்தி வருகிறோம்.

3. **தமிழியல் பட்டப்படிப்புப் பிரிவு**

பல்கலைக்கழக நுழைவு கிடைக்காமல் போனோர்க்கும் பல்கலைக்கழக நுழைவு கிடைத்தும் எமது தாயகத்தில் இடம்பெற்ற போரால் பட்டப்படிப்பை நிறைவு செய்ய முடியாமல் போனோர்க்கும் தமிழ், தமிழர் பற்றிய அறிவைப் பெருக்க விழைவோர்க்கும் ஒரு வாய்ப்பை வழங்கும் நோக்கோடும் எதிர் காலத்தில் கனடாவில் தமிழ் கற்பிக்க வல்ல நல்லாசிரியரை உருவாக்க வேண்டும் என்ற விருப்போடும் *1999*ஆம் ஆண்டு முதல் தமிழியல் பட்டப்படிப்பை நடத்தி வருகிறோம். இவ்வகுப்புகள் இப்பொழுது மிசிசுசாகா,

இசுகாபரோ ஆகிய இரண்டு இடங்களில் நடைபெற்று வருகின்றன. இவ்வகுப்புகளில் மரபு அடிப்படையிலான இலக்கண, இலக்கியங்களை மட்டுமன்றிக் கனடாச் சூழலுக்கு ஏற்றவாறும் வேலை வாய்ப்புத் தேவைகளைக் கருத்திற் கொண்டும் ஊடகவியல்,மொழிபெயர்ப்பியல்,ஆங்கிலம் முதலிய பாடங்களையும் கற்பித்து வருகின்றோம். இப்பயிற்சி நெறியைத் தமிழ் நாட்டிலுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தோடு இணைந்து நடத்தி வருகின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

## 4. தமிழ் நுண்கலைப் பிரிவு

கடந்த பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மக்களால் பயிலப்பட்டும் பேணப்பட்டும் வரும் தமிழிசை, தமிழ் ஆடற்கலை மற்றும் தமிழ் இன்னியங்கள் முதலியவற்றைக் கனடாச் சூழலிலுள்ள தமிழ் மாணவரும் பயில வேண்டும் என்ற நோக்கோடு நுண்கலை வகுப்புகளையும் நடத்தி வருவதோடு நுண்கலைத் தேர்வுகளையும் நடத்தி வருகின்றோம். இப்பயிற்சிநெறி தொடக்க நிலை முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. தமிழ் ஆடற்கலையைப் பல்கலைக்கழக நுழைவுக்கு ஒரு பாடமாகச் சேர்ப்பித்துக் கற்பித்து வருகின்றோம்.

## 5. பாடத்திட்டம் மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுப்பிரிவு:

மழலையர் வகுப்பு முதல் பட்டப்படிப்பு வரையான தமிழ்ப் பாட நெறிகளைக் கற்பிப்பதற்கான பாடத்திட்டங்கள், பாடநூல்கள், பயிற்சி நூல்கள் முதலியவற்றைத் தனித்தும் பன்னாட்டு அமைப்புகளோடு இணைந்தும் ஆக்கிவருவதோடு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியரது வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கோடு பயிற்சிப் பட்டறைகள் கருத்தரங்குகள், பணிக்காலப் பயிற்சிகள் முதலியவற்றையும் நடத்தி வருகின்றோம்.

## 6. தேர்வுப் பிரிவு:

கனடாவில் வாழும் தமிழ்ச் சிறார் தமது பள்ளிப் பாடங்களில் சிறந்து விளங்க ஊக்குவிக்கும் நோக்கோடு அறிவியல், ஆங்கிலமொழி மற்றும் கணிதத் திறன் தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்தி வருகின்றோம். இத்தேர்வுகள் ஒன்ராறியோப் பாடத்திட்டத்துக்கு அமைய ஒன்ராறியோ ஆசிரியரது வழிகாட்டலில் நடத்தப் படுகின்றன.

## பிற பயிற்சி நெறிகள்:

நிறைபோட்டி நிலவும் கனடாத் தொழிற் சந்தையில் கனடாவில் குடியேறும் புதிய தமிழ்க் குடிவரவாளர் பிற இன மக்களோடு போட்டியிட்டு வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் பொருட்டாகக் கணினித் தொழில்நுட்பம், தர நிருணயம் உள்ளிட்ட வினைத்திறன் பெருக்கும் பல்வேறு பயிற்சி நெறிகளையும் பயிற்றுவித்து வருகின்றோம். இவை மட்டுமன்றித் தமிழர் மாணவருக்கு சிக்கலாக உள்ள பாடங்களை எளிதாகப் புரிய வைக்கும் பொருட்டாக வீட்டுவேலை வகுப்புகளையும் தமிழ்ச் சிறாரது நலன் கருதித் தற்காப்புக் கலை வகுப்புகள், மனக்கணக்கு வகுப்புகள் முதலியவற்றையும் நடத்தி வழங்கி வருகின்றோம். மாணவரது ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கோடும் அவர்களது திறமைகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் விருப்போடும் நாற்றுமேடை மற்றும் அறுவடை விழாக்களையும் ஆண்டு தோறும் நடத்தி வருகின்றோம்.

## தமிழ் தழைக்குமா? எங்கள் கனவு பிழைக்குமா?

குடும்பச் சுமை சூழ்ந்து நின்று எம்மை வேறெதுவும் சிந்திக்க முடியாதவாறு வாட்டுகின்றது. ஒரு பொழுது விடிந்து விட்டால் அன்றைய வேலைகளைச் செய்வதற்குள்ளேயே பொழுது முடிந்து விடுகிறது. வேலை, வேலை என்று வாழ்வு வேகமாய் கழிகின்றது. நின்று நிதானிக்கும் முன்பு சூழ்நிலையின் இயல்பு முகத்தில் அறைந்து நிலைகுலைய வைக்கிறது. இச்சூழ்நிலைக்குள்தான் எமது வாழ்வு. இதற்குள் இருந்துதான் தமிழ் தலையெடுத்தாக வேண்டும்.

தமிழ்ப் பெற்றோருக்குப் பிறந்திருந்தாலும் தமிழைப் பேசத் தெரியாத, பேச மறுக்கிற பிள்ளைகள்! இவர்கள் மூலம்தான் தமிழ் பிழைக்கும் என்ற நிலை. என்ன வகையில், என்ன முறையில் தம் பிள்ளைகளுக்குத் தமிழைக் கொடுக்கலாம் என்று கவலைப்படுகின்ற தமிழ்ப் பெற்றோர் ஒரு வகையினர் என்றால் தமிழே தேவையில்லை என்று நினைக்கின்ற வேறு ஒரு வகையினர்.

எம் தமிழரைக் கண்டால் 'பிள்ளைகள் தமிழ் படிக்கிறார்களா?' என்று கேளுங்கள். 'ஓம்' என்று சொன்னார்கள் என்றால் உங்கள் மகிழ்ச்சியினை வெளிக்காட்டுங்கள். இல்லை என்றால், தமிழ்மொழி அழியும், நம் கண்முன்னாலேயே அழியும் என்பதை எடுத்துச் சொல்லுங்கள்.

நாம் உலகத்தை வென்றெடுக்க வேண்டாம். அந்தப் பெரிய வேலையை நாம் செய்ய வேண்டாம். எளிமையான எங்கள் தமிழ்ப் பெற்றோரை வென்றெடுப்போம். பெற்றெடுத்த எங்கள் குழந்தைகளை வென்றெடுப்போம். அவர்கள் தமிழையும் தமிழால் உலகையும் வென்றெடுப்பார்கள்.

தமிழின் எதிர்காலம், தமிழரின் எதிர்காலம் என்பவை பற்றிய வினாக்களுக்கு விடைகள் தெரிந்து, தெளிந்து விரைவான பயணத்துக்கு அணியமாக வேண்டும். அவ்வாறு அணியமான மாணவர்களின் படைப்புகளைத் தாங்கிய மலராக ஊருணி '11 உருவெடுத்து உங்களின் கைகளில் தவழ்கிறது.

எங்கள் மாணவர்களைப் பாராட்டுங்கள். ஊக்கம் கொடுங்கள். உறுதியான சொற்களைக் கூறுங்கள்.

நன்றி

சிவா தாட்சாயணி





## வாழ்த்துரை

கனடாவில்குடியேறியதமிழர்,சிறப்பாக இளந் தலைமுறையினர் தமிழ் மொழியை, தமிழ்ப் பண்பாட்டை, தமிழர் விழுமியங்களை, தமிழர் வரலாற்றை, தமிழ் இலக்கியங்களை அறிந்திருக்க வேண்டும் அவற்றைப் பேணிப் புரக்க வேண்டும் அதற்கு உறுதுணையாக விளங்க ஓர் அமைப்புத் தேவை என்ற நோக்கங்களை நிறைவு செய்யும் பொருட்டாக நிறுவப் பெற்ற தமிழ்க் கலைத் தொழில் நுட்பக் கல்லூரியானது, அகவை பத்தொன்பதை நிறைவு செய்யும் இவ்வேளையில் மாணவரது ஆக்கங்கள் தாங்கி வரும் ஊருணி மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் கலைத் தொழில் நுட்பக் கல்லூரியானது நிறுவப் பெற்ற நோக்கை நிறைவேற்றும்பொருட்டாகத் தொடக்க நிலை, இடைநிலை, உயர்நிலை என மும்மட்டங்களில் அஃதாவது இளம் மழலை வகுப்பு முதல் முதுகலைப் பட்டப்படிப்பு வகுப்பு வரைத் தமிழ் வகுப்புகளை நடத்தி வருவதை நான் உங்களுக்குக் கூற வேண்டியதில்லை. மேலும் மாணவரது தமிழ்க் கலை, பண்பாட்டு அறிவுகளை வளர்க்கும் நோக்கிலும் அவர்களது ஆற்றல்களை வெளிக் கொண்டு வரும் விருப்பிலும் நாற்றுமேடை, அறுவடை விழாக்களை நடத்தி வருவதனையும் நீங்கள் அறிவீர்கள்.

இவ்வாறாகத் தமிழ்க் கலை தொழில் நுட்பக் கல்லூரியானது தொடக்க நிலையில் இருந்து பலபடி முன்னேற்றம் கண்டிருந்தாலும் இன்னும் பல துறைகளில் மேம்பாடு காண இடமுண்டென்றால் அது தவறாகாது. எடுத்துக்காட்டாக கடந்த பத்தொன்பது ஆண்டாக இயங்கும் ஓர் அமைப்பு, சொந்தக் கட்டடம் ஒன்றைக் கொண்டிராமல் இன்னமும் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. மேலும் தமிழ்த் திறமை நெறி அல்லாத பிறபாடங்களைக் கற்பிக்க இதுவரை உரிமம் பெறாத நிலை காணப்படுகிறது. எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகளை நீக்கி நிறைவோடு இயங்க வேண்டுமென்பது எனது பேரவா ஆகும்.

மேலும் பெற்றார், ஆசிரியர், அறிஞர் மற்றும் நலன் விரும்பிகளைக் கல்லூரியின் உறுப்பினராக இணைத்து, உறுப்பினர் வழித் தெரிவு செய்யப்படும் ஓர் இயக்குநர் அவையோடு கல்லூரி நிறுவிய நோக்கத்தின் உச்சியை நோக்கி வீறு நடை போடத் தங்கள் அனைவரது ஆதரவையும் வேண்டி விடை பெறுகின்றேன்.

வி.சு. துரைராஜா
தலைவர்



## வாழ்த்துரை

வணக்கம்,

தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு இவ்வாண்டுடன் பத்தொன்பது ஆண்டுகளாகின்றன. மொழி அடையாளமே இன அடையாளத்தைக் காக்கும் கருவி. எமது மொழி தனியே மொழியாக இல்லாமல் பண்பாட்டுக் கருவியாகவுள்ளது. அக்கருவி இப்பனிப்புலத்திலே துருப்பிடித்துப் போகாமல் இருக்க வேண்டுமானால் எமது அடுத்த சந்ததி தமிழைப் பெற்றாக வேண்டும். அவர்கள் தமிழைக் கற்றால்தான், தமிழைப் பெற்றால்தான் தமிழ் பிழைக்கும். தழைக்கும். தமிழர்தம் அடையாளம், பண்பாடு, வரலாறு, விழுமியங்கள் என்பவை எமது தமிழ்க் குழந்தைகளுக்கு ஊட்டப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தையே தாகமாகக் கொண்டு இக்கல்லூரி தொடங்கப்பட்டது. அத்தகைய உயரிய நோக்கத்தைக்கருத்திற்கொண்டு இக்கல்லூரியைத் தொடங்கியவர்களுக்கு கனடாவாழ் தமிழ் மக்கள் தமது நன்றியை, பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ள கடப்பாடு உடையோராவர். கல்லூரியால் பயனடைந்தபல்லாயிரக்கணக்கான மாணவர்களின் சாட்சியங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஒரு சிறிய தொகையான மாணவர்களையும், ஆசிரியர்களையும் கொண்டு ஆரம்பித்த இக்கல்லூரிச் செடி இன்று பெரு மரமாகி வளர்ந்து நிற்கின்றது. தொடக்க நிலைப் பிரிவில் 14 இடங்களிலே தனது கிளைகளைப் பரப்பி 1300 வரையான மாணவர்களுடனும் 120க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுடனும் வளர்ந்து வருகின்றது. இதே போன்று ரொறன்ரோ கத்தோலிக்க கல்விச் சபையுடன் இணைந்து நடத்தும் தமிழ்த் திறமைத் தேர்ச்சி வகுப்புக்கள் பத்து இடங்களிலே 1200 மாணவர்களுடனும் 56 ஆசிரியர்களுடனுமான கற்பித்தலுடன் நடைபெற்று வருகின்றது.

எமது கற்பித்தல் முறைமையில் எமது இனத்தின் மரபு, வரலாறு, கொண்டாட்டங்கள், பழக்க வழக்கங்கள் என்பன மொழியோடு ஊட்டப்பட்டு வருகின்றன. தொடக்க நிலைப் பிரிவினருக்காக நாற்றுமேடை என்றும், தமிழ்த் திறமைத் தேர்ச்சி மாணவருக்காக அறுவடை என்றும் கலை, பண்பாட்டு நிகழ்வுகளையும் நடத்தி வருவது யாவரும் அறிந்த தொன்றாகும்.

இதனூடாக மாணவர்களினுள்ளே புதைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர முடிகின்றது. கல்லூரியிலுள்ள மற்றைய பிரிவுகள் பற்றி ‘எமது நோக்கங்கள்’ என்னும் பகுதியிலே விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இதனை எழுதிக்கொண்டிருக்கும் பொழுது ஏனோ எனது மனதிலே தோன்றுகிறது ஒரு பெருங்குறை. கருத்து முரண்பாடுகள் எம்மக்களின் ஒற்றுமையைக் குலைத்தபடி இருக்கிறது. நாம் புலம்பெயர்ந்து வாழும் இந்நாட்டிலே, எம்மின மக்கள் தமக்குள்ளே இருக்கும் கருத்து முரண்பாடுகள், வேற்றுமைகளை மறந்து, சரியான பாதையிலே பயணித்து - முன்னரெல்லாம் எப்படி நடந்து கொண்டோமோ அதே நிலைக்குத் திரும்பினால் மட்டுமே எமது இனத்திற்கு இங்கு விடிவு ஏற்படும். ஒரு பாடலிலே வரும் வரிகள் நினைவிற்கு வருகின்றது.

“ உண்மையைச் சொல்வதற்குப் பயமெதற்கு – எல்லாம் உணர்ந்தவர் போல் நடிக்கும் நடிப்பெதற்கு கண்கண்ட காட்சிகட்கு விளக்கெதற்கு! – நெஞ்சில் கள்ளமில்லாதவர்க்குப் பயமெதற்கு…!”

எமது கல்லூரி இவ்வாறுவளர்ச்சியடைந்து வருகின்றதென்றால் அது தமிழின் மேல் பற்றுக் கொண்ட பெற்றார்கள், சேவையையே குறிக்கோளாகக்கொண்ட அதிபர்கள், ஆசிரியர்கள், தொண்டர்கள், ஆர்வம் காட்டும் மாணவர்கள்தான் எனக்கூறினால் மிகையாகாது. இந்நாட்டில் எமது தனித்தன்மை, பண்பாடு பேணப்பட வேண்டும். தமிழினம் தமிழர் என்னும் பெயரோடு இங்கே பல ஆண்டுகளுக்குப் பின்னரும் வாழ, தமிழ் வாழ வேண்டும். தமிழ் இல்லாவிட்டால் தமிழர் இல்லை. தமிழர் இல்லாவிடின் தமிழ் இல்லை.

வாழ்க தமிழ் ! வளர்க தமிழ் !!

கதிர் சங்கரப்பிள்ளை
நிறைவேற்று இயக்குனர்

## ஊருணியில் நனைந்த படி...

ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு.

நல்ல நீர் உள்ள நீர் நிலை எவ்வாறு தாகத்தோடு வருகின்ற உயிர்கள் எல்லாவற்றுக்கும் பயன்படுகின்றதோ, அதே போல் எல்லோரையும் அன்புடன் நேசிக்கும் பேரறிவாளனுடைய செல்வமும் எல்லோருக்கும் பயன்படும் என்ற கருத்தைத் தெரிவிக்கும் இக் குறள் கைம்மாறு கருதாத ஒப்புரவைத் தெரிவித்து நிற்கின்றது.

மழை எந்தக் கைம்மாறும் கருதாமல் பொழிகின்றது, அதனால் பூமி பச்சை ஆடை கட்டி எழிலாக இயங்குகிறது. உயிர்கள் உயிர்ப்போடு இலங்குகின்றன. ஊர் நடுவே நல்ல மரம் பழுத்தால் எத்தனை உயிர்கள் பசியாறுகின்றன. வேப்பமரம் தனது முழுப் பாகத்தையும் நாம் மருந்தாகப் பயன்படுத்துவதற்குத் தந்துதவுகின்றதே. முற்றத்து வேம்பு தரும் வேப்பமர வாசனை சுமந்த தென்றல் எம்மீது தவழும் இதம் வேறு எங்கே கிடைக்கும்? இந்த எடுகோள்கள் ஒப்புரவு அறிதலுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

ஒப்புரவு தான் தங்களது பணி என்றுணர்ந்து காலமறிந்து, நேரமறிந்து. உதவி செய்யும் பண்பாளர்கள் பலர் உள்ளார்கள். அத்தகைய செம்மல்கள் எம்மிடையே உள்ள ஊருணிகள் ஆவார்கள். இத்தகைய ஊருணி மனிதர்கள் மன்னுயிர் ஓம்பும் மனம் படைத்தவர்கள். ஊருணி மனிதர்களால் மட்டுமன்றி ஊருணி நிலையங்களாலும் ஒப்புரவு பேணப்படுகின்றது. அதனாலேதான் உலகம் இயங்குகிறது.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்.

என்றார் புரட்சிக்கவி பாரதியார்.

கனிமரச்சோலைகளை நிறுவுதலும், நன்னீர்ச் சுனைகளை உருவாக்குதலும், அன்னதான மடம் வைத்தலும், ஆலயங்களைக் கட்டுதலும், குமுகாயக் கடமைகளைக் கட்டமைப்பதும் மிக முக்கியமானவை என்று கூறிய பாரதியார் இத்தகைய எல்லா ஒப்புரவோடு கூடிய விடயங்களை விடவும் எழுத்தறிவித்தல் தான் கோடி நன்மை தரும் என்கிறார்.

எழுத்தறிவித்தல் மிக முக்கியமானது என்ற மகாகவியின் சிந்தனை தரும் செய்தியில் பொதிந்துள்ள சக்தி மிக்க கருத்து என்னவெனில், அறிவுள்ள, சிந்திக்கும் திறன் படைத்த, கசடறக் கற்ற ஒரு குமுகாயம் என்பது ஒரு சிறந்த குமுகாயமாக மிளிரும் என்பதாகும். குமுகாயத்துக்கு மிக, மிக அவசியமான பல நல்ல ஊருணிகளைக் குறிப்பிட்டு விட்டு இவை எல்லாவற்றையும் விட எழுத்தறிவு தான் மேன்மையானது என்கிறார் பாரதியார் என்றால் அறிவு என்பது, அதுவும் எழுத்தறிவு என்பதும் எத்துணை அவசியம் என்பது எமக்குப் புலனாகும். அந்த அறிவு பேரறிவாளன் திரு என்ற நிலையில் பயன்பட்டால் அந்தக் கல்விச் செல்வத்துக்கு நிகரானது வேறேது?

இன்றைய புலம்பெயர்ந்த தமிழ்க் குமுகத்தில், தமிழ் அறிவு என்பதும், தாய்மொழி வளம் என்பதும், தாய்மொழி வழியே சிந்திப்பது என்பதும், தாய்மொழியில் எழுத, பேச, வாசிக்க, கிரகிக்க, எனத் தாய் மொழி வழியே பண்பாட்டு மரபுகளை, விழுமியங்களைப் பேணி அதன் வழியே தடம் பதிக்க வேண்டும் என்ற உணர்வோடு செயலாற்றுவதும் பாரதியார் கூறிய கோடி புண்ணியங்களுக்குள் அடங்குவதாகும்.

வெள்ளிப் பனிமலை மீதுலாவுவோம் மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம் என்று வேறோர் இடத்திலே குறிப்பிட்ட கவிஞரின் கூற்றை மெய்யாக்குவது போல் இன்று கனடாவிலே வெண்பனி மேல் உலாவரும் ஈழத்தமிழர்களாகிய நாங்கள் தமிழ் எழுத்தறிவித்தல் என்ற நிலைப்பாட்டில் எமது நாளைய சந்ததியை ஆற்றுப்படுத்தி ஊருணிகளாக நிற்போம்

ஊருணி மலரை ஆண்டு தோறும் வெளியிடும் தமிழ் கலைத் தொழில் நுட்பக் கல்லூரி ஓர் ஊருணியாகும். பல்வளம் ஓம்பும் பண்போடு கலைவளம் வளர்க்கும் இந்த ஊருணி தமிழ்ச் சிறார்களின் தமிழ்த்தாகம் தீர்க்கும் ஒருநன்னீர் நிலையாக இயங்குவது ஒரு பெருமைக்குரிய விடயமாகும். மழையாக, வேம்பாக, பழமரமாக, நன்னீர்ச் சுனையாக விளங்கும் எங்களது ஊருணிக் கல்லூரி வள்ளுவம் கூறிய ஊருணிக்குச் சரியான எடுத்துக்காட்டாகும்.

ஒப்புரவினால் வரும் கேடெனின் அஃது
ஒருவன் விற்றுக்கோள் தக்கதுடைத்து (220)

திருமதி. கலாநிதி குலமோகன்

# பண்டைத் தமிழர் போற்றிய பண்பாட்டு விழுமியங்கள்

ஓர் இனத்தின் வாழ்க்கைநெறி, மொழி, கலைகள், வரலாறு, பொருண்மியம், வாழ்விடம் முதலிய பல்வேறுபட்ட பிரிவுகளைக் கொண்ட மாந்தர் கூட்டத்தின் பழக்கங்கள், சடங்குகள், விழாக்கள், கடமைகள் போன்ற விடயங்களை எடுத்து இயம்புவனவாக அமைந்ததுதான் பண்பாடு ஆகும். பண்பாடானது காலத்துக்கும் வாழும் இடத்துக்கும் ஏற்ப மாறும் தன்மை கொண்டது. பண்பாடும் நாகரிகமும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள் போன்றன. பண்பாடு அகத்தோற்றம் அதாவது "உணர்வு" பண்பாடாகும். தோற்றம், அலங்காரம் நாகரிகமாகும். இந்த வகையில் பண்டைத் தமிழர் போற்றிய பண்பாட்டு விழும்பியங்களில் முக்கிய பங்கை எடுக்கும் விருந்தோம்பல் பெரியோரை மதித்தல், செய்நன்றி மறவாமை, மானம், வீரம், ஒழுக்கம் போன்றன குறிப்பிடத்தக்கவை ஆகும்.

### விருந்தோம்பல்:

பண்டைத் தமிழர் பண்பாட்டில் முக்கிய இடம் பெறுவது விருந்தோம்பல் ஆகும். சங்கத்தமிழர் பண்பாட்டை இலக்கியச் சான்றுகள், ஆய்வாளர் கருத்துகள் மூலம் அறியலாம். சங்க காலத்திலும் விருந்தோம்பல் பற்றி வள்ளுவர்,

"இருந்தோம்பியில் வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று விருந்தோம்பலே மிகமுக்கியம் எனக் குறிப்பிடுகிறார். இவ்வகையில் எம் பண்டைத்தமிழர் இதற்குச் சளைத்தவர்கள் இல்லை என்பதை சிலப்பதிகாரத்தில் விருந்தோம்பல் சிறப்பினை இளங்கோவடிகள் எடுத்துரைக்கிறார். அதாவது கண்ணகியும் கோவலனும் ஊரைவிட்டுச் செல்லும்போது கவுந்தியடிகள் தன்னுடன் அழைத்துச் சென்ற மாதுரி என்ற பெண்ணிடம் கூற, அவள் மகள் ஐயை அவர்களுக்குச் செய்யும் விருந்தோம்பல் தமிழ்ப்பண்பாட்டின் உச்சத்தை உலகுக்குக் காட்டுகிறது.

இது மட்டுமல்ல அப்பூதி அடிகள், இளையான் குடிமாற நாயனார், சிவனடியார், சிறுத்தொண்டர் போன்றோரின் விருந்தோம்பல்களை வரலாற்றுப் பதிவுகளில் காணக் கூடியதாக உள்ளது. அத்தோடு இல்வாழ்க்கையின் மிகச் சிறந்த பண்பாகவும் போற்றப்படுகிறது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனு மது"
என்று குறள் கூறுகிறது.

விருந்தோம்பல் உலகத்தோர் அனைவருக்கும் பொதுவிழுமிய பண்பாடு என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனாலும் தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் மிகச் சிறந்த உயர்ந்த பண்பாகும்.

### செய்நன்றி மறவாமை:

அடுத்து தமிழர் பண்பாட்டு விழுமியங்களில் செய் நன்றி மறவாமையும் உயர்ந்த ஒன்றாகப் போற்றப்படுகிறது. தமக்கு ஒருவர் உதவி செய்வதை வாழ்நாளில் மறக்காமல் அவர்களை மதித்து நடத்தல் எமது பண்பாடாகும். அதனை வள்ளுவர்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"
என்று கூறுகிறார்.

ஒருவர் செய்த நன்றியை மறந்தவனுக்கு உய்வில்லை என்று கூறுகின்றார் வள்ளுவர் பெருமான்.

எதுவித பலனையும் எதிர்பாராது செய்வது நன்றென்றும் கூறுகிறார். தமிழர் தம் வாழ்வில் திருநாளாகக் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் உழவுக்கும், உயிரினங்களுக்கும் உதவிய கதிரவனுக்கு நன்றி தெரிவிக்கும் பண்பாட்டை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அத்தோடும் செய்நன்றி மறவாமை பற்றி நாட்டுக்காக உயிர்விட்ட வீரமறவரை நடுகல் வழிபாடு செய்து அவர்களை நினைவு கூர்ந்து நன்றியைத் தெரிவிப்பது தமிழர் பண்பாடாகும்.

### ஒழுக்கம்:

தமிழர் பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றான "ஒழுக்கம்" என்ற பண்பாடு பண்டைத் தமிழர்களால் போற்றப்பட்ட ஒன்றாகும். ஒழுக்கம் என்பது நாம் நல்ல வழியில் நடத்தலாகும். தீயவற்றைப் பார்க்காமல் பேசும் தீயவர்களுடன் கூடாமை நல் ஒழுக்கமாகும்.

பக்கம் 22 செல்க......

# International Languages Symposium

பன்னாட்டு மொழிகளுக்கான பத்தாவது மாநாடு *04-09-2011* ஆம் நாள் அன்று ரொரன்ரோ பெருநகரில் உள்ள டொன் பொசுகோ உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. ரொரன்ரோ பெருநகரில் பல்வேறு மொழிகளைக் கற்கும் மாணவரில் மிகச் சிறந்த மாணவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு பரிசில்களையும் கேடயங்களையும் பதக்கங்களையும் வழங்கினர். ரொரன்ரோ பெருநகரில் மேல்நிலைத் தமிழ்க் கல்வி பயிலும் மாணவரிடையே இருந்து விரோசி ஸ்ரீகணேசன், சுகீரா சவீஸ்கரன், கௌரிசங்கர் ஸ்ரீபத்மநாதன், சகானா செல்லத்துரை, தபீசன் வீரசிங்சம் ஆகிய ஐந்து சிறந்த மாணவருக்கு மேற்படி கேடயங்கள், பரிசில்கள் கிடைத்தன. இம்மாணவர் தமிழ்க் கலைத் தொழில் நுட்பக் கல்லூரியில் பல்வேறு வளாகங்களிலும் கல்வி பயில்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. பரிசில்கள் வாங்கிய மாணவர்களை கல்விச்சபை அதிகாரிகளுடனும் மற்றும் தமிழ் திறமைச்சித்தி ஆசிரியர்களுடனும் நிற்பதை கீழேயுள்ள படங்களில் காணலாம். இந்த பரிசில்களைப் பெற்ற மாணவர்களுக்கு தமிழ்க் கலைத் தொழில் நுட்பக் கல்லூரி *500* டொலர்ளை அவர்களின் மேற்படிப்பிற்காக வழங்கும்.


The tenth International Languages Symposium took place on 04-09-2011 at Don Bosco Catholic Secondary School, Toronto. Students that excelled in the language courses that they took place throughout Toronto were identified and awarded at this event. Of the high school students taking Tamil courses in Tamil Academy of Culture and Technology throughout Toronto, the following five students were selected and awarded with the prizes stated above: Virroshi Sriganesh, Sukeera Suveesharan, Gowrisanger Sripathmanathan, Sahana Sellathurai, and Thabesan Veerasingam. Below, you can see photos of the students with the School Board officials as well as with Tamil Credit Course teachers. Tamil Academy of Culture and Technology will also give these award winners $500 scholarship money towards their post-secondary education.







வளாகங்களின் அதிபர் மற்றும் நிறைவேற்று இயக்குனர்



தலைமைப் பணிமனை ஊழியர்கள்




இளங்கலை மாணவரும் விரிவுரையாளரும்




01/15/2011 12:28


01/15/2011 12:34


01/15/2011 11:41


ஔவையார்
வளாகம்


ஔவையார்
வளாகம்
01/16/2011 12:15


ஔவையார்
வளாகம்












## பூக்கள்



1. பூக்கள் மிகவும் அழகானவை.
2. பூக்களில் பல வகை உண்டு.
3. பூக்களில் பல நிறங்கள் உண்டு.
4. பூக்கள் மணம் வீசும்.
5. பூக்கள் இதழ்களாக இருக்கும்

லக்ஷிகா தவசீலன்
முதுமழலை



# பிறந்தநாள்

எனது பிறந்தநாள் மார்கழி 11, 2000. எனக்கு பத்து வயது. எனது பிறந்தநாளில் நாங்கள் கோயிலுக்கு போவோம். நான் சந்தோசமாக இருப்பேன். எனது பிறந்தநாளை எனது வீட்டில் கொண்டாடினேன். எனது நண்பர்களையும் அழைத்தேன். நண்பர்கள் எனக்கு பரிசுகள் தந்தார்கள். அவர்களுடன் அன்று விளையாடினேன். அம்மா அப்பாவும் பரிசுகள் தந்தார்கள். புது உடுப்பு போட்டேன். எல்லோரும் எனக்கு வாழ்த்து தேரிவித்தனர். அன்று ஒரு மகிழ்ச்சியான நாள்.

கபிசன் தவசீலன்.

ஆண்டு: 5



## வாருங்கள் என் தோழர்களே!

எம் மொழி காப்போம்
எம் இனம் காப்போம்
எம் பண்பைக் காப்போம்
எம் ஒற்றுமை காப்போம்

எம் விடுதலை நினைப்போம்
எம் கொடியை நினைப்போம்
எம் உறவை நினைப்போம்
எம் வீரனை நினைப்போம்
எம் நாட்டையும் நினைப்போம்

சத்தியம் செய்வோம்
விட்டதைப் பிடிப்போம்
இழந்ததை மீட்போம்
சாவையும் ஒழிப்போம்
சரித்திரம் படைப்போம்
வாருங்கள் என் தோழர்களே!

கபிலாணி சிவராஜா
தரம்:6
ஔவையார் வளாகம்





## எங்கள் விடுமுறை

எனது பெயர் பிறமியா.
நாங்கள் கடந்த கோடை விடுமுறைக்கு யாழ்ப்பாணம் சென்றோம். அங்கு எமது குடும்ப உறவினர்களோடு தங்கினோம். அவர்களுடன் தமிழில் பேசி விளையாடினோம். அங்கு தங்கியிருந்த வேளை பிரசித்தி பெற்ற நல்லூர் கோவிலுக்குப் போய் கும்பிட்டோம். அங்கு திருவிழாக்கள் மிகவும் சிறப்பாக நடந்தது. திருவிழாக்களை நாங்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கண்டு களித்தோம். அங்கு எமக்குப் பிடித்த விளையாட்டுப் பொருட்களையும் வாங்கினோம்.

மாணவி:- பிறமியா அருள்ராஜ்
தரம்:- 1, வளாகம்:- அவ்வையார்
ஆசிரியர்:- சித்திரா முருகானந்தன்



# நான் வசிக்கும் நாடு

நான் வாழும் நாடு கனடா. கனடா மிகவும் அழகான நாடு. புலம் பெயர்ந்து வாழும் என் பெற்றோர் இன்று கனடாவில் வசிக்கின்றார்கள். என் குடும்பத்தினரோடு நான் கனடாவில் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நாட்டில் பல் இன மக்களும் வாழ்கின்றார்கள். எல்லோரும் ஒற்றுமையாக கனேடிய மண்ணில் வாழ்கின்றார்கள். இங்கு நிலவும் காலநிலை மாற்றம் எனக்கு மிகவும் பிடிக்கும். பனிக்காலத்தில் வெண்பனிகொட்டும். என் நண்பர்களோடு பனிப்பொம்மை செய்து விளையாடுவேன்.

கனடாவில் இரண்டு மொழிகள் தேசிய மொழியாகபேசப் படுகின்றது. ஆங்கிலம், பிரேன்ஸ் இரண்டும் மக்களால் பெரிதும் பேசப்படுகின்றது கனடாவின் பிரதமர் ஸ்ரீபன் காபர். நான் ஒரு கனேடியன் என்று சொல்வதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.



ஆக்கம்:தனுஜன் நந்திவரன்
தரம்: 3
ஆசிரியர்:சு.லோகேந்திரன்
அவ்வையார் வளாகம்



# கை கொடுப்போம்

புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழராகிய நாம், எம் தாய் நாட்டில் வாழும் சக உறவுகளுக்கு உதவி செய்தல் மிக அவசியமும், நற்பண்பும் ஆகும். சிறுவர்கள் கல்வி கற்க வசதியின்றியும், மக்கள் இருக்க இருப்பிடங்கள் இன்றியும், மருத்துவ வசதிகள் இன்றியும், உண்ண உணவில்லாமலும் பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள். பாரெங்கும் புகழோடு வாழும் எம் தமிழ் இனம் எம் தாயக மண்ணில் இடம் பெற்ற போர் அனர்த்தங்களினால், இன்று பலர் அங்கவீனர்களாக வாழ்கின்றார்கள். இத் தாயக மக்களுக்கு மாணவ இளைஞர்களாகிய நாம் பண உதவி மட்டுமன்றி எம்மால் இயன்ற சரீர உதவிகளையும் செய்தல் வேண்டும்.

பேரினவாதிகள் எம் மக்களை கொன்று குவித்தார்கள். விமானங்கள் குண்டு மழை பொழிந்தன. தமிழரின் பாரம்பரிய கட்டிடங்கள், அவர்களது இல்லங்கள் பாடசாலைகள் யாவும் அழிக்கப்பட்டன. கனடாவில், வாழும் மாணவர்களே! நாம் இங்கு சகல வசதிகளோடும் வாழ்கின்றோம். எத்தனையோ தமிழ் மாணவர்கள் பண வசதியின்றி தமது உயர் கல்வியை தொடர முடியாமல் கூலிக்கு வேலை செய்து தமது தேவைகளை நிறைவேற்றுகின்றார்கள். மாணவர்களாகிய நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்கள் தங்குவதற்குரிய கருணை இல்லங்கள் அமைத்து, அவர்களையும் சந்தோஷமாக வாழ வழி அமைப்பதே உலகெங்கும் வாழும் தமிழர்களது கடமை ஆகும்.

மருத்துவம், கல்வி, நிலையான இடம் போன்ற சகல வசதிகளோடும் எம் இனமக்கள் வாழ, புலம் பெயர்ந்து வாழும் எம் தமிழ் மக்கள் ஒன்று சேர்ந்து, எம் மக்களின் இன்னல்களை துடைக்க ஒற்றுமையாக கை கொடுப்போம். நானும் என் போன்ற சிறுவர்களும் மாணவர்களோடு சேர்ந்து என்றும், எப்போதும் எம் இன மக்களுக்கு கை கொடுப்பதே, தலையாய கடனும், கடமையும் ஆகும்.

நன்றி வணக்கம்

ஆக்கம் - அபிசன் நந்திவரன்
தரம் - 6
ஆசிரியார் - கோகுலநாதன்
அவ்வையார் வாளகம்




## ஆசிரியர்

சிறுவர் மனதில் இடம் பிடிப்பார் எம் ஆசிரியர்
ஓர் சிறுவரின் வாழ்க்கையின் ஆரம்பம் எம் ஆசிரியர்
கல்வியும் கற்று
பெருமையும் பெற்று
எம்மை வளர்த்து உருவாக்கி
ஓர் உண்மையான மனிதன் ஆக்கி
உலகத்தில் ஓர் இடத்தை அமைத்தவர்

கம்பருக்கு ஆசிரியர் உண்டு
வள்ளுவருக்கு ஆசிரியர் உண்டு
தொல்காப் பியருக்கும் ஆசிரியர் உண்டு
அப்படிப்பட்ட உலகில்:
ஒவ்வொரு மனிதனுக்கும் நிழல் போல் இருப்பார்..
அறிவுக் கண்களை திறந்து வைத்திடும்
ஆசிரியர்களுக்கு:
என் இனிய வணக்கம்!
"ஆசிரியர் வாழ்க கங்கை மழை பொழிக."

நன்றி!

அவ்வையார் வளாகம்
ஆக்கம் –அக்சயா ரகுநாதன்
தரம்–7



## நவராத்திரி

நவராத்திரி என்பது ஒன்பது இரவுகள் சக்தியை வேண்டி வழிபடப்படுகிறது. இவ் விரதம் புரட்டாதித் திங்களில் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள ஒன்பது நாட்களும் அம்பாளை நினைத்து அனுட்டிக்கப்படும். நவராத்திரி பூசையில்,



உலகத் தாயாகிய சக்தியைக் கும்பத்தில் எழுந்தருளச் செய்து குழந்தையாகவும், குமரியாகவும், தெய்வமாகவும் போற்றி வழிபடுவார்கள்.

நவராத்திரி விரதத்தை அதிகமாகப் பெண்களே கடைப்பிடிப்பார்கள். மாணவர்கள் தாம் கல்வியில் சிறந்து விளங்க வேண்டி விரதம் இருப்பார்கள். முதல் மூன்று நாட்களும் வீரத்தை வேண்டி துர்க்கையையும், அடுத்து மூன்று நாட்களும் செல்வத்திற்குத் தலைவியாகிய இலக்குமியையும், இறுதி மூன்று நாட்களும் கல்விக்கரசியாம் சரசுவதியையும் அலைமகள், மலைமகள், கலைமகள் எனப் போற்றி வழிபடுவார்கள்.

இவ்விரதம் தோன்றுவதற்குத் காரணமாகியது, நாரத முனிவர் மூன்று சக்திகளுக்கிடையில் ஏற்படுத்திய வாதமே ஆகும். முத்தேவிகளும் கல்வியா, செல்வமா, வீரமா சிறந்தது என வாக்கு வாதப்பட்டு, இறுதியில் மூன்றும் சிறந்தது என்னும் முடிவுக்கு வந்தனர். இதை விளக்குவதே நவராத்திரி விரதம் ஆகும்.

நவராத்திரியில் அம்பாளைத் துதித்து வழிபடுபவர்களுக்கு அவள் சகல நலங்களையும் நல்குவாள் என்பது மட்டுமல்லாமல் வீடு பேறாகிய முத்தியையும் கொடுப்பாள். அம்பாளுக்கு வேண்டியது ஆழமான எளிமையான பக்தியே ஆகும்.

மாணவர்: வைதினி விஜயகுமார்
ஆசிரியர்: திரு விஜயநாதன்

## பண்டைத் தமிழர் போற்றிய ......

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்;

என்று ஒழுக்கம் உயிரை விட மேலாக மதிக்கப்படுவதை தமிழர் பண்பாட்டில் காண்கிறோம். எனவே நாம் நமது இளையயோருக்கு நல்ல பழக்கங்களையும், நல்ல அறிவுரைகளையும் கூறி ஒழுக்கம் தவறாது வாழ வழி செய்யவேண்டும். ஒரு தனி மனிதனின் ஒழுக்கக்கேடு அவனைச் சார்ந்த குமுகத்தையே பாதிப்படையச் செய்யும். பண்டைத் தமிழர் ஒழுக்கத்திலிருந்து நீங்காமல் வாழ்ந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை.

இவ்வாறு தமிழரது பண்பாடு, நாகரிகம் போன்றவையே தமிழினத்தை தனித்துவமாய் உலகுக்குத் தெரியப்படுத்துகிறது. தமிழர்களது பண்பாட்டு விழுமியங்களே தமிழர்களது வரலாற்றை எடுத்துரைக்கும் சான்றுகளாக விளங்குகின்றன.

பண்டைத் தமிழர்களது வரலாறு, அன்றாட வாழ்க்கை, ஒழுக்கம், கல்வி கொடை, வீரம், இல்லறம், விழாக்கள், விருந்தோம்பல் பழக்க வழக்கங்கள் கலைகள், ஆடையாபரணங்கள் என்பன பண்டைத் தமிழரின் பலவகை விழுமியங்களாகும். இப்பண்பாட்டு விழுமியங்களைப் புலம் பெயர் தமிழர்களாகிய நாமும் பேணிப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவர் கடமையுமாகும்.

அற்புதராணி சிறிகாந்தன்
தமிழியல், இளங்கலை

# ஒற்றுமை



ஆணிவேர் தாயகத்தில்
விழுதுகளோ வேறிடத்தில்
கனடாவில் விழுதுகளாய்
கால் பதித்தோம் - உண்மைதான்
தாயகத்தை மறந்தோமா?
இல்லை நம் தாய் மொழியை
மறந்தோமா?

ஒன்றுபட்ட தமிழர் நாம்
கனடாவில் வலுவுள்ள குமுகமாய்
நாம் வளர கையோடு கை கோர்த்து
ஒன்று பட்டு உழைத்திடுவோம்
ஒன்றுபட்டு உயர்ந்திடுவோம்
ஒற்றுமைக்கு ஏது தாழ்ப்பாள்?
வென்றிடும் அகிலமெல்லாம் வெற்றியே நம் சொத்தாகும்.

சிற்றறிவுயிர்கள் எல்லாம் சிறந்திடும் ஒற்றுமையில்
பகுத்தறிவுள்ள தமிழர் நாங்கள் மாறிடல் நியாயமாமோ?
தமிழர் வரலாறு காட்டி நிற்கும் நிகழ்வுகள் அனைத்திலுமே
வேற்றுமை தந்த இன்னல் வேண்டிய மட்டும் கண்டோம்.

இமயத்தில் கொடியேற்றி இறுமாந்த தமிழினத்தை
அந்நியர்கள் வரிசையாய் அடிமை
கொண்ட உண்மை நாமறிவோம்
ஏன் இந்த இழி நிலை?

எம்மவர் வேற்றுமையால் வந்த நிலை
இந்த நிலை அறிந்திருந்தும் - கனடாவில்
தமிழனை தமிழன் கொல்லும் நிலை - வரலாமோ?

உணர்ந்திடுவோம் உண்மை நிலை
உறுதியுடன் ஒன்றிணைவோம்
தவறுகளை திருத்திடவே - தக்க
வழிகாட்டல் பெற்றிடுவோம்.

பெற்றோரே பெரியோரே!
பெருமை மிகு தமிழ் தலைவர்களே!
தமிழ் இளையோர் எமக்கு
தக்க வழிகாட்டல் தந்திடுவீர்

உங்களுக்குள் நீங்கள்
ஒன்றுபட்டு நின்றால்தான்
வளரும் இளம் தமிழர் நாம்
உங்கள் வழி பார்த்து நடந்திடுவோம்!

தமிழருக்கு வேற்றுமை தந்த தலை விதி மாற்றி
கனடாவில் வலுவுள்ள குமுகமாய் நாம் வளர
ஒற்றுமை என்பதே உரந்தருமாதலால்
என்றும் ஒற்றுமை கொள்வமேல்
உயர்வையும் கொள்வமே!



மாணவர்: கேசினிசுதன் கிருபாலிங்கம்
ஆசிரியர்: சி.சிவச்செல்வி

## கல்வி



கனடாவில் வலுவுள்ள குமுகமாய் நாம் வளர
கல்வித் தரத்தினை உயர்த்திடுவோம் கருத்தோடு
எத்துறையை எடுத்தாலும்
எண்ணிய எண்ணியாங்கு எய்திடுவோம் திண்மையுடன்
தமிழ் இளையோர் அனைவருமே

புல் எடுத்தே வில் சமைத்து கதிரவனை சுட்டு வீழ்த்தும்
வல்லவனின் உருவாக்கம் வந்திடும் நற்கல்வியினால்
நாடிழந்து ஏதிலியாய் தமிழர் இங்கே வந்தாலும்
எட்டும் அறிவினில் எவர் எமக்கு நிகராவர்
என்று எண்ணும் அளவிற்கு எய்திடுவோம் மேன்மைதனை
தமிழ் இளையோர் கல்வியிலே

கலையா அறிவியலா வேதியலா இயற்பியலா
கணினியா மருத்துவமா பொறியியலா சட்டமா
அனைத்தையுமே
துறைசார்ந்த வல்லுனராய் துறைபோகக் கற்றிடுவோம்
சாதனையால் நம் இனத்தின் வேதனையை துடைத்தெறிவோம்
புகலிடத்து வசதிகளை புரிந்து நாம் பயன்படுத்தி
கல்வியிலே வல்லவராய் பண்பினிலே நல்லவராய்
பார் போற்ற தமிழனென தலை நிமிர்ந்து வாழ்ந்திடுவோம்.

'இன்ரநெற்', 'எம்.எஸ்.என்', 'பேஸ் புக்'
இவையெல்லாம் நம் கவனத்தை
கலைத்து விடும் கவனக் கலைப்பான்கள்
கனடாவில் பல உண்டு
நம் குறிக்கோளை குழப்பிவிட குறி பார்க்கும் இவையெல்லாம்.
இவற்றை கல்விக்காய் கையாள்தல்
நன்றேதான் – நம் காலத்தை
வீண் விரயம் ஆக்கிட நாம் விடலாமோ?

அழிக்கப்படும் இனத்தின் ஆக்க விழுதுகள் – நாம்
வேடிக்கை பார்த்திடவா கனடாவில் வாழுகிறோம்?
புகலிடத்து அறிவை நாம் முழுமூச்சோடு உட்கொண்டு
தாய் மொழியாம் தமிழை நம் கண்ணெனவே கைக்கொண்டு
ஆகிடுவோம் மேதைகளாய் அனைத்து துறைகளிலும்.

கல்வி அறிவொன்றே நம்மவர்க்கு சொத்தாகும்
நாமிழந்தவையை மீட்டுத் தரும் வித்தாகும்
வித்தகராய் கல்வியிலே விழுதெறிந்து கிளை பரப்பி
எதிர்காலத் தமிழ் இளையோர் கல்விக்கு வழி காட்டி
கனடாவில் வலுவுள்ள குமுகமாய் நாம் வளர
கண்டிடுவோம் நல்லறிவை
கற்றிடுவோம் கல்வியினை.

மாணவர்: பிரியதர்சன் லோகநாதன்
ஆசிரியர்: சி.சிவச்செல்வி

## தொழில் முனைப்பு ஆற்றல்

கனடாவில் வலுவுள்ள
குமுகமாய் நாம் வளர - கருத்தூன்றி
தொழில் முனைப்பு ஆற்றலை
நாம் வளர்த்திடுவோம்
எதிர்பாரா ஊறுபாட்டை எதிர் கொள்ளும் மனவலுவும்
எண்ணியதை எண்ணியாங்கு எய்திடும் ஓர் உள வலுவும்
தோல்விதனை வெற்றியாய் மாற்றிவிடும் மனப்பாங்கும்
தளராத ஊக்கமும் தாழாத உழைப்பும்
தந்திடுமே தொழில் முனைப்பு ஆற்றலை நம் தமிழரிடம்.

அணுகுண்டு அழித்தொழித்த
யப்பானைப் பாருங்கள்!
அயராத உழைப் பொன்றே
துணையாக இன்றுலகில்
தொழில் முனைப்பில் முன்னணியில்!

புகலிடத்து வாய்ப்புகளை
வழியறிந்து பயன்படுத்தி
வையகத்தோர் எமை நிமிர்ந்து
பார்க்கும் அளவிற்கு
வகையறிந்து தொழில் முனைந்து
வரலாறு படைத்திடுவோம்.

வீதிக்கு ஒரு கோயில்
அமைத்துவிட்டால் போதாது
விதம் விதமாய் உணவகங்கள்
திறந்து விட்டால் போதாது
விதி மாற்ற வகை கூறும்
கல்வி நிலையங்கள் தமிழருக்காய்
பல அமைப்போம்
நீதி தவறாது நிர்வகிப்போம்.

வைப்பகம், மருத்துவம், கைத்தொழில்கள் அனைத்திலும்
தொழில் முனைந்து ஆற்றிடவே
கடன் வழங்கும் நிலையங்கள்
கூட்டுறவாய் அமைத்திடுவோம்.

கல்லணை கட்டியதும் கப்பல் ஓட்டியதும் - கருங்கல்லில்
கோயில் கட்டி முடித்ததுவும் இன்றுவரை உலகத்தோர்
எம் இனத்தின் பெருமை கூற
அந்த வழி வந்த தமிழர் நாம்
பழம் புகழில் இளைப்பாறல் பழிப்புக்கு இடமன்றோ!
புது புது நுட்பங்கள் கற்றறியும்
தமிழ் இளையோர் நாம் சேர்ந்து
கனடாவில் வலுவுள்ள குமுகமாய் வளர்ந்திடவே
பல் தொழிலும் முனைந்தாற்ற
முனைந்திடுவோம் தீரமுடன்.



மாணவர்: அன்ட்ரு யூட் தேவதாஸ்
ஆசிரியர்: சி. சிவச்செல்வி

# கனடாவில் வலுவுள்ள குமுகமாய் நாம் வளர...



## அரசியல்

கனடாவில் வலுவுள்ள
குமுகமாய் நாம் வளர
ஒற்றுமையும் கல்வியும்
தொழில் முனைப்பும் போதுமா?
இல்லை இல்லை!
அரசியலில் நம் தமிழர்
காலூன்ற வேண்டும் இங்கே.

அரசியலே அனைத்தையும்
ஆண்டிடும் ஆதலால்
அரசியலில் புகு வழிகள்
அறிந்து நாம் புகுந்திடுவோம்
ஊருக்கு உபதேசம்
எனக்கில்லை என்ற நிலை
உண்மையிலே மாற்றிடுவோம்.

சொல் ஒன்று செயலொன்று
கொண்ட நிலை மாற்றி நாமே
சொல்வதையே செயலாக்கி
சோர்வின்றி உழைத்திடுவோம்
தக்கார் தகவிலரை தமிழரிலே கண்டறிந்து
தக்க இளையோர்க்கு
தலைமையினை தந்திடுவோம்.

அரசியலை உழைப்பாக்கி வாழும்
இழிநிலையை அடியோடு அகற்றிடவே
அயராது உழைத்திடுவோம்
அரசியலே குப்பையெனும்
அகராதி தனை நீக்கி
அரசியலை அறமாக்கி
அகிலத்தை ஆண்டிடுவோம்.

மாணவர்: அபிசா மதுரலிங்கம்
ஆசிரியர்: சி.சிவச்செல்வி


# நவராத்திரி விழா

நவராத்திரி ஒரு சக்தி வழிபாட்டு விழா ஆகும். இவ்விழா தமிழர்களால் கொண்டாடப்பட்டு வரும் ஒரு பண்பாட்டு விழா என்றும் கூறலாம். இது தமிழர்களின் விழா அல்ல. இவ்விழா ஆரியர்களின் வருகையால் ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்பின் மூலம் தமிழர் பண்பாட்டினுள் நுழைந்தது. நவராத்திரி புரட்டாதி மாதத்தில் வரும் முதல் வளர்பிறை அன்று ஆரம்பமாகி ஒன்பது நாட்கள் நீடிக்கும். "நவராத்திரி" என்பதன் பொருள்: "நவ" என்றால் ஒன்பது மற்றும் "ராத்திரி" என்பது இரவு. ஆகவே நவராத்திரி என்பதன் பொருள் ஒன்பது இரவுகள் ஆகும்.

நவராத்திரி விழாவின் ஒன்பது இரவுகளில், முதல் மூன்று இரவுகள் வீரத்தைக் குறிக்கும் தெய்வமாகிய துர்க்கைக்காகக் கொண்டாடப்படுகின்றது. அடுத்த மூன்று நாட்களும், செல்வத்தைக் குறிக்கும் தெய்வமாகிய இலக்குமிக்காக கொண்டாடப்படுகிறது. இறுதி மூன்று நாட்களும், கல்வி தரும் தெய்வமாகிய சரசுவதிக்காகக் கொண்டாடப்படுகிறது. இத்தெய்வங்களை தமிழர்கள் ஒவ்வொரு நாளும் வெவ்வேறு தானியங்கள் மற்றும் பூக்கள் வைத்து வழிபடுவார்கள். இதுவே நவராத்திரியின் முக்கிய சிறப்பாகும்.

நவராத்திரியின் இறுதியில் ஆயுத பூசை, சரசுவதி பூசை மற்றும் ஏடு தொடக்கல் ஆகியன நடைபெறும். ஆயுத பூசை நவராத்திரியின் எட்டாம் நாள் நடைபெறும். ஆயுத பூசை அன்று, ஆயுதங்கள், விவசாயத்திற்கு தேவைப்படும் பொருட்கள் போன்றவை கடவுள் முன்னே வைக்கப்பட்டு வணங்கப்படும். சரசுவதி பூசை அன்று, மாணவர்கள் தாங்கள் படிக்கும் புத்தகங்களை இறைவன் முன்னாள் வைத்து வணங்குவார்கள். ஏடு தொடக்கல் அன்று பெற்றோர்கள் தங்கள் மூன்று முதல் ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்கு முதல் முறையாக ஏடு தொடக்கி வைப்பார்கள்.

இதுவரை பார்த்தது தமிழர் நவராத்திரி கொண்டாடும் முறைகள். இனி, வட இந்தியர்கள் கொண்டாடும் முறைகளைப் பார்ப்போம். வட இந்நியர்கள் ஒன்பது நாட்களும் சக்தியின் ஒன்பது முகங்களையும் வணங்குவார்கள். அவை: துர்க்கா, பத்ரகாளி, அம்பா, அன்னபூர்னா, சர்வமங்களா, பைரவி, சண்டிகா, லலிதா மற்றும் பவானி



ஆவன. நாம் விஜய தசமி கொண்டாடுவது போல் இவர்கள் தசரா என்னும் பண்டிகையை கொண்டாடுகிறார்கள். இந்நாளில் மக்கள் தங்கள் வீட்டிற்கு ஒன்பது சிறுமிகளை அழைத்து அவர்களைத் தெய்வமாக வணங்குவர். அச்சிறுமிகளின் கால்களை கழுவி விட்டு, அவர்களுக்கு உணவு வழங்குவார்கள். இதுவே, வட இந்தியர்கள் நவராத்திரியை கொண்டாடும் முறை.

தமிழர் கொண்டாடும் பண்பாட்டு விழாக்களில் நவராத்திரி விழாவும் ஒன்று. இவ்விழா தமிழர்களின் விழா இல்லை. இவ்விழாவை தமிழர்களாகிய நாமும் வட இந்தியர்களும் வெவ்வேறு முறையில் கொண்டாடினாலும், நாம் இருவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றோம்.

மாணவர்: வினோதினி ஆனந்தராஜன்
ஆசிரியர்: விஜயநாதன் பேரின்பநாதன்
























22
ART




EW YOR
PS





## தமிழ் நூல்கள்

தமிழில் பழைமை வாய்ந்த பல நூல்கள் உள்ளன. அவற்றுள் புறநானூறும் ஒன்றாகும். அது தமிழருடைய வீரத்தைக் கூறும் நூல் ஆகும். சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றன தமிழருடைய பண்பாட்டு வரலாறுகளைக் கூறுகின்றன. திருக்குறள், நாலடியார் என்பவை அற நூல்கள் ஆகும். இவை மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதைக் கூறுகின்றன.

பாரதியார் கவிதைகள், பாவேந்தர் கவிதைகள் தற்கால நூல்களுள் மிகச்சிறந்தவை ஆகும். தமிழில் உள்ள நல்ல நூல்களைத் தேடிப் படிப்போம்.

மாணவர்: அனிக்கா தயானந்தன்
ஆசிரியர்: மங்கை குகமூர்த்தி

## தமிழிசை

தமிழர் கலைகளை அறுபத்து நான்காக வகுத்தனர். நடனம், நாடகம், இசை, சிற்பம், ஓவியம் என்பன அவற்றுள் சிலவாகும்

அழகுக் கலைகளுள் இசை சிறந்த இடத்தைப் பெறுகின்றது. செவி வழியாக உள்ளத்தைக் கவரும். இசை உயிர்களைத் தன்பால் ஈர்த்து இசைய வைப்பதால், அதற்குத் தமிழர் இசை எனப் பெயரிட்டனர். தமிழிசை பழைமையும் செழுமையும் கொண்டது.

இசைக்கு இலக்கண நூல்கள் இருந்தன. ஒளியில் ஏழு வகையான நிறங்கள் இயங்குதல் போல், ஒலிகளும் ஏழு வகையாக இயங்குகின்றன. கல்லிலும் இசை எழுப்பும் நுட்பத்தைத் தமிழர் அறிந்திருந்தனர். கல்வெட்டுகளும் குகை ஓவியங்களும் இதற்குச் சான்றாக இன்றும் உள்ளன. சிலப்பதிகாரம் இசைபற்றி மிக விரிவாகக் கூறியுள்ளது.

மாணவர்: யதுசன் அகிலன்
ஆசிரியர்: ஜெயந்தி சிதம்பரநாதன்

## முத்தமிழ்

எங்கள் தாய்மொழி தமிழ்மொழி ஆகும். தமிழை முத்தமிழ் என்று பெருமையாகக் கூறுவோம். முத்தமிழ் என்றால் இயல் - இசை - நாடகம் என்று கூறுவோம். இசை கலந்த பாடலோடு நடிப்பதைக் கூத்து என்பர். கூத்து நாடகத்துக்குள் அடங்கும்

மாணவர்: யதிசன் அகிலன் தயானந்தன்
ஆசிரியர்: ஜெயந்தி சிதம்பரநாதன்






## வாணி விழா

*வாணி விழாவினிலே*
*வாசிக்க நான் எடுத்த*
*வண்ணக் கவிதை ஒன்று*
*வர்ணிக்கும் பல செய்தி!*
*வாணி என்றும் தேவி என்றும்*
*வஞ்சி என்றும் வரலக்சுமி என்றும்*
*காளி என்றும்*
*கலை வாணி என்றும்*
*கௌரி என்றும் அம்மை என்றும்*
*உந்தனுக்கு பல பெயர்கள்*
*ஊரினிலே பகிர்ந்திடுவர்!*
*சொந்தம் போல் உனை எண்ணி*
*உள்ளக் கிடைக்கையைக் கூறுகின்றேன்*

*சிறந்த அரசனும்*
*செங்கோல் ஆட்சியும்*
*திறம்பட வேண்டுமெனில்*
*திருத்தமான கல்வி வேண்டும்!*

மாணவர்: கஜன் தயானந்தன்
ஆசிரியர்: ஜெயந்தி சிதம்பரநாதன்







தனிநாயகம்









தனிநாயகம் வளாகம்
சந்தியா
எனது வீடு

# தமிழ்த் திருமணம்



ஆக்கம் : வைஷிகி ரவீந்திரன்
வகுப்பு : வளர்நிலை 4
தனிநாயகம் வளாகம்









தாமோதரனார்









## தமிழும் நானும்

நான் யார்? என்ற வினாவுக்கு மிகச் சரியான விடை நான் ஒரு தமிழ்ச் சிறுவன் என்பதாகும். நான் ஒரு தமிழ்ச் சிறுவனாக, ஒரு தமிழ் மாணவனாக, ஒரு தமிழ்ப் பிள்ளையாக,வாழ்வதற்கும், வளர்வதற்கும், எனக்கென ஒரு அடையாளத்தைத் தருவது எனது தாய்மொழி ஆகும். தமிழ் என்று சொல்லும் போது அமிழ்தாக இனிக்கிறதே. முத்தமிழ், பைந்தமிழ், செந்தமிழ், அருந்தமிழ். நற்றமிழ், சீரிளமைத்தமிழ், வளர்தமிழ், இன்பத்தமிழ்,என்று பலவாறு அழைக்கப்படும் எனது அன்னைமொழி அளவிட முடியாத பெருமைகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தத் தமிழ் இன்று புலம்பெயர் தமிழாகவும் உலகை உலா வந்துகொண்டிருக்கின்றது.

உலகை உலா வரும் எனது தாய்மொழி, என்போன்ற தமிழ்ச் சிறுவர்களின் நாவில் நின்று நடம் பயின்று, நடை, உடை, பாவனை என்று, எங்கும் தமிழாக, எதிலும் தமிழாக மிளிர வேண்டும்.தமிழ் என்போன்ற சிறுவர்களின் வீட்டுமொழியாக வேண்டும். கலையும், கலாசாரமும், பண்பாடும் பழக்கவழக்கமும், விளையாட்டும்,எம் மொழிவழியே வரவேண்டும்.ஏன் சிந்தனை கூடத் தாய்மொழி வழியே வரும்போது அதன் திறன் ஆக்கபூர்வமானது என்கிறார்கள் மொழியியல் ஆய்வாளர்கள்.

தமிழ் என்னை அடையாளப்படுத்தியுள்ளது. அந்த அடையாளம் எனக்குப் பெருமையைத் தருகின்றது, நான் தமிழை என் தாய் மொழியாகப் படிக்கின்றேன். என் உயிராக மதிக்கின்றேன்.என் விழியாகக் கொண்டு அதன்வழிகாட்டலில் நடக்கின்றேன்.தமிழ் எனக்கு வழி காட்டுகின்றது. இப்படித்தான் வாழ வேண்டுமென்று வழிப்படுத்துகின்றது.என்னை ஆற்றுப்படுத்தும் ஆற்றல் மிக்க வித்தகத் தமிழ் என்னுள் விதையாக நிற்கின்றது. அதனுள் ஒரு துளியாக நிற்கின்றேன் நான்.

ஆக்கம் செல்வன் அபிமன்யு குலமோகன்

தரம் -8 தாமோதரனார் வளாகம்.



# தைப்பொங்கல்


துளசி தயாளன்
தாமோதரனார் வளாகம்

உலகம் முழுதும் வாழும் தமிழர்களால் தை முதல் தேதியன்று கொண்டாடப் படுவது தைப் பொங்கல். இது தமிழர்களின் பண்டிகை களில் முதன்மையானது. பொங்கல் பண்டிகை என்பது அறுவடைத் திருநாள் ஆகக் கொண்டாடப்படுகிறது. ஆண்டு முழுவதும் நமக்கு உதவி புரியும் இயற்கைக்கும், விவசாயத்திற்குப் பயன்படும் கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் நாளாக பொங்கலைக் கொண்டாடி மகிழ்கிறோம். பொங்கல் பண்டிகை நான்கு நாள் பண்டிகை ஆகும். மார்கழி கடைசி நாள் போகிப்பண்டிகை கொண்டாடப் படுகிறது. அந்நாளில் பழையன கழித்து புதியன புகுத்தல் வழக்கம்.



தை முதலாம் திகதி தைப்பொங்கல் ஆகும். அதனைத் தொடர்ந்து மாட்டுப் பொங்கல் அடுத்து சிற்றில் பொங்கல் எனக் கொண்டாடப்படுகிறது. பொங்கல் என்பதற்கு "பொங்கிவழிதல்" பொங்குதல் என்பது பொருள் ஆகும். தோரணங்கள் கட்டி புதியபானையில் புது அரிசியிட்டு, பால் விட்டு, சர்க்கரை இட்டுப் பொங்கி வரும் போது "பொங்கலோ, பொங்கல்" என்று கூறி கதிரவனுக்கு வாழையிலையில் பொங்கல் படையில் இட்டு பழங்களுடன் விளக்கேற்றி வணங்குவது பொங்கல் பண்டிகை ஆகும்.

அத்துடன் அன்று புத்தாடை அணிந்து, உறவினர் களுடன் கூடி உண்டு மகிழ்தல் சிறப்பாகும். தை முதல் தேதியன்றே தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் நாள் ஆகும். தைப்பொங்கல் விழா தமிழீழம், தமிழ்நாடு, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பிய நாடுகள், வடஅமெரிக்கா தென் ஆபிரிக்கா மொரிசியசு என தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படுகிறது. இவ்விழா சமயங்கள் கடந்து அனேக தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. தமிழர் பண்பாட்டின் அடையாளம் பொங்கல் திருநாள் ஆகும்.





# புறாவும் எறும்பும்

ஒரு புறா மரத்தில் இலைப் பறித்துக் கொண்டிருந்தது. அப்போது கீழே ஒரு எறும்பு தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்டது. உடனே புறா மரத்திலிருந்து இலை ஒன்றை பறித்து தண்ணீரில் போட்டது. எறும்பு இலையின் மீது ஏறி தண்ணீரிலிருந்து தப்பிக் கொண்டது. அப்போது ஒரு வேடன் புறாவை குறி பார்த்தான். உடனே எறும்பு வேடனின் காலில் கடித்தது. வேடனின் குறி தவறியது. புறா தப்பிப் பறந்து போனது. எனவே நாம் ஒருவருக்கு உதவி செய்தால் எமக்கும் தக்க சமயத்தில் உதவி கிடைக்கும்.

நிராஜ்
Gr. 1.
165 — தாமோதரனார் வளாகம்



## தொல்காப்பியம்

இன்று கிட்டும் நூல்களில் மிகத்தொன்மையாது தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணம் ஆகும். தமிழ் மொழியின் பெருமையையும் தமிழ் மக்களின் அறிவு மேம்பாட்டையும் உலகறியச் செய்யும் நூல் இது. தொல்காப்பியத்தின் ஆசிரியர் தொல்காப்பியர் எனப்படுகிறார். பல புலவர்களின் வரலாறு சரிவர அறியப்படாதவாறு இவர் வரலாறும் அறியப்படவில்லை. தொன்மையான தமிழ் மரபுகளைக் காக்கும் நூலை இயற்றியமையால் இந்நூல் தொல்காப்பியம் எனப் பெயர் பெற்றதாக கூறப்படுகிறது.

தொல்காப்பியரின் காலம் பற்றி அறிஞர்களிடையே பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. மிகப்பலர் இவர் கி.மு. 5 அல்லது கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்குரியவர் என்று கூறுகின்றனர். சங்க இலக்கியங்களில் தொல்காப்பியத்துக்கு மாறான வழக்காறுகள் உள்ளன. எனவே தொல்காப்பியம் சங்க இலக்கியங்கட்குப் பல நூற்றாண்டுகள் முற்பட்ட நூலே என்பது மிகப்பலர் கருத்தாகும்.

இந்நூல் சூத்திர யாப்பில் அமைந்துள்ளது. இதில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பிரிவுகள் கொண்டது. ஒவ்வொன்றிலும் ஒன்பது இயல்கள் அமைந்துள்ளன.

எழுத்ததிகாரத்தில் தமிழ் எழுத்துக்களாகிய உயிர் பன்னிரண்டும் மெய் பதினெட்டுமாகிய முப்பதும் குறில் நெடில் என்றும் வல்லினம், மெல்லினம், இடையினம், என்றும் பாகு படுத்தப்படுவது பற்றிக் கூறப்படுகிறது. அத்தோடு தமிழ் ஒலிகள் பிறக்கும் முறையையும் அதன் வரிவடிவத்தையும் எடுத்துக் கூறியுள்ளார். இவ்வதிகாரத்தில் தொல்காப்பியர் பண்டு தமிழ் நாட்டில் வழங்கிய இசை இலக்கணத்தைக் குறிக்கிறார்.

மாதங்களின் பெயர்களை இகர ஈற்றிலும் ஐகார ஈற்றிலும் மட்டுமே பேசுகின்றார். எனவே இன்றைய மாதப் பெயர்கள் பழமையானவை என்றே கருத வேண்டியுள்ளது.

மாணவர்: பெனிற்றா றெயினோல்ட்
ஆசிரியர்: கலாநிதி குலமோகன்



# கனடாவில் இளையோர் நிலை

கனடா வனப்பு மிக்க நாடு. வளம் நிறைந்த நாடு. பல நாட்டு மக்களும் பல இன மக்களும் தத்தம் நாடுகளில் நிலவும் அரசியல் குழப்பம், பொருளாதார சிக்கல், உள்நாட்டுப் போர் காரணமாக கனடாவிற்குள் ஏதிலிகளாக வந்து சேர்ந்தனர். ஒரு சிலர் சட்டத்திற்கு அமைவாகவும் வந்தனர். இலங்கைத் தமிழ் மக்களும் வந்து சேர்ந்தனர். அவ்வாறு வந்தோரில் இளைஞர்களின் நிலையை ஆராய்வோம்.

இளைஞர் வருங்காலத்தின் பெரும் பொக்கிசங்கள். இவர்களை ஒழுக்கசீலர்கள், முன்னேறத் துடிப்பவர்கள், வழிதெரியாமல் தவிப்போர், நெறியை மறந்தவர் எனப் பல வகையாகப் பிரிக்கலாம். இவர்கள் இவ்வாறு பல வகைப்பட்டிருப்பதற்குக் கனடாவின் பல்பண்பாடு, சுதந்திரம், பொருளாதாரம் என்பனவும் காரணிகளாக அமைகின்றன.

தாய் நாட்டில் தமிழர்கள் ஒழுக்கம் உயிரினும் மேலானது என்ற கோட்பாட்டில் கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து சிறப்பித்தவர்கள். இங்கும் பிள்ளைகள் ஒழுக்கத்தின் உயர்வை உணர்ந்து ஒழுக்க சீலர்களாகவே வாழ்கிறார்கள். இப்படியான ஒழுக்கசீலர்களால் முன்னேறக் கூடியதாக இருக்கிறது. பொதுவாகத் தமிழ் இளைஞர்கள் விவேகிகள், புத்திசாலிகள். இதனால் தமிழ் இளைஞர் பல் துறையிலும் புகுந்து தத்தம் அறிவையும் ஆற்றலையும் விருத்தி செய்கின்றனர். தமிழ் இளைஞர்கள் விளையாட்டுத்துறையிலும் பதக்கங்கள், சான்றிதல்கள், கேடயங்கள் என்பவற்றைப் பெறுகின்றனர்.

விளையாட்டுத்துறையுடன் மல்யுத்தம் கறாட்டி போன்றவற்றிலும் பங்குபற்றி முன்னணியில் நிற்கின்றனர். யோகாசனப் பயிற்சியிலும் தியானங்களிலும் ஈடுபடுகின்றனர். கோவில்களில் சென்று வழிபடுதலிலும் பலர் ஈடுபடுகின்றனர். இது தமிழ் இளைஞர்களை ஆன்மீகத்துறையிலும் முன்னேற்றுகிறது. பல இளம் வயதினர் இசை, நடனம் கற்று முன்னேறுகிறார்கள். சிறந்த இசை வித்துவான்களும், நடனக் கலைஞர்களும் உருவாகிக் கொண்டே இருக்கிறார்கள்.

தமிழ் இளைஞர்கள் உள்நாட்டு அரசியலிலும் பங்குபற்றி தம் ஆர்வத்தை, ஆற்றலை, அறிவை வெளிப்படுத்துகிறார்கள். தற்போது பாடசாலை சபை (School Trust Board), நகரசபை, சட்ட சபை போன்றவற்றில் போட்டியிட்டு சிலர் வெற்றியும் பெறுகின்றனர். இது எதிர்காலத்தில் அரசியலில் பெரும் பேறுகளை அடைவதற்குரிய முன்னோடியாகவும் தீர்க்கதரிசனமான செயலாகவும் கருதப்பட வேண்டியது.

உள்நாட்டு அரசியலில் பங்குபற்றுவதோடு தாயகத்தின் அரசியலையும் உற்று நோக்குகிறார்கள். தம் முற்சந்ததியினர் வாழ்ந்த நாடு இலங்கை என்பதை உணர்ந்து, தமிழர் அங்கும் கௌரவத்தோடு சகல உரிமைகளும் பெற்று வாழவேண்டுமென்று பாடுபடுகின்றனர். தாயகத்தில் உள்ள கல்லூரிகள் பலவற்றுக்கு நிதியுதவிகளும் செய்கின்றனர்.

இதுவரை தமிழ் இளைஞர்களின் அரிய பெரிய செயல்களை ஆராய்ந்தோம். ஆனால் ஓர் சிறிய அளவான இளைஞர்கள் நெறிதவறியும், வாழும் வகை தெரியாமலும், தவறான வழிகளில் நடப்பதும் உண்மையே. சுதந்திரம், பொருளாதாரச் செறிவு, பல் இன மக்களின் தொடர்பு காரணிகளாக இருப்பினும், தம்மைத்தாமே கட்டுப்படுத்தி நெறிப்படுத்தி வாழத்தெரிந்தும் தெரியாமல் தம் வாழ்க்கையை சீரழிவுக்கு இட்டுச்செல்கிறார்கள். இதனால் தமிழர் குமுகம் தலை குனிய வேண்டியுள்ளது.

பொதுவாக தமிழ் இளைஞர்கள் முன்னேறுகிறார்கள். தமிழ்க் குமுகத்திற்குப் பெருமை தேடித் தருகிறார்கள். வருங்காலத்தில் உலகம் போற்றும் அளவிற்கு தமிழ்க் குமுகத்திற்கு வித்திடுகிறார்கள். அறிவும் ஆற்றலும் துணையாக நிற்க ஒற்றுமை, சுயநலமின்மையைக் கைப்பிடித்து தமிழர் தலை நிமிர்ந்து வாழத் தமிழ் இளைஞர்கள் கருவாகி உருவாகி பெருவாழ்வு நடாத்துகின்றனர்.

மாணவர்: அபிரா சிவசுப்பிரமணியம்
ஆசிரியர்: கலாநிதி குலமோகன்

தாமோதரனார்



# நம்பிக்கை

நார் நாராய் நைந்து போயினும்
நலம் கூடநம்மை விட்டுச் சென்றாலும்
இதோ பார் பார் எனத் தமிழ்
பாரினிலே ஆளும் வல்லமை பெறும்.

கூர் கொண்ட ஆயுதங்கள் அதன்
முனை தீட்டின முழுமை யாக
வேரோடு அறுத்தெறிய தமிழ் என்ன
விழுது விடாத வெட்டை மரமா

தேரிலே ஊர்வலம் வந்த தமிழ்
தெருவிலே விழுந்து கிடப்பதுவோ
போரின் புற நானூற்றுத் தமிழ்
பேச்சற்றுப் போய் விடுமோ


ஆரும் அழித்து விட முடியாத தமிழ்
ஆண்டாண்டு ஆண்ட அமுதம்
புலம் பெயர்ந்தோம் என்ற புதுநாட்டின்
புதுமைக்குள் அமிழ்ந்திடுமோ

சொல்லற் கரிய தமிழ் - இன்று
பிள்ளைச் செல்வங்களின் பேச்சினிலே
வல்லூறுகளை வதைத்து விட்டு
வாழுங்காலம் நமக்கென்ற வாலிபத்தின் கைகளிலே

அல்லல்களை அழித்தொழித்து எதிர்த்து
எங்கள் மொழியென்ற மூச்சினிலே
எல்லைகள் தோறும் ஏற்றி வைப்போம்
இனிய தமிழ்மொழி யென்ற தீபம்.

மாணவர்: அஜந்தி தயாளன்
ஆசிரியர்: கலாநிதி குலமோகன்

# விருந்தோம்பல்



பண்டைத்தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் ஓர் உயர்வான பண்பாகப் பேணப்பட்டு வந்துள்ளது. இதற்குச் சான்றாகப் பழந்தமிழ் இலக்கியங்களில் இது முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவர்,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந் தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று அழகாகக் கூறி விருந்தோம்பல் என்னும் ஓர் அதிகாரத்தையே தந்து இதனைச் சிறப்பித்துள்ளார்.

இல்லறத்தில் விருந்தோம்பல் ஒரு நல்லறம். வீட்டுக்கு வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று, உணவளித்து இன்புறுதலே விருந்தோம்பலாகும். வறியவருக்கு இல்லையென்று கூறாது, வந்த விருந்தினரை முழுநிறைவாக வரவேற்று, உணவளித்து அனுப்பி, எஞ்சியவற்றை உண்கின்றவன் அறநெறி தவறாது வாழ்பவன்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என சங்கப்புலவன் பாடியுள்ளான். சாவா மருந்தெனினும் பகிர்ந்துண்ணலே விருந்தோம்பலின் அடிப்படையாகும். சங்க இலக்கியத்தில் சாவாமருந்தான நெல்லிக்கனி தனக்குக் கிடைத்தபோது, அதனைத் தானே உண்ணாமல் தமிழ்ப்புலவராம் ஔவைக்கு ஈந்தான் அதியமான் என்னும் அரசன்.

ஐந்தறிவுள்ள உயிரினங்கள்கூட விருந்தோம்பலின் சிறப்பை விளக்கும் வகையில் வாழ்ந்து காட்டுகின்றன. "காக்கை கரவா கரந்துண்ணும்" என்பதற்கு இணங்க காகம் ஒன்றுக்கு உணவு கிடைத்துவிட்டால், அது தன் இனத்தைக் கூவி அழைத்துத் தனக்குக் கிடைத்ததை தன் இனத்துடன் பகிர்ந்துண்ணும் பண்பை இதில் காண்கின்றோம். நாம் இவ் அறத்தைப் பின்பற்றிக் காத்தல் வேண்டும்.

தமிழர்கள் வாழ்வில் விருந்தோம்பல் மிகவும் முக்கியமானதாகும். இல்லத்தில் எவ்வளவு துன்பம் இருந்தாலும் எம்முடைய முகத்தில் எதையும் காட்டாது வந்த விருந்தினரை மலர்ச்சியுடன் வரவேற்று, நிறைவாக உணவருந்திய உணர்வுடன் அவர்கள் செல்லும்படி நடந்து கொள்ள வேண்டும். எனவே விருந்தோம்பல் உயர்ந்த அறம் என்பதை உணர்ந்து பகிர்ந்துண்டு வாழ்ந்து காட்டுவோம்.


மாணவர்: அம்பிகை திருஞானசம்பந்தர்
ஆசிரியர்: மேரின் இம்மானுவேல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு

தாமோதரனார்





JK & SK (GRADE 1, 2, 3)




GRADE - 5, 6 & 8













SP - 4 & GRADE 4


SP-1, 2, 3


Tholkaapier Valagam Teachers



# ஏக்கம்!

பனி நிறைந்த இந்தப் பூமியின்
பல மாடித் தொடரில் நின்று
சிந்தித்துப் பார்த்தேன் அம்மா....
உன் கருவறையில் நான் உருவான நாள்
தொடங்கி பத்து மாதங்கள் என்னை
சுமந்து பிரசவ வலியை தாங்கி
ஈன்ற என் இனிய தெய்வமே....

உன் உழைப்பையும், உயர்வையும், உதிரத்தையும்
சேர்த்தல்லவா எனக்கு பாலூட்டி வளர்த்து
உன் பஞ்சு போன்ற மலரணையில் எனைக்
கிடத்தி பருவங்கள் மாறும் வரை....
பகலிரவாய் பசித்திருந்து, விழித்திருந்து
பத்தியங்கள் பல காத்து என்றென்றும்
கருத்துடனே எனை வளர்க்கும்
கருணை உள்ளம் கொண்ட என்தாயே


நான் சோர்வுற்ற காலங்களில் ஒரு தோழியாக
என் தோளைத் தட்டிக் கொடுத்து உன்
அரவணைப்பில் நான் இருந்த போது
கட்டியணைத்து தரும் முத்தங்கள் ஆயிரமாயிரம்
தாயே! என் இனிய தமிழ் அன்னையே
உன் சேயாய் நானிருக்க என்ன
தவம் செய்தேனோ? தாயே உனைவெல்ல
தரணியில் யாருண்டோ....?

மாணவர்: கிவோணிகா உதயசீலன்


தொல்காப்பியர்




















பாரதிதாசன்



























பாரதிதாசன்

# அழகுமிகு எங்கள் அராலிக் கிராமம்



எமது தாய் தந்தையரும் உறவுகளும் பிறந்து வளர்ந்த அராலிக் கிராமத்தையும் அதன் பெருமை மிகுந்த வரலாற்றுச் சிறப்புகளையும் எழுதுவது எனது கடமையும் விருப்பமும் ஆகும். 2001, 2004, 2010 ஆகிய ஆண்டுகளில் நான் அங்கு சென்றதால் இக்கிராமத்தைப் பார்க்கவும் அதனைப் பற்றி அறியவும் என்னால் முடிந்தது.

அராலிக் கிராமம் வட தமிழீழத்தில் யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ளது. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானில் நனிசிறந்தனவே' என்று மகாகவி பாரதியார் பாடியபடி எம் இதயத்தில் நிறைந்த எமது வழி மூதாதையரை நற்பண்புள்ள மக்களாக வளர்த்து எடுத்த எமது அராலிக் கிராமம்.

அராலிக் கிராமத்தின் முதன்மைத் தொழில் வேளாண்மை ஆகும். பெரிய குளமும் அதனைச் சுற்றியுள்ள வயல்களும் ஊக்கமிகு விவசாயிகளின் உழைப்பும் வேளாண் தொழில் சிறப்புற உதவுகின்றன. இதனைத் தவிர கடற்றொழில், சுருட்டுத் தொழில் போன்ற தொழில்களும் இடம் பெறுகின்றன. அத்துடன் பல சிற்பக் கலைஞர்களையும் மருத்துவ அதிகாரிகளையும் பொறியியலாளர்களையும் இசைக் கலைஞர்களையும் நாடகக் கலைஞர்களையும் வளர்த்தெடுக்க அராலிக் கிராமம் தவறவில்லை. சிற்பக் கலைத்துறையில் கருங்கல் சிற்பிகளான திரு. தம்பிராசா, திரு. வயரவப்பிள்ளை ஆகியோர் சிறந்து விளங்கினர். நாடகத் துறையில் மிகவும் சிறந்து விளங்கும் திரு. சுந்தரம்பிள்ளை, திரு. சிதம்பரநாதன் ஆகியோரும் அராலிக் கிராமத்தைச் சேர்ந்தவர்களே.

இது மட்டுமின்றிக் காவல்துறைப் பகுதியைச் சேர்ந்த நேர்மைமிகு அதிகாரி எனப் பெயர் பெற்ற திரு. கந்தையா அவர்களும், இலங்கையில் முதன்முதல் பஞ்சாங்கம் கணித்த சுந்தரமுனிவர் என்னும் பெரியாரும் அராலித் தாய் பெற்று வளர்த்த புதல்வர்களே.


மற்றும் இங்குள்ள அன்னை ஆவரம்பிட்டி அம்பாள், ஆகாயக்குளம் பிள்ளையார், வண்ணப்புரம் சிவன் போன்ற தெய்வக் கோயில்கள் சிறப்புமிக்கவை. ஆவரம்பிட்டி அம்பாள் ஆலயத்தின் பெருமையைக் கூறின், வெகுகாலத்திற்கு முன்னர் சித்தர் ஒருவரால் வீசி எறியப்பட்ட எலுமிச்சம் பழம் இதன் தலவிருட்சமாக உள்ள நாவல் மரத்தடியில் தரித்து நின்றதாகப் பரம்பரைக் கதைகள் உண்டு. ஆகாயக்குளம் பிள்ளையார் கோயில், மாதா கோயில் எனவும் அழைக்கப்படுகிறது. இதற்குக் காரணம் ஒல்லாந்தர் இடிக்க முனைந்த நாட்களில் 'நான் மாதா, என்னை இடிக்காதே' எனக் கூறிய வாக்கால் கோயில் காப்பற்றப்பட்டதாகவும் கூறுவர்.

அராலித்துறை எனப்படும் துறைமுகம் மிகவும் பிரபலமானது. இவை மட்டுமின்றி இன்று ஆயுள்வேத அரசினர் மருத்துவ நிறுவனங்களும் பல முன்னிலைப் பாடசாலைகளும் வட்டுக்கோட்டைத் தொழில் நுட்பக் கல்லூரியும் இதன் எல்லைக்குள் அமைந்துள்ளன.

மீண்டும் எனது அழகும் பெருமையும் மிளிரும் அராலிக் கிராமத்தில் அமைதி நிலவி மக்கள் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

மாணவர்: தர்சி சிவபரமானந்தா
ஆசிரியர்: சுகந்தி மார்க்கண்டு

# நான் விரும்பும் பெரியார்




"பலவீனமானவர்களால் மன்னிக்க முடியாது. மன்னிப்பு பலசாலிகளின் வழக்கம்" என்ற கொள்கையில் வாழ்ந்தவர் மகாத்மா காந்தி. இவரது இளமைப்பெயர் மோகன்தாஸ் காந்தி. இவர் ஐப்பசித் திங்கள் 2ஆம் திகதி 1869ஆம் ஆண்டு இந்தியாவின் குசராத் மாநிலத்திலுள்ள போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். இவரது தாய்மொழி குசராத்தி ஆகும். தந்தையார் பெயர் கரம்சந்த் காந்தி. தாயார் பெயர் புத்லிபாய் ஆகும். காந்தி தனது பதின்மூன்றாம் வயதில் தம் வயதேயான கஸ்தூரிபாய் என்ற பெண்ணை மணந்தார். பின்னாளில் இருவரும் ஹரிலால், மணிலால், ராம்தாஸ், தேவ்தாஸ் ஆகிய நான்கு ஆண்மகன்களைப் பெற்றெடுத்தனர். தனது பதினாறாவது வயதில் இவர் தனது தந்தையை இழந்தார்.

பள்ளிப் படிப்பில் ஒரு சுமாரான மாணவனாகவே காந்தி காணப்பட்டார். தனது பதினெட்டாம் வயதில் பள்ளிப்படிப்பு முடிந்த பிறகு வழக்கறிஞர் படிப்பிற்காகக் காந்தி இங்கிலாந்து சென்றார். தன் படிப்பை வெற்றிகரமாக முடித்துத் தாயகம் திரும்பிய காந்தி, பம்பாயில் சிறிது காலம் வழக்கறிஞராகப் பணியாற்றினார். இது வெற்றிகரமாக அமையாததால் தன் அண்ணன் இருப்பிடமான இராஜகோட்டிற்குச் சென்று அங்கேயுள்ள நீதிமன்றத்தில் வழக்காட வருபவர்களின் படிவங்களை நிரப்பும் எளிய பணியில் ஈடுபட்டார். ஆனால் அங்கிருந்த ஆங்கிலேய அதிகாரியிடம் ஏற்பட்ட சிறிய தகராறால் இந்த வேலையும் பறிபோனது. அதிகாரத்திற்கு அடிபணிய காந்தி விரும்பவில்லை.

இந்தச் சமயத்தில் தென் ஆபிரிக்காவில் தன் தகுதிக்கேற்ற வேலை ஒன்று காலியாக இருப்பதாக அறிந்த காந்தி உடனே அங்கு பயணமானார். இக்காலத்தில் தென்னாபிரிக்காவில் ஆங்கிலேயர் ஆட்சியில் நிறவெறியும், இனப்பாகுபாடும் மிகுந்து இருந்ததைக் கவனித்து வந்தார். இவ்வாறாக தென்னாபிரிக்காவில் அவருக்கேற்பட்ட அனுபவங்கள் பின் நாளில் அவரை ஒரு மாபெரும் அரசியல் சக்தியாக உருவாக்க உதவியது.

தென்னாபிரிக்காவின் தலைநகரில் நடந்த ஒரு போராட்டத்தில் முதன்முறையாக 'சத்தியாக்கிரகம்' எனப்படும் அறவழிப் போராட்டத்தைப் பயன்படுத்தினார். அகிம்சை, ஒத்துழையாமை, கொடுக்கப்படும் தண்டனையை ஏற்றல் ஆகிய கொள்கைகள் இவ் அறவழிப் போராட்டத்தின் பண்புகளாகும்.

உரிமைகளுக்காகப் போராடியதும், எல்லோரையையும் சமமாக மதிக்கும் இவரது பண்பும், அகிம்சைவழிப் போராட்டமும் என்னை மிகவும் கவர்ந்த விடயங்களாகும். தைத் திங்கள் 30ஆம் திகதி அவரது நினைவு நாள் இந்தியா முழுவதும் கொண்டாடப்படுகிறது. உலகில் காந்தீயத்தின் வழியில் போராடிய பலரில் எமது தாய் மண்ணில் போராடிய தியாக தீபம் திலீபனும் என்றும் போற்றப்படுகின்றார்.

மாணவர்: அர்யுனா இந்திரகுமார்
ஆசிரியர்: திலகா சின்னப்பு

பாரதிதாசன்

## காலைக்காட்சி



ஆதவன் தன்பட்டுக் கிரகணங்களை விரித்தபடி கீழ் வானில் இருந்து மெல்ல மெல்ல மேற்குத் திசையில் உதிக்கிறான். அவனின் வரவு கண்டு முழு உலகமே மகிழ்ச்சிக் கடலில் ஆரவாரம் செய்கின்றன. மலர்கள் மலரத் தொடங்குகின்றன. காகம் கரைகின்றது. சேவல் கூவுகின்றது. கோயில் மணியோசை ஒலிக்கின்றது. குளங்களிலுள்ள தாமரை மலர்கள் ஆதவனின் வரவு கண்டு மகிழ்ச்சியால் மெல்ல மலரத் தொடங்குகிறது. மலரும் மலர்களில் தேன் அருந்துவதற்காக வட்டமிடும் வண்டுகளின் ரீங்காரம் இனிய நாதமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இரை தேடிப் பறவைகள் வானத்தில் பறக்கின்றன. மக்கள் தமது காலைக் கடமைகளை நிறைவு செய்து விட்டு இறை வழிபாட்டிற்காக ஆலயத்திற்குச் செல்கின்றார்கள்

உழவர்கள் தமது வயல் நிலங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். பாடசாலை மாணவர்கள் சீருடையுடன் பாடசாலை செல்லும் காட்சி மனதைக் கவருவதாக உள்ளது. இரவு மீன் பிடிப்பதற்காகக் கடலுக்குச் சென்ற மீனவர்கள் பிடித்த மீன்களுடன் கரை திரும்புவதையும் காணலாம். சில மீனவர்கள் மகிழ்வாகவும் சிலர் கவலையாகவும் திரும்புவதையும் அவதானிக்கலாம். அவர்களுடைய வருகையை எதிர்பார்த்த வண்ணம் வாடிக்கையாளர் நிற்கின்றனர். அலுவலங்களில் வேலை செய்வோர் தமது அலுவலகங்களை நோக்கி மிதியுந்திலோ அல்லது பேரூந்து வண்டியிலோ செல்கின்றார்கள். மக்கள் தமது அன்றாடக் கடமைகளை நிறைவு செய்வதற்கு முற்படுகின்றனர். நகரங்கள் பரபரப்பாக இயங்கத் தொடங்குகின்றன.

இவ்வாறான மனதுக்கு இனிமை தரும் அழகிய இயற்கைக் காட்சிகளை எமது தாயகத்தில தினமும் காணலாம். ஆனால் நாம் வாழும் கனடா நாட்டிலே இவ்வாறான காட்சிகளைக் காண முடியாது. ஆனாலும் வெண்பஞ்சுப் பொதிபோல திரள்திரளாக காணப்படும் பனிக் குவியல்களை குளிர் காலத்தில காணலாம்.

மாணவர்: யேமி யோசப்
தொடக்க நிலை 3
ஆசிரியர்: தேவகி விக்னேசுவரன்.

## நான் விரும்பும் பெரியார் பாரதியார்



சுப்பிரமணிய பாரதி ஒரு விடுதலைப் போராட்ட வீரர். இந்திய நாட்டு விடுதலைக்காகக் கவிதைகள் எழுதினார். பெண்கள் விடுதலைக்காகவும் பல கவிதைகளை எழுதியுள்ளார். சிறுவர் பாடல்கள், குயில் பாடல்கள், இன்னும் பல கவிதைகள் இயற்றினார். இவர் இந்தியாவில், தமிழ்நாட்டிலே எட்டயபுரம் என்னும் இடத்தில் பிறந்தார். இவருக்குப் பல மொழிகள் தெரியும்.

மாணவர்: சாருண் காசிநாதன்
ஆசிரியர்: கஜானி குமார்



## எனது எதிர்காலக் கனவு

கனவுகாண்பதும், மெய்ப்பட உழைப்பதும், வாழ்க்கை சுவைப்பட காரணமாய் அமைகின்றது. ‘கனவு மெய்ப்படவேண்டும்’ என்று மகாகவியும், ‘கனவுகள் மெய்ப்படும்’ என்று அப்துல் கலாமும் எமக்கு கூறிவைத்துள்ளார்கள்.

பள்ளிக் காலங்களில் எல்லோருக்கும் இருக்கும் கனவு போலவே எனக்கும் மனிதம் போற்றும் மருத்துவராவது பெருங்கனவு. கனவு என்பதை விட குறிக்கோள் என்றே சொல்லலாம்.

மருத்துவர் என்று பெருமை பேசுவதைவிட சேவை செய்வதைத்தான் என்மனம் விரும்புகிறது. சிதைந்து கிடக்கும் தாய் நாட்டிற்கு மட்டுமல்ல, எங்கெல்லாம் மனிதம் தடம் புரள்கிறதோ, எங்கெல்லாம் மருத்துவம் அவசியமாகிறதோ அங்கே என்சேவை சென்றடைய வேண்டும் என்பது என்கனவு.

சீரான கனவும் சிறப்பான உழைப்பும் இருந்தால், காணும் கனவெல்லாம் மெய்ப்படும் என்பது திண்ணம்.

மாணவர்: அபிரா ரமேஷ்





# உடல் பயிற்சி




உடலை மேம்படுத்தும் உடல் செயல்பாடு மற்றும் எங்கள் உடல்நலம் என்பது தான் உடற்பயிற்சி ஆகும். உடற்பயிற்சி நிறைய கரணங்களுக்காகச் செய்யப்படும். உடற்பயிற்சி எங்கள் உடல் தசைகளை பலப்படுத்தும். உடற்பயிற்சியை ஒவ்வொரு நாளும் செய்தால் எங்கள் இரத்த நாடி, நோய் தடுப்பாற்றல் அமைப்பு மற்றும் மூட்டு இயக்குத் தசைகளை மேம்படுத்தும். அது உடற்பருமன் என்கிற சிக்கலுக்கு உதவும். உடற்பயிற்சி உளநலத்தை உயர்வுபடுத்தி மனப் பதற்றத்தைக் குறைக்கும். நாளும் உடற்பயிற்சி செய்தால் நீரழிவு நோய், மார்புவலி மற்றும் தூக்க குழப்பம் போன்ற பல நோய்களையும் அதனால் வரும் சிக்கல்களையும் தடுக்க முடியும். உடற்பயிற்சிப் பழக்கம் உள்ளோர்க்கு உறக்கம் மிகவும் சுகமாக இருக்கும். உயிர்வளி மற்றும் குருதிச் சுற்றை மேம்படுத்தும். எங்கள் உடல்நலத்துக்கு உடற்பயிற்சியுடன் சரியான ஊட்டச் சத்துணவும் முதன்மையானதாகும். உடற்பயிற்சி செய்யும் போது உணவு, முதன்மையாக திட்டமிட்ட உணவு அவசியம். உடற்பயிற்சியில் மடங்கும் பண்பு, சீருடல் உறுதி, உயிர்வளியற்ற என மூன்று வகை உள்ளன. உடற்பயிற்சியில் நிறைய திறமைகள் உள்ளன. அதில் திண்மை, வலிமை, மடங்கும் பண்பு, திறன் மற்றும் வேகம் சிலதாகும். உடற்பயிற்சி செய்வோருக்கு ஆயுள் காலம் நீடிக்கும்.

மாணவர்: அபிநயா சிறிமோகன

ஆசிரியர்: கஜானி குமார்

# திராவிட மொழிகள் பேசப்படும் இடங்கள்




1. தமிழ்
2. கன்னடம்
3. மலையாளம்
4. தெலுங்கு
5. துளு
6. குடகு
7. தோடா
8. கோத்தா
9. படகா
10. கோண்டி
11. கூயி
12. கூவு
13. கோலமி
14. கதபா
15. கொண்டா
16. கோயா
17. நாயக்கி
18. பெங்கோ
19. மண்டா
20. குருக்
21. மால்டா
22. பிரகுவி
23. பர்சி


# நான் விரும்பும் பெரியார்: அன்னை தெரேசா



அன்னை தெரேசா ஆவணித் திங்கள், 26ஆம் நாள் 1910ஆம் ஆண்டு பிறந்தார். இவர் ஒரு ரோமன் கத்தோலிக்க அருட்சகோதரியாவார். இவர் ஏழை மக்களுக்கும், நோயாளிகளுக்கும், ஏதிலிக் குழந்தைகளுக்கும் உதவிகள் செய்தார். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடங்கள் நிறுவி, இலவசமாய் உணவும் வளங்கினார். அன்னை தெரேசா அம்மையாரின் சேவையை உலக மக்கள் யாவரும் அறிவர்.

மாணவர்: ஆத்மி வேலாயுதம்
ஆசிரியர்: கஜானி குமார்


# தைப்பொங்கல்



தைப்பொங்கல், தைத் திங்கள் 14ஆம் நாள் வரும். இந்நாளில் நாம் கதிரவனுக்கும் உழவனுக்கும் மாடுகளுக்கும் நன்றி செலுத்துவோம். இதற்காக நாம் அதிகாலை எழுந்து நீராடி புத்தாடை அணிந்து, முற்றத்தைக் கூட்டிப் பெருக்கி கோலம் இடுவோம். பின்பு புதுப் பானை வைத்துப் பொங்கல் செய்வோம். பொங்கிய பொங்கலை கதிரவனுக்குப் படைப்போம். பின்பு வீட்டில் உள்ள எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிடுவோம். அடுத்த நாள் நாம் பட்டிப் பொங்கலை மாடுகளுக்காகக் கொண்டாடுவோம். மாடுகளைக் குளிப்பாட்டி, பொட்டு வைத்து மாலை அணிவிப்போம். பின்பு, பொங்கல் பொங்கி மாடுகளுக்கு உண்ணக் கொடுப்போம். அடுத்த நாள் பொங்கல்விழா விளையாட்டுக்கள் ஆரம்பமாகும்.

மாணவர்: சாருஜயா காசிநாதன்
ஆசிரியர்: கஜானி குமார்

பாரதிதாசன்





## நயினாதீவு

ஈழமணித் திருநாட்டின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்து தென் மேற்காக சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்தில் அலைகடல் நடுவே அழகுற அமைந்திருப்பது நயினாதீவு. நயினாதீவுக்கு முற்காலத்தில் பல பெயர்கள் உண்டு. நாகதீவு, நயினார்தீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, சம்புத்தீவு, நாகேசுவரம் என்பன நயினாதீவையே குறிப்பனவாகும். வடக்குத் தெற்காக, ஏறக்குறைய 5 கிலோ மீற்றர் நீளமும் கிழக்கு மேற்காக சுமார் 2 கிலோ மீற்றர் அகலமும் உடைய சின்னஞ்சிறு தீவாகும்.

நயினாதீவுக்கு வடக்கே அனலைதீவும், தென்மேற்காக நெடுந்தீவும், கிழக்கே புங்குடுதீவும் அமைந்துள்ளன. யாழ்ப்பாண மாநகரத்தில் இருந்து புங்குடுதீவுக்கூடாக குறிகாட்டுவான் என்னும் இடத்திலுள்ள இறங்குதுறை வரை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினராலும் தனியாராலும் பேரூந்துச் சேவை நடாத்தப்படுகிறது. நயினாதீவில் உள்ள இறங்குதுறையை அடைவதற்கு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையின் கட்டுப்பாட்டின் கீழ் பயணப் படகுச் சேவை நடாத்தப்படுகின்றது.

வரலாற்றுப் பெருமையும் அருட்பொலிவும் ஆன்மீகச் சிறப்பும் மிக்கது நயினாதீவு. அருள், பொருள், கொடை, கல்வி, அன்னதான வளங்கள் ஒருங்கே அமையப் பெற்றது இப்புண்ணிய பூமியாகும். இவ்வழகிய தீவின் கண்ணே அறுபத்தி நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேசுவரி பீடம் உள்ளது.

இவ்வாலயத்தின் கருவறைக்குள் அமைந்திருக்கும் கருங்கல்லிலான ஐந்தலை நாக உருவை ஆராய்ந்த அறிஞர் கருத்துப்படி இவ்வாலயம் கிட்டத்தட்ட பத்தாயிரம் ஆண்டுப் பழைமை வாய்ந்ததாகும். இத்தீவின் வடக்கே சுமார் 500 மீற்றர் தொலைவில் கடல்நடுவே இரண்டு கற்பாறைகள் காணப்படுகின்றன. இவை 'பாம்பு சுற்றிய கல்", 'கருடன் கல்" என அழைக்கப்படுகின்றன.

இங்குள்ள மக்களின் முதன்மைத் தொழில் விவசாயம் ஆகும். மீன்பிடித் தொழிலும் நடைபெறுகின்றது. நயினாதீவு மக்கள் பொதுவாக விவேகமும் கணிதமும் தமிழ்மொழி அறிவும் தமிழ் இலக்கியப் பயிற்சியும் உடையவர்கள். அரச திணைக்களங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் இவர்களில் பலர் மிகுந்த செல்வாக்குடன் பணியாற்றி வருகின்றனர்.

மாணவர்: றேகன் குலசிங்கம்

ஆசிரியர்: மா. சுகந்தி

# செய்தி இதழ்களின் பயன்பாடுகள்

நம் தாயகத்திலும் உலக நாடுகள் அனைத்திலும் நடக்கும் நிகழ்வுகளையும் அழிவுகளையும் அறிவது செய்தி இதழ்கள் மூலமாகும். நம் எதிர் காலத்தைக் கூறும் இராசிப் பலன்களையும் வாசிப்பதும் செய்தி இதழ்களிலாகும். அது மட்டுமின்றி, நம் வீடுகளை விற்க விளம்பரம் போடுவதும் இவ்விதழ்களில் தான். செய்தி இதழ்களின் பயன்பாடுகள் காலகட்டத்தில் மாறியுள்ளன. இவ்விதழ்களின் முக்கியத்துவம் ஒவ்வொருவருக்கும் வேறுவேறாக இருக்கும். இன்று ஆங்கில இதழ்கள் முதற்தொடுத்து தமிழ் இதழ்கள் வரை அனைத்திலும் தலைப்புச் செய்திகள், சமையல் குறிப்புகள், ஆன்மீகக் குறிப்புகள், ஆரோக்கிய குறிப்புகள், விளையாட்டுச் செய்திகள், வேலை வாய்ப்பு விண்ணப்பங்கள், சினிமா, சிறுவர் பகுதி, சிறுகதைகள், அறிவியல் சிந்தனைகள், காலநிலை போன்ற பகுதிகள் உள்ளன. வானொலி, தொலைக்காட்சி வாயிலாக நாம் உடனுக்குடன் நிகழ்வுகளை அறிந்தாலும், செய்தி இதழ்கள் வாயிலாக நாம் இவற்றை அறிகின்றபோது, நாம் கூடுதலான விடயங்களைப் பெற முடியும்.

ஒரு இதழின் மூளையாக முதன்மைப் பொருளைக் கொண்டு திகழ்வன தலைப்புச் செய்திகள். கனடா, ஈழம் முதலிய அனைத்து நாடுகளில் பரபரப்புக்குரிய விடயங்கள் இதனுள் உள்ளன. இவை கல்வி, போர், பொருளாதாரம், விஞ்ஞான வளர்ச்சி, அரசியல் ஆக வகைப்படுத்தி வருவன. இன்றைய யுகத்தில், மனிதனுக்குண்டாகும் நோய்கள் புதுப் புது விதமாக, பலப் பல எண்ணிக்கைகளில் வருகிறன. அதை நீக்கப் பாவிக்கும் மாத்திரைகளில் பல்வேறு வேதுப் பொருட்கள் கலந்துள்ளன. இவற்றால் நன்மையா தீமையா பயக்கும் என்பது சிந்தனைக்குரியது. செய்தி இதழ்களில், நம் பாரம்பரிய மூலிகை சிகிச்சைகள் பற்றிய தகவல்கள் உள்ளன.

விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகளும் சிறந்த காட்சிகளும் நுணுக்கமாகத் தெரிவதும் செய்தி இதழ்கள் மூலமாகும். அத்துடன் வீரர்களின் சாதனைகளும் சரித்திரங்களும் சுவாரசியமாக எழுதப்பட்டிருக்கும்.

சமீபத்தில், தங்கம், வெள்ளி, டீசல், நிலம் போன்ற பொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களையும் மதிப்பையும் தெரிவதற்கு கூடுதலான ஆர்வம் காணப்படுகிறது. இவற்றை அறிவதற்கும் செய்தி இதழ்கள் பயன்படுகிறன. ஆண்டுகள் செல்லச் செல்ல அறிவியல் வளர்ச்சியும் சிறந்து ஓங்கும். இவற்றால் பல்வேறு புதிய விடயங்களை நாம் அறிந்து கொள்ளலாம். உலகில் நடை பெறும் அரசியல், பொருளாதார மாற்றங்களை தெரிவதற்கும் செய்தி இதழ்கள் பயன்படுகின்றன. அன்புக்குரியோரின் இழப்புகளைக் கூட இந்தச் செய்தி இதழ்கள் மூலம் அறியலாம்.

இன்றைய இதழ்களின் முன்பக்கத்தில் விறுவிறுப்பான தலைப்புகள் எழுதப்பட்டிருக்கும். ஆனால் உள்ளே திருப்பிப் பார்த்தால், நகை மற்றும் புடவைக் கடைகளின் விளம்பரங்கள் மட்டுமே இருக்கும். ஓரத்தில், சிறிதாக செய்தித் தொடர் இருக்கும். இன்றைய செய்தி இதழ்கள்களிலும், வேறு ஊடகங்களிலும் மிகுதியாகக் காண்பது வியாபார நிறுவனங்களின் விளம்பரங்களைத் தான். பொருட்களின் மலிவு, தரம் ஆகியவற்றை அறிவது நல்லது, ஆனால், ஊடகங்கள் இதையே நோக்கமாகக் கொள்வது பயனற்றது. இன்று, ஊடகங்களின் நோக்கம், வியாபாரம் என்பதாக இருப்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

முற்காலத்தில் கல்வெட்டுகளினூடாக பண்டைய மன்னர்கள் செய்திகளைப் பாதுகாத்து வந்தனர். இன்றோ அறிவியல் வளர்ச்சி உச்சத்தில் உள்ளது. கணினி ஊடாக வலையமைப்பு வசதிகள் இருந்தாலும் அதனைப் பயன்படுத்த முடியாதவர்கள் கூட செய்தி இதழ்கள் மூலமாக விடயங்களை அறியக் கூடியதாக உள்ளது. படித்தவர்கள் மட்டுமன்றி பாமர மக்களுக்கும் பயன்படும் ஊடகம் என்ற வகையில் செய்தி இதழ்கள் முக்கியம் பெறுகின்றன.

மாணவர்: நர்த்தனன் சிறிமுருகதாசன்
ஆசிரியர்: தங்கா சுப்பிரமணியம்

பாரதிதாசன்

மாணவர்: சாரங்கா சுப்ரமணியம்
ஆசிரியர்: கஜானி குமார்

# தை பொங்கல்




பொங்கல் விழாவில் தை இரண்டாம் நாள் பட்டிப் பொங்கல் நாளாகும். மாடுகளை நீராட்டி அழகுபடுத்தி மாலை அணிவிப்பர். பின்னர் பொங்கல் செய்யும் பொழுது பொங்கிவர 'பட்டி பெருகிவர பாற் பானை பொங்கிவர' என்று மகிழ்வொலி எழுப்புவர் பின்னர் பொங்கல், பழம், சிற்றுண்டிகள் முதலியவற்றை மாடுகளுக்கு உண்ணக் கொடுத்து நன்றியை வெளிப்படுத்துவர். அன்றைய நாள் மாடுகளுக்கு ஓய்வு நாளாகும்.

பொங்கல் விழாவில் தை மூன்றாம் நாள் காணும் பொங்கல் நாளாகும். மக்கள் பொங்கல் சிற்றுண்டிகள் முதலியவற்றை எடுத்துக்கொண்டு கடற்கரை, விளையாட்டு அரங்கு போன்ற பொது இடத்தில் கூடுவர். தாம் கொண்டுவந்தவற்றை மற்றவருடன் பகிர்ந்து உண்பர். மாலைவேளை கோலாட்டம், கும்மி போன்ற கலை நிகழ்வுகளில்

Happy Pongal


பாரதிதாசன்

# Big Temple

The temple had its foundations laid out by the Tamil emperor Arulmozhivarman, popularly called Rajaraja Chola I, in 1002 CE , as the first of the great Tamil Chola building projects. The temple was built by Rajaraja Chola, one of the greatest Tamil emperors to grace the throne of the Chola empire in compliance of a command given to him in his dream. The scale and grandeur is in the Chola tradition. An axial and symmetrical geometry rules the temple layout. Temples from this period and the following two centuries are an expression of the Tamils (Chola) wealth, power and artistic expertise. The emergence of such features as the multifaceted columns with projecting square capitals signal the arrival of the new Chola style.

The Brihadeeswarar Temple was built to be the royal temple to display the emperor's vision of his power and his relationship to the universal order. The temple was the site of the major royal ceremonies such as anointing the emperor and linking him with its deity, Shiva, and the daily rituals of the deities were mirrored by those of the king. The temple maintained a staff of 600 people in various capacities. Even today, the Brihadeeswarar Temple remains India's largest.

The temple is also an architectural exemplar showcasing the pure form of the Dravida type of temple architecture and representative of the Chola Empire ideology and the Tamil civilization in Southern India. The temples "testify to the brilliant achievements of the Chola in architecture, sculpture, painting and bronze casting". The Temple was consecrated in the year 1010 CE by Raja Raja Chola I. The Millennium year celebrations duly happened in 2010.





## உங்களுக்குத் தெரியுமா?

உலகிலே அதிகளவில் பேசப்படும் மொழி சீனமொழியாகும்.

தமிழ் திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழியாகும்.

தமிழின் முதன்மையான இலக்கணநூல் தொல்காப்பியம்.

சிலப்பதிகாரம் இளங்கோ அடிகளால் எழுதப்பட்டது

தமிழ்மொழி இயல் இசை நாடகம் எனும் முத்தமிழைக் கொண்டது.

தமிழில் உள்ள அறநூல்களில் முதன்மையானது திருக்குறள்.

திருக்குறளில் 1330 பாக்கள் உள்ளன.

திருக்குறள் அறத்துப்பால் பொருட்பால் காமத்துப்பால் என்னும் மூன்று பால்களைக் கொண்டது.

திருக்குறளை பொதுமறை என்றும் அழைப்பர்.

இராவணன் இலங்கையை ஆண்ட தமிழ்மன்னன் ஆவான்.

இராவணன் தன்கொடியில் வீணையைச் சின்னமாகக் கொண்டிருந்தான்.

தென்தமிழீழத்தின் திருகோணமலை என்னும் இடத்தில் கன்னியாய் வென்னீரூற்று உள்ளது.

திருகோணமலையில் கோணேச்சுவரம் என்னும் சிவாலயம் உள்ளது.

மாணவர்: கயல்விழி குணம்
ஆசிரியர்: தேவகி விக்கினேசுவரன்.







பாரதியார்

பாரதியார் வளாகம்

## திருகோணமலை!

by: சோபியா மதிவதனன்

இலங்கையின் கிழக்குத் திக்கில் திருகோணமலை இருக்கிறது. இதற்கு திரிகோணமலை, திருமலை, கோணமலை என, பல பெயர்கள் உண்டு. இங்கே சிறந்த இயற்கைத் துறைமுகம் உள்ளது. உலகில் முன்னணி வகிக்கும் துறைமுகங்களில் இதுவும் ஒன்று. இங்கே கரிமலையூற்று என்று ஒரு இடம் உண்டு. அங்கே நன்னீர் ஊற்று ஒன்று உள்ளது. கன்னியாய் என்னும் இடத்தில் ஏழு வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. அவற்றை இராவணன் தோண்டியதாகக் கூறுகின்றனர். இராவணன் ஒரு தமிழ் அரசன். மகாவலி ஆறு திருமலையில் வந்து கலக்கிறது. இவ்வாற்றின் நீரோட்டலால் திருமலையில் வயல்கள் செழித்துக் காணப்படுகின்றன. கோணேச்சரம் சிவன் கோவில் இங்கே உள்ளது. இத்தலம் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற தலமாகும்.

பாரதியார்

SP3

Name: சபர்ஷா அமிர்தலிங்கம்

Jan 29, 2011.

## தமிழ் நூல்கள்

உலகின் தொன்மையான மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழ் எழுத்து வழக்கு மிகவும் பழைமையானது. தமிழில் பழைமை வாய்ந்த நூல்கள் பல உள்ளன. அவற்றுள் புறநானூறும் ஒன்று. அது தமிழருடைய வீரத்தைக் கூறுகின்றது.

சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவையும் மிகச் சிறந்த நூல்களாகும். அவை தமிழருடைய பண்பாட்டு வரலாறுகளைக் கூறுகின்றன. திருக்குறள், நாலடியார் ஆகியவை அறநெறி நூல்களாகும். மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை அந்நூல்கள் கூறுகின்றன.

பாரதியார் கவிதைகள், பாவேந்தர் கவிதைகள் தற்கான் தற்கால நூல்களுள்

சபர்ஷா



பாரதியார்


Name: கிசோபிகா . அ Date: தை - 29 - 2011

## கிராமத்து எலியும் நகரத்து எலியும்

ஒரு கிராமத்தில் ஒரு எலி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது. ஒருநாள் நகரத்து எலி ஒன்று கிராமத்து எலியைக் கண்டது. நகரத்துக்கு வருமாறு கிராமத்து எலியைக் கேட்டது. கிராமத்து எலியும் நகரத்து எலியோடு நகரத்திற்குச் சென்றது. நகரத்து எலி வாழ்ந்து வந்த பெரிய வீட்டுக்கு இரு எலிகளும் சென்றன. அங்கு மேசை மீது வகைவகையான உணவுகள் வைக்கப்பட்டிருந்தன. இரு எலிகளும் அவற்றை உண்டு மகிழும் போது, வீட்டுக்காரி வந்தாள். இரு எலிகளையும் அடித்து விரட்டினாள். இரண்டும் ஓடி ஒளிந்தன. அச்சம் கொண்ட கிராமத்து எலி, 'பயந்து நடுங்கும் இந்த வாழ்க்கை வேண்டாம் மகிழ்ச்சியான என கிராமமே போதும்' எனக் கூறி, கிராமத்திற்கே திரும்பி விட்டது.

Name: கிசோபிகா. அ
Date: தை - 29 - 2011

பாரதியார் வளாகம்



பாரதியார்

Name: கிசோபிகா. அ    Date: தை - 24 - 2011

எங்கள் சமூகம்

நாங்கள் தமிழர். எங்கள் தாய்மொழி தமிழ். நாம் கனடா நாட்டில் வாழ்கின்றோம். எம்மை, கனடா தமிழர் சமூகாயம் என அழைப்பர. கனடாவில் பல இன மக்கள் வாழ்கின்றனர. நாம் அவர்களோடு இணைந்து வாழ்கின்றோம். ஒன்ராறியோ மாநிலத்தில் அதிக அளவு தமிழர் வாழ்கின்றனர் மொன்றியல், ஒட்டவா, வன்கூவர், அல்பேட்டா, போன்ற நகரங்களிலும் தமிழர் வாழ்கின்ற. தமிழர் வணிகத் துறையிலும் கல்வித்துறையிலும் மேம்பாடு அடைந்து வருகின்றனர். கனடா நாட்டில் நாம் எமது பண்பாட்டையும் தனித்துவத்தையும் பேணிக் காப்போம்.

Name: கிசோபிகா. அ
Date: தை-24-2011
பாரதியார் வளாகம்

பாரதியார்

## நாம் வாழும் நாடு கனடா

நாம் வாழும் நாடு கனடா ஆகும். இதுவே உலகில் இரண்டாவது பெரிய நாடு. கனடாவில் 32 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். கனடாவில் பல இன மக்கள் வாழ்கின்றனர் அனைவரும் ஒற்றுமையாகவும், அன்பாகவும் இணைந்துள்ளனர். கனடா இயற்கை வளம் நிறைந்த அழகான நாடு. பெரிய வாவிகளும் மலைத்தொடர்களும் இங்கு உள்ளன. உலகிலேயே அதிக அளவு மரங்களைக் கொண்ட நாடுகளில் கனடாவும் ஒன்று. பெருமளவு கோதுமை கனடாவில் விளைகின்றது. நிலநெய் கனிப்பொருள் வளங்களும் நயாகரா கனடாவுக்குப் பெருமை தருகின்றது. நாம் வாழும் நாடான கனடாவைப் போற்றி வாழ்வோம்.

M. சியானி
ஜன 29 2010

பாரதியார்

# நாட்டுக்காக உழைத்தோர்

தலைமுறை வழியாக எம் மூதாதையர் வாழ்ந்த நாடு எம் தாய்நாடு ஆகும். எமது தாய்நாடு மேன்மை அடைய, சிலர் காலங்கள் தோறும் உழைப்பர். நாடு நன்றாகச் சிறப்படைய வேண்டும் என அரும்பாடு படுவர், தன்னலம் எதுவும் இன்றி, நாட்டின் நலத்திற்காகத் தம்மைக் கொடையாக வழங்கிவர். நாட்டுக்காக உழைக்கும் இத்தகைய பெரியோர் வாழ்வு மிகவும் உயர்ந்தது. இது நாட்டிற்காக உழைக்க முயல்வோருக்கு வழிகாட்டிகளாக அமையக் கூடியது. நம் நாடு விடுதலை பெறவும் மேன்மை கொள்ளவும் பலர் உழைத்திருக்கின்றனர். அவர்களை மனதில் நிறுத்தி என்றென்றும் போற்றுவோம்.

கர்சனா

01 - 29-11

SP.4

பாரதியார் வளாகம்

பாரதியார்



# சுப்பிரமணிய பாரதியார்

1. சிறந்த தமிழ்ப் புலவர்களில் பாரதியாரும் ஒருவர்.
2. இவர் தமிழ்நாட்டிலுள்ள எட்டையபுரத்தில் 1882ம் ஆண்டு மார்கழி மாதம் 11ம் திகதி பிறந்தார்.
3. இவரது தந்தையாரின் பெயர் சின்னச்சாமிஐயர்.
4. இவரது தாயாரின் பெயர் இலட்சுமியம்மாள்.
5. இவரது மனைவியின் பெயர் செல்லம்மா.
6. இவர் கறுத்த மேற்சட்டையும் வெள்ளை வேட்டியும் தலைப்பாகையும் எப்போதும் அணிந்திருப்பார்.
7. இவரது முகத்தில் மிடுக்கான பெரியமீசை காணப்படும்.
8. இவர் கம்பீரமான தோற்றமும் நடையும் கொண்டவர்.

9. இவர் பாப்பாப்பாட்டு, குயில்ப்பாட்டு,
கண்ணன்பாட்டுக்களைப் சிறுவர்களுக்காகப்
பாடியுள்ளார்.

10. இவரது பாடல்களில் "ஓடி விளையாடு
பாப்பா" பிரசித்தமானது.

11. இவர் பெண்விடுதலைக்காகவும் இந்தியதேச
விடுதலைக்காகவும் பாடல்களைப்
பாடியுள்ளார்.

12. இவர் 1921ம் ஆண்டு புரட்டாதி மாதம்
11ம் திகதி யானையால் தூக்கி வீசப்பட்டு
அவரது 39வது வயதில் இறந்தார்.

ஆக்கம்
தாட்சாயினி - தம்பிநாதர்
தரம்-1



பாரதியார் வரைதல்

பாரதியார்







# தைப்பொங்கல்

தைப்பொங்கல் தமிழரின் திருநாள் ஆகும்.
அத்தினத்தை தை முதலாம் நாள்
கொண்டாடுகிறோம். தைப்பொங்கல்
சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காக
கொண்டாடுகிறோம்.
தைப்பொங்கல் அன்று புத்தாடை அணிந்து
முற்றத்திலே கோலமிட்டு புதுப்பானையில்
பொங்கி வெச்சுடுவோம்.
அந்த நாள் உழவர்களின் திருநாள்.

விதுஷா சிறிசுரன்
1ம் ஆண்டு
பாரதியார் வளாகம்
ஆசிரியர், விமலா





திருக்குறள்

விதுஜன் சிறிதரன்
தரம் - ஐந்து
பாரதியார் வளாகம்

திருக்குறள் இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நூலாகும் இதனை எழுதியவர் தெய்வப்புலவர் வள்ளுவர் ஆவார் திருக்குறளானது வெண்பா போன்றது

இது இரண்டு வரிகள் கொண்டது ஆனால் இவை கூறும் கருத்துக்கள் விலை மதிக்க முடியாதவை திருக்குறள் 133 அதிகாரங்களை கொண்டது ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து பாடல்கள் கொண்ட 1330 பாடல்களை கொண்டது.

திருக்குறள் மூன்று பிரிவுகளைக் கொண்டது. அவையாவன அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பால் என்பனவாகும்

முதலிலே நாம் என்னகாரியம் செய்யினும் கடவுளை வணங்கிகிறோம்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
திருக்குறளை பயின்று நற்பயனை அடைவோம்

ஆசிரியர் : இ. நிரபாதினி

Milroy

பாரதியார்



# என்னைப் பற்றி



எனது பெயர் காவிரி சிவநாதன்.
நான் முதலாம் வகுப்பு படிக்கிறேன்.
எனது அக்காவின் பெயர் கவிதா.
எனக்கு அப்பா, அம்மா அக்காவில்
நல்ல விருப்பம்.

நான் நடனம், சங்கீதம் கற்கின்றேன்
எனக்கு பிடித்த நிறம் ஊதா.
எனக்கு பிடித்த உணவு பூரி.
எனக்கு பூக்கள் விருப்பம்.

காவிரி சிவநாதன்
தரம் 1
பாரதியார் வளாகம்

பாரதியார்



# நூல்நிலையம்



எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு நூல்நிலையம் உண்டு. அங்கே நிறைய புத்தகங்கள் இருக்கின்றன. பிரெஞ்சு, ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், கலைகள் சம்பந்தமான புத்தகங்களும், கதைப் புத்தகங்களும் இருக்கின்றன. இவை பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. வளர்ந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் வெவ்வேறு பகுதிகள் உள்ளன.

மாலை நேரங்களில் நானும் தங்கையும் நூல்நிலையத்திற்குச் செல்வோம். நூல்நிலையப் பொறுப்பாளரிடம் அனுமதி பெற்றுப் புத்தகங்கள் எடுத்து அங்கிருந்து அமைதியாக வாசிப்போம். சிறுவர் பகுதியிலிருந்து நல்ல சிறுகதைப் புத்தகங்களை எடுத்துப் பொறுப்பாளரிடம் கொடுத்து அனுமதி அட்டையிலே பதிந்து வீட்டுக்கு நான் எடுத்து வருவேன். தங்கையும் தனக்குத் தேவையானவற்றை எடுத்து வருவார். வாசித்து முடித்ததும் நாங்கள் அவற்றைக் கொண்டு சென்று திருப்பிக் கொடுப்போம். பின் வேறு புத்தகங்களை எடுத்து வருவோம். எனக்குப் புத்தகங்கள் வாசிக்க மிகவும் விருப்பம். இது ஒரு நல்ல பொழுதுபோக்கு.

கவிதா சிவநாதன்
தரம் 6 அ
பாரதியார் வளாகம்

பாரதியார்





அம்மா

அம்மா அம்மா அம்மா
அநிசயான அம்மா
அன்புடனே என்னை
அணைத்திடுவாள் அம்மா
அன்பு முத்தம் தருவார்

இளம் மழலை
சரண் விமலேந்திரன்

பாலநீதிபயர்





கிரிஷா தரம் 3
பிரபாகரன்

பாரதியார்

பாரதியார் தமிழ் புலவர்களில் ஒருவர். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியம். இவர் 1882ம் ஆண்டு மார்கழி மாதம் 11ம் திகதி. எட்டயபுரத்தில் பிறந்தார். இவரின் தந்தை பெயர் சின்னசாமி தாயார் பெயர் இலக்க்மி அம்மாள். இவர் இள வயதிலேயே கவிபாடும் திறமை உடையதால் எட்டயபுர மன்னர் "பாரதி" என்ற பட்டத்தை சூட்டினார். இவரை மகாகவி பாரதியார் என்றும் அழைப்பார்கள். அம்மன்னர் தன் சமஸ்தாத்தில் புலவராக பதவி அளித்தார். இவர் தமிழ் பாடல்களையும் குயில் பாட்டு, பக்தி பாடல், கண்ணன் பாடல்கள், இந்திய தேசிய கீதம் போன்றவற்றை மிக சிறப்பாக பாடியுள்ளார்.

ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா
ஒரு குழந்தை வையாதே பாப்பா
இப்படி நிறைய பாப்பா பாடல்களையும் பாடியுள்ளார்

பாரதியார்




# கனடா

கனடா உலகில் இரண்டாவது பெரிய நாடு. கனடாவில் 32 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். நாம் வாழும் நாடு கனடா. கனடா 1867 யூலை 1ம் திகதி பிறந்தது. கனடா பத்து மாகாணங்களையும் மூன்று பிரதேசங்களையும் கொண்டுள்ளது. கனடாவின் தலைநகரம் ஒட்டாவா. கனடா பல்கலாச்சாரம் நிறைந்த நாடு. உலகிலேயே அதிகளவு மரங்களைக் கொண்ட நாடுகளில் கனடாவும் ஒன்று. பெரிய வாவிகளும் மலைத்தொடர்களும் இது கொண்டுள்ளது. உலகின் மிகப்பெரிய அருவியான நயகரா கனடாவுக்கு பெருமை தருகின்றது. பெருமளவு கோதுமை கனடாவில் விளைகின்றது. கனடாவின் தற்போதைய பிரதம மந்திரி ஸ்டீபன் காபர்.

மேஷாக் சந்திரகாந்தன்,

மேம்பாடு 4.



பாரதியார்



# இலங்கை

1 இலங்கை எமது தாய்நாடு.

2 நாம் வசிக்கும் நாடு கனடா

3 இலங்கை ஒரு அழகான சின்ன நாடு

4 இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழ்ந்துள்ளது.

5 இது தீவு என்று அழைக்கப்படும.

6 இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லிம், பறங்கியர் என நான்கு இனங்கள் வாழ்கின்றனர்.

7 இலங்கையின் வடமாகாணத்தில் அதிகளவு தமிழர் வாழ்கின்றனர்.

8 இலங்கை நாட்டை நாம் நேசித்து வாழ வேண்டும்



அபிஷா சந்திரகாந்தன்
ஆண்டு 2

பாரதியார்

# கல்வி

கல்வியெனும் தலைப்பினிலே கவிதையிதை நானெழுத
கல்வியெனும் செல்வமதை கருணைநிறை இறையோனே
முழுஞானம் நிறைந்தோனே முதல்வனே உன்னையே
முழுமனதாய் வேண்டுகிறேன் நிறைவாக அருள்புரிவாய்!

வற்றாத கடலதனின் ஆழமதைக் கண்டாலும்
வளமான கல்வியதன் கரைகாணல் முடியாதே!
எத்துறை தன்னதிலும் நாம் பட்டங்கள் பெற்றாலும்
எல்லாக் கல்வியும் நாம் பெற்றவராய் முடியாதே!

இவ்வுலகின் ஞானமெல்லாம் ஈருலகை ஆளுகின்ற
இறையோன் அவனுக்கே என்பதை நாம் மறக்கலாமோ?
மறக்காமல் அவனிடம் நாம் பெறுகின்ற கல்வியிதை
மாண்புடன் பெற்றிடவே வேண்டிடுவோம் அவனிடமே!


கண்ணுடையோர் என்போர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையோர் கல்லாதவர் என்றதோர் பெருங்குறள்
பொய்யாமொழிப் புலவன் வள்ளுவனார் வாக்கதுவும்
பொய்யாக வில்லையன்றோ பொறுமையதாய் சிந்திப்பீர்!

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கிப் பார்க்கையில்
மன்னனில் கற்றோன் சிறப்புடையோன் என்பதைப்போல்
கல்வியின் பெருமையிது கண்முன்னே தெரிவதனை
கவனத்தில் உணர்ந்து நாம் கற்றிடல் வேண்டுமப்பா!

செல்வமது கோடிதான் சேர்த்து நாம் வைத்திடினும்
சிறப்புமிகு செல்வமதாம் கல்விக்கு நிகராமோ?
காலத்தால் அழியாத, கள்வர்கள் காவாத
காற்று நீர் தீ தீண்டா செல்வமது கல்வியன்றோ!



மாணவர்: கு. பவித்திரா
ஆசிரியர்: பூங்கோதை பன்னீர்செல்வம்



## அறிவு நிரந்தரம்

புல்லாங்குழலில் உள்ளது வெற்றிடம்
புதிய சுரங்கள் பிறந்துவிடும்
கல்விக்குப் போகும் குழந்தையின் மனதில்
காண்பவை எல்லாம் பதிந்துவிடும்!

எழுதாப் பலகை ஆகாயம் என
எல்லா விடியலும் சொல்கிறது
அழகிய நிலவு விண்மீன் கோள்கள்
ஆதவன் எல்லாம் தவழ்கிறது!

உள்ளம் திறக்கும் ஒவ்வொரு நொடியும்
உனக்குள் மழைவிழும் அறிவாக!
வெள்ளம் போலது வளர்ந்து பெருகி
வாழ்வை நனைக்கும் நதியாக!

படித்து முடித்தேன் என்பது மடமை
பட்டம் மட்டும் படிப்பல்ல
அடிமனதுக்குள் அனல் விடும் தேடல்
அணைந்து போகும் நெருப்பல்ல!

புலன்கள் வழியே வாழ்வைப் பருகு
புத்தியின் பசிக்கு முடிவேது?
நிலையில்லாத வாழ்விலும் அறிவை
நிரந்தரமாக்கப் போராடு!

மாணவர்: கு. பவித்திரா
ஆசிரியர்: பூங்கோதை பன்னீர்செல்வம்

பாரதியார்



# நட்பு

வானமும் பூமியும் இறைவனின் சொத்து
இன்பமும் துன்பமும் மனிதனின் சொத்து
நீயும் நானும் கடவுளின் படைப்பு
என்றும் பிரியக் கூடாது நம் நட்பு!

நிழல் கூட மாலை நேரத்தில் பிரியும்
என்நினைவுகள் உன்னைவிட்டு என்றும் பிரியாது
மரணமே வந்தாலும் உன்னை மறவாத இதயம் வேண்டும்
மீண்டும் பிறப்பு என்றால் அதில் நீயே வேண்டும்
உறவாக அல்ல என் உயிர் நட்பாக

புரியாத நட்புக்கு அருகில் இருந்தாலும் பயனில்லை
புரிந்த நட்புக்கு பிரிவு ஒரு தூரமில்லை
நம் வெற்றியின் போது கைதட்டும் பல விரல்களை விட
தோல்வியின் போது கை கொடுக்கும் நண்பனின் ஒரு விரலே சிறந்தது

"கண்ணில் ஒரு மின்னல்"
"முகத்தில் ஒரு சிரிப்பு"
"சிரிப்பில் ஒரு பாசம்"
"பாசத்தில் ஒரு நேசம்"
"நேசத்தில் ஒரு இதயம்"
அந்த 'இதயத்தில் என் நண்பன் நீ'

மாணவர்: கு. கிருசாந்த்

பாரதியார்






# தஞ்சைப் பெருங் கோவில் ஆயிரம் ஆண்டு விழா

தமிழ் நாட்டின் முதன்மையான ஒரு நகரமாகிய தஞ்சாவூர் சோழப்பெருமன்னன் காலத்தில் சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது. "தஞ்சை பெருவுடையார்" என்று அழைக்கப்படும் சிவன் கோவில் தமிழ் வரலாற்றோடும், தமிழர் கலை, மற்றும் கட்டடக்கலையோடும் தொடர்புடைய கோவிலாகத் திகழ்ந்து வருகிறது. சோழப் பேரரசனான "அருண்மொழித்தேவன்" என்று அழைக்கப்பட்ட இராசராச சோழனாலேயே "தஞ்சைப் பெருங்கோவில்" கட்டுவிக்கப்பட்டது. நம் தமிழர்களின் கட்டிடத் திறமைக்கும், சோழர்கள் ஆட்சி செய்த தஞ்சை நகருக்கும் பெருமை சேர்க்கும் வகையில், 32 சிறப்புப் பட்டப் பெயர்களால் அழைக்கப்பட்ட மாமன்னர் இராசராச சோழன் கட்டிய தஞ்சைப் பெருங்கோபுரம் இன்றைய உலக தமிழ் மரபுச் சின்னமாக விளங்கி வருகிறது. இப் பேரரசன் தமிழகம், ஈழம், வட இந்திய நாடுகள் மற்றும் தென் கிழக்காசிய நாடுகளையும் சோழப் பேரரசுக்கு உட்படுத்திப் பரந்த ஒரு சோழப் பேரரசை நிறுவியதன் விளைவாகவே தஞ்சைப் பெருங்கோவில் கட்டப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே.

இந்தக் கோவிலின் அமைப்பினை நோக்கும் போது கோயிலின் உயரம் 216 அடி மட்டுமன்றி அடித்தளம் உயர்ந்து கூம்பி, நடுப்பகுதி கலசத்தோடு கூடிய முடி என்று மூன்று பகுதிகளைக் கொண்டதாகும். அடித்தளத்தின் மேல் 14 அடுக்குக் கொண்ட கோபுர நடுப்பகுதி நிறுவப் பெற்றுள்ளது. கீழிருந்து மேல் நோக்கிக் குறுகிச் செல்கின்றது. இதன் மேலுள்ள தளப்பரப்பு அடித்தளப் பரப்பின் மூன்றில் ஒரு பங்காக உள்ளது. கோவிலின் முகட்டுப்பகுதியில் 81.3 தொன் எடையுள்ள தனிக்கல்லிலான கலசம் பொருத்தப் பெற்றுள்ளது. கோபுர நிழலை மிதிக்கக் கூடாது என்பதற்காக, இக்கலசத்தின் நிழல் நிலத்தில் விழுவதில்லை.



கோபுரத்தில் சிவனது 108 தாண்டவ நிலைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. 9 அடி உயரமும், 23.5 அடி சுற்றளவும் கொண்ட மிகப் பெரிய சிவலிங்கத்துடன் மேலும் 250 சிவலிங்கங்கள் இங்குள்ளன. அத்தடன் 19.5 அடி நீளமும், 8.5 அடி அகலமும், 12 அடி உயரமுமுடைய தனிக்கல்லில் செதுக்கப்பட்ட பெரிய நந்தியும் உள்ளது. பல செய்திகள் கூறும் கதைகள் சுவர்களில் செதுக்கப்பட்டுள்ளன. கோவிலைக் கட்டிய கம்மியர், தச்சர், கொத்தனார் பெயர்களும் குறிப்பிடப்பட்டள்ளன. இதனைக் கட்ட ஆயிரம் பணியாளர்கள் அமர்த்தப்பட்டனர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்ட "தஞ்சைப் பெருங்கோவில்" இன்று தமிழர்களின் திறமைகளை உலகம் பூராவும் பறைசாற்றும் வண்ணம் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால் மிகையாகாது. கி.பி. 1011 ஆம் ஆண்டு கட்டட வேலைகள் முடிவுற்ற ஆண்டே குடமுழுக்கு நடைபெற்றது. எனவே, தமிழர் புகழ்பாடும் இக் கோவிலின் 1000 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி "ஆயிரம் ஆண்டு நிறைவு விழா" தமிழக அரசு சார்பில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

வாழ்க பல்லாண்டு தஞ்சைப் பெரிய கோவில்!

மாமன்னர் இராசராச சோழன் புகழ் எங்கும் பரவட்டும்!

தரணியெங்கும் தமிழர்களாகிய நாம் இக் கோவிலின் புகழ்பாட விழைவோமாக!

மாணவர்: திவியா நிரஞ்சன்குமார்

பாரதியார்



# தமிழ் மொழி

தமிழ்மொழி எமது தாய் மொழி. அப்படிப்பட்ட மொழியை நாம் ஏன் பேச மறுக்கிறோம்? உலகில் தொன்மை மிக்க மொழிகளில் தமிழ்மொழியும் ஒன்றாகும். இனிய மொழி எம் தமிழ் மொழி. ஆகவே எமது தாய்மொழியான தமிழைப் பேசுவதாலும் கற்பதாலும் தமிழராகிய நாம் பெருமை கொள்ளல் வேண்டும்.

மிகச்சிறந்த அறநூல்களையும் தமிழரின் பண்பாட்டு வரலாறுகளைக் கூறுகின்ற பலநூல்களையும் தன்னகத்தே கொண்டமைந்த மொழியாகும். தீந்தமிழ், பைந்தமிழ், செந்தமிழ் எனப் போற்றப்படுகின்ற தமிழ் மொழியை அழிய விடாமல் காப்பது தமிழரின் கடனாகும்.

நண்பர்களே! இனி நாம் தமிழரோடு தமிழில் பேசுவோம். இன்று உலகம் முழுவதும் தமிழர்கள் பரந்து வாழ்கிறார்கள். நாம் வாழும் கனடா நாட்டில் அண்ணளவாக மூன்றரை இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

மாணவர்: தனுலா ஞானகாந்தன்
ஆசிரியர்: சாந்தகுமாரி நிரஞ்சன் குமார்

பாரதியார்



# உனக்கே உனக்காக...

இந்த வானம் பூமி
சந்திரன், சூரியன்
தங்கம், வைரம் அத்தனையும்
உனக்குத்தருவேன், ஆனால்! அது
என்னுள் உனக்காக இருக்கும்
அன்பை, மரியாதையை, பாசத்தை கூறாது.
நான் உன்மேல் வைத்திருக்கும் அன்பின் அளவுக்கு
அவை அனைத்தும் ஈடாக முடியாது!
ஆகவே...
உனக்காக,
என் உயிரோடு உயிரான
இதயத்தின் துடிப்போடு
எழுதும் கவிதை?
யாருக்காக கண்ணில் கனவு
காணுகிறேனோ!
யாருக்காக இரவும் பகலும்
ஏங்கினேனோ!
ஒவ்வொரு மூச்சுக்காற்றிலும்
இருக்கின்ற உனக்காக
இந்த உலகத்தில்
என்
உயிரைக்கொடுத்து
உன்னை அவ்வுலகத்தில்
பெறுவேன் ஆனால்!
உயிரைத்தியாகம் செய்து
ஓர் உயிர் வரும்போது
சிரிப்பைத் தியாகம்செய்து
ஒரு சிரிப்பு வரும் போதும்
ஒன்றே ஒன்றுதான் நான் நினைக்கின்றேன்
உனக்குள் நான் வாழவேண்டும்
உன்னோடு தினம் வாழவேண்டும்
உன்சிரிப்பிலும் கண்ணீரிலும் - நான்
உன்பக்கம் இருக்கவேண்டும்
மறுஜென்மம் ஒன்றிருந்தால்
நான் உன்பிள்ளையாய் பிறக்க வேண்டும்

மாணவர்: கீர்த்தனா அன்ரன்
ஆசிரியர்: பூங்கோதை பன்னீர்ச்செல்வம்

பாரதியார்

# வானொலியின் தோற்றமும் பயன்பாடும்

அது ஒரு மார்கழி மாதம் நள்ளிரவு நேரம். ஐரோப்பா எங்கும் கடுங்குளிர். மக்கள் எல்லோரும் குளிரால் முடங்கினர். அந்த இளைஞனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. மாடியறையில் எதோ செய்து கொண்டிருந்தான்.

தாயை மெதுவாகத் தட்டி எழுப்பினான். மாடியறைக்குக் கூட்டிச் சென்றான். ஓர் அதிசயம் காட்டுகின்றேன் பாருங்கள் என்றான். தாயினை ஒரு மூலையில் அமரச் செய்தான். தாயின் அருகில் ஒரு மேசையை வைத்து அதில் ஒரு கருவியை வைத்து மூடினான். அவன் வேறோர் மூலையில் போய் நின்றான். கையிலொரு பொருளை வைத்திருந்தான்.

"அம்மா கவனமாகக் கேளுங்கள்" என்றான். தனது கையில் உள்ள பொருளை அழுத்தினான். அறையின் இன்னொரு மூலையில் மணியொலித்தது. இடையில் எந்தக் கம்பியின் தொடர்பும் இல்லை. தாயாருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. மகனின் விடாமுயற்சி வெற்றி பெற்றது கண்டு மகனை கட்டித் தழுவினாள்.

விடிந்ததும் தந்தைக்குக் கூறினார்கள். தந்தை அதனை ஏற்கவில்லை. வேறொரு நாள் ஒரு மலையிலிருந்து வேறோர் மலைக்கு, கம்பியில்லாது ஒலியை அனுப்பினான். உலகமே வியந்து புகழ்ந்து பாராட்டியது. அவர்தான் 1895ல் கம்பியில்லாத் தந்தி என்னும் வானொலியைக் கண்டுபிடித்த மார்க்கோனி ஆவார்.

மார்க்கோனி வானொலியை கண்டுபிடித்ததால் உலகப் புகழ் பெற்றார். இன்று வானொலியைத் தெரியாதவரே கிடையாது. உலகில் ஒவ்வொரு மணித்துளியும் நடக்கும் நிகழ்வுகளையும் உடனுக்குடன் அறிய முடிகின்றது.

வானொலியில் செய்திகள், கதைகள், இனிமையான பாடல்கள், நாடகங்கள், பட்டிமன்றங்கள், செய்தித் துணுக்குகள், சிறுவர் நிகழ்ச்சிகள், முதியோர் அரங்கம், இளையோர் அரங்கம், சமயக் கருத்துகள் போன்ற பல விடயங்களைக் கேட்டறிந்து பயன் பெறலாம்.

வள்ளுவப் பெருந்தகை தனது வள்ளுவத்தில் "கற்கிலனாகினும் கேட்குக" என்று ஐம்புலன்களிலும் கேள்விச் செல்வமான செவிப்புலனுக்கு முதன்மை கொடுத்துள்ளமையை நாமறிந்து கொள்ளலாம். கேள்விச் செல்வத்தின் பயன்பாட்டை வானொலியின் மூலம்தான் மானிடம் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

"செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்
அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை"

என்பதிலிருந்து அறிய முடிகிறது. ஒருமனிதன் பேசமுடியா விட்டாலும் கேட்பதினால் முழுமை அடைகிறான். உலகைப் புரிந்துகொள்கிறான். தன் முதுமையிலும் பயன் பெறுகின்றான்.

இன்று கனடாவில் தமிழ்ச் சிறுவர்கள் பாடவும், பேசவும், கதை கூறும் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் வானொலி பெரிதும் உதவுகின்றது. பேச்சுத் துணை இன்றி முடங்கிக் கிடக்கும் முதியோர்கட்கு உற்ற நண்பனாகத் திகழ்வதில் வானொலி பெரும் பங்கு வகிக்கின்றது என்றே கூறலாம். மார்க்கோனியின் சிந்தனையில் உதித்த வானொலியானது மற்றைய கருகிகளை விடப் பயன்பாடு உடையதொன்றாகும். வானொலியின் சேவையைப் பயன் படுத்தி அதன் பயன்களை பெறுவோம்.

மாணவர்: ஆதவன் யோகராசா




# தமிழ் ஒலிபரப்புத் துறை

தமிழ் ஒலிபரப்புத்துறை என்பது தமிழில் ஒலிபரப்பு செய்யப்படுவதையும், அத்துறையில் ஈடுபட்டுள்ள தமிழர்களையும், அத்துறைசார் கலைத்துறைப் புலத்தையும், வரலாற்றையும் குறிக்கின்றது. மார்க்கோனி 1897இல் வானொலி நிலையம் ஒன்றை இங்கிலாந்தில் ஆரம்பித்தார். அமெரிக்காவில் 1907ஆம் ஆண்டு ஒலிபரப்பு முன்னோட்டங்கள் ஆரம்பித்தன. 1920களிலேயே வானொலி ஒலிபரப்பு வடிவம் பெற்றது. இலங்கையில் 1923ஆம் ஆண்டிலேயே ஒலிபரப்புச் சோதனை முயற்சிகள் நடைபெற்று, 1925இல் சீரான ஒலிபரப்பு தொடங்கப்பட்டது. தமிழின் ஒலிபரப்புத்துறை 'ரேடியோ சிலோன்' மூலமே தொடங்கியது.

வானொலியில் வழங்கும் நிகழ்ச்சி வடிவங்கள் சில:

செய்திகள்
கலந்துரையாடல்
நேர்முக வர்ணணை
போட்டி நிகழ்ச்சிகள் (தமிழ்மூலம் உரையாடல், பொது அறிவு)
வானொலி நாடகங்கள்
விபரண நிகழ்ச்சிகள், பெட்டக நிகழ்ச்சிகள்
அறிவித்தல்கள்
ஆபத்துதவி நிகழ்ச்சிகள்
வாழ்த்துகள்
விளம்பரங்கள்
வானொலிச் சந்தை
நகைச்சுவை சொல்லல்
பாட்டுக்கள், பாட்டு நிகழ்ச்சிகள்
சந்திப்புக்கள், உரையாடல்
பட்டிமன்றம்
சிறுவர், முதியவர், இளையவர், பெண்கள் நிகழ்ச்சிகள்
சமய நிகழ்ச்சிகள்
இலக்கிய நிகழ்ச்சிகள்
ஆய்வுரைகள்
விமர்சனம்

மாணவர்: வருண் ஜெயதேவன்
ஆண்டு11 தமிழ்




பாரதியார்












மாணவர்














பாவாணர்








மாணவர்







அற்புதராணி சிறிகாந்தன்

BL-1

மாணவி: பானுஜா சிவபாதம்

பாவாணர் வளாகு

## தமிழ் வகுப்பு

நான் ஒவ்வொரு சனிக்கிழையும் தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரி வழங்கும் தமிழ் வகுப்புக்குச் செல்கின்றனான். இக்கல்லூரி, பல இடங்களில் தனது தமிழ் வகுப்புகளை வழங்கி வருகின்றது. நான் மதர் தெரேசாப் பள்ளியில் தமிழ் கற்று வருகின்றேன். எனது தமிழ் வகுப்பு ஆசிரியரின் பெயர் அற்புதராணி. அவர்கள் எனக்கு அடிப்படைப் பிரிவுக்கேற்ற தமிழ் மொழியைக் கற்பிக்கிறவர். இந்தத் தமிழ் வகுப்பு மிகவும் நல்லது ஏனென்றால் இவ்வகுப்பில் உங்களுக்கு எவ்வளவு தமிழ் தெரிந்திருக்கின்றது என்று தெரிந்து அந்தப் பிரிவுக்கேற்ற பாடத்திட்டம் அமைந்திருக்கும். இவ்வகுப்பில், நான் நிறைய நண்பர்களைச் சந்தித்தேன். அவர்கள் எல்லோரும் மிகவும் நல்லவர்கள்.

இந்தத் தமிழ் வகுப்பில் தமிழ் மொழியைப் பற்றியும் தமிழ் மொழியின் வரலாறு அத்தமிழ் மொழியைப் பேசும் தமிழர்களின் வரலாறு பற்றியும் நாங்கள் கற்கின்றோம். இந்தத் தமிழ் வகுப்பில் நாங்கள் அனைவரும் தமிழ்ப் பொங்கல் கொண்டாட்டம் கொண்டாடினோம். இவ்வகுப்பில், எங்களுக்குப் பரீட்சையும் உண்டு. இப்பரீட்சையை வருடத்தின் இறுதியில் வைப்பார்கள். இப்பரீட்சைக்கு நாம் ஒருவருடமாகத் தமிழ் வகுப்பில் கற்றுக்கொண்டவற்றைத் தெரிந்திருக்க வேண்டும். இத்தமிழ் வகுப்புகளை வழங்கும் கல்லூரி, மாணவர்களின் அறிவைச் சோதனை செய்வதற்கு மற்றும் சில மொழித்திறன் பரீட்சைகளையும் வைப்பதுண்டு. இந்த மொழித்திறன் போட்டிகள் கணிதம், தமிழ் மற்றும் அறிவியலைச் சார்ந்தது. இவைகளை மட்டுமல்ல, ஒவ்வொரு வருட முடிவில் பிரான்சிஸ் லீபர்மன் என்ற பள்ளியில் மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொண்டுவதற்கு தமிழ்ப் பேச்சு, பாட்டு, நடனம், நாடகம் மற்றும் பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடப்பதுண்டு. இத்துடன், திறன் உடைய மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படுவதுண்டு. எனக்கு ஒவ்வொரு சனிக்கிழமை வரும்போதும் மிகவும் மகிழ்ச்சி அடைவேன் தமிழ் வகுப்பை நினைத்து. தமிழ் வகுப்பில் நான் எப்பொழுதும் ஆர்வத்துடன் ஆசிரியை எனக்கு கற்பிப்பதை செவிகொடுத்து என் தமிழ் மொழித் திறனை மேம்படுத்துகின்றனான். எனக்கு என் தாய் மொழியைப் பற்றிய வரலாறு, இலக்கணம் மற்றும் இலக்கியம் ஆகியவற்றைப் பற்றி மேன்மேலும் அறிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் உண்டு.

பாவாணர்

## ஆறுமுக நாவலர்

உலகில் தமிழுக்கும் சமயத்திற்கும் பணியாற்றிய முக்கியமான பெரியார்களில் ஆறுமுக நாவலரும் ஒருவராவர். இவர் இலங்கையில் யாழ்ப்பாணம், நல்லூர் எனும் ஊரிலே மார்கழி மாதம் 18ம் திகதி 1822 ஆம் ஆண்டு, கந்தப்பிள்ளை, சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்குக் கடைசி மகனாகப் பூமியில் அவதரித்தார். நாவலரின் இளமைப் பெயர் ஆறுமுகம்பிள்ளை ஆகும். நாவலருக்கு 4 மூத்த சகோதரர்களும் 3 சகோதரிகளும் இருந்தனர். ஒன்பதாவது வயதில் நாவலர் தனது தந்தையை இழந்தார்.

ஐந்து வயதில் தனது ஆரம்பப் பள்ளியை ஆரமபித்த நாவலர் பெருமான், சுப்பிரமணிய ஆசிரியரிடம் நீதிநூல்களையும், பின்னர் சரவணமுத்து புலவரிடமும் சேனாதிராசா முதலியாரிடமும் தனது உயர்கல்வியைக்கற்றார். 12வது வயதில் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய 2 மொழிகளையும் கற்று சித்தி அடைந்தார். யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் கல்வி கற்ற இவர், ஆங்கில மொழியிலும் திறமை பெற்று, அப்பாடசாலையில் தனது 20வது வயதில் ஆசிரியராகக் கடமையாற்றினார்.

நாவலர் சைவசமய வளர்ச்சிக்கும் பணிபுரியத் தொடங்கி வண்ணார் பண்ணை வைத்திஸ்வரன் கோவிலில் தனது முதலாவது பிரசங்கத்தை ஆரம்பித்தார். சமயவிழிப்புணர்வை ஏற்படுத்திய நாவலர், வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலையை ஆரம்பித்து, சமய வளர்ச்சிக்காகத் தனது முழுநேரத்தையும் செலவழித்தார். சென்னையிலுள்ள திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவப் பிரசங்கத்தைச் செய்து, தனது திறமையை வெளிப்படுத்தி, நாவலர் எனும் பட்டத்தைப் பெற்றார். சென்னையில் இருந்து அச்சியந்திரத்துடன் யாழ்ப்பாணம் திரும்பிய நாவலர், தனது இல்லத்தில் அச்சுக்கூடம் ஒன்றை அமைத்தார். பாலபாடம், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய நூல்களை அச்சிட்டார். திருத்தொண்டர் பெரியபுராணத்தை வசன நடையில் எழுதி அச்சிட்டார். இவரது பணி இலங்கையில் மட்டுமின்றி இந்தியாவிலும் தொடர்ந்தது.

இவ்வாறாக தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதற்காகப் பெரும் பாடுபட்ட நாவலரது உடல்நலம் குறைய ஆரம்பித்தது. மார்கழி மாதம் 5ம் திகதி 1879 இரவு 9 மணிக்கு நாவலரின் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்தது. இவர் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய பணிகளை நாமும் பேணிப் பாதுகாப்போமாக.

மாணவர்



# தைப்பொங்கல்

தைப்பொங்கல் தைமாதத்தில் கொண்டாடப் படுகிறது. இது சூரியனுக்கு நன்றி செலுத்தும் உழவர் திருநாளாகும். விவசாயிகளுக்கு உதவி செய்த கதிரவனுக்கு முதல் நாளும், மாடுகளுக்கு மறுநாளும் பொங்கிப்படைப்பர்.

பொங்கலன்று அதிகாலை எழுந்து நீராடி புத்தாடை அணிந்து புதிய கதிர் அறுத்து அரிசியாக்கி முற்றத்தில் குடும்பமாகப் பொங்கி மகிழ்வர். பொங்கும்போது பொங்கலோ பொங்கல என்று பாடி, வெடி கொளுத்தி மகிழ்வர். பொங்கலன்று குடும்பத்தோடு கோயிலுக்குச் சென்று வழிபடுவர். புலம் பெயர்ந்த நாடுகளிலும் தமிழர் தங்கள் பண்பாடு கலாச்சாரத்தை மறக்காமல் பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.



ஆக்கம் :- பிரதாகினி - புஸ்பராஜா
வளாகம் ;- பாவாணர்

பாவாணர்



சா.பிறின்சி வகுப்பு 3
பாவாணர் வளாகம்

## திருக்குறள்

ஆசிரியர் - கனிசானந்

திருக்குறள் உலகப்புகழ் பெற்ற தமிழ் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இதில் 1330 குறள்கள் பத்து பத்தாக 133 அதிகாரங்களின் கீழ் தொகுக்கப் பெற்றுள்ளன. இது அடிப்படையில் ஒரு ஒப்பரிய வாழ்வியல் நூல். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாய் பிரித்து அழகுடன் இணைத்து விளக்கும் இலக்கியப் படைப்பு. இந்நூல் பொய்யாமொழி, தமிழ் மறை, உலகப் பொது மறை என்றும் அழைக்கப்படுகிறது.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்று தமிழ் முதல் எழுத்தாகிய "அ" வில் ஆரம்பித்து, 1330 ஆம் குறளாகிய,

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"

என்று தமிழ் மொழியின் கடைசி எழுத்தாகிய "ன்" னுடன் முடித்திருக்கிறார் திருவள்ளுவர்.

பாவாணர்





# மகாகவி சுப்ரமணிய பாரதியார்

மதுசா - புஸ்பராஜா

சுப்ரமணிய பாரதியார் சிறந்த புலவர். அவர் சுவை நிறைந்த பாடல்களைப் பாடினார். அவரை எல்லோரும் பாரதியார் என்று அழைப்பர். அவருடைய பாடல்களைக் குழந்தைகளும் படிக்கிறார்கள்.

பாரதியார் தமிழ் நாட்டில் எட்டயபுரத்தில் மார்கழி மாதம் 11ம் திகதி 1882ம் ஆண்டு பிறந்தார். அவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமி ஐயர் தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள்.

பாரதியார் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அம்மொழிகளுள் அவருக்குத் தமிழிலேயே விருப்பம் அதிகமாய் இருந்தது.

பாரதியார் தடித்த சட்டையும் தலைப்பாகையும் அணிந்திருப்பார். வீரனைப் போலக் கம்பீரமாய் நடப்பார்; எல்லோரையும "பாண்டியர்" என்று அழைத்து இனிய மொழி பேசுவார். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பார்; எதற்கும் அஞ்சமாட்டார்.

"அச்சந் தவிர்; உண்மை தவறேல்; உடலினை உறுதி செய் எண்ணுவது உயர்வு, ஏறு போல் நட" என்று பாரதியார் எல்லோருக்கும் கூறுவார்.

தரம் : 5
வளாகம் : பாவாணர்
ஆசிரியர் : திருமதி. ப. விருபா

பாவாணர்




## பாரதியார்

பாரதியார் 1882 ஆம் ஆண்டு தமிழ் நாட்டிலே திருநெல்வேலியிலுள்ள எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும் இலக்குமியம்மாளுக்கும் மகனாக பிறந்தார். பாரதியாரது இயற்பெயர் சின்னசாமி சுப்பிரமணியய்யர் ஆகும். பாரதியார் இந்துக்கல்லூரியில் கல்வி கற்றார். இவர் தமிழ் இந்தி சமஸ்கிருதம், தெலுங்கு, ஆங்கிலம், ஆகிய மொழிகள் அறிந்திருந்தார் பாரதியாரது பாடல்களைக் கேட்ட எட்டையபுர அரசன் அவருக்கு பாரதி என்று பட்டமளித்தார் பாரதியார் தாய்நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டார் அதனால் தலைமறைவு வாழ்க்கை வாழவேண்டியிருந்தது பாரதியார் பலபாடல்களை பாடியுள்ளார். பாரதியார் இம்மண்ணில் 39 ஆண்டு காலம் வாழ்ந்துள்ளார். இப்பெரியார் 1921 ஆம் ஆண்டு புரட்டாதித் திங்கள் 11 ஆம் நாள் இறைவன் திருவடி சேர்ந்தார்.

த. தீஷிதா
வகுப்பு - 3

ஆசிரியர் - கனி[illegible]னந்



# தாய்நாடு (தமிழீழம்)

எனது தாய்நாடு தமிழீழம் ஆகும். இது இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தி அமைந்துள்ளது. தமிழீழத்தில் உள்ள மக்கள் அனைவரும் தமிழையே பேசுகின்றார்க அந் நாடு இயற்கை வளம் நிறைந்த அழகா நாடு. அதில் ஈழத்தமிழர்கள் பாரம்பரியமா வாழும் பூமி. அது கடல் வளமும் விவசாயமும் நிறைந்த பூமி. தமிழீழத்தின் தேசியக் கொ புலிக்கொடி. தேசியக் கொடியின் நிறம் சிவப்பும் மஞ்சளும் ஆகும். தேசியப் பூ கார்த்திகைப் பூ ஆகும். கார்த்திகைப் பூவின் நிறம் சிவப்பு மஞ்சள் ஆகும்.

பவிசன் பவளராசா.
தரம் 03.
பாவாணர் வளாகம்.
ஆசிரியர் கனிஷ்டானந். M

பாவாணர்



.11.2011

## எந்தாயார் நாடு

எனது தாய் தந்தையர்கள் பிறந்த நாடு
தமிழ் ஈழம். அந்த ஊரின் பெயர்
யாழ்ப்பாணம். யாழ்ப்பாணம் அழகிய
அமைதியான ஊர் இயற்கை வளம்
நிறைந்த வானம் பார்த்து இருக்குமா,
பலா வாழை போன்ற முக்கனிகளும்
தென்னை, பனை போன்றவையும்
உண்டு. சுற்றிவர சிவன், பிள்ளையார்
முருகன், அம்மன், பெருமாள்
ஆலயங்கள் உள்ளன. எந்த
நேரமும் ஆலய மணி கேட்ட
வண்ணம் இருக்கும். அப்படிப்
பட்ட ஊரைத் துறந்து நாட்டு
நிலைமை கருதி எனது தாய்
தந்தையர் கனடா நாட்டில்
குடியேறினார்கள். நானும்
எனது தங்கையும் கனடாவில்
பிறந்தோம். நாங்கள் இப்போது
கனேடிய பிரஜைகள். ஒரு நாள்
நாங்கள் எல்லோரும், எனது
தாய் தந்தை பிறந்து வளர்ந்த
நாட்டை பார்க்க செல்வோம்.

கோபி தில்லைராசா
வகுப்பு - 3

ஆசிரியர் - கனிசானந்

# திருக்குறளின் சிறப்பு

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவரால் இயற்றப்பட்ட நூல் ஆகும். திருக்குறள் இயற்றப்பட்ட காலத்தில் தமிழரின் வாழ்வில் பல குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. மக்கள் தங்களுடைய ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் மறந்து வாழ்ந்து வந்தனர். கொலை, களவு, மதுபானம் அருந்துதல் எனப் பல தீய பழக்கவழக்கங்களில் ஈடுபட்டனர். இவர்கள் வாழ்க்கையின் நோக்கத்தை அறியாமல் வாழ்ந்து வந்தனர். இக்காரணத்தால் மக்களுக்கு அற ஒழுக்கங்களைப் பற்றி விளக்கப் புலவர்கள் அற நூல்களை இயற்றினர். இந்த அற நூல்களில் மிக முக்கியமான முதல் நூல் திருக்குறள் ஆகும்.

'அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு'

என்று தமிழ் நெடுங்கணக்கின் முதல் எழுத்தாகிய 'அ' இல் ஆரம்பித்து 1330ஆம் குறளாகிய,

'ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்'

என்று தமிழ்மொழியின் கடைசி எழுத்தாகிய 'ன்' உடன் இத்திருக்குறளைத் திருவள்ளுவர் முடித்திருக்கின்றார்.

தமிழில் உள்ள நூல்களிலேயே சிறப்பிடம் பெற்ற நூல் திருக்குறள் ஆகும். திருக்குறளை தெய்வநூல், முப்பால்நூல், பொய்யாமொழி முதலிய பெயர்களாலும் அழைப்பர். இது அடிப்படையில் ஒரு வாழ்வியல் நூல் ஆகும். திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்குப் பல பெயர்கள் உண்டு. இவற்றில் சில தெய்வப்புலவர், நாயனார், தேவர் என்பன ஆகும். திருக்குறள் மனித வாழ்வின் முக்கிய கூறுகளைப் பற்றி விளக்குகிறது. ஒவ்வொரு குறளும் இருஅடிகளில் அமைந்தனவாகும். இந்த அடிகளில் கூறும் விடயங்கள் மிக முக்கியமானவை. திருக்குறள் 133 அதிகாரங்களில் 1330 குறள்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 குறள்கள் உள்ளன. இப்பாடல்கள் அனைத்துமே குறள் வெண்பா என்னும் வெண்பா வகையைச் சேர்ந்தவை ஆகும். திருக்குறள் "முப்பால்" என்னும் பெயரோடு விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களைக் கொண்டதால் இப்பெயர் பெற்றது.

திருக்குறள் மனிதர்களின் வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டி ஆகும். இந்நூல் வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்பதைப்பற்றி கூறுகிறது. திருக்குறள், மனிதர்கள் தம் வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டிய நல்ல ஒழுக்கங்களையும் பழக்க வழக்கங்களையும் விளக்குகிறது. ஒருவனின் வாழ்க்கை அநுபவங்கள் சார்ந்த காதல், கல்வி, அறம், விருந்தோம்பல், நட்பு என இது போன்ற பல்வேறு விடயங்களைப் பற்றி உணர்த்துகிறது. அறத்துப்பால், பொருட்பால் என்பவை ஒரு மனிதன் முழுமனிதன் ஆகவேண்டும் என்றால் அவன் தன்னலமற்றவனாக இருந்து பிறருக்கு உதவி செய்து அறத்தொடு வாழவேண்டும் என்பதை கூறுகின்றன. காதல் உறவுகளை பற்றிக் கூறும் பால் இன்பத்துப்பால் ஆகும். இது ஆணுக்கும் பெண்ணிற்கும் உள்ள காதல் உறவுகளைப்பற்றி விளக்குகிறது. ஆணும் பெண்ணும் சமம் என்பதை வள்ளுவர் உணர்த்துகிறார்.

அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் திருக்குறள் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதுவரை 80 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் தமிழரைப் பெருமைப் படுத்தும் நூலாகும். சிறுவர்களுக்கும் முதியோர்களுக்கும் இந்நூல் பல விடயங்களைக் கற்றுத் தருகிறது.

மாணவர்: நிர்மலாதேவி நந்தகுமாரன்
ஆசிரியர்: கௌசல்யா சுப்பிரமணியம்



# கனடாவில் தமிழ் முதியோரின் நிலை

மேற்கு நாடுகளில் பொதுவாக 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியவர்கள் என்று கணிக்கப்படுவர். இந்த வயதுக்குப் பின்னரே அவர்கள் அரச ஓய்வூதியம் பெற உரித்து உடையவர்கள் ஆவர். கனடாவில் - பொதுவாக மேற்கு நாடுகளில் - முதியவர்கள் அதிகமானோர் நல்ல உடல் நலத்தோடும் சுறுசுறுப்பாகவும் இருக்கிறார்கள். ஆனால் எம்மவரில் பல முதியவர்கள் மிகவும் பலவீனம் அடைந்து பல நோய்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாகி இருப்பதைக் காண்கிறோம். இதற்குப் பல அறிவியல் வகையான காரணிகள் இருந்தாலும், அவர்களது முன்பு வாழ்ந்த வாழ்க்கையும் இடப்பெயர்ச்சி மற்றும் சூழல் மாற்றம் என்பவையும் ஒருவகையில் காரணம் என்பதை மறுக்க முடியாது. வேரூன்றிய பெரிய மரம் ஒன்றை முற்றிலும் மாறுபட்ட சூழலில் மீண்டும் நாட்டி வளர்ப்பது அவ்வளவு சுலபமில்லை. சில அழிந்து விடுவது கூட உண்டு. எமது முதியவர்கள் இதற்கு ஒரு நல்ல உதாரணம்.


கனடா, முதியவர்களுக்கு ஒரு சொர்க்க பூமியென்றே கூறலாம். மற்ற நாடுகளைவிட இந்த அரசாங்கம் இவர்களுக்குப் பல சலுகைகளையும் உதவிகளையும் கொடுத்துவருகிறது. இவற்றில் சிறப்பாகச் சுட்டக்கூடியன: இலவச மருந்தும் அதிநுட்ப மருத்துவ வசதியும் எனலாம். இவை தமிழ் முதியோர்களுக்கு ஒரு நல்வாய்ப்பு என்றே கூறலாம்.

ஒருவர் முதிர்வு அடைந்தவுடன் எல்லா நோய்களும் அவர்களை வந்து அடைந்துவிடும். அதற்குரிய மருத்துவம் பெற பணவசதி இன்றி இறப்பவர்கள் உலகில் ஏராளம். ஆனால் கனடாவில் அரசு வழங்கும் மேற்படி உதவிகள் அவர்களை முதுமையிலும் சிறப்பாக வாழ வைக்கிறது. ஆனால் கிடைக்கும் வசதிகளை எல்லோரும் உபயோகிப்பது இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனால் பல நோய்களை முளையிலேயே கிள்ளி எறிய வழி இருந்தும் சிலர் தமது உயிரை அநியாயமாக இழந்த கொடுமையை நாம் அறிவோம். வேண்டிய நேரத்தில் அவர்களை மருத்துவரிடம் கூட்டிச்செல்லப் பலர் சிரமப்படுகிறார்கள். பலர் தமது கவலைகளை மற்றவர்களுடன் பகிர்வதற்கோ, ஏன் உரையாடி மகிழக்கூட முடியாமல் வாழ்கிறார்கள். முதுமை அடைந்ததும் பொதுவாக ஆன்மீகத்தை நாடுவார்கள். அவர்களுக்கு இறைவழிபாடு முக்கியமானது. அதனையும் சிலரால் செய்ய முடிவதில்லை. குறிப்பாக மொழிச் சிக்கல், போக்குவரத்து வசதிக்குறைவு, கதைத்து உரையாட அன்பான பிள்ளைகள் - நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கிடையேயான இடைவெளி, உரிய நேரத்தில் சத்தான தகுந்த உணவின்மையும் உடற்பயிற்சியின்மையும் முக்கிய காரணங்களாகும்.

முதியவர்கள் யாராக இருந்தாலும் நாம் அவர்களை அன்புடனும் மதிப்புடனும் நடத்தவேண்டும். நாமும் என்றோ ஒருநாள் இந்நிலையை அடைந்தே தீருவோம். இன்று நாம் செய்வது நாளை எமக்கு வரும் என்பதை நினைவில் கொண்டு இன்று முதல் எமது சேவை மனப்பான்மையை வளர்ப்போம். துன்பப் பட்டுக்கொண்டிருக்கும் முதியவர்களுக்கு விடிவு மலரட்டும். மொத்தத்தில் கனடாவாழ் முதியவர்கள் தகுந்த மரியாதையுடனும் அன்புடனும் அரவணைப்புடனும் இறுதிவரை கவனித்துப் பார்த்துக் கொள்ளச் சபதம் கொள்வோமாக.

மாணவர்: சுரேகா செல்வகுமாரன்
ஆசிரியர்: கௌசல்யா சுப்பிரமணியம்



மாணவர்

# தஞ்சை பெருங்கோவிலின் சிறப்பு

தஞ்சைப் பெருங்கோவிலானது தற்காலத்தில் பண்டைய தமிழனின் பெருமையையும் மேன்மையையும் உலகிற்கு எடுத்துக் காட்டும் ஒரு சின்னமாக உலகவாழ் தமிழ் மக்களால் கருதப்படுகிறது. இக் கோவிலானது சோழ அரசு அதன் உச்சக் கட்டத்தினை அடைத்திருந்த பொழுது ராச ராச சோழனால் பத்தாம் நூற்றாண்டில் தஞ்சையில் பல தேர்ச்சிபெற்ற கட்டடக் கலைஞர்களால் கட்டுவிக்கப்பட்டது.

இக் கோவில் முழுவதும் உலகின் மிக கடினமான பாறையான 'கிரனைட்' என்ற பாறையினால் கட்டப்பட்டதன் காரணமாக இன்னமும் புதுப்பொழிவுடன் காட்சி தருகிறது.

தஞ்சை பெருங்கோவிலுக்கு, பிரகதிசுவரர் கோவில் மற்றும் பெரிய கோவிலென்றும் பல பெயர்கள் உள்ளன. இக்கோவில் தமிழன் கட்டடக் கலையில் சிறந்து விளங்கினான் என்பதை உறுதி செய்கின்றது. இக்கோவில் மற்றைய கோவில்களைப் போல் அல்லாது ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்பும் மிகக் அழகாகப் புதுப் பொலிவுடன் காட்சி அளிப்பது இதன் சிறப்புக் கூறாகும்.

அகழ்வாராய்வாளரின் ஆய்வுகளின் அடிப்படையில், இக்கோவில் கட்டுவதற்கென கொண்டுவரப்பட்ட கற்கள் யாவும் யானைகளின் உதவியுடன் பல மைல்களுக்கப்பால் இருந்து, பல சிரமங்களை எதிர்கொண்டு கொண்டு வரப்பட்டமை, தமிழ் மன்னர்களின் சமயப் பற்றுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பெரிய கோவிலின் சிற்பங்கள் மற்றும் கட்டட பரிமாணங்கள் இவ் நவீன காலத்திலும் பார்ப்பவர்களை பிரமித்து நிற்கச் செய்கிறது. மற்றைய கோவில்களோடு ஒப்பிடும் பொழுது தஞ்சைப் பெரிய கோவிலிலுள்ள நந்தி, கோபுரம் மற்றும் சிவலிங்கம் போன்றவை பெரிதாக உள்ளமை இக் கோவிலின் இன்னுமொரு சிறப்புக் கூறாகும்.

இக் கோவிலின் கோபுரமானது எகிப்திய பிரமிட்டுகளை போல் முக்கோண வடிவில் காட்சி தருகின்றது. இக் கோவிலின் மேற்பகுதியில் உள்ள மிகப்பெரிய கல்லானது அறிவியல் அறிஞரிடத்தே ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. இது ஏனெனில் எந்தவொரு உபகரண உதவியும் இல்லாத கால கட்டத்தில் பண்டைய தமிழ் கட்டடக்கலை நிபுணர்கள் எவ்வாறு அப்பாரிய கல்லினைக் கோபுரத்தின் உச்சியில் வைத்துள்ளனர் என்பதே.

இத்தகைய பெருமை கொண்ட பெரிய கோவிலின் ஆயிரம் ஆண்டு நிறைவு விழா கடந்த செப்டம்பர் மாதம் தமிழ்நாட்டில், பெரிய கோவில் வளாகத்தில் இரண்டு நாட்களாக வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மாணவர்: நிருயன் சிவநேசன்
ஆசிரியர்: பொன் அருந்தவநாதன்



பாவாணர்








adidas






















# மீன் குட்டிகள்



என்னிடம் அழகான
இரண்டு மீன் குட்டிகள்
உள்ளன. ஒன்று
சிவப்பு. மற்றது
நீலம். நான் அவைக்கு
உணவு கொடுப்பேன்.
நான் அருகே போனால்
அவை என்னையே பார்க்கும். நான்
மீன்குட்டிகளோடு கதைப்பேன்.
அவைக்கிம் என்னைல் நல்ல விருப்பம்.
நன்றி

நிலோஜா.விஜி
மாசாத்தியார் வளாகம்
முதுமழலை

மாசாத்தியார்



# சுவைகள்


கரும்பு இனிக்கும்
மிளகாய் உறைக்கும்
பாவற்காய் கசக்கும்
பாக்கு துவர்க்கும்
எலுமிச்சை புளிக்கும்
உப்பு உவர்க்கும்

பிரகித்.தி
முதுமழலை (S.K)

மாசாத்தியார் வளாகம்
March 11, 2011



# நான்



எனது பெயர் ஹரிசன்.
எனது வயது ஐந்து.
நான் பாலர் வகுப்பில் கல்வி கற்கிறேன்
எனது தாய்நாடு இலங்கை.
எனது பொழுது போக்கு தொலைக்காட்சி பார்த்தல், புத்தகம் வாசித்தல்
நான் விரும்பும் பாடம் கணக்கு.

தி. ஹரிசன்
பாரதியார் பாலகம்
முதமழலை

மாசார்த்தியார்



| ஒருமை | பன்மை |
| --- | --- |
| பழம் | பழங்கள் |
| சட்டி | சட்டிகள் |
| பூ | பூக்கள் |
| சலங்கை | சலங்கைகள் |
| பெட்டி | பெட்டிகள் |
| புத்தகம் | புத்தகங்கள் |
| செம்பு | செம்புகள் |
| சட்டை | சட்டைகள் |
| மோதிரம் | மோதிரங்கள் |
| கதிரை | கதிரைகள் |

காவியா - பாலமுகுந்தன்
ஆரம் - 1
மாசாந்திரியார் வளாகம்


மாசாத்தியார்



அஸ்வினி நிமலகுமார்
தரம் இரண்டு
மாசாத்தியார் வளாகம்

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

இவர் ஈழத்தில் வாழ்ந்த தமிழ்ப் புலவர் ஆவார். இவர் பல சிறுவர்களுக்குரிய குழந்தைப் பாடல்கள் பாடியுள்ளார். இவரை எல்லோரும் “தங்கத்தாத்தா” என்று அன்போடு அழைப்பர். இவருடைய பாடல்கள் பல எளிமையும், இனிமையும் கொண்டு காணப்படுகின்றன. இவருடைய பாடல்களில் ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை, கத்தரித் தோட்டத்து மத்தியில், பருத்தித் துறை ஊராம் பவளக் கொடி போராம் போன்ற பல பாடல்களை சொல்லலாம் “பருத்தித் துறை ஊராம்” எனும் பாடலை நாற்று மேடை நிகழ்வில் எங்கள் வகுப்பு மாணவர்கள் நாட்டிய நாடகமாக பாடியும் ஆடியும் காண்பித்து எல்லோரையும் மகிழ்வித்தோம்.





விலங்குகளின் ஒலிகள்

புலி உறுமும்

நாய் குரைக்கும்

நரி ஊளையிடும்

பாம்பு சீறும்

சிங்கம் முழங்கும்

குதிரை கனைக்கும்

யானை பிளிறும்

அட்சயா சபேசன்


மாசாத்தியார் வளாகம்

முதுமழலை (S.K)



பி-அபிராம் Abi

உயிர் எழுத்துக்கள்




மாசாத்தியார்



Gr - Sp-3

Aagash, Premananthan

# திருக்குறள்

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனும் சொல்

கற்ற குறளின் பொருள் அறிவோம்!

மகன் தன் தந்தைக்குச் செய்யும் உதவியானது, "இவனது தந்தை இந்தப் பிள்ளையை என்ன தவம் செய்து பெற்றானோ!" என்று சொல்ல வைப்பது.



சிந்தனைத் துளிகள்

நன்மை செய்தல்
தீமை கூடாது
கவலை இல்லை
நம்பிக்கை இருத்தல்
கடினம் கூடாது
காரியம் இருத்தல்
பேச்சு வருதல்
புத்தி இருத்தல்
செயல் செய்தல்

ஆக்கம்
ஈ. அபினா



ரிதுஷன். அந்தோனி
முதுமழலை
மாணாத்திபியம்
ஆரம்பம்

## எனது பெற்றோர்

அம்மா அம்மா அம்மா
அன்பான அம்மா
நாளும் பொழுதும்
எனது நலம் காக்கும்
அம்மா.
அப்பா அப்பா அப்பா
அருமையான அப்பா
அருகில் என்னை
அணைத்து அறிவை
வளர்க்கும் அப்பா

ரிதுஷன்



கென்றிச் அந்தோனி
இடைமுனை
மாசாத்திரியார் வளாகம்



## கிளி

கிளி அழகான பறவை
கிளியின் நிறம் பச்சை
கிளி பழம் தின்னும்
கிளி கீ கீ என்று கத்தும்
கிளியை எல்லோரும்
விரும்புவர்.

கென்றிச்

மாசாத்தியார்




தாமிரா திருச்செல்வம்
மாசாத்தியார் வளாகம்
தரம் இரண்டு

# கனேடிய உணவு வழிகாட்டி

நாம் சுகமாக வாழ்வதற்கு எட்டு வகை உணவுத் தொகுதிகள் அவசியம். முதலாவதாக தானிய வகைகள் எமக்கு சக்தியை தருகின்றன. அரிசி, முழுக் கோதுமை, வரகு இவ்வகையைச் சாரும். அடுத்ததாக மரக்கறி, பழவகைகள் அத்தியாவசியமாகும். இவை எமக்கு நோய் வராமல் பாதுகாக்கும். ஆப்பிள், திராட்சைப்பழம், அன்னாசிப்பழம், தோடம்பழம், மாம்பழம், கீரை, வெண்டைக்காய், போஞ்சி, கோவா, தக்காளி, அவரை இவ்வகையை சாரும். அடுத்ததாக எமது உடலை வளர்ப்பதற்கு புரதம் இன்றியமையாதது. மீன், இறைச்சிவகைகள், பருப்புவகைகள், விதைவகைகள், பாற்கட்டி, பால், தயிர் போன்ற உணவுகளில் புரதம் அதிகம் காணப்படுகின்றன. புரத உணவு பால், தயிர், பாற்கட்டி போன்றவற்றில் அதிக கல்சியம் காணப்படுகின்றது. இவை எம் பற்களையும் எலும்புகளையும் பாதுகாக்கின்றது.

இறுதியாக எமது உடலுக்கு சிறிதளவு எண்ணெய், உப்பு, சீனி, சக்கரை தேவைப்படுகின்றது. இவற்றுடன் ஒரு நாளுக்கு எட்டு குவளை தண்ணீர் பருக வேண்டும். இது எம் உடலை சுத்திகரிக்கும். இவற்றை கீழே உள்ள உணவுப் பிரமிட்டின் படி உண்டு வந்தால் நாம் சுகமாக நீண்ட காலம் வாழலாம். அத்துடன் ஒரு நாளைக்கு ஒரு மணிநேர உடற்பயிற்சியும் தேக ஆரோக்கியத்திற்கு அவசியமாகும். அளவோடு உண்டு சுகமாக வாழ்வோம்.






தான்யா - S.K மாசாத்தியார்வளாகம் 13.03.2011.

கோழி முட்டை இடும்

கோழி குஞ்சு பொரிக்கும்.

கோழி தாணியங்களை உண்ணும்

கோழி பறவை இணங்களில் ஒன்று



கோழி

மாசாத்தியார்




## தைப்பொங்கல்

தைப்பொங்கல் தை மாதத்தில் கொண்டாடப்படும். இது தமிழ் மக்களால் கொண்டாடப்படும் உழவர் திருநாள். பொங்கலன்று முற்றத்தில் கோலம் போட்டு சர்க்கரைப் பொங்கல் பொங்கிச் சூரியனுக்குப் படைப்போம். சூரியன் நெல் விளைவதற்கு உதவுகின்றான். அதனால் சூரியனுக்கு நன்றி தெரிவித்துப் பொங்கிப் போற்றுகின்றோம். சர்க்கரைப் பொங்கலை உறவினர்களுக்கும் வழங்குவோம். பொங்கலன்று நாம் புத்தாடை அணிந்து பட்டாசு கொழுத்தி மகிழ்வோம்

தைப்பொங்கலுக்கு மறுநாள் உழவர்கள் மாட்டுப் பொங்கல் பொங்கிக் கொண்டாடுவார்கள். இது வயல்களை உழுவதற்குப் பயன்படுத்தப்படும் மாடுகளுக்கு நன்றி தெரிவித்து கமக்காரர்கள் கொண்டாடும் கொண்டாட்டமாகும்.



அபிசேக் சிவகுமார்
தரம் இரண்டு
ஆசிரியர்: திருமதி நாகேசுவரி.





## எனது பொழுது போக்கு.

எனது பெயர் வினேஜன் விஜி. நான் மாசாத்தியார் வளாகத்தில் தரம் இரண்டில் தமிழ் கற்கிறேன். எனது வகுப்பாசிரியரின் பெயர் திருமதி ஸ்ரீகுமரகுரு நாகேஸ்வரி. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொழுது போக்கு வித்தியாசமாக காணப்படும். எனது பொழுது போக்கை பற்றி உங்களுடன் சொல்லிக் கொள்ள ஆசைப்படப்போகிறேன். நான் பெரும்பாலும் கணணியில் விளையாடிக் கொண்டிருப்பேன். பலமணிநேரம் எனது தங்கையுடன் பந்துவிளையாடுவேன், சிலநேரங்களில் அம்மாவுடன் சேர்ந்து தொலைக்காட்சி பார்ப்பேன். கோடைகாலத்தில் துவிச்சக்கரவண்டி ஓடுவது எனக்கு மிகவும் பிடித்தமானது. நானும் எனது தங்கையும் துவிச்சக்கர வண்டியில் பூங்காவிற்க்கு செல்வேம். எனக்கு நகைச்சுவை புத்தகங்கள் வாசிப்பது மிகவும் பிடிக்கும். இப்படி எனது பொழுது போக்குகள் அமைந்து செல்கின்றது.

நன்றி.



மாசாத்தியார்



# பரதநாட்டியக்கலை



எனக்கு மிகவும் விருப்பமான கலைகளில் பரதநாட்டியமும் ஒன்றாகும். நான் பரதநாட்டியத்தை எனது மூன்றாவது வயதில் இருந்து பயில்கின்றேன். பரதநாட்டியம் மிகவும் பழமை வாய்ந்த ஒரு கலை. இது உடல் ஆரோக்கியம், மனஅமைதி, தன்நம்பிக்கை, உற்சாகம் என்பவற்றைக் கொடுப்பதுடன் எமது பண்பாடு, கலாச்சாரங்களை பேணுவதற்கும் வழிவகுக்கின்றது. பரதநாட்டியம் பல நீதிக்கதைகளையும் நாட்டியவடிவில் எமக்கு சொல்லித்தருகின்றது. இன்கலைகள் அனைத்தையும் இக்கலையில் நாம் கண்டுகொள்ளலாம். பரதநாட்டியம் கற்பவற்கும் காண்பவற்கும் இன்பம் தரும் தலைசிறந்த கலைகளில் ஒன்றாகும்.

நன்றி



கலைசிகா கலைச்செல்வன்

தரம் 2 – மாசாத்தியார் வளாகம்

ஆசிரியர்- திருமதி நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

# நான் மகிழ்ந்திடும் பனிக்காலம்

எனக்கு மிகவும் பிடித்த காலம் பனிக்காலம். ஏன் தெரியுமா? ஏனென்றால் என்னை மகிழ்ச்சி அடைய வைக்கும் அந்த அழகான வெண்பனி தான்! ஒவ்வொரு முறையும் வெண்பனி வானத்தில் இருந்து கொட்டும் அழகை இரசிப்பேன். வெண்பனியை எனது கைகளினால் ஏந்தியும் நாக்கினால் ஏந்தியும் விளையாடுவேன். குவியலாக இருக்கும் வெண்பனிமேல் படுத்து வெண்பனி தேவதை செய்தும் மகிழ்ந்திடுவேன். இம்முறை பனிக்காலத்தில் வந்த ஈரப்பனியை எடுத்து நானும் எனது அண்ணாவும் எம்மை விட பெரிய பனிமனிதன் செய்து விளையாடினோம். அத்தோடு எனக்கு பனிமனிதனுக்கு நல்ல ஆடை உடுத்தி தலைக்கு தொப்பி வைத்து தடியால் கை கால் வைத்து கரட்டால் மூக்கு செய்து அழகு படுத்துவதற்கு நல்ல விருப்பம். பின்பு வெண்பனியில் விளையாடிவிட்டு வீட்டிற்குள் வரும்போது எனது அம்மா தரும் சூடான இனிப்பு பானம் ஆகா! ஆகா! அதைவிட நன்றாக இருக்கும். நீங்களும் இப்படி செய்திருக்கிறீர்களா?

**தரம் 2 மாணவி**
**சாதனா சிவசேகரன்**
(மாசாத்தியார் வளாகம்)



மாசாத்தியார்




*சந்தியா யெகதீஸ்வரன்*
*தரம் இரண்டு*
*மாசாத்தியார் வளாகம்*

## ஆசிரியர்

மாணவர்களுக்கு பாடங்களைக் கற்பித்துக் கொடுப்பவரை ஆசிரியர் என்று அழைக்கின்றேம். மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களுள் ஆசிரியரை தாய் தந்தையருக்கு அடுத்த படியாகவும் தெய்வத்திற்கு முதல் படியாகவும் முன்னேர்களினால் வைத்து மதிக்கவும் போற்றப்பட்டும் வருகின்றனர்.

ஆசிரியர்கள் எமக்கு வகுப்பறையில் கல்வியைக் கற்பதற்கும், நற்பழக்கவழக்கங்களை பழகுவதற்கும், ஒழுக்க சீலர்களாக வாழ்வதற்கும் எமக்கு சொல்லித் தருகிறார்கள். ஆசிரியர்கள் எமக்கு எவ்வளவு கடினமான பாடத்தினையும் எமக்கு சுலபமான முறையில் கற்றுக் கொடுக்கிறார்கள்.

கற்பித்தல் எனக்கு மிகவும் பிடித்த வேலை. எதிர் காலத்தில் நானும் ஒரு ஆசிரியராக வரவேண்டும் என ஆசைப்படுகிறேன்.






நேகா உமாகாந்
தரம் இரண்டு
மாசாத்தியார் வளாகம்

## எனது தமிழ் வகுப்பு

எனது பெயர் நேகா உமாகாந். நான் இளம்மழலை முதல் மாசாத்தியார் வளாகத்தில் தமிழ் கற்றுவருகிறேன். எனது ஆசிரியரின் பெயர் திருமதி ஸ்ரீகுமரகுரு நாகேஸ்வரி. இங்கு தமிழுடன் நற்பழக்கமும் சொல்லித்தரப்படுகின்றது. தமிழீழத்திலிருந்து வந்துள்ள எனது தாத்தா அம்மம்மாவோடு தமிழில் கதைப்பதற்கும் அவர்கள் சொல்லும் பல சிறுவர் கதைகளை கேட்பதற்கும் மிகவும் உதவியாக உள்ளது. எங்கள் வளாகத்தில் நாற்றுமேடை போன்ற நிகழ்களின் போது பல போட்டிகள் நடைபெறுகின்றது. அவற்றுள் திருக்குறள் போட்டி எனக்கு மிகவும் பிடித்த போட்டியாகும். ஒவ்வெரு வெள்ளிக்கிழமையும் மாலை தமிழ் வகுப்பிற்கு நானும் எனது அண்ணாவும் மிகவும் ஆர்வத்துடன் சென்று தமிழ் கற்று வருகிறேம். எனக்கு நல்ல நண்பர்கள் இருக்கின்றார்கள். தமிழ் வகுப்பில் எனக்கு கற்றல் ஆர்வத்தையும் ஆசையையும் எனது ஆசிரியர் மிகவும் நிறைவாக ஊட்டுகின்றார். எனது ஆசிரியரை (Mrs.S.) என்று செல்லமாக அழைக்கும் திருமதி: ஸ்ரீகுமரகுரு நாகேஸ்வரி அவர்களுக்கு எங்கள் எல்லோர் சார்பாகவும் நன்றி தெரிவித்து கொள்கிறேன். இந்த வாய்ப்பை தந்த ஊரணி புத்தக குழுவிற்க்கும் எங்கள் நன்றிகள்.


வணக்கம்





ஆக்கம் : காயத்திரி ராமேஸ்வரன்
வகுப்பு : இரண்டு (மாசாத்தியார் வளாகம்)
ஆசிரியை : திருமதி.நாகேஸ்வரி குமரகுரு

# யானை



1. யானை காட்டில் வாழும்.
2. யானை சாம்பல் நிறமாகவும் கறுப்பு நிறமாகவும் இருக்கும்.
3. யானைக்கு இரண்டு பெரிய காதுகள் உள்ளன.
4. ஆண் யானைக்கு இரண்டு தந்தங்கள் இருக்கும்.
5. யானை தனது தும்பிக்கையால் பாரமான பொருட்களைக் காவும்.
6. யானை இலை, குழைகளை உண்ணும்.
7. யானை கரும்பை விரும்பி உண்ணும்.
8. மிருகங்களுள் யானை பெரியது.



## வாழைமரம்

செரினா

இது வாழைமரம். இதற்குக் கிளைகள் இருக்கும். அது வளைவு கொண்டப் பயன்படும். வாழையின் பூ காய் தண்டு இவை கறி சமைக்க உதவும். வாழைத் தோல் பச்சையாக இருக்கும், அது இலர்க்கும். வாழைப்பழத்தோல் பச்சையாகவும் மஞ்சளாகவும் இருக்கும். வாழையின் தண்டும், பழமும் உடலுக்கு நல்லது. வாழை நார் பூக்கட்ட உதவும். வாழையின் ஒவ்வொரு பாகமும் நமக்கு உபயோகமாகும்.

ஆக்கம்
செரினா உதயகுமார்
வகுப்பு I ம் தரம்
மாதாந்திப்புரம் வளாகம்


ஆசிரியர்
சாகிந்தினி



ஆதவன் கணநாதன்
ஆண்டு 3

## எனக்கு மிகவும் பிடித்த படம் "த கராட்டி கிட்ஸ்"

1. எனக்கு மிகவும் பிடித்த படம் "த கராட்டி கிட்ஸ்"
2. இதில் அளப்பரிய குத்துச் சண்டை கராத்தே சண்டை போன்றவை இருக்கின்றது.
3. இந்தப் படத்தில் வில் சிமித்தின் மகன் யேடன் சிமித் நடிக்கின்றார்.
4. என்னைக் கவர்ந்த சைனாவின் அழகிய பகுதிகள் இப்படத்தில் படமாக்கப்பட்டுள்ளது.
5. எனக்கு மிகவும் பிடித்த குத்து நடிகர் யாக்கி சான் நடித்திருக்கின்றார்.
6. கிட்டத்தட்ட 2.5 மணி நேரப் படம் மிகவும் விறுவிறுப்பான சண்டைக் காட்சிகளை கொண்டிருக்கின்றது.





ஜென்சன்
மாணாக்கியர்
வளாகம்
ஆண்டு - 1

என்னைப் பற்றி...

எனது பெயர் ஜென்சன். எனது அப்பாவின் பெயர் பாஸ்கரன். அம்மாவின் பெயர் ஜெனனி. நான் இந்து சமயத்தை சேர்ந்தவன். நான் ஆண்டு ஒன்று வில்கிலே பாடசாலையில் படிக்கிறேன். நான் தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய மொழிகள் படிக்கிறேன். நான் ஐஸ்கொக்கி விரும்பி விளையாடுவேன். நான் நீச்சலில் தரம் 5 பழகுகிறேன். நான் கராத்தேயில் நீல நிற பட்டி பெற்றுள்ளேன். எனக்கு பிடித்த உணவு சோறு, கறி. பிடித்த நிறம் சிவப்பு.

ஆசிரியர் :- சிகாமினி

மாணாக்கியார்



# நிறங்கள்

காகம் கறுப்பு நிறம்.
இலை பச்சை நிறம்.
கிளி பச்சை நிறம்.
பால் வெள்ளை நிறம்.

கிளாடழைவு
மாசாத்தியார் தூளாங்கம்
கர்சினி
ஆசிரியர் .வி.வி. நந்த



## என்னைக் கவர்ந்த விஞ்ஞானி


எனது பெயர் சுவேதன் சிவசேகரன். எனது வயது 10. நான் வளர்ந்து எதிர் காலத்தில ஒரு சிறந்த விஞ்ஞானியாக வர விரும்புகின்றேன். அதற்கு காரணம் நான் பல விஞ்ஞானிகளைப் பற்றிய புத்தகங்களை நிறைய வாசிப்பதும் பாடசாலை விடுமுறை நாட்களில் விஞ்ஞானம் சம்பந்தமான பரிசோதனைகளை செய்து பார்ப்பதும் ஆகும். என்னைக் கவர்ந்த விஞ்ஞானி லியோனார்டோ டாவின்சி ஆவார். இவர் இத்தாலியில் வின்சி என்ற கிராமத்தில் 1452ஆம் ஆண்டு பிறந்தார். இவர் பல்துறைப் புலமை வாய்ந்த மேதை. இவர் ஓவியம், சிற்பம், கட்டிடக்கலை, இசை, அறிவியல், கணிதம், பொறியியல், தாவரவியல், உயிரியல், வானவியல் முதலிய பல்வேறு துறைகளில் வியக்கத்தக்க மேதையாக விளங்கினார்.

இவர் சிறுவனாக இருந்தபோது ஒரு பிரபல்யமான ஓவியரிடம் மாணவனாக இருந்தார். ஆனால் இவர் விரைவாகவே அந்த ஆசிரியரை விட மிக திறமை வாய்ந்த ஓவியங்களை வரையத் தொடங்கினார். இவர் வரைந்த ஓவியங்களில் மோனாலிசா என்னும் ஓவியம் மிகவும் பிரபல்யமானது. அத்துடன் அவருக்கு சிறுவயதில் இருந்தே எதையும் ஆராந்து பார்க்கும் தன்மை அவரை நவீன கண்டு பிடிப்பாளர் ஆக்கியது. இயந்திர துப்பாக்கிகள் பறக்கும் வானூர்திகள் கனரக போர்க்கள வாகனங்கள் என்பன அவரின் கண்டுபிடிப்பில் சிலவாகும்.

அவருடைய அறுபது வயதுகளில் மனித உறுப்புக்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் கண்டு பிடிப்பதில் ஆர்வமாக இருந்தார். அதற்காக இரவுவேளைகளில் இரகசியமாக இறந்த உடல்கள் அடக்கம் செய்த மயானத்திற்குச் சென்று இறந்த உடல்களை எடுத்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். இப்படியாக வாழ்ந்த இவர் 1519ஆம் ஆண்டு இந்த உலகத்தை விட்டு மறைந்து போனார். எனக்கும் இவரைப்போல் சிறந்த விஞ்ஞானியாக வர வேண்டும் என்று விரும்புகின்றேன்.

**தரம் 5 மாணவண்**
**சுவேதன் சிவசேகரன்**
(மாசாத்தியார் வழாகம்)
ஆசிரியர்: யாமினி சதீஸ்





மாசாத்தியார்



பிரவீன் உமாகாந்
தரம் நான்கு
மாசாத்தியார் வளாகம்

## எனது கனவு நனவானால்:::::::::::::::

எனது நீண்ட நாள் கனவு சிறந்த கூடைப்பந்தாட்ட வீரனாக வரவேண்டும் என்பதே ஆகும். ஐந்து வயதிலிருந்து கூடைப்பந்துப் பயிற்சி வகுப்புகளுக்கு சென்று வருகின்றேன். இப்பொழுது "மும்பா" எனும் விளையாட்டு அணியில் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறேன். ரொரண்டோ "ராப்ரர்ஸ் அணி எனது விருப்பமான அணியாகும். எனது முன் மாதிரிவிளையாட்டு வீரர் ரேய்ஆவன் என்பவர் ஆவார். சிறு வயதிலிருந்து எனது அப்பாவுடன் சேர்ந்து தொலைக்காட்சியில் கூடைப்பந்து விளையாடும் ஒவ்வெரு அணியின் விளையாட்டையும் ரசித்துப் பார்ப்பேன். அப்பா எல்லாவற்றுக்கும் எனக்கு விளக்கம் சொல்லித் தருவார். எதிர் காலத்தில் சிறந்த கூடைப்பந்து விளையாட்டு வீரனாக வந்து எனது பெற்றோருக்கு பெருமை சேர்த்துக் கொடுப்பேன்.

நன்றி:




ஆசிரியர்: சுமதி சுந்தரரட்ணம்



மாசாத்தியார் வணக்கம்

எனது பெயர் - சஜீவன் ஸ்ரீராஜா.
நான் இரண்டாம் வகுப்பில் படிக்கிறேன்.

## கண் கண்ட கடவுள்கள்

அன்பை வளர்க்கும் தெய்வம் அம்மா.
அறிவை புகட்டும் தெய்வம் அப்பா
பெரியோர்கள் பண்பை புகட்டும் தெய்வங்கள்.
பாடங்கள் சொல்லும் ஆசான்கள் தெய்வங்கள்.
பேசும் தெய்வங்கள் யாவரையும்
பெருமையோடும் பெரும் பாசத்தோடும்
நடைமுறை பண்போடும் யாவரையும்
வணங்குவோம்.

நன்றி

மாசாத்தியார்





Piplup.

பிப்லப்.

விதுஜா. செல்வேந்திரன்

ஆண்டு 3.

ஆசிரியை - ஞானேஸ்வரி.

மாசாத்தியார் வளாகம்



# எனது அப்பா

எனது ~~அப்பா~~ அப்பா மிகவும் நல்லவர்
அன்பு காட்டி அணைப்பவர்
எப்போதும் அவர் என்மேல்
இரக்கம் காட்டுவார்

பாடசாலைக்கு என்னைக் கூட்டிச் செல்வார்
படிப்பதற்கு புத்தகம் தருவார்
அப்பா வேலைக்குப் போவார்
நான் விரும்பியவற்றை வாங்கித் தருவார்
பாப்பா கதைகள் பலவும் படித்துக் காட்டுவார்

விக்னவி
~~அறை~~
வகுப்பு 2

மகாசக்தியாள் வணக்கம்

தைப் பொங்கல்

தைத் திருநாள் இல்லமெல்லாம் / களித்திடும் தைப் பொங்கல்
இத்தனை நாள் காத்திருந்தோம்
இனிய தமிழ் பொங்கல்

கூவி அழைத்திடும் சேவல் / குதித்தெழுவோம்
குளிப்போம்

மாணாக்கியர்



எனது பெயர் அக்ஷாயினி நந்திராஜா
நான் இளம் மழலை வகுப்பில்
படிக்கின்றேன்.

~~"உயிர்" எழுத்துக்களில் வரும் சொற்கள்.~~

அம்மா ஆலமரம்

இல்லம் ஈசல்

உயர்வு ஊஞ்சல்

என் ஏழு

ஐயப்பன் ஒற்றுமை

ஓடு ஔவை

எஃகு

நி. அக்சாயினி
இளமழலை
மாசாத்தியார் வளாகம்
ஆசிரியர். வி.வி. நந்தினி.

மாசாத்தியார்



# சரஸ்வதிப் பூசை

1. சரஸ்வதி எமக்கு கல்வி தருவாள்
2. நாம் வீட்டிலும் கோயிலிலும் தமிழ் பாடசாலையிலும் சரஸ்வதிப் பூசை செய்வோம்
3. சரஸ்வதி எமக்கு கல்வியையும், நல்லறிவையும் தருகிறார்.
4. சரஸ்வதி பூசைக்கு அடுத்த நாள் விஜயதசமி ஆகும்.
5. விஜயதசமி அன்று ஏடு தொடக்கு -வார்கள்

ஆக்கம் - ஆருஜன் நவநீதன்
தரம் - 1
ஆசிரியர் - சுகந்தி
மசாத்தியார் வளாகம்




தைப்பொங்கல்
ஆண்டு 3
ர.மதுரா



















வள்ளுவர்








HILFIGER














வள்ளுவர்











வள்ளுவர்










வள்ளுவர்



ஓம் சக்தி.

நிதிலா சிவகுமார்
வகுப்பு – 4
வளர்நவர் வளாகம்

# உழவர் திருநாள்

ஆம், அதுதான் எம்
தைப்பொங்கல் திருநாள்
வரும் வரும் எனக்காத்திருந்து
தையில் வரும் இனியநாள்
புதுப்பானைதனில் பொங்கல் பொங்கி
பலகாரம் படைத்து
பரவசம் அடையும் நன்நாள்

உழைத்த உழவனுக்கும்
களைத்த கால்நடைகளுக்கும்
கொதித்த கதிரவனுக்கும் – நல்ல
மனம் நிறைந்த நன்றியினை
உரித்தாக்கும் பொன்னாள்

இப்படித்தான் இதை எம்பெற்றோரிடம் கேட்டு
நானும் அறிந்தேன் பொங்கல் பற்றி
நாங்களும் அந்நாளை மறவாமல்
கொண்டாடுவோம் எதிர்காலத்தில்

நன்றி

வளர்நவர்




# அம்மா

அம்மா நல்ல அம்மா
அன்பு உள்ள அம்மா
சட்டை வாங்கித் தருவா
ஆசையாக முத்தம்
கேட்காமலே தருவா

ஆர்த்தி-முதுமழை

வளர்நவர் வாசகம்
ஆசிரியர். திருமதி. மரியதாஸ்.




மாணவர்: மோனிகா

ஆசிரியர்: சிவாநந்தன் சபாரத்தினம்



மாணவர்: நிரோஜா சிவலிங்கம்
ஆசிரியர்: சிவாநந்தன் சபாரத்தினம்



மாணவர்: நிரோஜா சிவலிங்கம்

ஆசிரியர்: சிவாநந்தன் சபாரத்தினம்



## எம் உறவுகள் மேம்பட சிந்தனைத் துளிகள்!

நானே பெரியவன், நானே சிறந்தவன் என்ற மமதையை விட்டுவிடுங்கள். சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துத்தான் ஆக வேண்டும் என்று உணருங்கள். எந்த விடயத்தையும் சுலபமாகக் கையாளுங்கள். நீங்கள் சொன்னதே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப் பான்மையை விட்டு பரந்துபடச் சிந்தியுங்கள். மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள் அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் சொல்லிக்கொண்டிருக்காதீர்கள். உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக்கொள்ளுங்கள். கேள்விப் படுகின்ற எல்லா விடயங்களையும் நம்பி விடாதீர்கள். மற்றவர் கருத்துக்களை ஆற்றல்களை தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.

வள்ளுவர்

மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும் இனிய
இதமான சொற்களைப்பேசவும் புன்முறுவல்
காட்டவும் அன்புச்சொற்களைச்சொல்லவும்
கூட நேரமில்லாததைப் போல் நடந்து
கொள்ளாதீர்கள் பேச்சிலும் செயலிலும்
பண்பில்லாத வார்த்தைகளையும் தேவையில்லாத
மிடுக்கையும் காட்டுவதை விட்டு அடக்கத்தையும்
பண்பையும் காட்டுங்கள். அறிவுசார்ந்த எல்லா
நூல்களையும் படிக்கத் தவறாதீர்கள் பிரச்சனைகள்
ஏற்படும் போது மற்றவர் முதலில் இறங்கி
வரவேண்டும் என காத்திருக்காமல் நீங்களே
பேச்சைத் தொடக்க முன் வாருங்கள்!

சபரீன் பவானந்தன்
தரம் : 5
வள்ளுவர் வளாகம்



# திருக்குறளில் நட்பு

உலகத்திலே உறவுகள் பற்றிப் பேசுமளவிற்கு இணையாக அல்லது அதற்கும் மேலாக எல்லோராலும் பேசப்படுகின்ற ஒரு விடயம் நட்பு. இதுபற்றிப் பேசுகின்ற படைப்புக்கள் பல எம்மத்தியில் இருந்தாலும், நட்பின் சிறப்புக்கு மேலும் சிறப்புச் சேர்ப்பது திருக்குறளில் நட்புப் பேசப்படுவதேயாகும்.

நட்பு எனப்படுவது என்ன என்று வள்ளுவரைக் கேட்கும் பொழுது அவர் சொல்கிறார்.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

அதாவது சம்பாதிப்பதற்கு நட்பைப் போல வேறு எவை உண்டு? அதைச் சம்பாதித்து விட்டால், பிறர் புகமுடியாத நம்மைக் காப்பதற்கு அரிய பொருள் வேறு எவை உண்டு? அப்படி உழைத்துப் பெறவேண்டிய, உயரிய பொருட்களில் உன்னதமானது நட்பைத்தவிர வேறொன்றுமில்லை. அப்படியான அரிய நட்பைப் பெற்றுவிட்டால் எம்மைக் காக்கக்கூடிய இவ்வுலகிலே இருக்கின்ற மிகப்பெரிய பாதுகாப்பு ஆயுதம் நட்பேயொழிய வேறொன்றுமில்லை என்று கூறுகிறார் வள்ளுவர்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு.

முகம் மட்டும் மலரும்படியாக நட்புக் கொள்வது நட்பன்று, உள்ளமும் மலரும் படியாக உள்அன்புடன் செய்யப்படுவதே உண்மையான நட்பாகும். இக்குறளைத், தெய்வப்புலவர் திருவள்ளுவரே நட்புக்கு உதாரணமாக கூறுகின்றார்.

முகம் மட்டும் பார்த்து வந்துவிடும் சிலநட்புகள், அன்பு பார்த்து வந்துவிடும் ஒரு சில நட்புகள், பணம் பார்த்து வந்துவிடும் பலபல நட்புகள். ஆனால் ஒருவரின் சிரமத்தின் போது உதவுவதே உண்மையான நட்பாகும்.

திருக்குறளிலேயே ஐம்பது குறட்பாக்கள் நட்பைப்-பற்றி மட்டும் கூறுகின்றது. மனித வாழ்க்கையில் அம்மாவின் அன்பிற்கு அடுத்த படியாகச் சிறந்தது நட்பே ஆகும். நற்பண்புடையாரது நட்பு பழகப் பழக மனதுக்கு இனிமை தரும்.

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

அதாவது நாம் உடுத்திருக்கும் உடை அவிழும் போது, நம் கைகள் தாமாகவே உடையைப் பற்றிக்கொண்டு மானத்தைக் காக்கின்றன. அதைப்போன்று நண்பர்களுக்குத் துன்பம் விளையும் போது விரைந்து உதவுவதே உண்மை நட்பாகும்.

பாடசாலை காலத்தில் கிடைக்கும் நட்பு மிகவும் அபாரியானது. கூடிப்பழகுதலும், அடிக்கடி சந்தித்தலும், ஒருவரை ஒருவர் விசாரித்தலும் மட்டுமே நட்பாகி விடாது. கூடிப்பழகாவிட்டாலும், மனதில் உணர்ச்சியால் ஒன்றுபடுவதை உண்மையான நட்பு என்கிறார் செந்நாப்போதார் திருவள்ளுவர்


அன்பால் மனம் மலரப் பழகுவதே நட்பு என்று, உள்ளத்தால் உணரப்படுகின்ற நட்புப்பற்றிக் கூறி உயரிய நட்பை உயரிய இடத்திலேயே வைத்துப் போற்றுகிறது திருக்குறள். திருக்குறளில் நட்புக்கு என்றொரு அதிகாரம் வைக்கப்பட்டதே நட்பு எவ்வாறு உன்னதமானது என்பதைப் பறைசாற்றி நிற்கிறது.

"நல்ல நட்புக் கடைசிவரையும் அழியாது"

ஆக்கம்:-

மாணவி:- குலக்ஷனா பரணிவாசகம்
தரம்:- 7
வளாகம்:- வள்ளுவர்
ஆசிரியர்:- தேன்மொழியாள் கங்காத





வள்ளுவர்



# எனது அறிமுகம்

எனது பெயர் பிரனேஸ். எனது வயது ஆறு. நான் முதலாம் வகுப்பில் கல்வி கற்கின்றேன். எனது அப்பாவின் பெயர் மணிமாறன். எனது அம்மாவின் பெயர் சாந்தி. எனது தங்கையின் பெயர் ஆதிரை. எனது விருப்பமான விளையாட்டு உதைபந்து. நான் உதைபந்து நன்றாக விளையாடுவேன். நான் விரும்பும் பெரியார் சுப்பிரமணியபாரதியார். நான் எதிர் காலத்தில் ஒரு வைத்தியராகவும் சிறந்த தமிழ்ப் பேச்சாளராகவும் வருவேன். எனது தாய்மொழி தமிழை ஆர்வத்தோடும் விருப்போடும் கற்கின்றேன்.

பிரனேஸ் மணிமாறன்
முதலாம் வகுப்பு - வள்ளுவர் வளாகம்



## நயாகரா அருவி

நயாகரா அருவி தெற்கு ஒன்ராறியோவில் அமைந்துள்ளது. இப்பேரருவி கனடாவிற்கும் ஐக்கிய அமெரிக்க நாட்டுக்கும் இடையிலே எல்லையில் ஓடும் அருவியாகும். இது உலகத்திலேயே ஒரு அருங்காட்சியாக போற்றப்படுகிறது.

ஆண்டுதோறும் இதனை பார்க்க 10 மில்லியன் மக்கள் வருகின்றனர். இது தனியான இரண்டு பெரிய அருவிகளைக் கொண்டது. கனடாவில் உள்ள குதிரை இலாட அருவியில் இருந்து 85% நீர் கொட்டுகிறது. மீதம் உள்ளது அமெரிக்கப் பகுதியில் உள்ள அமெரிக்கன் அருவியிலும் விழுகின்றது. இப்பேரருவி சுமார் 12000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியது என்று கருதப்படுகிறது.

அழகிற்குப் பெயர் போன நயாகரா அருவி ஒரு புகழ் பெற்ற ஒரு சுற்றுலா இடமாக விளங்குகின்றது. இது நீர் மின்சாரத்திற்கும் சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்குமான இயற்கையின் கொடையாகும். ஒவ்வொரு முறை போய் பார்க்கும் போது புதுமையாக இருப்பது நயாகரா அருவி மட்டுமே!

மாணவர்: அமிர்தா முரளிதரன்
தரம்: 5
ஆசிரியர்: இந்திரா. திரு



# நான் பார்த்த காலைக் காட்சி

நான் பார்த்து மகிழ்ந்த காலைக் காட்சி மாதகல் கடற்கரையோரம் ஆகும். நான் சிறு பிள்ளையாக இருந்த பொழுது தாயகம் சென்றிருந்தேன். என்னையும் எனது குடும்பத்தினரையும் பெரியப்பா அழைத்துச் சென்றிருந்தார்.

நாம் அதிகாலை 6 மணிக்கு வண்டியில் கடலைக் காணச் சென்று கொண்டிருந்தோம். வானம் செக்கச் சிவந்த வண்ணம் இருந்தது. சில இடங்களில் நீல வானில் வெள்ளை முகில் கூட்டங்கள் குவிந்து சிறு சிறு கூறுகளாகக் காணப்பட்டன. வானமே ஒரு கடல் போல் இருந்தது. என்னால் நம்ப முடியவில்லை.

அதன் பின்னர் நாம் செல்லும் வழியெல்லாம் மீனவ ஆண்கள், பெண்கள், சிறு பிள்ளைகள், வயது வந்தவர்கள் என்று பலரும் கடற்கரையை அண்மித்துக் கொண்டு இருந்தனர். ஏன் அவர்கள் அங்கு நடந்து செல்கின்றனர் என்று எனக்குப் புரியவில்லை. அதன் பின்பு நாம் கடற்கரையை அடைந்தோம். அங்கே பார்த்த நினைவுகள் என் மனதில் இருந்து நீங்காத நினைவுகளாக உள்ளன.

அந்த கடற்கரை ஒரு அற்புதம் போல் காணப்பட்டது. நீலக் கடல் வெளியும் வானமும் ஒன்று போல் காணப்பட்டது. அது ஒரு தொடு வானம் போல் இருந்தது. நாம் வெண் மணல் பரப்பில் நின்று பார்த்துக் கொண்டு நின்றோம். அப்பொழுது சூரியன் தனது பொற்கரங்களை நீட்டி வெளிச்சத்தைத் தரத் தொடங்கினான். அது கடற்பரப்பில் பட்டு தெறிக்கும் பொழுது அதன் அழகை பார்த்து மகிழ்ந்தேன்.


அங்கே சிறுசிறு வள்ளங்களிலும் தோணிகளிலும் கட்டு மரங்களிலும் சென்று மீன் பிடித்து வருபவர்களையும் பார்த்தேன். அவர்கள் இரவு வேளையில் மீன் பிடிக்க செல்வது வழக்கம். காலை வேளையில் திரும்பி வருவார்கள். அப்பொழுது மீன் வாங்குவதற்கு பெரிய மீன் வியாபாரிகளும், சிறு மீன் வியாபாரிகளும், மீனவப் பெண்களும் கூட மீன் வாங்குவதற்கான முயற்சியில் ஈடுபடுவார்கள். அப்பொழுது கடலின் ஓசையை விட, மீன் வாங்குவோர்கள், விற்பவர்களின் பேரம் பேசும் சத்தம் அதிகமாக இருக்கும்.

மீனவப் பெண்கள் கடலில் சென்று வந்த கணவன்மாரை கண்டவுடன் தாம் வணங்கும் கடவுளுக்கு கைகூப்பி, சூரிய பகவானைப் பார்த்து நன்றி செலுத்துவார்கள்.

அங்கே சிறு பிள்ளைகள் கடற்கரையில் மணல் வீடுகட்டி விளையாடுவதும், அதனை கடல் நீர் வந்து கரைத்து வீட்டு செல்வதும் ஒரு வேடிக்கையான விளையாட்டு போன்று இருக்கும். சிறு பிள்ளைகள் கடற்கரையில் நின்று ஓடி பிடித்து விளையாடினார்கள்.

பின்பு கடற்கரையில் மக்கள் எல்லோரும் வெளியேறத் தொடங்கினர். எங்களையும் பெரியப்பா வீட்டுக்கு வரும்படி அழைத்தார். நாமும் வண்டியில் ஏறி வீடு வந்து சேர்ந்தோம். அன்று பார்த்த காட்சிகள் இன்றும் என்னால் மறக்க முடியவில்லை. பசுமையான நினைவுகளாக உள்ளன.

மாணவர்: அபிஷா விக்னேஸ்வரன்
ஆசிரியர்: தியாகேஸ்வரி மகேந்திரன்



வள்ளுவர்

## பாரதியாரும் காளமேகமும்


பாரதியார் மார்கழி மாதம் 11ஆம் திகதி 1982ஆம் ஆண்டு எட்டயபுரம் என்ற ஊரில் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன். இவரை பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைப்பர். பாரதியார் கவிஞர், எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி என்று பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவர். இவர் தம் எழுத்துகளின் வாயிலால் மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். இவர் இந்திய விடுதலை, பெண்விடுதலை, சாதிமறுப்பு மற்றும் பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் எழுதியுள்ளார். ஆதனால் இவருடைய கவித்திறனை மெச்சி பாரதி என்ற பட்டம் எட்டயபுரம் அரசவையால் வழங்கப்பட்டது.

தமிழிலக்கிய வரலாற்றில் மற்றொரு கவிஞர் காளமேகப் புலவர். இவர் தமிழகத்தில் கும்பகோணம் என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவர் அந்தண குலத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் வரதன். இவர் பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். பிறர் மீது வசைகூறும் ஆசுகவிப் பாடல்களை விரைந்து பாடுவதில் வல்லவர். இதனால் இவரை 'வசைபாடக் காளமேகம்' என்று கூறுவர்.

மாணவர்: ஆதித்தயா அமுதலிங்கம்
ஆசிரியர்: தேன்மொழியாள் கங்காதரன்

## ஊட்டமுள்ள உணவு

நாங்கள் நலமாக இருப்பதற்கு ஊட்டமுள்ள உணவு முதன்மையானதாகும். உடல் நலமாக இருக்க வேண்டும் என்றால் சாப்பாட்டில் சமநிலை அவசியம். அத்துடன் நல்ல உணவும் உடற்பயிற்சியும் உடல் நலத்தைப் பேணும்.



ஊட்டமுள்ள உணவில் ஆறு வகைகள் உண்டு. அந்த ஆறில், ஐந்து மிகவும் முக்கியமானது. அதில் மரக்கறிகள், பழங்கள், இறைச்சி வகைகள் (மீன், முட்டை), பால் வகைகள், தானியவகைகள் என்பன அடங்கும். ஆறாவது வகை உணவு இனிப்பு பட்டங்களாகும். அவை உடம்புக்கு கூடுதலாக உண்டால் நல்லது அல்ல.

உணவு அட்டவணைப்படி மரக்கறி வகையில் மூன்றில் இருந்து ஐந்து வரை வேறுபாடான மரக்கறிகள் சாப்பிட வேண்டும். அடுத்தாக பழவகையில் இரண்டில் இருந்து நான்குவரை வேறுபாடான பழங்கள் சாப்பிட வேண்டும். இறைச்சி வகைகளில் இரண்டில் இருந்து மூன்று வரை வேறுபாடான இறைச்சிவகை சாப்பிட வேண்டும். பால் வகையிலும் இரண்டில் இருந்து மூன்று வரை வேறுபாடாக உண்ண வேண்டும். தானியவகையும் ஆறில் இருந்து பதினொரு வரை சாப்பிட வேண்டும்.

அடுத்ததாக எண்ணெய் வகை, இனிப்பு வகைகள் என்பன கொஞ்சமாக சாப்பிட வேண்டும். கூடுதலாக சாப்பிட்டால் உடம்புக்குத் தீங்கு விளைவிக்கும்.

இறைச்சி வகைகள் புரதச் சத்தை கூடுதலாகக் கொண்டவை. பால் வகைகள், கொழுப்புச் சத்தைத் தரும். மரக்கறி பழங்கள் வைற்றமின் சத்தைத் தரும். தானிய வகைகளும் புரதச்சத்து, விற்றமின்களை தரும்.

இவைகள் எல்லாம் உடம்புக்கு ஊட்டச் சத்துள்ள உணவுகள் ஆகும்.

மாணவர்: றொசானி டயாசியஸ்
துசானி குணசீலன்
ஆசிரியர்: அற்புதராணி கிருபராஜ்

# எனக்கு பிடித்த பெரியார் அன்னை தெரேசா.

*1910–26–08* ஆண்டு இப் புவியிலே அன்னை தெரேசா பிறந்தார். அவர் ஒரு கத்தோலிக்க மதத்தவராக இருந்தும், சாதி, சமய வேறுபாடின்றி அனைத்து மக்களுக்கும் அன்புக் கை நீட்டி அரவணைத்தார்.

அன்னையவர் வாழ வேண்டிய இளமைப் பருவத்தை விடுத்து, கன்னியாத்திரியாக மாறி தனது வாழ்க்கையையே கொடுத்த ஒரு உன்னதமான தியாகி.

*1928* இல் இந்தியாவில் ஒரு குழுவை உருவாக்கி அவர் அதனூடாக, பல மிகவும் வறிய நிலையில் உள்ள மக்களுக்கும் வீடு இல்லாதவர்களுக்கும் மிகவும் உதவி புரிந்தார். அதுவும் கூலியை எதிர்பாராது தொண்டர் அடிப்படையிலேயே அவரது விடா முயற்சி உடைய சேவை அர்ப்பணிப்புத் தொடங்கியது.



அன்னை பிறந்த நாடு வேறாக இருந்தாலும், அவர் குடியுரிமை பெற்ற நாடு இந்தியா. 1948லேயே இவர் இந்தியக் குடிமகள் ஆனார். இந்தியாவில் கல்கத்தாவில் இவர் சிறிது காலம் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி அறிவூட்டினார். இவர் எல்லாமாக 124 விருதுகளைப் பெற்றதோடு எல்லாவற்றுக்கும் மேலாக 1979இல் உலக அமைதிக்கான நோபல் விருதையும் பெற்றுக் கொண்டார்.

மாணவர்: றொசானி டயாசியஸ்
துசானி குணசீலன்
ஆசிரியர்: அற்புதராணி கிருபராஜ்

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்."

வள்ளுவர்

## உடற்பயிற்சி

மனித வாழ்க்கைக்கு உடற்பயிற்சி மிகவும் அவசியமானது. அன்றாடம் ஒவ்வொரு மனிதனும் செய்யவேண்டியபயிற்சி ஆகும். இதுஉடலுக்குஉறுதி அளிக்கிறது. உள்ளத்துக்கு ஓய்வும் மகிழ்ச்சியும் தருகிறது. இத்துடன் மனதில் அமைதி, நட்பு, ஒற்றுமை, ஒழுக்கம் முதலியவற்றை வளர்க்கிறது.

விளையாட்டுக்களில் பலவகைகள் உண்டு. அவற்றில் குழுக்களாகவும் தனியாகவும் விளையாடுவர். ஓடுதல், உடற்பயிற்சி, பந்தாட்டம், கயிறடித்தல், நீச்சல், படகோட்டம், மலையேறுதல், துவிச் சக்கரவண்டி மிதித்தல், கூடைப்பந்தாட்டம் முதலிய விளையாட்டுகள் உடலுக்கு மிகவும் சிறந்த பயிற்சி ஆகும்.

தினமும் சிலமணிநேரம் உடற்பயிற்சி செய்வதால் பல நோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்கலாம். இதயம் பலமடையும், உடல் சுறுசுறுப்பாக இருக்கும். குருதிச் சுற்று ஒழுங்காக நடைபெறும். எனவே உடற்பயிற்சி மிகவும் அவசியமானதாகும். உடற்பயிற்சி இல்லாமல் இருந்தால் மனித உடலும் உள்ளமும் சோர்வடையும். நீரிழிவு, இதய பலவீனம், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி ஆகிய நோய்கள் உடலைப் பாதிக்கும்.

ஒவ்வொரு மனிதனும் நீண்ட ஆயுளோடும் நலமாகவும் இருக்க வேண்டும் என்றால் உடற் பயிற்சி அவசியமாகும்.

மாணவர்: றொசானி டயாசியஸ்
துசானி குணசீலன்
ஆசிரியர்: அற்புதராணி கிருபராஜ்

## வானொலியின் பயன்பாடுகள்

நாம் வானொலியைக் கேட்டுப் பல நன்மைகளை அடையலாம். உலகச் செய்திகளை அறிந்து கொள்ளலாம். இதனால் பொது அறிவை வளர்த்துக் கொள்ளலாம். செய்திகள் விரிவாகக் கூறப்படுவதனால் ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் வளர்ச்சி, பிளவுகள், பொருளாதாரம், நாணயப் பெறுமதி என்பவற்றை அறியலாம்.

வானொலியில் கலந்துரையாடல்கள் நடைபெறுவதனால் அவை எமது வளர்ச்சிக்கு உதவுகின்றன. பல்வேறு தலைப்புக்களில் அக்கலந்துரையாடல்கள் நடைபெறுவதால் நாம் நன்மைகள், தீமைகள் என்பவற்றைப் புரிந்து கொண்டு எமது வாழ்க்கையை நல்ல முறையில் அமைக்க முடிகின்றது.

வானொலியில் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறுவதினால் நாமும் அதிற் பங்கு கொண்டு எமது அறிவினைத் தீட்டிப் பார்க்கலாம். பரிசுகள் வெல்லலாம். இதனால் நாம் அறிவை வளர்த்துக் கொள்வதுடன் தன்னம்பிக்கையையும் வளர்க்கலாம். மொழி அறிவையும் பெருக்கலாம்.

விளையாட்டுச் செய்திகளை அறியலாம். இதனால் எந்த நாட்டினர் எந்தெந்த விளையாட்டுக்களை அதிகம் விரும்புகிறார்கள் என அறிய முடிகிறது.

இவ்வாறு வானொலியின் பயன்பாடுகள் நிறைய உள்ளதனால் நாம் வானொலியைக் கேட்பதனால் பல நன்மைகளைப் பெறலாம்.

மாணவர்: லக்சனா சிறிபாஸ்கரன்
ஆசிரியர்: மீரா இராசையா

# கனடாவில் தமிழ்க்கல்வி.

தமிழர் மட்டுமல்ல, இனிய தமிழும் புலம் பெயர்ந்த எம்போன்ற இளையவர்களால் செழுமை பெறுவதைக் கண்டு பெரியவர்கள் மகிழ்வதைக் காணக்கூடியதாக உள்ளது. செந்தமிழ் மேலும் உயர்ச்சி பெற பெற்றோர், ஆசிரியர் பங்களிப்பே முதன்மையானது. நாம் கனடாவில் பிறந்தாலும் வேற்றுமொழிகளில் கற்றாலும் எம்தாய்மொழியாம் தமிழ்மொழியை விருப்புடன் பேசுவதாலும் கற்பதாலும் தமிழை எம்மால் வளர்க்க முடிகின்றது. இதற்கு முதன்மைக் காரணம் பெற்றோர்களின் பங்கே என்றே கூறவேண்டும்.

எம்மில் பலர் இங்கு தமிழைக் கற்று நாம் என்ன செய்யப்போகிறோம்? இந்தநாட்டில் தமிழை ஏன் கற்கவேண்டும்? என்று பல கேள்விகளைப் பெற்றோர்களிடமும் ஆசிரியர்களிடமும் கேட்பதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறிருந்த போதிலும் பெற்றோர்களும் ஆசிரியர்களும் அவர்களுக்கு அறிவுரை கூறி ஊக்குவித்து வருகின்றனர். புலம்பெயர்ந்த நாடுகளில் இயந்திரமயமான வாழ்க்கை வாழ்ந்த போதிலும் தமது களைப்பையும் பொருட்படுத்தாது பிள்ளைகளை தமிழ்க் கல்விக் கூடங்களுக்கு அனுப்பி தமிழைக் கற்க வாய்ப்பளித்து வருவதற்கு பெற்றோர்களுக்கு முதலில் நன்றி கூறவேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் பிறந்த என்னைப்போன்ற மாணவர்கள் சிலர் தமிழைப் பேச, எழுத, வாசிக்கக் கூடியவர்களாக விளங்கு கின்றார்கள். இத்தகையோரைக் காணும்போது, பெரியவர்கள் உள்ளம் பூரிப்படைகின்றது. பாலர் வகுப்பில் இருந்து இன்று வரை நான் தமிழ் மொழியைக் கற்க, தகுந்த கல்விக் கூடங்களைத் தெரிவு செய்து என்னை அனுப்பி வைக்கும் எனது பெற்றோர்களின் கடமையை நான் போற்றுகின்றேன்.

தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெற்றோர்கள் மாத்திரமல்ல, ஆசிரியர்களின் சிறந்த வழிகாட்டலும் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ் மொழியைக் கற்கும்மாணவர்கள்மனதில், முதலில்மொழிப்பற்றை உருவாக்க வேண்டும். அதற்குப் பெற்றோரும் ஆசிரியர்களும் இணைந்து தொழிற்பட வேண்டும். இந்த வகையில், எமது மொழி அறிவுக்கேற்ப தரம் பிரித்துக் கற்பித்து வரும் தமிழ்க் கலைத்தொழில் நுட்பக்கல்லூரி பல காலமாக ஆற்றிவரும் சேவை மகத்தானது. எமது தரம் அறிந்து, எம்மை அணுகும் முறை தெரிந்து, கற்றலில் மிக்க ஆர்வத்தை ஊட்டிக் கற்பித்து வரும் இக்கல்லூரியின் பணியைப் பாராட்டவேண்டும்.

நாளாந்தப் பாடசாலையில் என்னுடன் கல்வி கற்கும் மாணவர்களுள் ஒருபகுதியினர் மாத்திரம் தமிழ்மொழியில் அதிக அக்கறை கொண்டு விளங்குவதனை என்னால் கண்டு கொள்ள முடிகிறது. பெரும்பான்மையான மாணவர்கள் தமிழை எழுத, வாசிக்கத் தெரியாதவர்களாகவும் ஓரளவு பேசக் கூடியவர்களாகவும் விளங்குகிறார்கள். அவர்களுள் சிலர் தமக்கு எழுத, வாசிக்கத் தெரியவில்லையே என்று வேதனையடைவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவர்களில் சிலருடன் உரையாடியபோது, சிறுவயதில் தமிழ்ப் பாடசாலைகளுக்குத் தாம் சென்றதாகவும் கற்றல் மிகவும் கடினமாக இருந்தமையால், பின்வாங்கி விட்டதாகக் கூறினர். அத்துடன், வகுப்பில் கொடுக்கப்பட்ட வினாத் தாள்களில் இடம்பெற்ற ஒரு சொல்லையேனும் தம்மால் இனங் காண முடியாதிருந்ததாக மிகவும் தாக்கத்துடன் பேசினார்கள். இந்நிலை மாணவர்களுக்கு ஏற்படக் காரணம் மாணவரின் மொழியறிவு ஆசிரியரால் அறியப்படாது இருந்தமையாகும்.

சில மாணவர்களின் பெற்றோர்கள் வீட்டில் ஆங்கிலத்தைப் பேசுவதாலும், தமிழ்க் கல்விக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லாதபடியினாலும் அவர்களின் தாய்மொழி அறிவு மிகமோசமான நிலையிற் காணப்படுகின்றது. இத்தகைய நிலை மேலும் ஏற்படாதிருக்க வேண்டும் என்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன். மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு தமிழையும் ஒரு பாடமாகக் கற்கக்கூடிய வாய்ப்பு இங்கு இருக்கின்ற காரணத்தால் சிலர் தமிழைக் கற்று வருகின்றனர். அவர்களில் சிலர் சிறுவயதில் தமிழைக் கற்காது, நாளாந்தப் பாடசாலைகளில் ஒன்பதாம் தரத்திற்குச் சென்ற பின்னர் தான் தமிழ் வகுப்புகளுக்குச் சென்று வருகின்றார்கள். மொழியறிவு வளரவேண்டும் என்றால் சிறுவயதிலிருந்தே மாணவர்கள் கற்கத் தொடங்க வேண்டும். இதனைப் பெற்றோர்களே கவனத்தில் எடுத்து செயற்படவேண்டும்.

மொழி வளர்ச்சிக்குப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஊடகங்கள் ஆற்றிவரும் சேவைகள் மென்மேலும் வளரவேண்டும். எமது பாரம்பரியக் கலை, பண்பாட்டை வளர்க்கவும் எம் தாய் மண்ணில் கால் பதிக்கும்போது அங்குள்ள எமது உறவுகளுடன் உரையாடவும் எமது மொழியறிவு வளர்ச்சியில் உயர்ச்சி வேண்டும். ஆகவே, எல்லோரும் ஒருங்கிணைந்து மொழி வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும் என்பதே எனது வேண்டுகோள் ஆகும்.

"வாழ்க தமிழ்! வளர்க கனடாவில் தமிழ்!"

மாணவர்: சர்ஜினி சிவனேசன்
ஆசிரியர்: சாந்தினி ஞானரத்தினம்



## எதிர்கால இளைஞனே...

ஓ இளைஞனே!
நீ வளரும் நாற்று
உன் சுவாசக்காற்று,
பொதுவுடமை இலட்சியத்தில்
பூத்த பூவாய் மணம் வீசும்

உறுதியான நெஞ்சில் படிப்பைத் தேடு
அதன்வழி உழைப்பைத் தேடு
உன்னதமான உயர்வுக்கு அறநெறியை நாடு

மாற்றத்தைக் கொண்டு வா
விண் அதிர நடைபோட்டு
விடியலைக் கொண்டு வா

சுயநலமாயிரு,
பொதுநலத்தில் அதைத் தேடாதே
என்றும் புதிய சிந்தனை செய்
அதனூடு எல்லா இளைஞருக்கும் புதிய சிந்தனை
புதிய விதி செய்வோம். அதன் வழி வாழ்வோம்

மாணவர்: பிரபாகர் சிவகுமார்
ஆசிரியர்: தேன்மொழியாள் கங்காதரன்

# கனடாவில் வலுவுள்ள குமுகமாக வளர...

## தமிழர் முதன்மையளிக்க வேண்டிய மூன்று விடயங்கள்_

'தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா' என்ற பாரதியாரின் கூற்றிற்கு இணங்க தமிழர்கள் ஆகிய நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். இந்த வகையிலே பாரதியார் சொன்னது போல தலைநிமிர்ந்து ஒரு வலுவுள்ள குமுகமாகக் கனடாவில் வளரத் தமிழ்க் குமுகம் முதன்மையளிக்க வேண்டிய மூன்று விடயங்கள் என்ற கருத்தை முதன்மைப்படுத்த முயல்கின்ற வேளையிலே ஒற்றுமை கல்விமேம்பாடு , தமிழ்ப் பண்பாடு என்னும் மூன்று விடயங்களே நமது நினைவிற்கு எட்டுகிறது.

### ஒற்றுமை

ஒற்றுமை என்ற விடயத்தை உற்றுநோக்குமிடத்து ஒற்றுமை என்ற பதம் பலம், சக்தி என்ற பொருள்களைக் குறிக்கின்றது. தமிழர்கள் எல்லோரும் ஒரே சாதியோ, மதமோ, கொள்கையோ உடையவராக இருக்கமாட்டோம். இதுதான் உண்மை. எங்கள் தாயகத்தில் தொழில்போட்டி, பொறாமை, பதவிமோகம், பணத்தாசை, கட்சிமுரண்பாடு இப்படிப் பல தொல்லைகள் மத்தியில் வாழ்ந்தவர்கள் நாங்கள். ஆனால் இவை அனைத்தையும் மறந்து, மன்னித்து புது மனிதர்களாக ஒன்று பட்டு ஒற்றுமையாக வாழ வேண்டும். எந்த ஒரு விடயத்திலும் ஒத்த கருத்தோடு செயற்பட்டால் மற்றைய இனத்தவர்களால் நாங்கள் ஒரு வலுவுள்ள குமுகமாக மதிக்கப்படுவோம். தமிழர்கள் ஒவ்வொருவரும் தத்தம் மனதில் நாம் தமிழர் என்ற எண்ணம் கொண்டால் தானாகவே ஒற்றுமை என்னும் தோழன் எங்களுக்கு தோள் கொடுப்பான்.

### கல்வி மேம்பாடு

அடுத்து கல்வி மேம்பாடு என்ற விடயத்தை நம் கண் முன்னே நிறுத்தும் போது உலகில் பிறந்த ஒவ்வொரு மனித உயிர்களுக்கும் கல்வி என்பது இன்றியமையாத தேவையாகின்றது. அந்த வகையிலே கனடாவிற்கு நம்தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து வரும்போதே முழு அறிவுடன் வந்தவர்கள் அல்ல நாங்கள். அரைகுறை கல்வியுடன் வந்து பல இன்னல்களை அனுபவித்து தற்போது எங்களை ஓரளவுக்கு உயர்த்தி நிற்கிறோம். கனடாவிலே ஆங்கில மொழிக்கும், ஆங்கிலக் கல்விக்குமே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. எனவே நம் தமிழ்க் குமுகத்தை வலுவுள்ள குமுகமாக மாற்ற அந்நிய மொழியாம் ஆங்கிலத்தை கற்க வேண்டும். அதே நேரத்தில் நம் தாய் மொழி தமிழை மறந்துவிடக்கூடாது. அதற்கும் முக்கியத்துவம் அளித்து அதனையும் கற்கவேண்டும். தமிழ்தான் எம்மைத் தமிழன் என்று அடையாளப்படுத்துவது. 'என் பிள்ளை தமிழை வாசிக்க வேண்டும். என் பிள்ளை தமிழை நேசிக்க வேண்டும்.' என்பது ஆன்றோர் வாக்கு. எனவே நாம் கல்வியில் முன்னேற்றம் அடைய வேண்டுமானால், ஆங்கில மொழியை கற்று ஆங்கிலேயரின் சம தகுதியைப் பெறவேண்டும். எனினும் நாம் அவர்களின் சம தகுதியை பெற்றாலும் ஆங்கிலேயர் ஆகிவிட முடியாது. நாம் பேசும் ஆங்கில மொழியினால் ஒன்று பட்டு இருந்தாலும் மனத்தால், பண்பாட்டால், பழக்கவழக்கங்களால் வேறுபட்டவர்கள். எனவே நாம் கல்வியில் முன்னேற்றமடைந்து கனடாவில் நமது தமிழ்க் குமுகத்தை வளர்ப்போம்.

### பண்பாடு

இறுதியாகப் பண்பாடு என்னும் போது தமிழருக்கு என்று ஒரு மரபு, பண்பாடு என்பன உள்ளன. பண்பாடு என்னும் போது நடை, உடை, பாவனை, பழக்கவழக்கங்கள் என்பவற்றைக் குறிக்கின்றது. இந்தக் கனடாவிலே எந்த ஒரு தமிழனாவது நிகரான முறையில் தமிழ்ப் பண்பாட்டைப் பின்பற்றி நடக்கின்றனரா? சற்றே சிந்தியுங்கள். இந்தக் கனேடிய மண்ணிலே நடக்கும் தமிழ்ப் பண்பாட்டு நிகழ்வுகளில் எத்தனை குஞ்சு குருமானைத் தமிழ் மரபின்படி காணக் கிடைக்கின்றது? அதைத்தவிர இங்கே கோயில்களிலே ஆண்களில் பலர் வேட்டி அணிவதற்கு வெட்கப்பட்டுக்கொண்டும், அவமானப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். ஏன்! இவையெல்லாம் நமது பண்பாடு இல்லையா? ஏன் பெண்களையே எடுத்துக்கொண்டால் ஒரு சிலர் புடவை அணிவதை வெட்கக்கேடாக நினைக்கின்றனர். அதற்குமாறாக வெள்ளையர்களின் ஆடை, அணிகலன்களை அணிந்து கொண்டு திரிகின்றனர். கேட்டால் நாகரிகம் என்கிறார்கள். நாகரிகம் வேறு பண்பாடு வேறு என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று பலர் ஆங்கிலப் பண்பாட்டை விரும்பி தமிழ்ப் பண்பாட்டை வெறுத்து ஒதுக்குகின்றனர். நம்மைத் தமிழன் என்று அடையாளப்படுத்துவது தமிழ்ப் பண்பாடுதான். நாம் ஆங்கிலப் பண்பாட்டு மோகத்தை விடுத்து, தமிழ்ப் பண்பாட்டைக் கடைப்பிடித்து தமிழ்க் குமுகத்தை வளர்ச்சியடைச் செய்வோம்.

வள்ளுவர்

எனவே தமிழர்கள் ஆகிய நாங்கள் நம் தமிழ்க் குமுகத்தை இந்தக் கனேடிய மண்ணிலே வளர்ச்சியடையச் செய்வோமேயானால் நாம் மட்டுமல்லாது நம் எதிர்காலச் சந்ததியும் நன்மைபெறும். எமது இளையோரே எதிர்காலத் தூண்கள். ஆகையால் தமிழ் இளையோர் தமிழ் என்பது என்ன என்று தெரியாமல் வளரக்கூடாது. ஆனபடியினால் இப்போதிருந்தே நம் இனிய தமிழ்க் குமுகத்தை மேன்மை அடையச் செய்யவேண்டும். உலகில் தமிழர்கள் வாழும் இடங்கள் என்று சொல்லும் போது கனடாவும் ஒன்று என நாம் தலை நிமிர்ந்து நெஞ்சை தட்டி சொல்ல வேண்டும். 'தமிழன் என்று ஓர் இனம் உண்டு. தனியே அதற்கு ஒரு குணம் உண்டு.' என்று சொல்வதில் தமிழர் ஆகிய நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். வீழ்வது நாமாயினும் வாழ்வது தமிழ் ஆகவேண்டும். எனவே நம் தமிழ்க் குமுகத்தை வளர்ச்சி பெறச் செய்ய ஒற்றுமை, கல்வி மேம்பாடு, தமிழ்க் பண்பாடு என்பவற்றை நம் மனதிலே நிலை நிறுத்தி கனடாவிலே வாழும் ஒவ்வொரு தமிழ் மகனும் வருமுன் கூட்டி நடப்பானேயானால் நம் தமிழ்க் குமுகத்தை வளம் பெறக்காத்து வளர்ச்சி பெற்றிடச் செய்யலாம்.

மாணவர்: சுலக்சன் பத்மேஸ்வரன்
ஆசிரியர்: பூங்கொடி அருந்தவநாதன்

# பெண் பிள்ளைகளுக்கு பெற்றோர் கூடுதற் கட்டுப்பாடு விதிப்பது சரியானதே

அறிவியல் அடிப்படையிலும் உயர் சிந்தனை அடிப்படையிலும் உயர்ந்து ஒன்றுபட்டு நிற்கும் எமது குமுகாயம் ஒரு விடயத்தில் இரு வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டு பிரிந்து நிற்கின்றது. அது ஆண், பெண் என்ற வேறுபாடு ஆகும். உயிரியல் அடிப்படையிலும் உணர்வு அடிப்படையிலும் இருவேறுபட்ட செயற்பாடுகளை கொண்டிருக்கும் இவ்வுயிரினங்கள், அடிப்படையில் ஒரு தாயின் வயிற்றில் இருந்தே வெளி வந்தவை ஆகும். சரி எதற்காக இதை நான் இவ்வேளையில் முன் வைக்க வேண்டும்? இதற்கும் இக்கட்டுரையின் தலைப்பிற்கும் ஏதாவது தொடர்பு உண்டா? என்றால் அதற்குரிய விடை ஆம் என்றே இருக்கும். ஏனெனில் நான் மேற்குறிப்பிட்டது போல் பல்வேறு காரணிகளாலும் மேம்பட்டிருக்கும் எமது தமிழ்ச் குமுகாயம் இவ்விடயத்தில் ஒரு இறுக்கமான கட்டமைப்பை அமைத்துள்ளது. அது ஆண் பிள்ளைகளை விடப் பெண் பிள்ளைகளிற்கு பெற்றோர் அதிகக் கட்டுப்பாடு விதிப்பதே ஆகும்.

இக்கட்டுப்பாடு சரியானதே என்று நான் கூறுகிறேன். ஏனெனில் பெண்ணினம் குமுகாயத்தின் இதயம் என வருணிக்கப்படுகின்றது. பெண்கள் இல்லாத குமுகாயம், கால்கள் இல்லாத குதிரையைப் போன்றது. இவ்வாறு பல சிறப்புகளைப் பெற்ற பெண்ணினத்தை பேணிப்பாதுகாக்கும் முயற்சியிலேயே எமது தமிழ்ப் பெற்றோர் ஈடுபடுகின்றனர்.

எமது மரபு வழியான தமிழ்ப் பண்பாட்டுக்கு முற்றிலும் எதிரான மேற்கத்தேய பண்பாட்டில் வாழும் நாம், எம்மால் முடிந்தவரை எமது தமிழ்ப் பண்பாட்டை பாதுகாக்க வேண்டும். தமிழ்ப் பண்பாட்டின் முதுகெலும்பாகத் திகழும் இளம் தமிழ்ப் பெண்கள், மேற்கத்தேயப் பண்பாட்டில் சிக்குண்டு, தமிழ்ப் பண்புகளை அழியும் நிலைக்கு இட்டுச் செல்வதை தவிர்ப்பதற்காகவே தமிழ்ப்பெற்றோர் பெண் பிள்ளைகள் மீது அதிகப்படியான கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர்.

சரி மேற்கத்தேய உலகில் வாழும் நாம் அதனுடன் இணையாமல் வாழ முடியுமா? என்கிற வினா நம் எல்லோர் மனதிலும் எழலாம். இவ்வேளையில் எனக்குக் குமுகவியலாளர் சேர். சார்ள்சு டார்வினின் "பலவான் நீடு வாழ்வான்" (Survival of the Fitos) என்ற சிந்தனையே நினைவுக்கு வருகின்றது. உயிரினங்கள் எவ்வாறு சூழ்நிலைக் கேற்ப தம்மை மாற்றிக் கொள்கின்றனவோ, மனித இனமும் அறைகூவல்களை எதிர்நோக்கி, சூழ்நிலைக்கேற்ப தம்மை மாற்றிக் கொண்டாலே அது நீண்ட காலத்திற்கு உயிர் வாழ முடியும். இவ்வாறான சூழ்நிலையில் உள்ள தமிழ்ப் பண்பாட்டைப் பாதுகாக்க பெற்றோர் எடுக்கும் முயற்சி சரியானது என்னுடைய கருத்தாகும்.

மாணவர்: குறிஞ்சி
ஆசிரியர்: ச.குகதாசன்

வள்ளுவம்

# பெற்றோர் ஆண்பிள்ளைகள் மீதே கூடுதற் கட்டுப்பாட்டை விதிக்கின்றனர்

பெற்றோர் அதிகமான கட்டுப்பாடுகளை தம் ஆண்மகவுகளின் மீதே சுமத்துகின்றனர். ஷஷஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்க விரும்பும் ஒரு தாயினிடத்தே அளவுகடந்த எதிர்பார்ப்பு உள்ளது. அந்த எதிர்பார்ப்புக்கு எந்தவொரு இடையூறும் வந்துவிடக் கூடாது என்ற எண்ணமே இத்தகைய கட்டுப்பாடுகளுக்கு வழிகோலுகின்றது. இதற்கு எமது குமுகாயக் கட்டமைப்பு, ஆண்பிள்ளைகளது நடத்தைகள், பெற்றோரின் அச்சம் ஆகியன சான்று பகர்கின்றன.

எமது தமிழ்க் குமுகம், ஆண்களையே குடும்பத் தலைவராகக் கொண்டிருக்கின்றது. பெண்கள் பெரும்பாலான நேரத்தை வீட்டிலேயே செலவழிப்பதாலும் பெண்ணியப் புரட்சிக் கோட்பாடுகள் இன்னமும் ஆழத்தில் வேரூன்றாமையாலும் வெளியே கூடுதலாக நடமாடுவது ஆண்களேயாம். மேலும், ஆண் குழந்தைக்கே படிப்பை வழங்க பெற்றோர் முன்வருவதாலும் சிற்றூர்ச் சூழல்களில் பெண்கள் கற்கவே தேவையில்லை என்ற எண்ணங்களாலும் தொழில் வாய்ப்பின் பொழுது ஆண்களே கணிசமான அளவு பங்கு வகிக்கின்றனர். இவ்வகையில், ஒரு குடும்பத்தைக் கட்டிக்காக்கும் பொறுப்பை குடும்பத்தில் உள்ள ஆண்பிள்ளையிடமே ஒப்படைத்தும் விடுகின்றனர்.

இந்நிலையில் எந்தவொரு கவனத்தை சிதறடிக்கும் விடயமும் தம் பிள்ளையை அணுகக் கூடாது என்பதை பெற்றோர் கண்ணிமையாது கவனித்து வருகின்றனர். கட்டுப்பாடுகளை விதிப்பதன் வாயிலாக தம் பிள்ளைகளை எக்கணமும் தொடரும் நிழலென மாற்றுகின்றனர். குறிப்பாக இளமைக் காலத்தில், கட்டற்றுப் பாயும் காட்டாற்றென ஊற்றெடுக்கும் அவர்களை அணைகட்டி எல்லார்க்கும் பயன்படும் குளமென மாற்றும் நடவடிக்கையைப் பெற்றோர் முன்னெடுக்கின்றனர். அணை கடந்த வெள்ளம் அழுதாலும் போகாது என்பது பெற்றோர் அறியாததல்ல. ஆண்பிள்ளைகளுடைய நடத்தை, அவர்களது வயதோடு மாறுபடுகின்றது. இளமைப் பருவத்திலே தாம் கடவுள் என்பது போல் அதுவரை அவர்கள் நுகர்ந்திதிராத வாழ்க்கையை துய்க்கின்ற அவா ஆண்பிள்ளைகளிடையே மேலோங்கிக் காணப்படுகின்றது.

அதுவரை தன்னைச் சுற்றியிருப்பவர்கள் புகைபிடித்தலை பார்த்த அவன், தானே அதைப் பிடித்தால் என்னவென்று தன் மனதை வினாவுகின்றான். இதில் அப்பிள்ளை, தன் நண்பர்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கும் ஒப்ப நடக்க வேண்டியுள்ளது. பிறர் செய்வதை தான் செய்யாவிடின், தன்னைக் குறைவாக நினைப்பார்கள் என்ற மனப்பான்மையால் பெற்றோர்களுக்குத் தெரியாமல் தீய பழக்கங்களைப் பழகுகின்றார்கள். பழகுகின்றார்கள் என்பதை விட பயிற்றுவிக்கப்படுகின்றார்கள் என்பதே சாலப் பொருத்தமானது. பெற்றோரும் முன்னொரு காலத்தில் இளையோரே. பாலினை நீரிலிருந்து பிரிக்கும் அன்னப் பறவையல்ல தம் பிள்ளைகள் என்பதை அவர்கள் அறிவர். அத்தகைய பக்குவம் வரும் வரை பயிரினைப் பிற பறவைகள் கொத்திச் செல்லாதவாறு வேலியிட்டுக் காக்கின்றனர். அவ்வாறில்லாவிடில், உழுகின்ற பொழுது கட்டமென்று எண்ணும் வயலைப் போலும் உளி விடும் பொழுது வலியென்றெண்ணும் சிலையினைப் போலும் தரிசாகவோ, கல்லெனவே இருப்பர் இளைஞர்.

இறுதியாக பெற்றோரது பீதியும் கட்டுப்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கின்றது. நம் செல்லப் பிள்ளைகள் ஒரு பதிற்றாண்டுக்கு மேலாக தம் வசமிருந்து ஒரு சில திங்களில் வழிமாறிச் செல்வதை பெற்றோரின் மனதால் செரிக்க முடியாது. தம் பிள்ளையின் நடை, உடை, பாவனையில் காண்கின்ற சிறு மாற்றங்கூட தம் தலையில் பேரிடியென இறங்கும் எனப் பெற்றோர் அஞ்சுகின்றனர். மேலும், ஒரு காலும் ஊர்வம்பு அறியாத பொழுது குறிப்பாக நீதிமன்றத்தில் தன் பிள்ளையைக் காண விரும்புவரா? அச்சம், மடமை, நாணம், பயிர்ப்பு ஆகியனவற்றை பெண்ணினது குணங்களெனப் பயிற்றும் குமுதாயம், ஆண்களையே கணத்துக்குக் கணம் மாறும் மனிதரின் சாயலெனக் கொள்கின்றது. மாந்த இனத்தின் குணமறிந்த பெற்றோர், தம் மகனைச் சராசரி மனிதனாகவென்றாலும் காணாவிடின் பயனென்ன எனப் அச்சம் கொள்வதே காரணமாம்.

தம் குமுகாயத்தின் கட்டமைப்பு தீய பழக்கங்களுக்கு வழிகோலும் வகையிலுள்ளதாலும் பெற்றோரின் பீதி காரணமாகவும் பெற்றோரின் அளவு கடந்த எதிர்பார்ப்பே ஆண்களினிது மேலான கட்டுப்பாடு அதிகமாக இருக்க வழி சமைக்கின்றது.

நிலத்தை உழுது பசளையிட்டு தன் நெற்றி வியர்வை சிந்தி உழைத்த நெற்பயிர், அறுவடையின் பொழுது பிற பறவைகள் கணப் பொழுதில் கொத்திச் செல்வதற்கு ஒப்புதலளிப்பாரா உழவர்? அது போலவே, தம் ஆண்பிள்ளைகளுக்கான கட்டுப்பாடுகளை சிறிது தளர்த்தினாலும், இடையூறுகளுக்கிடையே கட்டிய கோபுரம் சிதைந்து விடும். அவர்களது வாழ்க்கையெனும் கோபுரத்தில் ஒவ்வொரு செங்கல்லும் மிகச் சரியானதாக வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதே பெற்றோரது அவா. அங்ஙனம், கட்டுப்பாடுகளுக்குள் வாழும் மாந்தனே, வாழ்க்கை எனும் வீதியில் கோபுரமாய் நிற்கின்றான். தனக்கென மட்டுமல்லாது, ஊருக்கே உதாரணமாய் விளங்கும் உன்னத வாழ்வு வாழ்கின்றான்.

மாணவர்: யாதேவ்வர்மா. இ
ஆசிரியர்: ச. குகதாசன்



வளர்நுவர்

# பெற்றோர் எந்தப் பிள்ளைகளுக்கும் கூடுதற் கட்டுப்பாடு விதிக்கக் கூடாது

பொதுவாகவே குழந்தைகளிடம் ஒரு விடயத்தைச் செய்யக் கூடாது என்று சொன்னால், அவ்விடயத்தைச் செய்து முடிக்கும் வரை அவர்களுக்கு நிம்மதி இருக்காது. அதிகம் கட்டுப்பாடுகள் விதித்தால், அது குழந்தைகளுக்குக் சினத்தையும் கட்டுப்பாடுகளை மீறும் ஆர்வத்தையும் கொடுக்கும்.

பெற்றோர்கள் ஏன் கட்டுப்பாடுகள் விதிக்கின்றனர்? பிள்ளைகள் தவறான வழியில் செல்லக் கூடாது, பிள்ளைகள் நலமாகவும் பாதுகாப்பாகவும் வாழ வேண்டும் என்பதனால் மட்டுமேயாகும். இது பொதுவாக அனைத்துப் பெற்றோர்களும் செய்யும் ஒரு வேலைதான். அப்படி நடப்பதே யாவருக்கும் நல்லது. ஆனால் சில பெற்றோர் குமுகாயம் என்ன எதிர்பார்க்கிறது என்பதையே நினைத்துக் கொண்டு பிள்ளைகளை வளர்க்கின்றனர். பிள்ளைகளைச் குமுகாயம் மதிக்க வேண்டும் என்பதால், அதிகமாகவே கட்டுப்படுத்தி வளர்க்கின்றனர். ஆனால் உண்மை என்ன? இதே குமுகாயத்தில் தான் தெருவில் பிச்சையெடுப்பவர்களின் தொகையும், புதைகுழியில் சேர்பவர்களின் தொகையும் அதிகரிக்கின்றன. இப்படிப்பட்ட குமுகாயம் என்ன நினைத்தாலும், ஏன் அதற்குக் கவலைப்பட வேண்டும்?

சில திங்களுக்கு முன்பு செய்தி இதழ்களில் சதுரமான வெள்ளரிப் பழங்கள் விற்கப்படுகின்றன என்று வாசித்தேன். இது எப்படி? இந்தப் பழங்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தி ஒரு சதுரப்பெட்டிக்குள்ளேயே வளர விட்டதால், அவை சதுர வெள்ளரிப் பழங்கள் ஆக மாறின. இது பழம் விற்பவரின் விருப்பத்தைப் நிறைவு செய்கிறது. ஆனால் இப்பழங்களின் இயற்கையை அழிக்கின்றது. இதே போல அதிகமாகக் குழந்தைகளைக் கட்டுப்படுத்தினால், அவர்கள் ஆள வந்த திறமையை அது அழிக்கின்றது. பிள்ளைகளின் இயற்கை தொலைந்து போகிறது.

நாய்க்குட்டிகளை எதற்காக கயிற்றால் கட்டி வைக்கிறோம்? அது பூனையைக் கண்டதும் ஓடி விடுமோ என்ற அச்சத்தில் தான். ஆனால், 'நான் எனது நாய்க்குட்டியை அன்பு ஊட்டி வளர்த்திருக்கிறேன். அது எனக்கு விசுவாசமாக இருக்கும்; என்று நம்பினால் இந்த அச்சம் இருக்காது. இதே போல பெற்றோர்களுக்கு பிள்ளைகள் மீது எப்பொழுது நம்பிக்கை குறைகிறதோ அப்பொழுதுதான் கட்டுப்பாடுகள் விதிக்கின்றனர். பெரும்பாலான பிள்ளைகள், பெற்றோர்கள் நம்பி ஒரு விடயத்தைச் செய்ய விட்டால், அந்த நம்பிக்கையை அழிக்கமாட்டார்கள். ஆகவே, பெற்றோர்கள் நம்பிக்கை காட்டினால் அதிகம் கட்டுப்பாடுகள் தேவை இல்லை.

ஆகவே, பிள்ளைகளை ஆண், பெண் என்று பிரிக்காமல் 'எனது பிள்ளை' என்று பார்த்து அதிகம் கட்டுப்பாடுகள் விதிக்காமல் இருந்தால் நல்லது. பாலைத் தாண்டி உள்ளம் என்று ஓர் அறை உள்ளது. வாழ்க்கை என்ற பாதை உள்ளது. இரண்டிற்குமே இந்த உலகில் ஒரே ஒரு பொது விளக்கம் தான், இனம். மதம், சாதி, பால் என்று தனித்தனி அகராதிகள் கிடையாது.

மாணவர்: முல்லை
ஆசிரியர்: ச. குகதாசன்

வள்ளுவர்

# தமிழ் ஒரு செம்மொழி

பிற மொழிகளின் துணையின்றித் தானாக தனித்து நின்று இயங்கக்கூடிய மொழி செம்மொழியாகும். ஒரு மொழி செம்மொழியாவதற்கு 11 தகுதிகளில் குறைந்தது 6 தகுதிகள் இருக்க வேண்டும். ஆனால் தமிழ் மொழிக்கு மொத்தம் 11 தகுதிகளும் இருக்கின்றன. செம்மொழிக்கான தகுதிகளாகத் தொன்மை, தனித்தன்மை, பொதுமைப் பண்பு, நடுநிலைமை, தாய்மைப் பண்பு, மொழிக்கோட்பாடு, இலக்கியவளம், கலை இலக்கியத் தனித்தன்மை, கலை-பண்பாட்டு வெளிப்பாடு, பிறமொழித்தாக்கமின்மை மற்றும் உயர்சிந்தனை ஆகியவற்றைக் கூறுவர்.

### தொன்மை:

ஒரு மொழி செம்மொழியாவதற்கு குறைந்தது 1000 ஆண்டு பழமையானதாக இருக்க வேண்டும். ஆனால் தமிழ்மொழியோ 2500 ஆண்டுக்கு மேலாகப் பேசி, எழுதி, படைத்துத் தனக்குள்ளே பெரும் இலக்கியச் செல்வங்களைக் கொண்டு விளங்குகிறது. எவராலும் மறுக்கப்படாமல் ஏற்கத்தக்க அளவிற்கு இதன் தொன்மை மிகவும் சிறப்பானது. அத்துடன் உலகமெங்கும் பரவியுள்ள தமிழரது பேச்சு மொழியாகவும், எழுத்துமொழியாகவும், கல்வி கற்கும் மொழியாகவும் புதிய புதிய துறைகளிலும் நிகரற்று விளங்குவது தமிழ் மொழியின் சிறப்பாகும். தமிழை வளர்ப்பதில் மூன்று சங்கங்கள் செயற்பட்டதாகக் கூறுவர். முதலிரு சங்க நூல்கள் எமக்குக் கிடைக்கவில்லை. கடைச்சங்கநூல்களுள் கிடைத்தவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என தொகுக்கப்பட்டுள்ளன. தொல்காப்பியம் என்னும் பழமை வாய்ந்த நூல் 2500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது. தொல்காப்பிய நூலில் அதன் ஆசிரியர் 256 இடங்களில் தனக்கு முன்னிருந்தோரைப் பற்றிக் கூறியுள்ளார். அரிக்கமேடு, ஆதிச்சநல்லூர், புலிமான் கோம்பை முதலிய இடங்களில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுகள், தமிழின் தொன்மையைக் காட்டுகின்றன.

### தனித்தன்மை:

தனக்கென ஒரு மொழிக் குடும்பத்தை உருவாக்கி தன்னைச் சுற்றி வேறு மொழிகள் இருப்பினும் தன்னிலை மாறாத உன்னத நிலையுடன் நிலைபெற்று விளங்குவது இதன் தனித் தன்மையாகும். தமிழ் மொழியின் ஒலி அமைப்பில் 12 உயிர் எழுத்துகளையும் 18 மெய் எழுத்துகளையும் சில அடையாளங்களாகக்கொண்டு தமிழைஎழுத முடியும். பிறமொழிகளில் இல்லாதவாறு வினைச்சொற்கள், திணை, பால், எண், இடம், காலம் முதலியன காட்டும் வகையில் அமைந்துள்ளன. இத்தகைய நிலை பிறமொழிகளுக்கு இல்லை. பெயர்ச்சொற்கள் யாவும் காரணம் குறித்தே இருக்கும். திணை பாகுபாடு உண்டு. ஒன்றைக் குறிக்கவும் ஒன்றின் பகுதிகளைக் குறிக்கவும் பல்வேறு சொற்களைக் கொண்டுள்ளது.

### பொதுமைப் பண்பு:

உலகின் எந்த இயற்கை மொழிக்கும் இல்லாத சிறப்புமிக்க இலக்கணக் கட்டமைப்புக் கொண்டது தமிழ் மொழி. தமிழின் இலக்கணப் பொதுமைப் பண்பு நெறிகள் திராவிட மொழிக் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் இதர இயற்கை மொழி அனைத்தும் பயனுறும் வகையில் அமைந்துள்ளது இதன் சிறப்பாகும்.

### நடுநிலைமை:

தமிழின் இலக்கணம் உன்னத நெறியுடனான பன்முகத் தன்மை கொண்டது. தமிழின் இலக்கண விதிகள் வேறு எதனுடனும் சாராமல் தனித்து இயங்குகிறன. எழுத்து, சொல், யாப்பு, அணி, அகப்பொருள், புறப்பொருள் எனப் பரந்த பன்முகத்தன்மை கொண்ட இலக்கணக் கட்டமைப்புக் கொண்டது.

### தாய்மைப் பண்பு:

திராவிட மொழிக் குடும்பம் உருவாகித் தாய்மைப் பண்போடு விளங்குவது தமிழாகும். பேச்சு மொழி என்றும், இலக்கிய மொழி என்றும் பல்வேறு தன்மையுள்ள மொழிக்குடும்பத்தில் முதலாயும் ஏனையவற்றிக்குத் தொடக்கமாயும் விளங்கும் தாய்மைப் பண்பு மிக்கது தமிழாகும். தமிழிலிருந்து 22 மொழிகள் பிறந்துள்ளன. 22 மொழிகள் தமிழில் கிளைத்திருந்தாலும் தமிழ் 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தவாறு பெருமாற்றங்கள் இன்றி இயங்கி வருகிறது.

### மொழிக்கோட்பாடு

உலகின் பல இனங்களின் அடையாளமாக விளங்குவது மொழி ஆகும். அந்த மொழியில் படைக்கப்பட்டுள்ள படைப்புகளும் மொழியின் பயன்பாடும் அதன் பொதுமைப் பண்புகளும் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தும் வகையில் மொழியானது கொண்டிருக்க வேண்டும். இந்த கோட்பாடுகள் தமிழுக்கு மிகவும் சிறப்பாக பொருந்துகின்றன. ஒரு மொழியானது குமுக மரபுகள், மற்றும் விழுமியங்களை

எடுத்து வர வேண்டும். அத்தகைய தன்மை தமிழுக்கு மிகவும் சிறப்பாக உண்டு. அத்துடன் வளர்ந்து வரும் புதிய துறைகள் எதுவென்றாலும் அதனையும் ஏற்றுத் தனித்தன்மை மாறாமல் தூய தமிழ் சொற்களிலேயே அத்துறைகளை அறியும் வண்ணம் தமிழ்மொழி விளங்குகிறது.

### இலக்கிய வளம்

தமிழ் இலக்கியங்களின் கலைநயம் தனித்தன்மை பெற்றது. பண்டைத்தமிழ் தம் வாழிடங்களைப் புவியியல் அடிப்படையில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என வகுத்தனர். ஒவ்வொரு நிலத்திற்கும் அக, புற ஒழுக்கங்களை வகுத்திருந்தனர். அவை தமிழுக்கு இலக்கியம் படைப்பதாகும். ஐவகை நிலத்திற்கும் மக்கள், தெய்வம், காலம், விலங்கு, உணவு, பறவை, மரம், பூ என வகுத்தனர். அந்நாளில் மக்கள் வாழ்க்கை முழுவதும் ஒரு கோட்பாட்டுடன் வாழ்வதற்கேற்ற நிலம், காலம் அமையப் பெற்றதால் அன்பு தழைக்கும் அமைதி வாழ்வைக் கொண்டிருந்தனர். அதனால் அவர்களின் சிந்தனை எச்சூழலிலும் இயற்கையாக விளங்கியுள்ளது. உள்ளதை உள்ளவாறு கூறுதல் தமிழிலக்கியத்தின் பண்பாகும்.

### கலை — பண்பாட்டு வெளிப்பாடு

தமிழின் சிறப்பே அதன் இலக்கிய வளங்கள் ஆகும். தமிழரது அகத்திணைக் கோட்பாடும், புறத்திணைக் கோட்பாடும் இலக்கிய படைப்பாளர்களான எம் முன்னோரது பண்பாட்டுக் கலையறிவின் வெளிப்பாடாகும். தமிழிலே தோன்றியுள்ள அனைத்து இலக்கியங்களுமே இதற்குச் சான்றாகும். மணிமேகலை, சிலப்பதிகாரம் ஆகிய இலக்கிய நூல்கள் தமிழ்ப்புலவர் பெருமக்களின் அறிவுப் புலத்திற்குச் சான்றாக நமக்கு இன்றளவும் திகழ்கிறன. வேறு எந்த ஒரு மொழியினும் தமிழில் உள்ள அளவுக்கு இலக்கியப்பண்பாடு வெளிப்படவில்லை எனலாம்

### பிறமொழித்தாக்கமின்மை

உலகில் உள்ள மொழிக் குடும்பங்களில் மூல மொழிகளாகத் திகழும் மொழிகள் யாவும் பிறமொழிச் சொற்களைத் தாங்கி நிற்கின்றன. ஆனால் தமிழ் மொழி மட்டும் அவ்வாறில்லை. தமிழ் இலக்கணவளம் கொண்டது ஆகையினால் எக்காலத்திலும் தனித்தன்மையுடன் தனக்கேயுரிய இலக்கண செழுமையுடன் தமிழில் புதிய சொற்களை துறைகளை உருவாக்குதல் எளிது. 20ஆம் நூற்றாண்டில் எல்லா மொழிகளிலும் 'கொம்பியூட்டர்' என்று நேரடியாகப் பயன்படுத்தினர். ஆனால் தமிழில் மட்டும் கணினி என்று அழைத்தனர். தமிழுக்கு மட்டும் பிறமொழியில் தங்கி இருக்காத தன்மை பெரிதும் உண்டு.

### உயர்சிந்தனை

உயர் சிந்தனை என்பது எத்தகைய படைப்பாக இருந்தாலும் ஒரு குமுகத்திற்குப் பயன்விளைவிப்பதாக இருத்தலாகும். தமிழ் இலக்கியங்களை எத்தகைய பழமை வாய்ந்ததாக இருப்பினும் அவை எல்லோராலும் போற்றக் கூடி உயரிய சிந்தனைகளின் தொகுப்பாகவே உள்ளன. தனி மனிதர் தொடங்கி, குமுகம், அரசு என்ற மூன்று நிலைகளிலும் கோட்பாடுகளை வலியுறுத்துகின்றன. தமிழ் இலக்கியங்களிலுள்ள உயர்ந்த சிந்தனை மிகவும் சிறப்பானது.

எனவேதான் தமிழைச் செம்மொழி என்று உலகம் போற்றுகிறது.

மாணவர்: தசா குகன்
ஆசிரியர்: ச. குகதாசன்



# 20ஆம் நூற்றாண்டில் இணையற்ற கண்டுபிடிப்புக் கணினி

தொழில்நுட்ப வளர்ச்சியின் முதன்மையானதும் அதி உன்னதுமான படைப்பு கணினி என்றால் அது மறுக்க முடியாத ஒன்றாகும். தொடக்கக் காலங்களில் வெறும் கணிப்பு தேவைகளுக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட பொழுதிலும், இன்று இதன் காற்றடம் பதியாத துறைகளே இல்லை எனக் கூறலாம். ஆண்டுகள் செல்லச் செல்ல மனித உடலினால் செய்யப்படும் வேலைகள் கானல் நீராகப் போகும் அதே நேரம், அவ்வேலைகளை எளிதாகவும், விரைவாகவும், திருத்தமாகவும் செய்து முடிக்கக் கூடிய தொழில்நுட்பத்திற்கு சொந்தக்காரனாகக் கணினி உருவாகிவிட்டது. இன்று மாந்தனின் இன்றியமையாத் தேவைகளில் ஒன்றாக உருமாறிவிட்ட கணினியின் பயன்கள் பல. உலகின் எந்த மூலைகளிலும் நடைபெறும் விடயங்களை உடனுக்குடன் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இரண்டாவதாக கல்வித் துறையிலும் மூன்றாவதாக வணிகத்துறையிலும் நான்காவதாக மருத்துவத்துறையிலும் ஐந்தாவதாக பொழுதுபோக்குத் துறையிலும் கணினி முதன்மையாகப் பயன்படுகிறது.

தொடர்பாடல் துறையின் வியத்தகு பரிமாணம் கணினி ஆகும். இன்று உலகின் ஒவ்வொரு சிறிய மூலைகளிலும் நடக்கும் அனைத்து விடயங்களையும் உடனுக்குடன் மக்களுக்கு அறிவிக்கும் சேவையாளனாகக் கணனி விளங்குகின்றது. உலகை வியப்பில் அமிழ்த்தும் பல விடயங்களை, இரகசியங்களை கணினி வெளிச்சமிட்டுக்காட்டுகின்றது. இதற்கு அண்மையில் வெளிவந்த 'விக்கிலீக்ஸ்' இணையத்தளம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். மேலும், மிக எளிதாகவும், விரைவாகவும் எம் உறவினர் மற்றும் நண்பர்களோடு தொடர்பாடலை மேற்கொள்ளக் கணினி உதவுகின்றது. துரித வளர்ச்சி அடைந்து வரும் இவ்வுலகத்தில் 'மின்னஞ்சல்', 'முகநூல்' ஆகியவை கணினியின் தொடர்பாடல் சேவைக்குச் சான்று பகருகின்றன.

இரண்டாவதாக கல்வித்துறைக்கு ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்திய பெருமை கணினிக்கே உரித்தாகும். இன்று ஆசிரியரின்றி, பாடசாலையின்றிப் படித்து பட்டங்களைப் பெறக்கூடிய நிலையை கணினி ஏற்படுத்தியுள்ளது. பல துறைகளில் தேர்வுகள் இன்று கணினி மூலமாகவே நடத்தப்படுகின்றன. இது கல்வித்துறையின் ஒரு புதிய பரிமாணம் என்றால் அது மறுக்கமுடியாத ஒன்றாகும்.

மூன்றாவதாக கணினியின் பங்களிப்பு வணிகத்துறையிலும் முதன்மையானதாகும். இன்று வணிகத்துறை சார்ந்த தரவுகளை, உள்ளீடுகளை, நம்பகத்தன்மையுடனும் பாதுகாப்பாகவும் திருத்தமாகவும் பயன்படுத்துவதற்கு கணினி உற்ற துணையாக அமைகின்றது. மேலும் வணிகரது நிருவாகத் தேவைகளுக்குக் கணினி இன்றியமையாச் சாதனமாக திகழ்கின்றது. எனவே வணிகத்துறையிலும் கணினியின் பங்களிப்பு தவிர்க்க முடியாத ஒன்றாக உருமாறியுள்ளது.

அடுத்ததாக, மருத்துவத்துறையில் கணினியின் பயன்பாடு அளவிடப்பட முடியாத ஒன்றாகும். இன்று பல அறுவைச் சிகிச்சைகள் கணினியின் உதவியுடனே நிகழ்த்தப்படுகின்றன. இதனால் அறுவைச் சிகிச்சைகள் மிகத்திருத்த மாகவும் எளிதாகவும் விரைவாகவும் நிகழ்த்தப்படுகின்றன. மேலும் பல புதிய மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துகளின் புதிய கண்டுபிடிப்பிற்கு கணினியே அடித்தளமாக அமைகின்றது. மேலும் நோயாளரது தகவல்களை சேமித்து வைப்பதற்கும் கணினி உதவுகின்றது.

ஐந்தாவதாக, உலக மக்களின் கையில் தவழும் பொழுதுபோக்குச் சாதனமாக கணினி விளங்குகின்றது. இத்துறையில் கணினியின் பயன்பாடு எண்ணிலடங்காது. எடுத்தக்காட்டாக விளையாட்டுகள், திரைப்படங்கள், பாடல்கள், நாடகங்கள் இவ்வாறு பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். இன்று நூற்றுக்கு பதின்மூன்று விழுக்காடு மக்கள் பொழுதுபோக்குக்காக மட்டுமே கணனியைப் பயன்படுத்தும் நிலை காணப்படுகின்றது.

எனவே இந்த 20ஆம் நூற்றாண்டில் கணினி இணையற்ற பல சேவைகளை ஆற்றுகின்றது என்றே கூறலாம். கணினி உலகத்தை ஓர் ஊராகச் சுருக்கி அனைத்து மக்களுக்கும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது. எதிர்காலத்தில் மலைக்க வைக்கும் அறிவியல் வளர்ச்சிக்கு கணினி அடித்தளம் அமைகின்றது என்றால் அது மிகையாகாது.

மாணவர்: ஜோய் அன்ரனி
ஆசிரியர்: ச.குகதாசன்

வளர்நிலை

# கனடாவில் தமிழர் தலைநிமிர்ந்து வாழ ஆற்ற வேண்டியவை

எமது நாட்டின் போர்ச்சூழல் கரணியமாக எமது தாயக மக்கள் புலம்பெயர்ந்து உலகமெங்கும் பரந்து வாழ்கிறார்கள். இவ்வாறாகக் கனடாவில் வாழும் தமிழர் தலைநிமிர்ந்து வாழ ஆற்றவேண்டியவை யாவை?. நாம் நலமுடன் வாழ இடம் தந்த கனடா மண்ணுக்கும் மக்களுக்கும் நன்றி கூறிக் கொண்டு கனடாவில் நாம் தலைநிமிர்ந்து வாழ என்ன செய்யவேண்டும் என்பதை ஆராய்வோம்.

வள்ளுவர் குறளை வையகத்திற்கு வரைந்தவன் தமிழன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று முழு உலகத்திற்கும் கூறியவன் தமிழன். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன் தோன்றிய மூத்தகுடி எங்கள் தமிழர் குடி. உலகம் எங்கும் பரந்து வாழ்ந்தாலும் அவற்கென ஒரு நாடு இல்லாததன் விளைவாக அல்லல் உற்று ஆற்றாது அழுத கண்ணீருடன் வாழ்கின்றார்கள். இந்த இனம் தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் நாம் வாழும் நாடுகளில் எல்லாம் எங்கள் ஆளுமையையும் தனித்திறமையையும் நிலைநிறுத்த வேண்டும். காற்றுப் போகாத இடங்கள் எல்லாம் தமிழன் புகுந்து தங்கள் திறமையைக் காட்டவேண்டும். இந்த நாட்டில் எத்தனை துறைகள் உள்ளதோ இயன்றவரை அத்தனை துறைகளிலும் புகுந்து எங்கள் வலிமையைக் காட்ட வேண்டும். பல துறைகள் இருந்தாலும் மிக இன்றியமையாத் துறைகளான கல்வி, அரசியல், முதலீடு, ஊடகம் ஆகியவற்றுள் நுழைய வேண்டும். மேலும், எம்மைப் பற்றிய உயர்ந்த கருத்துருவாக்கத்திலும் எமது பார்வையைச் செலுத்த வேண்டும்.

கல்வித்துறையை எடுத்துக் கொண்டால் 'கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே' இது கல்வியின் மேன்மை பற்றிய எங்கள் முழுமையான கருத்தாகும். இந்த நாட்டில் கல்வியில் சிறந்து விளங்க வேண்டுமானால் ஆங்கிலத்திலும் பிரெஞ்சிலும் நல்ல புலமை பெற்றிருக்கவேண்டும். இவ் விரு மொழிகளிலும் எமது திறமை அதிகமாக இருந்தால் நடுவண் அரசில் அதிக வேலைவாய்ப்புக்களைப் பெற எளிதாக இருக்கும். அத்துடன் எதிர்காலத்தில் அரசியலில் ஈடுபட விரும்புபவர்க்கும் அது துணைபுரியும்.

நம் மாணவர்கள் எல்லோரும் ஒரே துறையில் பட்டம் பெறாமல் பல துறைகளிலும் பட்டம் பெற்று எங்கள் திறமைகளை வெளிக்கொணர வேண்டும். பல்கலைக்கழகங்களில் 800 மேற்பட்ட துறைகள் உள்ளன. எங்களால் அத்தனை துறைகளிலும் பங்குபற்றுவது கடினமாக இருந்தாலும் கூட இன்றியமையாத் துறைகளில் கல்விகற்றுப் பட்டம் பெற முயல்வோம். 'கற்கக் கசடற கற்றவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்ற பொதுமறைக்கு ஏற்ப அந்தந்தத் துறைகளில் பட்டம் பெற்றபின் எமது முழுத்திறமையையும் வெளிக்காட்டி அந்தத் துறைகளில் செல்வாக்குச் செலுத்த வேண்டும். எங்கள் தாய்மொழியையும் வளர்க்க வேண்டும்.

நாங்கள் தமிழராக தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால் எங்கள் தனி அடையாளமான எமது தாய்மொழியை அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்ல வேண்டும். அப்படி இல்லையென்றால் அடுத்த தலைமுறை பெயரளவில் மட்டும் தமிழர்களாக வாழ வேண்டிய நிலை உருவாகும். இதைத்தான் நாம் தென்னாபிரிக்கா, கயானா, இரயூனியன் போன்ற நாடுகளில் காண்கிறோம். இந்நிலை இக்கனடா மண்ணில் வர நாம் இடமளிக்கக்கூடாது. தமிழ் வாழ்ந்தால் மட்டுமே நாமும் தமிழராய் வாழ முடியும். எனவே, நாங்கள் கல்வித் துறையில் எமது முழுக் கவனத்தையும் செலுத்திப் பல பட்டங்கள் பெற்று, நாமும் பயன்பெற்று, பல்லின மக்களும் பயன்பெற எங்களால் ஆனதைச் செய்ய வேண்டும்.

இந்த நாட்டு அரசியல் துறையினை நோக்குமிடத்து நடுவண் அரசு, மாநில அரசு, மாநகர அரசு என மூன்று விதமான ஆட்சி முறைகள் உள்ளன. நமது அன்றாட வாழ்வில் அரசியலும் பின்னிப் பிணைந்துள்ளது. ஒவ்வொரு அரசும் எடுக்கும் பல நடவடிக்கைகள் அன்றாட வாழ்க்கை முறையில் பல ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தவல்லவை. எனவே, நாமும் இந்த அரசியல் அறிவு பெற்றவராக இந்நாட்டில் வாழ வேண்டும். இம்மூன்று அரசுகளிலும் எமது பங்களிப்பு கணிசமானதாக இருக்க வேண்டும். இதற்கு எமது மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்த வேண்டும். இதன்மூலம் இந்த நாட்டில் நல்ல மாற்றங்களுக்கு வித்திட முடியும். அதன் மூலம் எமது தாயக மண்ணுக்கும் மக்களுக்கும் நல்ல வாழ்வையும் வழங்க முடியும். இக்காலகட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு கல்விச்சபை, மாநகரசபையில் இருந்தாலும் எங்கள் முழுநோக்கும் நடுவண் மற்றும் மாநில அரசுகளைச் சார்ந்ததாக இருக்க வேண்டும். இதற்கு நாம் கடுமையாக உழைக்க வேண்டும்.

இங்குள்ள முதன்மையான அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து தொண்டராகச் செயற்பட்டு படிப்படியாக முன்னேறி எமது பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொள்ள இயன்றவரை பாடுபட்டு உழைக்க வேண்டும். இன்றைய நிலையில் மாநகரசபையில் ஒரு பிரதிநிதியும், கல்விச் சபையில் ஒரு பிரதிநிதியும் ஆக இருவரே எமது அரசியல் துறையில் எங்கள் பிரதிநிதித்துவத்தை நிலைநாட்டியுள்ளனர். இந்நிலையை மாற்ற வேண்டும். இதற்கு நாம் தமிழர் என்ற உணர்வுடன் தமிழராய் ஒரே குடையின் கீழ் ஒற்றுமையுடன் செயற்பட்டால் மட்டுமே இதனை

நிறைவேற்ற முடியும். இந்நிலையை உருவாக்க மாணவர்கள் பெரும்பங்கு ஆற்ற வேண்டும்.

வணிகம் முதலீட்டுத்துறை பற்றிப் பார்க்கும் பொழுது இத்துறையில் நாம் ஓரளவு கால் பதித்துள்ளோம் என்றே கூறலாம். ஆயினும், இது போதுமான தல்ல. பொதுவான எங்கள் முதலீடுகள் அனைத்தும் எம் இனத்தவர் தேவைக்கு மட்டுமே பயன்படுவனவாக உள்ளன. எங்கள் முதலீடுகள் பல்லினமக்களையும் சென்றடையக் கூடிய வகையில் விரிவுபடுத்தப்பட வேண்டும். உள்நாட்டு வணிகத்தில் மாத்திரமன்றி வெளிநாட்டு வணிகத்திலும் எங்கள் முதலீடுகள் அதிகரிக்க ஆவன செய்ய வேண்டும். திரை கடலோடியும் திரவியம் தேடிய இனம்; தமிழர் இனம். இவ்வழித்தோன்றலின் வந்த நாங்கள் பல்லின மக்களையும் வேலைக்கமர்த்தி எமது வணிக நடவடிக்கைகளும் பரந்துபட வேண்டும். எ + கா: பாபு உணவகம்ஓரளவு பல்லின மக்களும் அறிந்தாக உள்ளது. இது எமக்குக் கிடைத்த அடையாளம். இது போன்று எல்லா நிறுவனங்களும் பன்முகப்படுத்த வேண்டும். நாம் அரசிடமிருந்து பெறும் நலன்புரிக் கொடுப்பனவுகளைத் தவிர்த்து நாம் எமது சொந்தக்காலில் நிற்கப்பழக வேண்டும்.

ஊடகத்துறை, பாதுகாப்புத்துறை பற்றிப் பார்க்கும் பொழுது நாம் ஒரு சிறந்த மக்களாட்சி நாட்டில் வாழ்ந்து வருகின்றோம். பெருமளவில் கருத்துச் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே, எமது கருத்துக்களையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் இங்குள்ள அனைத்து ஊடகத்துறையிலும் நாங்கள் நுழைய வேண்டும். நாங்கள் எமக்குள் மட்டும் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றை நடத்தி வருவதால் எமது கருத்துக்களை எமக்குள்ளே மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறோம். இந்த நிலை மாறிவரவேண்டும். இந்நாட்டிலுள்ள புகழ் பெற்ற ஆங்கிலச் செய்தி இதழ்கள், வானொலிகள், தொலைக்காட்சிகளில் நாங்களும் இணைந்து பணியாற்ற முயற்சிக்க வேண்டும். எங்கள் இனத்திற்கு மாசுபடும் கருத்துகள், செய்திகள், வரும்பொழுது அவற்றை மறுதலித்து உண்மைகளை உரத்துச் சொல்லக்கூடிய முறையில் எங்கள் ஆதிக்கம் ஊடகத்துறையில் இருக்க வேண்டும். இது இங்கு வாழும் எமது இளம் தலைமுறையினரால் நிறைவேற்ற முடியும். இவர்கள் ஆங்கிலத்தில் திறமையுள்ளவர்கள். ஆகவே, இத்துறைகளில் ஆர்வமுள்ள அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும். இதன் மூலம் எங்கள் தாய்நாட்டின் அவலங்களையும், குறைபாடுகளையும் பல்லின மக்கள் அறியும்படி எடுத்துக்கூற முடியும். இதன் மூலம் பல்லின குமுகத்தின் ஆதரவு அல்லது சார்பான நிலைப்பாட்டை எங்களால் ஏற்படுத்த முடியும். இதன் மூலம் தாய்நாட்டிற்கான சேவையும் செய்ய முடியும்.

சட்டம் ஒழுங்கு பாதுகாப்புத்துறைகளிலும் எங்கள் ஈடுபாடு மிகக்குறைவாகவே உள்ளது. இது மிகவும் வருந்தத்தக்கது. நகர்ப்பாதுகாவலர், தரைப்படை, வான்படை போன்ற துறைகளில் எங்கள் இளையோர் நுழைவது மிகவும் தேவையாக உள்ளது. எனவே, இதில் ஆர்வமுள்ள இளையோர் அதிகமாக இணைந்து மேற்கூறிய துறைகளில் தமிழருக்குரிய இடத்தை நிரப்ப வேண்டும். இதன்மூலம் நாம் இந் நாட்டின் பாதுகாப்பிற்கும் தமிழரின் பங்களிப்பை வழங்க முடியும்.

எம்மைப் பற்றிய உயர்ந்த கருத்துவாக்கத்தை பல்லின மக்களும் அறியும் வண்ணம் நாம் எமது சேவைகளைச் செய்ய வேண்டும். பல்லினக் குமுகமும் பயன்பெறும் வகையில் நம் செயல்களைச் செய்யும் பொழுது எமது தலைகள் அங்கே தாமாக உயருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாகத் தமிழீழச் சங்கத்தின் சேவையைக் கூறலாம். இந்நிறுவனம் தொடக்க காலங்களில் தமிழருக்கு மட்டுமே தொண்டு செய்தது. இப்பொழுது அதன் தரம் உயர்த்தப்பட்டு பதினொரு மொழி பேசும் பல்லினமக்களுக்கும் சேவையாற்றி வருகிறது. இதன் மூலம் எமது சேவை மனப்பான்மைமற்ற குமுகங்களுக்கும் அறியக்கூடியதாகவுள்ளது. கனடாத் தமிழர் பேரவை பொதுவான கனடா மக்களுக்காக குருதிக் கொடை, புற்றுநோய், நீரழிவு போன்ற நோய்களுக்கான நிதிசேகரிப்பு விடயங்களில் முன்னின்று உழைக்கிறது. இதுவும் எமது குமுகம் பற்றி உயர்வான கருத்தை மற்றைய குமுகம் அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு பல நிறுவனங்கள் செயல் புரிகின்றன. இது ஒரு மகிழ்ச்சியான விடயமாகும். இதனை மேலும் விரிவுபடுத்தி எல்லோரும் செய்யும் வண்ணம் செய்தல் நன்று.

ஏராளமான தமிழர் பொதுத்தொண்டில் ஈடுபட்டுவருவது மகிழ்ச்சிக்குரிய விடயம். இச்சேவை மூலம் எங்கள் மக்களது சேவை மனப்பான்மையை அனைத்துக் குமுகமும் அறியக்கூடியதாகவுள்ளது. இது எங்களைப் பற்றிய உயர்ந்த கருத்தை பல்லின மக்களிடையே உருவாக்க உதவி புரியும்.

எனவே, மேற்கூறிய பல்வேறு துறைகளிலும் நாங்கள் அதிகளவில் பங்காற்றி எமது முழுத்திறமையையும் வெளிக்கொணரும் பொழுது, நாம் தமிழராய் தலைநிமிர்ந்து வாழ முடியும். இதற்கு நாம் கடினமாக உழைக்க வேண்டும். இவ்வாறு எமது சேவைகள் உயர்ந்து எமது தலைகள் உயரும் பொழுது, எமது தாயகத்தின் தலையும் உயரும். ஊர்கூடித் தேர் இழுப்போம். வேற்றுமைக்குள்ளும் ஒற்றுமை பேணுவோம். ஓரினமாய்த் தமிழராய் இருப்போம். நாம் தமிழராய்த் தலைநிமிர்ந்து வாழ்வோம்.

மாணவர்: கிசோன் தவேஸ்வரன்

ஆசிரியர்: ச. குகதாசன்

# கனடாவில் தமிழ் கல்வி




கல்வி என்பது தமிழர்களின் முக்கியமான சொத்துக்களில் ஒன்று என்பதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. இலங்கையில் உள்நாட்டுப் போர் கொடூரமாக நடந்த வேளையிலும் எந்தவித வசதிகளும் அற்ற நிலையிலும் தமிழர்கள் தங்கள் கல்விச் செல்வத்தை விட்டுக் கொடுக்கவே இல்லை, புலம் பெயர்ந்து பலநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தங்கள் கல்விச் செல்வத்தைத் தங்களுடனேயே எடுத்து வந்துள்ளார்கள். உதாரணமாக இங்கு கனடாவில் ஆயிரக்கணக்கான தமிழ் பிள்ளைகள் பல்கலைக்கழகங்களில் படித்து பட்டம் பெறுவதை அவதானிக்க முடிகிறது. தொழில் கல்வியுடன் தமிழையும் எம்மவர் கற்பதையிட்டு நாம் பெருமைப் படவேண்டும்.

மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம். மொழியை இழந்தவன் தன் இனத்தை விட்டு வெகுதூரம் சென்று அந்நியப்பட்டு விடுவான். ஆரம்பகாலத்தில் கனடா வந்த தமிழர்களின் நிலையும் மொழியற்ற இனமாக மாறிவிடுமோ என்றுதான் இருந்தது, ஆனாலும் மிகக் குறுகிய காலத்தில் தமது பிழையை உணர்ந்து தம்மொழியை வளர்க்க தொடங்கி விட்டார்கள்.

முதலாவதாக ஊடகங்கள் தமிழ்க் கல்வியை வளர்ப்பதில் கணிசமான பங்கை வகிக்கின்றன என்பதில் ஐயமில்லை. எடுத்துக் காட்டாக பத்திரிகைகளில் வெளிவரும் சிறுவர் மலர்கள், சிறுகதைப் போட்டிகள், கவிதைப் போட்டிகள் போன்றவை பிள்ளைகளுக்கு ஊக்கம் ஊட்டுகின்றன. மேலும் வானொலிகளில் கூட சிறுவர்களுக்கான தமிழ் நிகழ்ச்சிகளில், தமிழ் கல்வியை மிகவும் இலகுவான முறையில் புகட்டி வருகின்றார்கள்.

இரண்டாவதாக எமது தமிழ் கல்விகூடங்கள், தமிழ்க் கல்வியைப் புகட்டுவதில் பெரும்பங்காற்றுகின்றனர். இக்கல்விக்கூடங்களின் தமிழ் கற்பித்தலின் தரம் தாயகத்தில் தமிழ் கற்பித்தலுக்கு ஈடாக உள்ளது. கனடாவில் உள்ள கல்வி அவைகள், தமிழ்க் கல்வியில் மாணவர்கள் பெறும் பெறுபேறுகளை பல்கலைகழக அனுமதிக்கு பாவிக்ககூடிய அளவில் அங்கீகாரம் அளித்துள்ளார்கள். இது தமிழ்க் கல்வியை வளர்க்க மேலும் ஊக்கம் கொடுக்கின்றது.

இறுதியாக, ஒன்றைச் சொல்லி முடிக்க ஆசைப்படுகின்றேன். எமது பெற்றோர் தம் பிள்ளைகள் நன்றாகவே ஆங்கில மொழியைப் பேசுவார்கள் என்று சொல்லும் பழக்கத்தை மாற்றி எனது பிள்ளைகள் தமிழ்மொழியை நன்றாகவை வாசிக்கவும், எழுதவும், பேசவும் செய்கின்றார்கள் என்கின்ற வார்த்தைப் பழக்கம் வந்து விட்டது. இதிலிருந்து கனடாவில் தமிழ் கல்வி நல்ல நிலையில் உள்ளது என அறிய முடிகின்றது.

மாணவர்: தனஞ்சயன் சத்தீஸ்வரன்

ஆசிரியர்: குணமலர் ஏரம்பமூர்த்தி

வள்ளுவர்

# கனடாவில் தமிழ் கல்வி

1983ஆம் ஆண்டு இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரம் தொடர்ந்து இடம் பெற்ற தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் என்பவற்றால் ஈழத்தமிழர்கள் உலகின் பல்வேறு நாடுகளில் இடம் பெயர்ந்து தமக்கான புதிய இருப்புகளை அமைத்துக் கொண்டுள்ளனர். இதனால் இலங்கைக்கு வெளியே தமிழர் அதிகமாக வாழும் நாடாகக் கனடா விளங்குகின்றது.

கனடாவில் தமிழ் மொழிக் கல்வி கற்றல் எனும் போது, குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தையே விளிக்க வேண்டியுள்ளது. கனடாவில் இன்று மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழுகின்றார்கள் எனக் கூறப்படுகின்றது. இதில் 75 சத வீதமானோர் ரொறன்றோ பெரும் பாகத்தில் குவிந்தும், ஏனைய பகுதிகளில் பரந்தும் வாழுகின்றனர்.

எம்மவர்கள் புதிய நாட்டிற்கு வந்தோம், வாழ்ந்தோம் என்றில்லாமல் “தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும்” என்று பாரதி பாடியதற்கிணங்க தமிழ் மொழியை நாம் கற்க வித்திட்டுள்ளனர். ஒன்றாரியோ அரசாங்கத்தின் கல்வி அமைச்சு 1989ஆம் ஆண்டு உருவாக்கிய சட்டத்தின்படி அனைத்துலக மொழிகள் பாடசாலைகளில் கற்பிப்பதற்குரிய வசதிகள் வழங்கப்படலாயின. இதனை அனைத்து இனத்தவரும் பயன்படுத்திக்கொள்ளும் உரிமையும் கனடிய உரிமைகள் சாசனத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்திற்கமைய ஒன்றாரியோ மாகாணத்தில் 32 பாடசாலை அவைகளில் 62 மொழிகள் கற்பிற்கப்படுகின்றன. இதில் தமிழ் மொழி 60 பாடசாலைகளில் அனைத்துலக மொழிகள் கற்பித்தல் திட்டத்தின் கீழ் (international language program) இளமழலை முதல் தரம் எட்டு வரை கற்பிற்கப்படுகின்றது. இவ்வகுப்புகள் மாணவர்களின் வயது, தரம் என்பவற்றுக்கேற்ப வெள்ளி, சனி ஆகிய நாட்களில் நடாத்தப்படகின்றன. இவ்வகுப்புகளில் 1992/93 ஆம் கல்வியாண்டில் 1060 மாணவர்கள் ஆரம்பத்தில் சேர்ந்து கொண்டனர். இது 1995/96ஆம் ஆண்டில் 2050 ஆக உயர்ந்து இன்று பல மடங்காக அதிகரித்துள்ளதைக் காணமுடிகின்றது.

மேலும், ஒன்றாரியோ மாகாணத்தில் இரண்டாம் நிலைக் கல்வித்திட்டத்தில் உயர் வகுப்புக்களில் கற்பிற்கும் பாடங்களில் தமிழ் மொழியும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பாடமாக கற்பதற்கான வாய்ப்பு உள்ளது. இன்று ரொறன்ரோ, பீல், யோர்க், டரம் கல்வி அவைகளில் 1000 மேற்பட்ட மாணவர்கள் தமிழ் மொழியை கற்று வருகின்றனர். ஒன்ராறியோ இடைநிலைக்கல்வி பட்டத் தேர்வுச் சான்றிதழ் (Diploma) பெறுவதற்கு 30 பாடங்களில் திறமைச் சித்திகள் பெற வேண்டும். இதில் 1-4 வரையிலான திறமைச் சித்தியினை தமிழ் மொழியை கற்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். மேலும், பல்கலைக்கழகம், சமூகக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கு தேவையான அதிஉயர் சராசரியைப் பெற்றுக் கொள்வதற்கும் தமிழ் மொழித் திறமை சித்திகள் பயன்படுகின்றன.

கனடா தமிழ் கலை தொழில் நுட்பக்கல்லூ hp கடந்த 19 ஆண்டுகளாக ஆரம்ப, இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கு தமிழ் மொழியை கற்பித்து வருகின்றது. இவ்வாண்டு ஆரம்பப் பிரிவில் 1064 மாணவர்களுக்கு 54 இடங்களில் 150 மேற்பட்ட ஆசிரியர்களுடன் தமிழ் கற்பிற்கப்படுகின்றது.

அதே போன்று இடைநிலை வகுப்பு மாணவர்களுக்கான தமிழ் மொழி திறமைத் தேர்ச்சி வகுப்புக்கள் 1300 மேற்பட்ட மாணவர்களுக்கு 13 வளாகங்களில் கற்பிற்கப்படுகின்றது.

மேலும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்ட ‘அறிவகம்’ எனும் இலாப நோக்கமற்ற அமைப்பானது இளமழலை முதல் தரம் எட்டு வரையான மாணவர்களுக்கு தமிழ் மொழி வகுப்புக்களை நடாத்தி வருகின்றது. இன்று ரொறன்ரோ பெரும்பாகம், ஒட்டாவா, மொன்றியல் ஆகிய நகரங்களில் 85 வளாகங்களில், 200 மேற்பட்ட பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் 3500 மேற்பட்ட மாணவர்களுக்கு தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது.

மேலும், தமிழ் கலை தொழிநுட்பக் கல்லூ ரி தமிழ் மொழியில் பட்டப்படிப்பு வகுப்புக்களை, தமிழ் நாடு, மணோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகத்துடன் இணைந்து இளங்கலை (BA), முதுகலை(MA) ஆகிய வகுப்புகளை நடாத்துகின்றது. இதேபோன்று அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் பட்டதாரி வகுப்புகளை நடாத்துகின்றது. இதன்மூலம் தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியில் மேலதிக புலமையும் ஆளுமையும் பெற வசதியாகவுள்ளது. இச்சிறப்புப் பணியைக் கடந்த 20 ஆண்டுகளாக செவ்வனே ஆற்றி வரும்

கனடா தமிழ் கலை தொழில்நுட்பக் கல்லூரியின் பணிகள் பாராட்டபட வேண்டியதாகும்.

மேலும், ஒன்றாரியோ இந்து சமய பேரவை, சுவாமி விபுலாநந்தர் கலை மன்றம், ஆத்ம சோதி நினைவு மன்றம் மற்றும் பாடசாலை பழைய மாணவர் அமைப்புகள் போன்றன தமிழ் மொழியிலான பேச்சு, கட்டுரை, பொது அறிவு, சொல்வதெழுதல் போட்டிகளை நடாத்துகின்றன. இவை மூலமும் எமது இளம் சந்ததியினர் மேலதிக தமிழ் மொழி அறிவைப் பெற்றுக் கொள்கிறார்கள். தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை விளங்கிக் கொள்கிறார்கள்.

இறுதியாக, கனடாவில் பிறந்து ஆங்கிலம், பிரஞ்சு ஆகிய முதல் மொழிகளில் கல்வி கற்கும் என்போன்ற இளம் சந்ததியினர் எம் மொழியை கற்பதன் மூலம் தமிழ் மொழி அறிவையும், எழுதுவதற்கும் பேசுவதற்குமான ஆற்றலையும் வளர்த்துக் கொள்ள முடியும். இதனை அனைவரும் உணர வேண்டும் இங்கு இரண்டாம் நிலையில் கல்வி கற்கும் தமிழ் மாணவர்கள் அனைவரும் தமிழ் மொழியைக் கற்று எம் இனத்தின் அடையாளத்தை நாம் வாழும் பல்லின, பல்பண்பாட்டுச் சூழலில் தக்க வைப்பதுடன் “மெல்லத் தமிழ் இனிச்சாகும்” என்ற கூற்றையும் பொய்யாக்குவோம்.

மாணவர்: ரிசபன் குமரகுரு
ஆசிரியர்: குணமலர் ஏரம்பமூர்த்தி

## வானொலியின் பயன்கள்

விஞ்ஞானிகளின் அரிய உழைப்பின் பயனாக வானொலி உட்படப் பல்வேறு சாதனங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. அவற்றால் நாம் அளவற்ற நன்மைகளை அனுபவித்து வருகின்றோம். வானொலிக் கருவியை முதலில் மார்க்கோனி என்னும் விஞ்ஞானி அமைத்துதவினார். அது திருத்தங்கள் பலவற்றைப் பெற்று இன்றுள்ள நிலையை எய்தியுள்ளது. நாம் வீட்டில் இருந்தபடியே உள்நாட்டு, வெளிநாட்டு நிகழ்ச்சிகளைக் கேட்டு இன்புறுகின்றோம். அறிவில் ஏற்றம் பெறுகின்றோம்.

உலக அரசுகள் தத்தமக்கென வானொலி நிலையங்களை அமைத்து காலை, நண்பகல், மாலை வேளைகளில் வேறு வேறு நிகழ்ச்சிகளை நடத்தி மக்களுக்கு அளப்பரிய நன்மைகளை செய்து வருகின்றன. விதிவிலக்காக தனியார் நிறுவனங்கள் சிலவும் ஒலிபரப்புச் சேவையை இயக்கி வருகின்றன.

வானொலியில் சமயம், ஒழுக்கம், இலக்கியம், இசை, நாடகம், அரசியல், பொருளாதாரம், விளையாட்டு முதலிய பல்வேறு நிகழ்ச்சிகள் ஒலி பரப்பாகின்றன. அவற்றை நாம் விரும்பிக் கேட்கிறோம். அவை அறிவுப் பெருக்கத்திற்கும், ஒழுக்க சீல வாழ்விற்கும் உறுதுணை புரிகின்றன. பேரறிஞர்கள் நல்வாழ்வு குறித்துக் கூறிய அறநெறிகள் பலவற்றை அடிக்கடி கேட்க வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவை சீரிய வாழ்வுக்கு அடிப்படையாய் அமைகின்றன.

அறிஞர்களின் கருத்தரங்கு, கவியரங்கு, இலக்கிய விரிவுரை முதலியன மொழித்துறையில் நாம் சீரிய நிலையை எய்துவதற்கு பெரிதும் உதவுகின்றன. மற்றும் நாடகம், இசை போன்ற நிகழ்ச்சிகள் கலை இன்பத்தைத் தருவதோடு நாமும் அத்துறையில் முயன்று முன்னேறுவதற்கு பெரிதும் உதவுகின்றன. நாள்தோறும் ஒலிபரப்பாகும் செய்தியறிக்கைகள் உள்நாட்டு, வெளிநாட்டு, அரசியல், சமூக பொருளாதார விவகாரங்களைத் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பத்தைத் தருகின்றன. சிறுவர் நிகழ்ச்சிகள் அவர்கள் உளப்பாங்கிற்கு ஏற்றவகையில் அமைந்து பெரும்பயன் அளிப்பதோடு மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் வழிவகுக்கின்றன. இவற்றோடு வானொலியில் நடைபெறும் மாணவர்களுக்கான அறிவுப்போட்டிகள், பொது அறிவுப் புதிர் என்பவற்றின் மூலம் அறிவு வளர்ச்சியடைகின்றது. அத்தோடு வீட்டில் இருக்கும் முதியவர்களுக்கு அவர்கள் வாழ்வில் ஒருவித மகிழ்வைக் கொடுப்பதாக முதியோருக்கான நிகழ்ச்சிகள் பல நடை பெறுகின்றன. அந்நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்து கொள்வதன் மூலம் வாழ்வில் மகிழ்வோடு, பலரையும் அறிமுகமாகின்ற அரிய வாய்ப்பும் கிடைகின்றது. அத்துடன் அவர்களது பாடும் திறன், பேச்சாற்றல், அவர்களது அனுபவங்களை மற்றவர்களும் கேட்டறிதல் போன்ற பயன்கள் கிடைக்கின்றன.

பெண்களுக்கான நிகழ்ச்சியில் அழகுக் குறிப்புகள், நோய்கள், அவற்றை நீக்கும் முறைகள், சமையல் குறிப்புகள், வீட்டு அலங்காரம், உடையலங்காரம், குழந்தை வளர்ப்பு இப்படியான பல்வேறு அம்சங்கள் பற்றி நடை பெறும்போது

அவற்றால் பெண்கள் அதிலும் வீட்டுப் பெண்கள் மிகவும் பயனடைகின்றனர்.

காலையில் எழுந்தவுடன் வானொலியில் கேட்கும் பக்திப்பாடல்கள் மனதிற்கு இனிதாகவும் இறையுணர்வோடு பணிகளைச் செய்வதற்கு ஏதுவாகவும் இருக்கும். மாலை நேரங்களில் திரையிசைப் பாடல்கள் கேட்பதற்கு இதமாக இருக்கும். பொழுது போக்காகப் பல நிகழ்ச்சிகள் நடைபெறும். அவற்றால் வீட்டில் இருப்பவர்களுக்கு நேரம் போவது தெரியாமல் இருக்கும்.

வானொலி இப்பொழுது பல இடங்களில் பாவிக்கப்படுகின்றது. வீடு முதல் வாகனங்கள் வரை எங்கும் காணலாம். வாகனங்களில் பயணிப்பவர்கள் வாகனத்தில் பயணித்துக் கொண்டே செய்திகளைக் கேட்கவும், நீண்ட நேரம் பயணிக்கும் போது அலுப்புத் தெரியாமல் இருக்க உதவுகின்றன. எனவே வானொலியின் பயன்பற்றி நிறையவே சொல்லிக்கொண்டே போகலாம். இங்கு பலமொழிகளிலும் வானொலிகள் சேவையை செய்கின்றன. அதிலும் தமிழ் வானொலிகள் பல இருபத்து நான்கு மணிநேரமும் ஒலிபரப்புச் செய்கின்றன. வானொலியை கேட்பதன் மூலம் நாம் அடையும் பயன்கள் பல. எமது பணிகளைச் செய்தபடியே கேட்கக் கூடிய ஒரு கருவி வானொலி என்றால் அது மிகையாகாது.

மாணவர்: மெய்யப்பன் நாச்சியப்பன்

ஆசிரியர்: குணமலர் ஏரம்பமூர்த்தி

## இணையம்

உலகம் முழுவதையும் நாம் உட்கார்ந்திருக்கும் இடத்திற்குக் கொண்டு வரும் கருவியாக இணையதளம் அமைந்துள்ளது. வானொலியும், தொலைக்காட்சியும் ஒரு வழிப்பாதையாக, தகவல் நிறுவனங்கள் அனுப்பு கின்றவையை மட்டுமே தெரிவிப்பதாக இருந்தன. ஆனால், இணையம் என்னும் இணையற்ற கருவி நமக்கு வேண்டிய தகவல்களை, பொழுது போக்குகளை நாமே உலகம் முழுவதும் கணினி மூலம் சென்று தேடி எடுத்துக் கொள்ள வகைசெய்கிறது. குரல் ஒலி, தகவல் விவரம், ஒளிப்படங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் தகவல்களைப் பெறும் வகையில் இணையதளத்தின் பயன்பாடுகளைப் பார்ப்போம். இணையதளத்தின் சிறப்புக் கூறுகளை நான்காக வகைப்படுத்தலாம்.

1. நமக்குத் தேவையானவற்றை இணையதளம் வழிதேடிக் கண்டு பிடித்தல், இதனை FTP(File Transfer Protocol) என அழைப்பர்.
2. நமக்குத் தேவையானவற்றைக் கண்டு பிடித்தவுடன் அதனைப் பிரதியாகப் படி எடுத்து வைத்துக் கொள்ளுதல். இதனை Telnet என்பர்.
3. நாம் செய்திகளை, கருத்துகளைத் தொலைதூ ரத்தில் உள்ளவர்களுக்கு அனுப்பவும் பெறவும் வழிவகை செய்தல். இதனை E-mail எனக் கூறுவர்.
4. செய்திகளை அனுப்புதல் பெறுதலோடு மற்றவர்களோடு நேருக்கு நேர் இருந்து பேசுவது போல் பேசிக் கொள்ளுதல் என்பனவாகும். கணினிகளை இணைக்கும் இணையதளத்தின் மூலம் மிக வேகமாக தகவல் தொடர்பு கொள்ள முடியும்.
5. இப்பயன்பாடு: 1. மின்னஞ்சல் 2. மின் வணிகம் 3. மின்னணு இதழ் 4. கணினி மாநாடு 5. தொலைத் தொடர்பு மாநாடு 6. நிழல்பட மாநாடு 7. வானொலியில் பயன்படும் தன்மை என்னும் தலைப்புகளில் விளக்கப்படுகிறது.


### மின்னஞ்சல்:

மிக விரைவாகச் செய்திகளை அனுப்ப மின் அஞ்சல் முறை பயன்படுத்தப்படுகிறது. இம் முறையின் மூலம் தகவல் பரிமாற்றம் உடனடியாக நிகழ்த்தப்படுகிறது. மின்னஞ்சல் முறையை 1. மின்னணு அஞ்சல் 2. படிமத் தகவல் தொடர்பு என வகைப்படுத்துவர்.

### மின்னணு அஞ்சலின் பயன்கள்:

1. உடனடியாகத் தகவல் பரிமாற்றம் ஏற்படுகின்றது.
2. தவைப்பட்டால் அனைத்துத் தகவல்களையும் தகவலைப் பெறும் இடத்தில் சேமித்துத் தேவையான போக பயன்படுத்திக் கொள்ளலாம்.
3. மின்னணு அஞ்சலுடன் பொதுத் தொலைபேசி இணைப்பு மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

வள்ளுவர்



4. மின்னணு அஞ்சல் பெரிய நிறுவனங்கள் மற்றும் செய்தித்தாள் அலுவலகங்கள் ஆகியவற்றிற்குப் பயன்படக்கூடியதாகும்.
5. உலகின் எந்தப் பகுதிக்கும் மின்னணு அஞ்சல் மூலம் அதிகத் தகவலை அனுப்பலாம்.
6. குறைந்த கட்டணத்தில் செய்திகளை அனுப்ப முடிகின்றது.
7. மின்னணு அஞ்சல் மூலம் பெறப்படும் தகவல்களை எளிதில் படித்துணரலாம்.
8. உலகெங்கும் உள்ள நாடுகளில் உள்ளவர்களோடு உடனடியாகச் செய்திகளை பரிமாறிக் கொள்ள முடிகிறது.

**மின்வணிகம்:**

மின்னணுத் துறையும், கணினி, இணையதளமும் அறிமுகமான பின்பு அறிவியல் தொழில்நுட்பத்தின் தாக்கம் அதிகரித்தது. உலகளாவிய இணையத் தொழில்நுட்ப வசதி மின் வணிகம் நடைபெறவும் அவ்வணிகத்தில் வெற்றி பெறவும் அடித்தளமாக அமைகிறது. மூலப் பொருட்களை வாங்குவது, விற்பது, உற்பத்தி முறைகள், கணக்குகள் போன்ற வணிக சம்பந்தப்பட்ட அனைத்திற்கும் இன்று கணினிகள் உதவுகின்றன.

**மின்னணு இதழ்:**

மின்னணு இதழ் என்பது அறிவியல் இதழ்களை வெளியிடுவதில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆராய்ச்சியாகும். இம்முறையில் பல்வேறு ஆசிரியர்களது கட்டுரைகளும் ஒரு மத்தியக் கணினி இணைத்தொடர்பில் செயல் முறைப் படுத்தப்பட்டு சேமித்து வைக்கப்படும்.

**கணினி மாநாடு:**

இது கணினியை அடிப்படையாகக் கொண்ட செய்தித் தொடர்பு அமைப்பு. கணினி மாநாட்டுக்கு தேசிய, சர்வதேசத் தகவல் இணைத் திட்டங்களுடன் இணைக்கப்படும் தனிக் கணினிகள் தேவையானதாகும்.

**தொலைத்தொடர்பு மாநாடு:**

இது பல்வேறு இடங்களில் அமைந்துள்ள நபர்கள் குறிப்புரைகளாகவோ அல்லது ஒலி, ஒளிக் கருவிகளின் வாயிலாகவோ தகவல்களைப் பகிர்ந்து கொள்வது ஆகும்.

**நிழல்பட மாநாடு:**

இருந்த இடத்தில் இருந்தபடி வேறு இடத்தில் உள்ளவரோடு 'வீடியோ' திரை மூலம் பேசும் முறையை நிழல்பட மாநாடு என்று கூறுவர்.

**வானொலியின் பயன்படும் தன்மை:**

செயற்கைக் கோள் ஒலிபரப்பின் துணை கொண்டு நிகழ்ச்சிகளை உலகின் எந்தப் பகுதியிலிருந்து பெறுவதும் அனுப்புவதும் இணையம் எளிதாக்கியுள்ளது. உயர்தரமான பொழுதுபோக்கு மற்றும் தகவல்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சிகளை இணையம் வழி உலகின் எப்பகுதிக்கும் எடுத்து சென்று உலக நாடுகளின் பல பகுதிகளிலும் உள்ள நேயர்களை இணையம் வழி நிகழ்ச்சிகளைக் கேட்கவும் ஒருங்கே இணைக்கவும் உதவுகிறது.

மாணவர்: பிரணவன் முரளீதரன்
ஆசிரியர்: குணமலர் ஏரம்பமூர்த்தி

## பண்பாட்டு மொழி

உலகில் வாழும் உயிரினங்களில் பேசும் வல்லமை பெற்றவன் மனிதன். ஒருவருடன் ஒருவர் பேசி மகிழவும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி மொழியினால் உணர்த்தவும் மொழி அவசியமாகின்றது. பல நூறு மொழிகள் காணப்படினும் ஒவ்வொரு மனிதனும் தனது தாய் மொழி தான் சிறந்ததாக எண்ணுகின்றான். இவ்வாறே தமிழனும் தனது தாய் மொழியாம் தமிழை உயிரினும் மேலாகப் போற்றி வருகின்றான்.

பல மொழிகள் அழிந்து போனாலும் எமது தாய்மொழி புலம் பெயர்ந்து வாழும் எம் மக்களால் உலகில் பல பாகங்களிலும் பேசப்பட்டு, மென்மேலும் வளர்க்கப்பட்டு வருகின்றது. கனடாவில் பெருமளவு தமிழர் குடியேறியுள்ளனர். அதனால் கனேடிய அரசு மழலையர் வகுப்பு முதல் பல்கழைக்கழகம் வரை தமிழ் மொழியைக் கற்பிற்கின்றது. பிள்ளைகள் தமிழ் அறிவையும் பண்பாட்டையும் வளர்த்துச் செல்வதற்கு வழிகாட்டியாக பல நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அதில் தமிழ் கலை- தொழிநுட்பக் கல்லூரி முக்கிய பங்கு வகிக்கின்றது.

தமிழ் கலை-தொழிநுட்பக் கல்லூரியில் மாலை நேர, வார இறுதி நாட்கள் என தமிழ் வகுப்புகள் திறமை வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பிற்கப்படுகின்றன. மாணவர்களுக்கு இலகுவாக விளங்கக்கூடிய வகையில் நூல்களும் கிடைக்கின்றன. ஆண்டு தோறும் மாணவர்களுக்குத் தேர்வுகள் நடத்திச் சான்றுகள் வழங்கி வருகின்றது. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு, பல்கலைக்கழக நுழைவிற்கு தமிழ் ஒரு பாடமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே மாணவராகிய நாம், எமது தாய் மொழியைக் கற்று, இனிவரும் சந்ததியினருக்குப் பயன்படும் வகையில் கட்டிக்காக்க வேண்டும். நாம் இங்கு வேறு மொழிகளைக் கற்றாலும் அன்று தொடக்கம் இன்று வரை தன்னிகரற்றுத் திகழும் எம் தமிழ் மொழியைக் கற்பது ஒவ்வொரு தமிழனுக்கும் இன்றியமையாதது. இம் மொழியைக் கற்கும் போது அறிவை மட்டுமன்றி எமது கலை, பண்பாடுகளையும் சேர்த்துக் கற்கின்றோம். எனவே இளம் சந்ததியினராகிய நாம் தாய் மொழியாம் இனிய செம்மொழியைக் கற்று உயர்வடைவோம்.

மாணவர்: சங்கரி மனோ

ஆசிரியர்: குணமலர் ஏரம்பமூர்த்தி

## சி. வை. தாமோதரம்பிள்ளை

வைரவநாதபிள்ளை, பெருந்தேவி இணையருக்கு ஆயிரத்து எண்ணூற்றி முப்பத்திரண்டாம் ஆண்டு, செப்ரெம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி மகனாகப் பிறந்தார் தாமோதரனார். இவர் இளம் வயதிலேயே தமிழ் இலக்கண இலக்கியங்களையும், ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்தார். தனது பன்னிரண்டாவது வயதில் யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்று விளங்கிய வட்டுக்கோட்டை செமினறியில் சேர்ந்து, அறிவியல் துறையிலும் பயிற்சி பெற்றார். பின்னர் ஆயிரத்து எண்ணூற்றி ஐம்பத்திரண்டாம் ஆண்டில் அயலூரான கோப்பாயில் போதனாசக்தி வித்தியாசாலையில் ஆசிரியராக சிலகாலம் பணி புரிந்தார்.

இவர் ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பத்திமூன்றாம் ஆண்டு நீதிநெறி விளக்கம் என்னும் ஒழுக்க நெறி சார்ந்த தமிழ் நூலொன்றை பதிப்பித்ததன் மூலம் தமிழ்ப் பதிப்புத் துறை முன்னோடி எனும் பெருமையைப் பெற்றார்.

தமிழ் நாட்டில் தினவர்த்தமானி பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்று ஆயிரத்தி எண்ணூற்றி ஐம்பத்திமூன்றாம் ஆண்டில் சென்னை வந்தார் தாமோதரனார். தொடர்ந்து சட்டம் பயின்ற இவர் ஆயிரத்தி எண்ணூற்று எழுபத்தி ஓராம் ஆண்டில் பி.எல் தேர்வில் வெற்றி பெற்று ஆயிரத்தி எண்ணூற்றி எண்பத்திநான்காம் ஆண்டில் புதுக்கோட்டை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

தாமோதரம்பிள்ளை பண்டைக்கால இலக்கியங்களான "நீதிநெறி விளக்கம்," "தொல்காப்பியச் சொல்லதிகாரம்," "திருத்தணிகைப் புராணம்" போன்றவற்றைப் பதிப்பித்தார்.

"கட்டளைக் கலித்துறை," "சைவ மகத்துவம்இ" "வசன சூளாமணி," "நட்சத்திர மாலை", போன்ற நூல்களையும் இயற்றினார்.

மாணவர்: குபேரி பத்மநாதன்

ஆசிரியர்: தியாகேஸ்வரி மகேந்திரன்

வள்ளுவம்

## எனது பெற்றோர்



என்னுடைய பெற்றோர் எனக்குப் பாதுகாவலர் ஆவர். அவர்களை நாங்கள் மதித்து நடக்க வேண்டும். எனது அம்மாவின் பெயர் காமினி. அப்பாவின் பெயர் கார்த்திகேசன். அம்மா எனக்குச் சுவையான உணவு சமைத்துத் தருவார். அப்பா எனக்குத் தேவையானவற்றை எல்லாம் வாங்கித் தருவார். என்னுடைய பெற்றோரின் சொற்படி நான் நடந்து கொள்வேன். அப்படி நடப்பதன் மூலம்தான் அவர்களின் அன்பைப் பெறமுடியும். அவர்களும் என்னில் அன்பாக இருப்பார்கள். நான் செய்யும் செயல்கள் எனது பெற்றோருக்கும் பிடிக்கும். சில செயல்கள் பிடிக்காவிட்டால் அவர்கள் “அப்படி செய்யக்கூடாது” என அறிவுரை சொல்வார்கள். நான் செய்யும் எந்தவொரு செயலையும், என் பெற்றோருக்கு நான் சொல்வதுண்டு. எனது பெற்றோர் என்னுடைய இரு கண்கள் மாதிரி. அவர்களை நான் வணங்கி, வாழப்பழக வேண்டும். எனது பெற்றோர் எனக்குக் கிடைத்த வரமாகும். பெற்றோரை இழந்து எத்தனையோ குழந்தைகள் தவிக்கிறார்கள்., எனவே என் பெற்றோருடன் நான் வாழ்வதை இட்டுப் பெருமை அடைகின்றேன்.

மாணவர்: பவித்ரா காத்திகேசன்
தொடக்கநிலை – 1
ஆசிரியர்: மஞ்சுளா சுதர்சன்

## எனது பிறந்தநாள்



எனது பிறந்தநாள் ஆவணி மாதம் 22ஆம் திகதி வருகின்றது. இந்த ஆண்டு, எனது 15 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவேன். எனது பிறந்த நாள் அன்று எனது அம்மம்மா, தாத்தா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை, மச்சான், மச்சாள், அக்காமார், தங்கைமார், நண்பர்கள் எல்லோரும் வருவார்கள். எனது பிறந்த நாளன்று கோயிலுக்குப் போவேன். கேக் வெட்டி, எனது பிறந்த நாளை மிக மகிழ்வாகக் கொண்டாடுவேன். எனக்கு எல்லோரும் அன்பளிப்புத் தருவார்கள். எனது பிறந்த நாள் அன்று நாங்கள் எல்லோரும் கூடி நின்று புகைப்படம் எடுப்போம். நான் எனது அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கேக் ஊட்டுவேன். அவர்களும் எனக்கு ஊட்டுவார்கள். எனது பெற்றோர் எனக்குக் காசு தருவார்கள். அன்று முழுவதும் ஒரே கொண்டாட்டமாகத் தான் இருக்கும். ஒவ்வொரு ஆண்டும் எனது பிறந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பேன்.

மாணவர்: நிதுர்சன் இளமுகிலன்
தொடக்கநிலை – 1
ஆசிரியர்: மஞ்சுளா சுதர்சன்

## எனது செல்ல உயிரினம்



எனது செல்ல உயிரினம் நாய். அதன் பெயர் பப்பி. எனது பப்பி வெள்ளை, மண்ணிறம், கறுப்பு ஆகிய நிறங்களை உடையது. எனது பப்பியின் தோல் அதிக முடிகளைக் கொண்டது. எனது பப்பியின் கண்கள், நீல நிறம் கொண்ட அழகான கண்கள். எனது பப்பியின் காதுகள் மிகவும் கூர்மையானவை. இதன் வயது நான்கு. எனது பப்பி நான் சொல்லும் வேலைகளைச் செய்யும். எனது பப்பி புத்தியுள்ள நாய். ஒவ்வொரு நாளும் அதனுடன் சிறிது நேரம் விளையாடுவேன். எனது பப்பியை மிகவும் விரும்புகிறேன். எனது பப்பி நன்றியுள்ள மிருகம்.

மாணவர்: பிரணவன் ரேணுவசந்தகுமார்
தொடக்கநிலை – 1
ஆசிரியர்: மஞ்சுளா சுதர்சன்

## தமிழ்ப்பள்ளி




நான் தமிழ்ப் பள்ளியில் தொடக்கநிலை 1இல் படிக்கின்றேன். எனது ஆசிரியரின் பெயர் மஞ்சுளா. எனது வகுப்பில் 31 மாணவ மாணவிகள் படிக்கின்றனர். எனது தமிழ்வகுப்பு ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 9:00 மணி தொடக்கம் மதியம் 12:45 மணிவரையும் நடைபெறும். ஒவ்வொரு ஆண்டு வகுப்புகளும் புரட்டாதித் திங்களில் தொடங்கி வைகாசித் திங்களில் முடிவடையும். எனது தமிழ்ப் புத்தகத்தை வகுப்புக்கு ஒழுங்காக எடுத்துச் செல்வேன். நான் வகுப்பில் தமிழ் எழுத, வாசிக்கக் கற்றுக் கொள்கிறேன். அத்துடன் தமிழ் ஆரம்ப இலக்கணம், திருக்குறள், ஆத்திசூடி முதலிய அரும்பெரும் அறிவுரை நூல்களையும் கற்றுக் கொள்கிறேன். இவை எனது வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது. ஆண்டு முடிவில் தமிழுக்கு ஒரு சித்தியும் எனக்குக் கிடைக்கும். இதனைப் பல்கலைக்கழக அனுமதிக்கு ஏற்றுக் கொள்வார்கள். தமிழ் வகுப்புக்குச் செல்வதால் பல நன்மைகள் எனக்குக் கிடைக்கின்றது. எனது தாய் மொழியைக் கற்றுக் கொள்ளும் பயன் கிடைக்கிறது எனது வகுப்பறையில் தமிழ் இளையோர் ஒன்று கூடி இருப்பதால் எங்களது பண்பாடு பற்றிக் கலந்துரையாட முடிகின்றது. எல்லோரும் ஒரே மொழி பேசுவதால் எங்களிடையே ஒற்றுமை காணப்படுகின்றது. தமிழ் வகுப்பறை, நாங்கள் எல்லோரும் ஒன்று கூடியிருப்பதற்கு ஒரு சிறந்த இடமாகும். நாங்கள் எமது ஆசிரியரின் சொற்படி வகுப்புக்குரிய கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கிறோம், அது எமது கடமையாகும்.

மாணவர்: மேனன் பரமேஸ்வரன்
தொடக்கநிலை– 1
ஆசிரியர்: மஞ்சுளா சுதர்சன்

வளர்தமிழ்

## எனது தமிழ்ப் பாடசாலை



நான் கனடாவில் பிறந்தபடியால் எனக்கு தமிழ் எழுத வாசிக்கத் தெரியாது. ஆனால் தமிழ் எனது தாய்மொழி ஆகவே எனது பெற்றோர் என்னை தமிழ் படிக்க அனுப்புகிறார்கள். ஒவ்வொரு சனிக்கிழமையும் நான் தமிழ் படிக்க ஜோன் வனியர் பாடசாலைக்குச் செல்வேன். நான் தொடக்கநிலை 1 இல் படிக்கின்றேன். நான் வகுப்புக்குப் பாடசாலைச் சீருடை அணிந்து போக வேண்டும். என்னிடம் தமிழ் பாடப் புத்தகம் இருக்கின்றது. வகுப்பில் தமிழ் உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், உயிர் மெய், ஆய்த எழுத்து, ஒருமை - பன்மை, உயர்திணை - அஃறிணை என பல விடயங்களைப் படிக்கின்றேன். ஆண்டு இறுதியில் எனக்கு தமிழுக்கு ஒரு சித்தி கிடைக்கும். நான் தமிழ் படிப்பதால் இரண்டு மொழிகளில் எழுத வாசிக்கத் தெரியும். தமிழ் படிப்பதால் எங்களது பண்பாட்டைப் பின்பற்ற முடிகின்றது.

மாணவர்: மகிசன் மகேந்திரலிங்கம்
தொடக்கநிலை – 1
ஆசிரியர்: மஞ்சுளா சுதர்சன்

## வானொலியின் பயன்பாடுகள்

நாம் வானொலியைக் கேட்டுப் பல நன்மைகளை அடையலாம். உலகச் செய்திகளை அறிந்து கொள்ளலாம். இதனால் பொது அறிவை வளஉத்துக் கொள்ளலாம். செய்திகள் விரிவாகக் கூறப்படுவதனால் ஒவ்வொரு நாட்டினதும் அரசியல் வளஉச்சி, பிளவுகள், பொருளாதாரம், நாணயப் பெறுமதி என்பவற்றை அறியலாம்.

வுானொலியில் கலந்துரையாடல்கள் நடைபெறுவதனால் அவை எமது வளஉச்சிக்கு உதவுகின்றன. பல்வேறு தலைப்புக்களில் அக்கலந்துரையாடல்கள் நடைபெறுவதால் நாம் நன்மைகள், தீமைகள் என்பவற்றைப் புரிந்து கொண்டு எமது வாழ்க்கையை நல்ல முறையில் அமைக்க முடிகின்றது.

வானொலியில் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறுவதினால் நாமும் அதிற் பங்கு கொண்டு எமது அறிவினைத் தீட்டிப் பாஉக்கலாம். பரிசுகள் வெல்லலாம். இதனால் நாம் அறிவை வளஉத்துக் கொள்வதுடன் தன்னம்பிக்கையையும் வளஉக்கலாம். மொழி அறிவையும் பெருக்கலாம்.

விளையாட்டுச் செய்திகளை அறியலாம். இதனால் எந்த நாட்டினஉ எந்தெந்த விளையாட்டுக்களை அதிகம் விரும்புகிறாஉகள் என அறிய முடிகிறது.

இவ்வாறு வானொலியின் பயன்பாடுகள் நிறைய உள்ளதனால் நாம் வானொலியைக் கேட்பதனால் பல நன்மைகளைப் பெறலாம்.

மாணவர்: லக்சனா சிறிபாஸ்கரன்
ஆசிரியர்: மீரா இராசையா



# எனக்கு பிடித்த செல்லப்பிராணி நாய்

ஒவ்வொரு மனிதனும் தமக்குப் பிடித்தமான செல்லப்பிராணிகளாக நாய், கிளி, மைனா, பூனை எனப் பல வகையான விலங்குகளையும் பறவைகளையும் தமது செல்லப் பிராணிகளாக வளர்த்து வருகின்றனர். அந்த வகையில் எனக்கு மிகவும் பிடித்த செல்லப்பிராணி நாய் ஆகும். ஏனெனில் மற்றைய விலங்குகளுடன் இந்த விலங்கை ஒப்பிட்டு பார்க்கையில் இது ஒரு நன்றியுள்ள விலங்காக விளங்குகின்றது.

அந்த வகையில் இந்தப் பிராணியை எனக்கு மிகவும் பிடித்ததற்கு பின்னால் ஒரு பெரிய காரணமும் உண்டு. அது என்னவென்றால் எனக்கு ஏழு வயதாக இருக்கும் பொழுது எனது பெற்றோர்கள் அழகான வெள்ளைப் பஞ்சு போல் இருக்கும் ஒரு நாய்க்குட்டியை வாங்கித் தந்தார்கள். நானும் அதற்கு "ஜோன்" என்று பெயர் இட்டு, எனது தம்பி மாதிரி பாதுகாத்து வளர்த்து வந்தேன். நான் எங்கு சென்றாலும் ஜோனும் எனக்கு பின்னாலே எனக்குக் காவலுக்காக வரும். என்னுடைய நண்பர்கள் என்னுடன் கதைத்தாலோ அல்லது என்னை விளையாட்டுக்கு அடித்தாலோ ஜோனுக்கு பிடிக்காது. அவர்களை கடித்து விடும். நான் ஒரு வேளை "ஜோன் இங்கே வாடா" என்று கூப்பிட்டால் உடன் வந்து காலுக்கு கீழே நின்று "என்ன?" என்று அதனுடைய மொழியில் கேட்கும். நானும் அதனுடைய கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அதைத் தூக்கி முத்தமிடுவேன். இவ்வாறு நல்ல மாதிரி நான் ஜோனை வளர்த்து வந்தேன். ஜோனும் என்னைப் பிரிந்து கொஞ்ச நேரம் கூட இருக்காது. அவ்வாறே நானும் ஜோனைப் பிரிந்து கொஞ்ச நேரம் கூட இருக்க மாட்டேன்.

ஒரு நாள் எனது படிப்பு விடயமாக பாடசாலையில் மூன்றுமாதங்கள் வெளியூர் சுற்றுலா செல்ல வேண்டும் என்று எனது பாடசாலை அதிபர் ஒழுங்கமைத்தார். நான் எனது பெற்றோர்களிடம் "ஜோனைக் கவனமாகப் பாருங்கள்" என்று சொல்லி விட்டு ஜோன் நித்திரையாக இருக்கும் பொழுது ஜோனுக்குத் தெரியாமல் ஜோனைப் பிரிந்து சுற்றுலாவிற்குச் சென்று விட்டேன். ஆனால் எனது நினைவு முழுவதும் ஜோனைப்பற்றி இருந்ததே தவிர, என்னைப்பற்றி இல்லை. ஒரிரு மணித்தியாலயங்களுக்குப் பிறகு, எனது அம்மா என்னை தொலைபேசியில் அழைத்தார். என்னவாக இருக்கும் என்று நானும் அழைப்பை ஏற்றுக்கொண்டு "ஹலோ" என்றேன். "பிள்ளை நீ இங்கு இல்லாமல் உன்னை ஜோன் வீட்டில், ஒரு இடமும் கூட விடாமல் தேடி, களைத்துப் போய் இருக்கு. நீ இல்லாமல் ஜோன் சாப்பிடுவதே இல்லைப் பிள்ளை" என்று அம்மா கூறினார்.

எனக்கு இதனால் நிம்மதியாக சாப்பிடவோ நித்திரை கொள்ளவோ முடியாமல் இருந்தது. இவ்வாறு நான் இருக்கையில் எனது அம்மா நள்ளிரவு போல் தொலைபேசியில் என்னை அழைத்தார். நானும் பயந்தவாறே என்னவாக இருக்கும் என்று அழைப்புக்குப் பதில் அளிப்பதற்காக தொலைபேசியை எடுத்து "ஹலோ" என்றேன்.

அம்மா அழுதவாறே கூறினார் "பிள்ளை... ஜோன் நீ போனதிலிருந்து சாப்பிடாமல் விட்டதால் வலி வந்து கண்ணை முழித்தவாறே உன்னைப் பார்த்ததும் ஒரு குறும்புச் சிரிப்பு சிரிக்குமே அவ்வாறு சிரித்துக் கொண்டே இறந்து விட்டான் பிள்ளை" என்று கூறினார்.

அம்மா கூறி முடிந்ததும் அடுத்த நிமிடமே நான் ஊருக்குத் திரும்பிச் சென்று விட்டேன். நான் வீட்டை அடைந்ததும் " ஜோன்.. ஜோன்" என்று கதறியவாறே உள்ளே சென்றேன். அம்மா சொன்னது போலவே எனது ஜோன் இறந்து கிடந்தது.

அதைப் பார்த்ததும் நான் அழு, அழு என அழுது விட்டு, அவனைப் புதைத்து விட்டேன். ஓர் ஆறறிவு படைத்த மனிதன் இறந்தால் கூட தாங்கலாம் ஆனால் வாய் பேசாத பிராணிகள் இறந்தால் எந்த ஒரு மனிதனாலும் தாங்க முடியாது.

ஜோன் இறந்து கொஞ்ச நாளைக்குப் பிறகு எனது அப்பா முதல் வாங்கித் தந்தது போலவே ஒரு அழகான நாய்க்குட்டியை வாங்கித் தந்தார் நானும் அதற்கு "ஜோன்" என்றே பெயர் இட்டு வளர்த்து வருகின்றேன். ஆனால் நான் முன்பு தெரியாமல் செய்த பிழையைத் திரும்பச் செய்வதாகவே இல்லை. இப்பொழுது நான் எங்கு சென்றாலும் ஜோனையும் அழைத்துக்கொண்டே அவனுக்குப் புதிய இடங்களைக் காட்டி மகிழ்கின்றேன். இக்காரணத்தாலே எனக்கு மிகவும் பிடித்த ஒரு செல்லப்பிராணியாக நாய் விளங்குகின்றது.

மாணவர்: வினிஷா இரதீஸ்வரன்தரம்
தொடக்கநிலை – 1
ஆசிரியர்: மஞ்சுளா சுதர்சன்

# பழந்தமிழரது நம்பிக்கைகள்.

எமது முன்னோர்களான பழந்தமிழர் தாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தினையும் ஏதோ ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலேயே செய்து வந்துள்ளனர். அது அன்றாட வாழ்க்கையிலோ, சமய, மரபுச் சடங்குகளிலோ அல்லது பழமொழியிலோ இருந்து வந்த ஒன்றாகப் பின்பற்றபட்டு வந்துள்ளது. இதன் அடிப்படையில் நோக்கும் பொழுது பழந்தமிழரது நம்பிக்கைகள் எமக்கு புலனாகிறது.

நமது அன்றாட வாழ்க்கையிலே இன்றும் பலவிதமான நம்பிக்கைகள் நடைமுறையில் உள்ளன. எமக்கு காலையில் நல்ல "முழுவியளம்" அவசியம் என்பார்கள். இங்கு முழுவியளம் என்பது புலர்ந்த பொழுதில் நாம் பார்க்கும் முதற் காட்சியினைக் குறிக்கின்றது. எனவே நல்ல முழுவியளம் அமைந்தால் நல்லது நடக்கும் என்றும், எதிர்மறையான விளைவுகளை சந்திக்கும் பொழுது "முழுவியளம் சரியில்லை" என்றும் நம்பினார்கள்.

ஒருவர் வெளியில் புறப்படுகையில் "எங்கே போகிறாய்" என்றோ, "எப்போது போய்ச் சேருவாய்" என்றோ வினவுதலும், செல்லும் நபர் தான் "போகிறேன்" என்று கூறுவதும் 'அபசகுனம்' என்று நம்பினார்கள். அது போலவே மூன்று பேராய் செல்வதில்லை என்ற நடைமுறையையும் பின்பற்றி இருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக, "முட்டிக்குப் போனாலும் மூன்று பேராய் போகாதே" என்ற பழமொழியினை எடுத்துக் கொள்ளலாம்.

நம் மரபான சமயச் சடங்குகளிலே தொன்று தொட்டு இருந்து வந்த நம்பிக்கைகள் தற்காலச் சூழலிலும் கடைப்பிடிக்கப்படுகிறது. பெண்கள் "மண் சோறு உண்ணல்", குழந்தை வரம் வேண்டி கோவில் மரத்திலே "தொட்டில் கட்டுதல்" நேர்த்திக்கடன் வைத்து "காசு முடிந்து வைத்தல்", காவலுக்காக கயிறு, காப்பு, தாயத்து கட்டுதல், கழிப்புக் கழித்தல், சாந்தி செய்தல் போன்றவை இன்றும் நடைமுறையில் உள்ள நம்பிக்கைகள் ஆகும்.



கோவில் திருவிழா தொடங்கும் முன்பாக ஆடு, சேவல் பலி கொடுப்பதுவும், புதையல் போன்றவற்றை அடைய எண்ணி 'நரபலி' கொடுப்பதுவும் பண்டைத்தமிழரது நம்பிக்கைகளாக இருந்திருகின்றன. பேய், பிசாசு, பில்லி, சூனியம் போன்ற தீய சக்திகள் மீதான நம்பிக்கைகளால் அவற்றை விரட்டுவதற்காக வீட்டிற்கோ அல்லது தனி நபருக்கோ பாதுகாப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளாக பேய் விரட்டுதல், இயந்திரம் புதைத்தல், பேய் கட்டுதல், சங்கு புதைத்தல், போன்றவற்றை நம்பினார்கள்.

இவ்வாறான பழைய நம்பிக்கைகள் காலப் போக்கில் மருவி வெற்றிலையில் குறி பார்த்தல், சாத்திரம் பார்த்தல், தாயத்துக் கட்டுதல், சாந்தி போன்ற கிரியைகள், நள்ளிரவுப் பூசைகள், எலுமிச்சம்பழம் வெட்டுதல் போன்ற இன்னும் பல வழக்கங்கள் நம் இடையே இருப்பது பழந்தமிழரின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே பின்பற்றப்பட்டு வருகின்றது.

பொருத்தமான நம்பிக்கைகளாக திருமணச் சடங்கு முறைகள், ஆலய வழிபாட்டு முறைகள், இயற்கை மருத்துவ முறைகள், முதியோர் வாக்குகள் என்று பலவாறாகவும் தொன்று தொட்டு வந்த நம்பிக்கைகள் நமது இளைய தலை முறையினருக்கு பயனுள்ளவையாகவே இருந்து வருகின்றது. ஒற்றைத் தும்மல் தும்மினால் ஆயுசு நூறு என்று அருகில் உள்ளவர் சொல்வதை எண்ணி நம்பிக்கை வைக்க வேண்டும். இதுவும் எமது பண்டைய தமிழரது நம்பிக்கைகளில் ஒன்று. வீண் விவாதம் புரியாமல் மூட நம்பிக்கைகளைத் தவிர்த்திடுவோம்.

எமது தமிழினத்தின் முன்னோர்கள் எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும், பட்டறிவு முதிர்ச்சி உள்ளதாகவும், பொருளுள்ளதாகவும், எமது வாழ்க்கையை நல்ல பாதையில் வழி நடத்தி செல்ல உதவுவதற்காகவுமே அமைந்திருக்கும். இதை எண்ணி நாம் பெருமை கொள்வதுடன் பயனுற்று வளமுடன் வாழ்வோம்.

மாணவர்: விதுஷாந் கிருபாகரன்.
ஆசிரியர்: மீரா இராசையா

வள்ளுவர்

# இதழ்

மக்களின் தேவைகளும் விருப்பங்களும் பெருகப் பெருகச் சமூக அமைப்பும் அதற்கு ஏற்ப மாறிக் கொண்டே வருகிறது. மக்களுக்கு அன்றாடம் உணவும் உடையும் உறையுளும் தேவைப்படுகிறது. உலகின் நாலா பக்கங்களிலிருந்து புத்தறிவு கொளுத்தி புதிய பார்வையைக் கொடுத்து மக்கள் புதிய பாதையில் அடியெடுத்து வைக்க புதிய புதிய செய்திகளைக் கொண்டு வந்து தருவது இதழ்களாகும்.

இதழ்கள் செய்திகளைத் தருவதுடன் மக்களுக்கு அறிவைப் புகட்டி அரசியல் விழிப்பை உண்டு பண்ணி சமுதாயத்தைச் சீர்திருத்தி, மக்களின் உரிமையைப் பாதுகாத்து, நாகரிகத்துக்கு நல்ல எடுத்து காட்டாகவும் விளங்குகின்றன.

உலகை "அறிவுலகு" என்றும் "பண உலகு" என்றும் "ஆட்சி உலகு" என்றும் பாகுபடுத்திச் சொல்வார்கள். அறிவைக் கொடுக்கும் இதழ்களும் இன்று தமக்கென்று ஒரு தனி இடத்தை இவ்வுலகில் தேடிக் கொண்டு விட்டன! ஆம், வல்லரசுகளும் இருக்கும் செல்வாக்கை விடப் போர்க்குணம் படைத்தவர்களுக்கு உள்ள பலத்தைவிட, அறிவாளிகளுக்குத் தரப்படும் மேன்மையை விட, இதழ்களுக்கு அதிக செல்வாக்கும் பலமும் மேன்மையும் இன்று கிடைத்திருக்கின்றன. இதனால் தான் அவை உலகப் போக்கையே மாற்றக்கூடிய வல்லமை பெற்றதாகி நனி சிறந்து விளங்குகின்றன. சமூக வழக்கங்கள் மாறுதல் அடைந்து வருவது போல், படிக்கும் இயல்பும் நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே வருகிறது. பண்டைக் காலத்தில் ஒரு சிலரிடத்தில் மட்டுமே அறிவு தேங்கிக்கிடந்தது! பின்னர் குருகுலக் கல்வி மூலமாக ஒரு சிலர்க்கே அளவோடு அது தரப்பட்டது! அதன் பின்னர் திண்ணைப் பள்ளியிலும் உயர்நிலைப் பள்ளியிலும் மேல் உயர் நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் பல்லைக்கழகத்திலும் அறிவை விரும்புவர்க்கெல்லாம் வாரி வாரி வழங்கப்படுகிற நிலையைப் பார்க்கிறோம்.

18 ஆம் நூற்றாண்டில் மேனாட்டில் தேனீர் விடுதிகளில் மட்டும் இதழ் படிக்கும் பழக்கம் இருந்து வந்தது. 19 ஆம் நூற்றாண்டில் தொடர் வண்டிகளில் படிக்கக் கூடிய அளவில் அது வளர்ச்சியடைந்தது. இன்றோ, இதழ்கள் பெருகி, உந்து வண்டிகளிலும் பேருந்து வண்டிகளிலும் விமானங்களிலும் தொலைக்காட்சிகள் மூலமும் கணினி மூலமும் மாடமாளிகை வாசிகளிலிருந்து மண் குடிசைகளில் உறைபவர்கள் வரையிலும் சாலையிலிருந்து முட்டுச் சந்துகளிலும் கூட அவை படிக்கப்பட்டு வருகின்றன.

காலையில் எழுந்தவுடன் செய்தி இதழைப் படிக்க வேண்டும் என்ற ஆவல் மக்களிடையே பெருகி வருகின்றது. அதனைப் படிக்க முடியாது போய்விட்டால், அந்த நாளின் உலகப் போக்கை அறிய முடியாத ஓர் இருண்ட சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. கண்ணாடி போடும் பழக்கமுள்ளவருக்கு கண்ணாடி இல்லாவிட்டால் எப்படித் தொல்லையாக இருக்குமோ, அது போலத்தான் இதழைத் தொடர்ந்து படிப்பவர்க்கு அதைக் காணாவிட்டால் "விழி தொடர்ந்து இழந்தவனைப்" போன்ற ஏக்கம் ஏற்பட்டுவிடும்! அந்த அளவிற்கு இதழ்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இன்றியமையா இடம் பெற்றுள்ளன.

செய்தி இதழ்கள் விரித்து கிடக்கும் உலகத்தைச் சுருக்கிக் காட்டுகின்றன. தொலைவில் உள்ளவர்கள் நெருங்கிவரச் செய்கின்றன. ஒரு வேளைக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறக்கும் ஏழையையும் உண்ட உணவு உடம்புக்கு ஏற்றுக் கொள்ளவில்லையே எனக் கவலைப்படும் செல்வனையும் உலகக் கவனத்திற்கு ஒருங்கே கொண்டு வந்து விடுகின்றன. இவையும் இவை போன்ற எண்ணற்ற பணிகளையும் அவை உடன் செய்து காட்டுகின்றன. நேற்று வரை ஓர் இடத்தைப் பற்றியோ ஒருவரின் பெயரைப் பற்றியோ பெரும்பாலோருக்குத் தெரியாது இருந்திருக்கலாம். ஆனால், செய்தி இதழில் அது பற்றி அறிவிக்கப்பட்டதும், அந்த இடத்தையோ அல்லது அவ்வொருவரையோ குறித்துக் காட்டுத் தீ போல் செய்தி பரவி உலகம் முழுவதும் அறிந்து கொண்டு விடுகிறது.

மாதவி தனது காதலனான கோவலனுக்குத் தாழம் பூ மடலில் பிச்சுப் பூ முகை கொண்டு, சந்தனக் குழம்பில் தோய்த்துத் தனது உள்ளக் கிடக்கைகளை எழுதித் தெரிவித்தாள் என்று "சிலப்பதிகாரம்" தெரிவிக்கிறது. இதனால் தாழம் பூ மடல் எழுதும் சாதனமாக இருந்திருக்கிறது என்று தெரியவருகிறது. தாழம் பூ மடலைத் தாள் என்றும் சொல்வர். ஆகவே தான் இன்று நாம் எழுதப்பயன்படுத்தும் காகிதத்தைத் தாள் என்று கூறுகிறோம். "காகித்" என்ற உருதுச் சொல்லிலிருந்து "காகிதம்" என்ற சொல் வந்துள்ளது. பல இதழ்கள் கொண்டது மலர். இலைகளைப் "பத்திரம்" என்று வடமொழியில் கூறுவர். எனவே பத்திரிகையைத் (பத்திகா – பத்திரிகை இது பத்திரம்

என்ற வட சொல்லிலிருந்து வந்துள்ளது) தாளிகை என்றும் அழைக்கலாம். இதழ் என்றும் ஏடு என்றும் தாள் என்றும் கூறலாம். தினசரி (daily) வெளியாகும் இதழை "நாளிதழ்" அல்லது "நாளேடு" என்றும் வாரந்தோறும் (weekly) வெளியாகும் இதழைக் "கிழமை இதழ்," "வார இதழ்," "வார ஏடு" என்றும் 15 நாட்களுக்கு ஒரு முறை வெளியாகும் இதழைப் "பிறை இதழ்" (fortnightly), "மாத இரு முறை இதழ்" என்றும் மாதம் ஒரு முறை வெளியாகும் இதழை "மாத இதழ்" (monthly), "திங்கள் இதழ்," "மாசிகை" (magazine) என்றும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளியாகும் இதழை "அரையாண்டு இதழ்" (half yearly) என்றும் ஆண்டிற்கு ஒரு முறை வெளியாகும் இதழை "ஆண்டு இதழ்" (yearly), "ஆண்டு மலர்" என்றும் நாம் பாகுபடுத்திக் கொள்ளலாம். இதழின் நடையின் அமைப்பும் காலச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறும் ஆசிரியரின் கல்வி, கேள்வி, மொழி ஈடுபாடு இவற்றிற்கு ஏற்பவும் அமைக்கப்பட்டிருக்கும். தமிழ் இதழ்கள் முதலில் மாத இதழாகவும் மாத இருமுறை, மாத மும்முறை இதழ்களாகவும் வார இதழாகவும் நாளிதழாகவும் தோன்றியுள்ளன.

முற்காலத் தமிழ் இதழ்களின் பெயர்கள் - விவேகபாநு, வித்தியாபாநு என்றும் சுதேசபிமானி, நியாயபிமானி, தேசாபிமானி என்றும் ஜனாநுகூலன், விரஜாநுகூலன் என்றும் சுதேசமித்திரன், விரபஞ்சமித்திரன், வைசியமித்திரன் என்றும் விவேக சிந்தாமணி, விவேக போதினி என்றும் ஓர் இதழின் பெயரின் முன்னொட்டையோ பின்னொட்டையோ உடன் கொண்டு வெளி வந்துள்ளன. தமிழ் இதழின் தொடக்கம் 1830. தமிழ் இதழியல் வரலாற்றை 1) 1830 முதல் 1859 வரை 2) 1859 முதல் 1900 வரை 3) 1901லிருந்து 1942 வரை 4) 1943லிருந்து 1980 வரை என புரித்துக் கொள்ளலாம்.

இம்முதல் காலக்கட்டத்தில் தமிழ் இதழ்கள் அரும்பின. இரண்டாவது காலக்கட்டத்திற்குள் அவற்றுள் பல அரும்பாகி, போதாகி, மலராகி மணக்காது கருகிப் போயின! மூன்றாவது காலக்கட்டத்தில் சமய இதழ்களும் சமூக இதழ்களும் அரசியல் இதழ்களும் புற்றீசல் போல் பெருகின அவற்றில் ஒரு சிலவற்றைத் தவிர ஏனையவை ஓரிரு ஆண்டுகளுக்குள்ளேயே மறைந்து போயின.

இந்தியாவில் இதழ்களை முதலில் நடத்தியவர்கள் ஆங்கிலேயர்களாக இருந்ததால் இவர்கள் வெள்ளையதிகாரிகளின் அட்டூழியங்களையும் ஊழல்களையும் வெளிப்படுத்துவதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். 1857 ஆண்டு கொண்டு வரப்பட்ட 14ஆவது பிரிவு (அச்சு அவசர சட்டம்) சட்டமானது இதழ்களை உரிமையோடு நடத்த முடியாமல் ஏற்பட்டன. இதன் விளைவாக ஒவ்வொரு சமூகமும் தம்முன்னோர் பெருமையை அறிந்து விழித்தெழுந்தன! தமக்குள் காணப்பட்ட சில்லறை வேற்றுமைகளை ஒதுக்கி, மேலான நோக்கத்திற்காக ஒற்றுமை கொண்டன. தம் தாய் மொழி மற்ற மொழிகளைப் போல பல துறைகளிலும் சிறந்து விளங்கப் பாடுபட்டன. தம் தாயகம் பிறர்க்கு எவ்வகையிலும் அடிமைப்பட்டுக்கிடக்காது, உரிமையோடு வாழ வேண்டும் என்று சிந்திக்கத் தொடங்கின. தம் பலம் பெருமையோடு உலகம் முன்னேறுதலுக்கு ஏற்ப புத்தம் புதிய துறைகளில் ஏற்றம் பெறத் துடிதுடித்தன.

இதற்கு வேண்டிய வகையிலெல்லாம் இதழாசிரியர்கள் சிந்தித்து சிறக்க எழுதினார்கள். தமிழ் இதழ்கள் தோன்றத் தோன்ற காலத்திற்கு ஏற்ற ஆசிரியர்கள் நமக்குக் கிடைத்துள்ளனர்.

தமிழ் இதழியல் உலகில், தொடக்கத்தில் பலதுறை அறிவு மிக்கவர்கள் ஆசிரியர்களாயிருந்தனர். அடுத்து தமிழ் மரபு அறிந்தவர்கள் ஆசிரியர்களாயினர். பின்னர் அரசியல் செல்வாக்குள்ளவர் ஆசிரியர்களாக அமர்ந்தனர். அதன் பின்னர் அரசியல் அறிவு மிக்கவர்களும் மொழியறிவும் உலகியலறிவும் நிரம்பியவர்கள் ஆசிரியர்களாக வந்தனர்.

சாதி, சமய, சமூக உணர்வில் ஆழ்ந்து கிடந்தவர்களையெல்லாம் "தமிழ் இதழ் உலகம்" தட்டியெழுப்பி, அவர்களைக் குறிப்பிட்ட சிறு வட்டத்துக்குள்ளே சுழன்று வருவதைத் தடுத்து நிறுத்தி, உலகளாவிய பெரிய வட்டத்திற்குள் அவர்களை அடியெடுத்து வைக்கும்படி செய்துள்ளது. மேலும், நிறைய படித்தவர்களே எதையும் எழுத முடியும், எப்படியும் எழுத முடியும் என்ற நிலையை மாற்றி அறிவு வேட்கை கொண்டு ஆர்வ மிகுதியினால் உந்தப்பட்டு எழுதத் துடிக்கும் பலருக்கும் வாய்ப்புக் கொடுத்து, அது எழுத்துத் துறையில் ஈடுபடச் செய்துள்ளது. தமிழ் மக்கள் அனைவரும் தமிழ் தெரிந்த அனைவரும் உணர்ந்து கொள்ளும் பொது நடைவளர வழி வகுத்துக் கொடுத்துள்ளது.

சிவஞானவதி கேசவதாஸ்
தமிழ் இளங்கலை

வள்ளுவர்

# கனடாவில் தமிழ்க் கல்வி

கனடா நாட்டில் பல்லின மக்கள் வாழ்வதற்கு அநுமதி அளிக்கப்பட்டு இருப்பதால் ஒவ்வொரு நாட்டு மக்களும் தத்தம் மொழியை வளர்ப்பதற்கு உழைத்து வரும் வரிசையில் நம் மொழியாகிய தமிழையும் பாலர் வகுப்பு முதல், உயர்தர வகுப்பு வரை பல மாணவர்கள் கற்று வருகின்றார்கள். உயர்தர வகுப்பு முடிவில் பெறும் மதிப்பெண்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதால் அது பல்கலைக் கழகம் செல்வதற்கு உதவியாக உள்ளது.

இப்படி மாணவர்கள் தமிழை விரும்பிப் படிப்பதால் கனடாவில் பிறந்த பிள்ளைகள் கூட தமிழை நன்றாகப் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்துள்ளார்கள். இது மாத்திரம் அல்லாது பல அரச நிறுவனங்களிலும் தமிழில் சில தேர்வுகள் எழுதுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதனால் தமிழ் மொழி அழிந்து விடாது வாழும் என்பது உறுதி.

எமது சொந்த நாட்டில் தமிழ்க் கல்வியும் எம் பண்பாடும் கேள்விக் குறியாக இருக்கும் இந்நிலையில் இக் கனடா நாட்டில் பல பாடசாலைகளில் தமிழ்க் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் அதற்கு வழி அமைத்துத் தந்த எம் கனடா நாட்டிற்கும் நாம் நன்றி தெரிவிக்க வேண்டும்.

இந்நிலை எமது சந்ததியுடன் முடிந்து விடாமல் தொடர வேண்டும் என்பது எனது விருப்பம்.

மாணவர்: அனுகேஷ்
ஆசிரியர்: மீரா இராசையா

# ஆயிரம் வினாக்களும் ஆயிரம் ஆண்டுகளும்

தஞ்சைக் கோயில் கட்டி முடிந்து ஆயிரம் ஆண்டுகளாகி விட்டன. பண்டைத் தமிழரின் கலை வண்ணம் பல வினாக்களை இன்றைய தமிழரிடம் ஏற்படுத்தி இருக்கின்றது.

இந்தக் கோயில் கட்டுமானத்தில் சுடு செங்கல் இல்லை. மரம் இல்லை. சொறிகல் என்ற பூராங்கல் இல்லை. மொத்தமும் கருங்கல். நீலம் ஓடிய சிவப்புப் படர்ந்த கருங்கல்.

இரண்டு கோபுரங்கள் தாண்டி விமானம் முழுவதும் கண்களில் ஏந்திய அந்தக் கோவிலின் நீளமும் அகலமும் உயரமும் பார்க்கும் போது வெறும் வண்டல் மண் நிறைந்த அந்தப் பகுதிக்கு இத்தனை கற்கள் எங்கிருந்து வந்தன? எதில் ஏற்றி இறக்கினர்? எப்படி இழுத்து வந்தனர்? எத்தனை பேர்? எத்தனை நாள்? எவர் திட்டம்? என்ன கணக்கு?

இந்தக் கருங்கற்களைச் செதுக்க என்ன வகை உளிகள் பயன்பட்டன? என்ன வகை இரும்பு? எது நெம்பி தூக்கியது? கயிறு உண்டா? கம்பிகள் எத்தனை? இரும்பு உண்டெனில் பழுக்கக் காய்ச்சி உரமேற்றும் உத்தி தெரிந்திருக்க வேண்டுமே? இரும்பைச் சூடாக்கி எதில் முக்கினர்? தண்ணீரிலா? எண்ணையிலா? நெருப்பில் கனிந்த இரும்பை எண்ணெயில் முக்கும் கலை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உண்டா? எத்தனை பேருக்கு, எவ்வளவு சாப்பாடு? அரிசி, காய்கறி, சமையல் பாத்திரம் எங்கிருந்து எடுத்தனர்? படுத்துறங்க எங்கு வசதி? மறைவு வசதிகளுக்கு நீர்த்துறை எது? யாராலும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாதுள்ளது. இத்தனை சிறப்பு மிக்க தஞ்சைப் பெருங்கோயில் தமிழரின் பண்பாட்டு உச்சமாக உயர்ந்து நிற்கின்றது.

மாணவர்: பி. டிலானி
ஆசிரியர்: மீரா இராசையா

வள்ளுவம்

# நவராத்திரி

நவராத்திரி நோன்பு புரட்டாதித் திங்களில் சூரியன் கன்னி இராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் சக்தியை குறித்து நோற்கப்படும். இது தட்சணாயண காலமாகும். இக்காலம் தேவர்களுக்கு இராக்காலமாகும். உத்தராயணத்தில் வசந்த நவராத்திரியும் தட்சணாயன காலத்தில் சாரதா நவராத்திரியும் தேவியைப் பூசிக்கச் சிறந்த காலமாகும். இவை இரண்டிலும் புரட்டாதி திங்களில் நோற்கப்படும் சாரதா நவராத்திரியையே நாம் எல்லோரும் கைக் கொள்ளுகின்றோம்.

நவராத்திரி பூசை புரட்டாதித் திங்களில் அமாவாசை கழிந்த பூர்வபட்ச பிரதமை திதியில் ஆரம்பித்து நவமி முடியச் செய்ய வேண்டும் என்று காரணாகமம் கூறுகின்றது. ஆகவே புரட்டாதித் திங்களில் வளர்பிறைப் பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாளும் கைக்கொள்ளப்படும் நோன்பு சாரதா நவராத்திரி நோன்பாகும்.

நவராத்திரியில் முதல் மூன்று நாளும் இச்சா சக்தியின் தோற்றமான துர்க்கையின் ஆட்சிக் காலம். இதில் இறைவன் உலகத்தை வாழ்விக்க விரும்புகின்றான்.

நடுவில் உள்ள மூன்று நாட்களும் ஞானசக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகங்களைக் கொடுக்கும் முறையை அறிவிகின்றான்.

இறுதி மூன்று நாட்களும் கிரியா சக்தியின் தோற்றமான இலக்குமியின் ஆட்சிக்காலம். இதில் இறைவன் முன் அறிந்தவாறு அருள் வழங்குகின்றான் என்பது சிவாகமத்தின் உள்ளுறையாகும்.

ஆலயங்களிலும் இல்லங்களிலும் பிம்பம், கும்பம் இவைகளால் ஒன்பது நாட்களிலும் வழிபடுபவர்கள், நவராத்திரிபூசைக்குத் தேவையான பொருட்களை அமாவாசையன்றே சேகரித்துக் கொண்டு, அன்று ஒரு வேளை உணவு உண்டு, பிரதமையில் பூசையைத் தொடங்க வேண்டும்.

நவராத்தியில் துர்க்காதேவி மகிசாசுரனுடன் எட்டு நாட்கள் போர் செய்து ஒன்பதாம் நாள் போரின்போது மகிசாசுரனை கொன்றாள் என்றும் இது நவமியில் நிகழ்ந்ததாகவும் மறுநாள் தசமியில் தேவர்கள் அந்த வெற்றியை ஆயுத பூசை செய்து கொண்டாடியபடியால், விசயதசமி என்றும் வழங்கலாயிற்று என்று சொல்வது உண்டு.

ஆலயங்களில் விசயதசமி அன்று வன்னி மரத்துடன் கூடிய வாழை வெட்டுவது வழமை. பண்டாசுரனுடன் தேவி போர் செய்து அவனை அழிக்கமுடியாமல் சிவபிரானை வழிபட்டு விசயதசமியில் போர் செய்யும் போது அவன் வன்னி மரத்தில் ஒளிந்தான். தேவி வன்னி மரத்தை சங்கரித்து அசுரனைச் சங்காரம் செய்தான் என்பர். இதுவே நாளடைவில் கன்னிவாழை வெட்டு என்று மருவி வழங்கலாயிற்று.

ஒன்பதாவது நாளாகிய மகாநவமி அன்று பட்டினியாய் இருந்து மறுநாள் விசயதசமியன்று காலை ஒன்பது மணிக்குமுன் பாரணை செய்தல் வேண்டும். இயலாதவர்கள் முதல் எட்டு நாளும் பகல் ஒருவேளை உணவருந்தி ஒன்பதாம் நாள் பால், பழம் மட்டும் உட்கொள்ளலாம்.

நவராத்திரியில் தேவியைத் வணங்கி வழிபடுவோர்க்கு, தேவியானவள் சகல நலங்களையும் நல்குவாள் என்பது மட்டுமல்லாமல் வீடுபேறாகி முக்தியையும் நல்குவள் என்று காரணாகமம் கூறுவதாகச் சொல்லப்படுகின்றது.

மாணவர்: விபுசன் சிவஞானம்
ஆசிரியர்: சுகந்தினி பரேந்திரா

வள்ளுவர்

# பண்டைத் தமிழரின் நம்பிக்கைகள்

ஆறறிவுடைய மனித இனம் சிந்தித்துப் படைத்த படைப்புகளில் மொழியே சிறந்த கருவி எனப் போற்றப்படுகிறது. சிந்தித்து உருவாக்கிய மொழி சிறந்த சிந்தனைக்கும் வித்திட்டது. ஒரு நிகழ்ச்சி நடக்கும்போது அந்த நிகழ்ச்சி ஏன்? எவ்வாறு? எதனால் நடக்கிறது? இதன் விளைவு எத்தகையது? என ஆராய முனைந்த மக்களால் கண்டுபிடிக்கப்பட்ட விடைகளே நம்பிக்கைகளாக அமைந்தன எனக் கூறலாம். அறிவில் மேலோங்கி வாழ்ந்த பண்டைத் தமிழர் தம்மைச் சுற்றி நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நன்றாக ஊன்றிக் கவனித்தனர். அதன் விளைவாக அவர்களிடம் பல நம்பிக்கைகள் பிறந்தன. அவற்றுள் சிலவற்றினை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

### முழுத்தம் பார்த்தல்:

தாம் செய்யத் தொடங்கும் செயல்கள் வெற்றியோடு முடிய வேண்டும் என எண்ணிய பண்டைத் தமிழர் நல்ல நாள், நல்ல நேரம் கணித்து அச்செயல்களைச் செய்யத் தொடங்குவர். அதற்கெனக் கணியர் என்போர் இருந்தனர். போர் தொடங்குவதற்கான நல்ல நாளை அரண்மனைக் கணியர் கணித்ததனை சங்க நூல்களும் சிலப்பதிகாரமும் கூறும். முழுத்தம் என்ற சொல் இன்று முகூர்த்தம் என்றும் வழக்கத்தில் உள்ளது. திருமணம் திங்களும் உரோகினியும் கூடிய நல்ல நாளில் நடத்தப்பட்டது.

### சகுனம் பார்த்தல்:

சில வகையான பறவைகள், விலங்குகள் போன்றவற்றின் காட்சியும், ஒலியும் நன்மை தீமைகளை அறிவிக்கும் என நம்பினர்.

### குயிலின் கூவல் ஒலி:

குயில் கூவுவது நல்ல சகுனம். பொருள் தேட, போர் புரிய, நாடு காக்க, கல்வி கற்க என உறவைப் பிரிந்து சென்ற தலைவன் வீடு திரும்புவான் என முன்னறிவிக்கும் ஒலியே அது என நம்பினர்.

### காக்கையின் கரையும் ஒலி:

காகம் கரைந்தால் விருந்தினர் வருகை உண்டு என நம்பினர். "விருந்துவரக் கரைந்த காக்கை" என்று ஒரு சங்கப் புலவர் பாடியதனால் அவரைக் காக்கை பாடினியார் என்று அழைக்கலாயினர்.

### கரிக்குருவியின் கீச்சிடும் ஒலி:

கரிக்குருவியின் கீச்சிடும் ஒலி அழிவுக்கு அறிகுறி என்று நம்பினர்.

### ஆந்தையின் அலறல் ஒலி:

ஆந்தை அலறினால் தீமை நிகழும் என நம்பினர்.

### பல்லியின் ஒலி:

ஒரு செயலைத் தொடங்கும்போது அல்லது எதையாவது நினைக்கும் போது பல்லி ஒலி எழுப்பினால் அதனைப் "பல்லி சொல்லுகிறது" என்பர். யானை மீது சென்ற மன்னன் பல்லி சொல் கேட்டுப் பயணத்தைச் சிறிது நேரம் நிறுத்திப் பின் தொடர்ந்ததாக அகநானூறு கூறுகிறது. பிரிந்து சென்ற தலைவனது வருகையை வீட்டில் எதிர்பார்க்கும் தலைவி பல்லியின் குரலைக் கேட்கும் போதெல்லாம் "நல்ல பலனைக் கூறுக" என வேண்டுவதாச் சங்கப் பாடல் கூறுகிறது.

"மையல் கொண்ட மதனழி இருக்கையள்
பகுவாய் பல்லி படுதொறும் பரவி
நல்ல கூறுகென நடுங்கி" (அகம்)

### கண்ணும் தோளும் துடித்தல்:

பெண்களின் இடதுகண்ணும் இடது தோளும் துடிப்பது நல்ல சகுனமெனவும், ஆண்களின் வலதுகண்ணும் வலது தோளும் துடிப்பது நல்ல சகுணம் எனவும் நம்பினர்.

### உன்னமரம் தழைத்தலும் வாடுதலும்:

உன்னமரம் என்கிற ஒருவகை மரம், தழைப்பின் வெற்றி என்றும் வாடி நிற்பின் தோல்வி என்றும் நம்பினர்.

வளர்நிலா

**அறம்:**

நல்வாழ்விற்கு அடிப்படையானது அறம் என நம்பினர். அறம் செய்ய அனைவரையும் தூண்டினர்.

**ஊழ்வினை:**

உயிர்கள் அனைத்தும் செய்த வினைக்கு ஏற்ப விதியின் வழியே செல்லும் என நம்பினர்.

**மறுபிறப்பு:**

மறுபிறப்பு உண்டெனப் பண்டைத் தமிழர் நம்பினர்.

“சாதல் அஞ்சேன் அஞ்சுவென் சாதல்
பிறப்புப் பிறிதாகுவ தாயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே”

என்ற பாடலில் இருந்து இதனை அறியலாம்.

போரின் போது முரசுப்பலி உணவு படைப்பர். அவ்வுணவினை பருந்தும் காகமும் உண்டால் வெற்றி கிடைக்கும் என நம்பினர்

உப்பு விளைவித்து அதனை விற்போர் உமணர் எனச் சங்க காலத்தில் அழைக்கப்பட்டனர். அவர்கள் தமது தொழிலைத் தொடங்கு முன் புட்சகுனம் (புள் என்பது பறவை) பார்த்தனர் என அகநானூறு கூறுகிறது.

இவ்வாறாகப் பண்டைத் தமிழரது நம்பிக்கைகள் அமைந்திருந்தன.

மாணவர்: சங்கவை விமலநாதன்
ஆசிரியர்: மீரா இராசையா

## வானொலியின் பயன்பாடுகள்



வானொலி ஒரு உலக ஊடகம் ஆகும். ஒவ்வொரு நாட்டு மக்களும் அந்தந்த நாட்டு மொழிகளிலே கேட்டு மகிழலாம். இது ஒரு தொடர்புக் கருவியாகும்.

வானொலியால் பல்வேறு நன்மைகளை மக்கள் பெறுகின்றனர். இதன் மூலம் உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகளை அறியக் கூடியதாக இருக்கும். வானிலை அறிக்கைகளையும் கேட்கலாம்.

இது ஒரு பொழுது போக்குக் கருவியாகவும் உள்ளது. சிறியோர், பெரியோர் என அனைவருக்கும் இது உதவியாக உள்ளது. போட்டி நிகழ்ச்சிகளிலோ அல்லது வேறு நிகழ்ச்சிகளிலோ பங்கு பற்றித் தங்கள் தங்கள் கருத்துக்களை சொல்வதற்கு மிகவும் உதவுகின்றது.


மக்களுக்குச் சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு உதவியாக உள்ளது. பொது அறிவை இதன் மூலம் வளர்க்கக் கூடியதாக உள்ளது. விளையாட்டு நிகழ்ச்சிகள், பாடல்கள் கேட்டல், விளம்பரங்கள், நாடகங்கள், போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளையும் கேட்கலாம்.

வானொலி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி மக்கள் தங்களது பேச்சு ஆற்றலையும் வளர்க்கக் கூடியதாக உள்ளது. விழிப்புணர்ச்சி ஏற்படுத்தக் கூடிய கருவியாகவும் வானொலி இருக்கின்றது. மக்களுக்குச் சிறந்த கருத்துகளை உட்புகுத்துவதன் மூலம் அவர்களுக்குப் பல நன்மைகள் உள்ளன. அலைவரிசையில் வரும் வானொலியினால் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

மாணவர்: சோபிகா வைரவநாதன்
ஆசிரியர்: மீரா இராசையா


தமிழ் பண்பாடு

## பருவ காலங்கள்



பருவகாலம் என்பது காலநிலை, சூழியல் மற்றும் பகலின் மணித்தியாலங்கள் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றத்தால் குறிப்பிடப்படுகின்ற ஆண்டின் பிரிவு ஆகும். சூரியனைச் சுற்றிவரும் பூமியின் ஆண்டுச் சுழற்சி மற்றும் சுழற்சியின் சமதளத்திற்கு தொடர்புடைய பூமி அச்சின் சாய்வு ஆகியவற்றினால் பருவகாலம் ஏற்படுகிறது. மிதமான தட்ப வெப்பமுள்ள துருவப் பிரதேசங்களில் பூமியின் மேற்பரப்பை எட்டும் சூரிய ஒளியின் அடர்த்தியில் ஏற்படும் மாற்றம், விலங்குகள் செயலற்றிருத்தல் அல்லது இடம்பெயர்தலுக்கு காரணமாக அமைவது மற்றும் தாவரங்கள் வளர்ச்சியை நிறுத்திக்கொள்வது ஆகியவற்றால் பருவங்கள் குறிப்பிடப்படுகின்றன.

மாணவர்: அருஜன் சோதிலிங்கம்
ஆசிரியர்: தியாகேசுவரி மகேந்திரன்

## எனது எதிர்காலக் கனவு

எனது பெயர் பிரணவன். எனக்கு நிறையக் கனவுகள் இருக்கின்றன. ஆனால் எனக்கு ஒரு பெரிய இலட்சியம் இருக்கிறது. வாழ்க்கையில் படித்து முன்னுக்கு வரவேண்டும். படித்துச் சாதித்துக் காட்டவேண்டும். எனது சமுதாயத்திற்கு ஒரு முன்மாதிரியாக வாழ வேண்டும். எனது முன்னேற்றத்தைக் கண்டு எனது பெற்றோர் மகிழ்ச்சி அடைவர். மற்றவர் மரியாதை தருவர். என்னால் முடிந்தளவு மற்றவர்க்கு உதவி செய்வேன்.

ஒரு சிறந்த தலைமை ஆசிரியராக வரவேண்டும் என்பதே எனது முதன்மையான கனவாகும். ஆசிரியர் தொழில் தூய்மையானது. வணங்கும் தெய்வங்களாக ஆசிரியர் நடமாடுகின்றனர். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று முன்னோர் சொல்வார்கள். தெய்வத்திற்கு முன் குருவை வைத்துச் சொல்லியுள்ளார்கள். மற்றவருக்குப் பயன்தரும் பதவியை உடையவர் குருவான ஆசிரியர் பதவியாகும்.

என்னால் சிறந்த மாணாக்கர் உருவாகுவதால் நான் பெருமைப்படுவதோடு என் பெற்றோர் மற்றும் சமூகத்திற்கும் பெருமையாகும். வாழ்க்கையை வாழ்ந்தோம் என்றில்லாமல் நம் அறிவையும் ஆற்றலையும் அடுத்தவர்களுக்குப் பயன்படுத்துவதில்தான் ஒரு மனிதன் முழுமையடைய முடியும். அதனால்தான் ஆசிரியர் தொழிலை என் எதிர்கால இலட்சியமாய் எடுத்துக் கொண்டு நன்றாகப் படிக்கின்றேன். என் இலட்சியத்தை அடைவேன்.

மாணவர்: பிரணவன் சிவகுமார்
ஆசிரியர்: சிவாநந்தன் சபாரத்தினம்

வள்ளுவர்

# கனடாவில் வாழும் தமிழ் முதியோரின் நிலை

மனித வாழ்க்கைக்கு மிகச் சிறந்த நாடு நாங்கள் வாழும் இப் புண்ணிய பூமி கனடா ஆகும்.

எமது தாய்த் தமிழ் ஈழ நாட்டின் சூழ்நிலை காரணமாகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்தார்கள். பிள்ளைகள் நாட்டின் போர் அழிவுகளை உணர்ந்தும், கனடா நாட்டின் காலநிலையையும் கடும் குளிரையும் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது காலை, மாலை, இரவு என இரண்டு வேலைகள் செய்தார்கள். தங்களையும் வருத்தி மிகவும் துன்பப்பட்டு, தங்களது வாழ்க்கைச் செலவையும் பார்த்து, பெற்றோரையும் கனடாவுக்கு அழைத்தார்கள்.

வந்தாரை வாழ வைக்கும் கனடிய பூமிக்கு முதியவர்கள் காலடி எடுத்து வைத்திருக்கிறார்கள்.

கனடா வந்த முதியவர்கள் தங்கள் பிள்ளைகளுக்காக அதிகாலை, காலை, நண் பகல், மாலை, இரவு என எந்த நேரம் என்று பார்க்காமலும் கடும் குளிர், வெய்யில் எனப் பார்க்காமலும் பிள்ளைகளின் மனம் நோகாது, தங்களை வருத்திப் பிள்ளைகளுக்காகப் பாடுபடுகின்றார்கள். மெழுகுவர்த்தி தன்னை உருக்கிப் பிறருக்கு வெளிச்சம் கொடுப்பது போல், கனடாவில் முதியவர்கள் வாழ்ந்து பிள்ளைகளிடம் மிகுந்த அனுசரனையாக இருக்கிறார்கள்.

தமிழ் முதியோர்கள் பிள்ளைகளுடனும் பேரப் பிள்ளைகளுடனும் அன்றாட வாழ்நாளில் தேவையானவற்றை அருகில் இருந்து பார்த்துச் செய்கிறார்கள்.

பேரப்பிள்ளைகளை பராமரிப்பது, குழந்தைகளுக்கு உணவு ஊட்டுதல், பாடம் சொல்லிக் கொடுப்பது முதலியவற்றைச் செய்கிறார்கள். இம் முதியோர்கள் ஏணிப்படி போல இருந்து பிள்ளைகளை மேல் நோக்கி செல்வதை இட்டுப் பெருமிதம் கொள்கின்றார்கள். இதனால் வேற்றின கனடா வாழ் மக்கள் கனடா வாழ் தமிழ் முதியோரின் பெருமைகளையும், கூட்டுக் குடும்பத்தையும் மிக மிகப் பெருமையாக பேசி வருகிறார்கள்.

இவை அனைத்தும் ஒரு புறம் இருக்க மறு புறத்தில் கனடா வாழ் தமிழ் முதியவர்கள் அனைத்தும் சுதந்திரம் என நினைத்து தனிமையான வாழ்க்கை வாழ ஆரம்பிக்கிறார்கள். பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் தங்களுக்கு தொல்லை என நினைத்து தனி வீட்டில் அரசாங்க உதவி பெற்று வாழ ஆரம்பிக்கிறார்கள். இதனால் மன நிம்மதியை இழக்கிறார்கள். மனநோய்க்கு உள்ளாகிறார்கள். காலை, மாலை, இரவு என பல வர்ண மாத்திரைகள் உட்கொள்ளும் நிலைமைக்கு உள்ளாகின்றார்கள்.

முதியவர்கள் தங்கள் இடத்தில் நாடி வருபவர்களிடத்தில் பொய்யானவற்றை கூறி, தங்கள் பிள்ளைகள் தங்களுக்கு கொடுமை விளைவித்தார்கள் எனப் புலம்பி, தங்களையும், தங்கள் பிள்ளைகளையும் கீழ்த் தரமான நிலமைக்கு பிறர் நினைக்கும் வண்ணம் தங்கள் வாயாலே கூறுகின்றார்கள்.

பிள்ளைகளின் வளர்ச்சிக்கு ஒத்தாசையாக இருக்க வேண்டிய முதியவர்கள் பிறர் போல் நின்று வேடிக்கை பார்க்கின்றார்கள். தான் என்ற ஆணவமும் பிடித்து கனடா வாழ் முதியவர்கள் அலைகிறார்கள். தங்களை அறியாமலே சில முதியவர்கள் பல பேரிடம் புலம்புகிறார்கள்.

வேறு சில கனடா வாழ் முதியோரின் பிள்ளைகளுக்கு பாடம் புகட்டுகிறார்கள் என நினைத்துக் கொண்டு மிகவும் தப்பான வழிகளில் பிறரின் ஆலோசனனையைக் கேட்டு நடக்க துணிகிறார்கள். பல வழிகளில் அரசாங்க உதவிகளை பெற்று கனடா நாட்டில் வாழும் தங்கள் பிள்ளைகளை எதையும் செய்யமுடியாதபடி செய்கிறார்கள். பிள்ளைகளுக்கு அனுசரணையாக இருக்க வேண்டிய முதியவர்கள் அவர்களுக்கு எதிராக நின்று பிள்ளைகளின் நிம்மதியை இழக்க செய்கின்றார்கள்.

கனடாவில் வாழும் தமிழ் முதியர்கள் தான் என்ற அகங்காரத்தையும் பிடிவாதத்தையும் விட்டு விட்டு பிள்ளைகளுடனும் பேரப் பிள்ளைகளுடனும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் மன நோய் இன்றி சமமாக வாழ்ந்து இவ் வையத்தில் பெரு வாழ்வு வாழலாம்.

மாணவர்: பிரவாகினி பிரதாப் அசோக்குமார்
ஆசிரியர்: பூங்கொடி அருந்தவநாதன்

வளர்தமிழ்



# "உயிரினும் மேல் எங்கள் தாய்மொழி!"

"தாய் மொழியே! தாய் மொழியே! என் இனிய தமிழ்மொழியே! தமிழர்கள் மறந்தாரோ தாயே உன்னை?" உலகில் பல மொழிகள் உள்ளன. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்!" என்றார் பாரதியார். மூத்த மொழி எங்கள் தமிழ் மொழி. இது மூவேந்தர் காத்த மொழி. தமிழ் ஒரு இனிமையான மொழி. இன்பம் தரும் மொழி. சொல்லச் சொல்ல இனிக்கும் மொழி. அதனால் தான் அதனை "அமுது" என்றும் "தேன் தமிழ்" என்றும் அழைப்பர்.

தமிழ் தமிழர்களின் தாய்மொழி. தமிழ் பேசும் தமிழர்கள் உலகில் பல நாடுகளில் உள்ளனர். எனினும் இந்தியாவில் தமிழகத்திலும் இலங்கையில் தமிழீழத்திலுமே மிகவும் அதிகமாக உள்ளனர்.

தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பிரிக்கப்படுகின்றது. இதனால் தமிழை 'முத்தமிழ்' என்பர். தீஞ்சுவை கொண்டதனால் அதனை 'தீந்தமிழ்' என்றும், பசுமையானது என்பதனால் "பைந்தமிழ்" என்றும், இளமையானது என்பதனால் 'இளந்தமிழ்' என்றும், 'சீரிளமைத்தமிழ்' என்றும், 'கன்னித்தமிழ்' என்றும் அழைப்பர். செம்மையான மொழி என்பதால் 'செந்தமிழ்' என்பர். உண்மையைச் சொல்வதானால் தமிழைப் போற்ற தமிழிலேயே வார்த்தைகள் போதாது!

தமிழ் ஒரு தொன்மையான மொழி. 'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கும் முன் தோன்றிய' மூத்த மொழி. இதனால் தமிழை 'மூதமிழ்' என்பர். பழைமையான எங்கள் தமிழில் பழைமையான நூல்கள் பல உள்ளன. தொல்காப்பியம், அகநானூறு, புறநானூறு, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நல்வழி, மூதுரை, மலைபடுகடாம் போன்ற பல சிறப்பான நூல்கள் உள்ளன.

ஐம்பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி என்பன தமிழ்த்தாயை அணிகலன்களாக அலங்கரிக்கின்றன. பொய்யாமொழிப் புலவர் என வள்ளுவரைப் போற்றுவர். அவர் எழுதிய திருக்குறளை உலகப் பொதுமறையாக உலகமக்கள் போற்றுகின்றனர். தமிழ் நூல்கள் உலகிற்கே எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. இந்நூல்கள் உலக மக்களுக்கு நல்ல கருத்துகளைச் சொல்கின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஏட்டில் எழுத்தாணியால் எழுதப்பட்டாலும் எக்காலத்திற்கும் பயனுள்ளவை இந்நூல்கள்.

தமிழ் அழகிய பண்பாட்டுச் சிறப்புடைய மொழி. பல்லின மக்களும் விரும்பும் மொழி. தமிழருடைய பண்பாடு மிகவும் அழகானது. அன்பையும் அறத்தையும் கற்பிப்பது. தமிழ்மொழி தமிழரின் அடையாளம். பல்லின மக்கள் வாழும் நாடு கனடா. இங்கு தமிழர்கள் தமிழின் பெயராலேயே அடையாளம் காணப்படுகின்றார்கள், மதிக்கப்படுகின்றார்கள்.

தமிழில் இல்லாத சொற்களே இல்லை. எனவே வளமான எங்கள் தமிழிருக்க நாங்கள் வேறு மொழிகள் பேசலாமா? கனி இருக்கக் காயை நாம் விரும்பலாமா? தமிழிருக்க, அந்நிய மொழியை நாம் ஏன் விரும்பவேண்டும்? நாட வேண்டும்? அந்நிய மொழி மோகம் எமக்கு வேண்டவே வேண்டாம்! தமிழர் நாம் வீட்டில் ஆங்கிலம் பேசலாமா? தமிழரோடு தமிழர் தமிழில் மட்டுமே பேச வேண்டும். வேற்றுமொழி தன்னில் பல வித்தை கற்றாலும் வீட்டுமொழி தமிழதென்று விரும்பிப் படிக்க வேண்டும். எனின் தான் தமிழ் வாழும்!

எங்கள் அப்பா அம்மாமார் தம் பிள்ளைகளுக்கு தமிழ் சொல்லிக் கொடுக்க தமிழ் பள்ளிகளுக்கு ஓடியோடி அனுப்புகின்றமை நல்ல விடயம் தான். ஆனால் வீட்டில் தம் பிள்ளைகளோடு ஆங்கிலத்தில் கதைத்து விட்டு "பிள்ளைகள் தமிழ் கதைக்கிறார்கள் இல்லை, படிக்கின்றார்கள் இல்லை" என்று எம்மைக் குறை கூறலாமா? இந்தக் கவலை சரியா? பெற்றோர் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் கதைத்தால் பிள்ளைகள் ஒருபோதும் தமிழில் கதைக்க மாட்டார்கள். தமிழில் கதைக்க முயற்சி செய்யவும் மாட்டார்கள். எங்கள் தமிழ் அழியாமல் நாம் தமிழைக் காக்க வேண்டுமானால் முதலில் நாம் வீட்டில் தமிழில் பேச வேண்டும்!

தமிழ்-தமிழர் உறவு பிரியக் கூடாதது. தமிழில்லையேல் தமிழரில்லை! தமிழரில்லையேல் தமிழில்லை! இவ்விரண்டையும் எவரும் பிரிக்க முடியாது. இவையிரண்டும் உயிரும் உடலும் போன்றவை. ஒன்றைப் பிரிந்தால் மற்றது வாழாது! தமிழ் எங்கள் மூச்சு மட்டுமல்ல! தமிழ் எங்கள் உயிருக்கும் மேல்! எங்கள் எல்லோருக்கும் எங்கள்

வள்ளுவர்

## நீர் வாழ்வன

பூமியின் பெரும்பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. நீரை நன்னீர், உவர்நீர் எனப் பிரிக்கலாம். கடல்நீரை உவர் நீர் என அழைப்பர். கடலில் பல வகையான உயிரினங்கள் வாழ்கின்றன. மீன், நண்டு, இறால், மட்டி, சுறா, திமிங்கிலம், கடற்பன்றி, ஆமை, கணவாய், கடல் அட்டை போன்றன கடல்வாழ் உயிரினங்கள் ஆகும். நண்டு, இறால், மட்டி போன்றவை ஓட்டுயிர்கள் ஆகும். குடல்நாய், ஆமை போன்றன நீரிலும் நிலத்திலும் வாழக் கூடியன. நிலத்தில் வாழும் சில பறவைகள் நீர் நிலைகளிலும் தங்கியிருக்கக் கூடியவை. நீர்க்காகம், நாரை, கொக்கு, தாரா போன்றவை அவையாகும்.

நீர் வாழ்வன நீரில் இருக்கும் தாவரங்களையும் மற்ற உயிரினங்களையும் உணவாக உட்கொண்டு உயிர் வாழ்கின்றன. மீன் நீரில் குஞ்சு பொரித்து வாழும். ஆமை போன்றன முட்டை இட்டுக் குஞ்சு பொரித்து வாழும். இவ்வாறு இயற்கையின் கொடையான நீரில் பல உயினங்கள் வாழ்கின்றன.

மாணவர்: அனோஜன் பாலேந்திரா
ஆசிரியர்: சிவாநந்தன் சபாரத்தினம்

## கார்த்திகை விளக்கீடு

கார்த்திகை விளக்கீடு கார்த்திகைத் திங்களில் வரும் பவுர்ணமியில் கொண்டாடப்படும். இது மிகவும் சிறந்த பண்டிகையாகக் கொண்டாடப்படும். சைவ சமயத்தின் சிறப்பான கொண்டாட்டங்களில் கார்த்திகை விளக்கீடும் ஒன்றாகும். இத்திருநாளில் உள்ளங்களில் வெளிச்சம் ஏறும். ஆலயங்களிலும் வீடுகளிலும் மாலையில் விளக்குகள் ஏற்றி உணவுகள் படைத்து முருகக் கடவுளை வழிபடுவர்.

இத்திருநாளில் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றும் ஆலயங்களுக்கும் சென்றும் மக்கள் மகிழ்வாக இருப்பர்.

மாணவர்: நிரோஜா.சி
ஆசிரியர்: சிவாநந்தன் சபாரத்தினம்

## ஆயிரம் ஆண்டு நிறைவு விழா

தஞ்சாவூர் தமிழ்நாட்டில் உள்ள முதன்மையான ஒரு நகரம். இது சோழப் பெருமன்னர் காலத்தில் அப்பேரரசின் தலைநகரமாக விளங்கியது. கி.பி 999ஆம் ஆண்டு அருண்மொழித்தேவன் என அழைக்கப்பட்ட இராசராச சோழனால், தஞ்சைப்பெருங்கோவில் கட்டப்பட்டது. கி.பி 1010ஆம் ஆண்டு கட்டட வேலைகள் முடிவுற்றதும் குடமுழுக்கு நடைபெற்றது.

இக்கோவிலின் உயரம் 216 அடியாகும். அடித்தளம் உயர்ந்து கூம்பிய நடுப்பகுதி கலசத்தோடு கூடிய முடி என மூன்று பகுதிகளைக் கொண்டது. கோவிலின் செங்குத்தான அடித்தளம் 82 அடி நீளமும் 82 அடி அகலமும் 50 அடி உயரமும் கொண்டது. அடித்தளத்தின் மேல் 14 அடுக்குகள் கொண்டு கோபுர நடுப்பகுதி நிறுவப் பெற்றுள்ளது. முடிக்கல் 80 தொன் நிறை உடையது. விதானத்தில் கல்லால் ஆன சங்கிலி தொங்க விடப்பட்டிருக்கிறது. 1010ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட இக்கோவிலுக்கு 2010ஆம் ஆண்டோடு 1000 அகவை நிறைவடைந்துள்ளது.

மாணவர்: றமீனா, புஸ்பராஜா
ஆசிரியர்: சாந்தினி ஞானரத்தினம்

# தஞ்சைப் பெரிய கோயில்

தமிழர்களின் வரலாற்றில் பொற்காலம் என சிறப்பிக்கப்படுவது சோழர் ஆட்சிக் காலமாகும். சோழ அரச குலத்திலே இராசராசன் மிகச் சிறந்த ஒரு அரசனாகத் திகழ்ந்தான். இணையற்ற சமயப் பற்றும் கலைத் திறனும் வாய்க்கப் பெற்றிருந்தான். சோழப் பேரரசுக்கு ஏற்பட்ட புகழையும், பெருமையையும், சோழ மன்னனின் சிவத் தொண்டையும், அந்நாளைய சிற்பிகளின் கலைத் திறனையும் எடுத்துக்காட்டிப் பெருமிதத்துடன் வானோங்கி நின்று சைவ சமயத்திற்கும் தமிழருக்கும் பெருமை சேர்த்துக் கொண்டிருப்பது தஞ்சைப் பெருவுடையார் கோயிலாகும்.

தலைநகராம் தஞ்சை மாநகரிலே முதலாம் இராச இராச சோழனின் இறையன்பு, கலைத்திறன் இதயத்தின் விரிவு, அறிவின் ஆழம் ஆகியவற்றை எடுத்தக்காட்டிக் கொண்டு நிமிர்ந்து நிற்கும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் இராச இராச சோழனின் இருபத்தைந்து ஆண்டு ஆட்சியின் 275ஆவது நாள் 1010ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு குட முழுக்குக் கண்டது.

இக்கோயில் 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்ட பரப்பில் 130,000 தொன் எடையுள்ள கருங்கற்களினால் கட்டப்பட்டு சோழப் பேரரசின் பெருமையையும் சீரையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் அழியாச் சின்னமாக இன்றளவும் நிமிர்ந்து நின்று காட்சி தருகின்றது. வெளி நுழைவாயிலை அடுத்து 250 அடி சதுரத்தில் முற்றம் ஒன்று உள்ளது. இதையொட்டி அமைந்திருக்கும் கோயிலின் நுழைவாயில் 16 அடி நீளமும் 13 அடி உயரமும் கொண்டு எழிலாக காட்சியளிக்கின்றது.

கோயிலின் கருவறையின் மேல், வடிவ அமைப்பிலும் அழகிலும் உயரத்திலும் வியப்பூட்டும் சிற்பக் கைத் திறனிலும் உலகப் புகழ்பெற்ற விமானம் உயர்ந்து நிற்கிறது. தன்னைச் சுற்றியுள்ள கட்டட அமைப்புகள் அனைத்தையும் குன்றச் செய்து தான் மட்டும் வானுற ஓங்கி நெடுந் தொலைவுக்கு காட்சியளிக்கும் இவ்விமானத்தின் ஒழுங்கு, மாண்பு, எளிமை, எழில், சிற்பச் சிறப்பு ஆகியவற்றை சொற்களால் விளக்குவது இயலாது. இவ்விமானத்தின் உயரம் 216 அடி. கருவறையின் முன்பு முன் மண்டபம் ஒன்றும், அதற்கு முன் நந்திக் கோயிலும் அமைந்துள்ளன. நந்திக் கோயிலில் அமைக்கப்பட்டுள்ள நந்தி ஒற்றைக் கல்லில் செதுக்கப்பட்ட மிகப் பெரிய நந்தியாகும்.


தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கருவறையின் உயரம் 50 அடி. அதன் மேல் விமானம் நிற்கிறது. கருவறைக்குள் நிறுத்தப்பட்டுள்ள சிவலிங்கத் திருமேனி மிகவும் பெரியது. காண்போர் கண்களையும் நெஞ்சையும் விரிவடையச் செய்வது. சோழப் பேரரசின் செல்வச் செழிப்பினையும், ஆள்புல விரிவாக்கத்தினையும் மட்டுமல்லாது சோழர் கால சிற்பிகளின் கைத்திறனையும் நுண்ணறிவையும், ஆகமப் பயிற்சியையும் எடுத்துக்காட்டுகின்றன தஞ்சைப் பெருங்கோயிலில் வரையப்பட்டுள்ள ஓவியங்கள். விமானம் அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்திக் கோயில் ஆகிய சிறப்பான பகுதிகளைக் கொண்டதாக அமைக்கப்பட்ட இக்கோயிலில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் கண்ணையும் கருத்தையும் கவருவன.

உலகத்தில் பாதுகாக்கப்பட வேண்டிய அருங்கலை சொத்தாக யுனெஸ்கோவினால் அறிவிக்கப்பட்ட சிறப்பைப் பெற்ற தஞ்சைப் பெரிய கோயில் கோபுர நிழல் எந்நேரத்திலும் மண்ணைத் தொடாதவாறு கட்டப்பட்டுள்ளமையும், கோயிலில் நிறுத்தப்பட்டுள்ள பெரும் கருங்கற் தூண்கள் எவ்வாறு கொண்டுவரப்பட்டு நிறுத்தப்பட்டன என்றும் இன்றுவரை நம்மை வியப்புக்குள்ளாக்கும் விடயங்களாகவே உள்ளன.

இவ்வாறான சிறப்புகளையெல்லாம் தன்னகத்தே சுமந்து தமிழர் தம் நுண்ணறிவையும், கலைத் திறனையும் உலக அரங்கிற்கே எடுத்துக்கூறிய தலைக் கோயிலாம் கலைக்கோயில் தஞ்சை பெருவுடையார் கோயில் இந்த ஆண்டு தனது 1000 ஆண்டை நிறைவு செய்து நிமிர்ந்து நிற்கின்றது.

தமிழர் தம் நுண்ணறிவுத் திறம் கூறும் தஞ்சைப் பெரிய கோயில் ஆயிரமாம் ஆண்டு நிறைவு விழா காணும் இவ்வாண்டில் தமிழ் இளையோர் நாமும் நம் இனத்தின் பெருமை காக்க உறுதி பூணுவோம்.

மாணவர்: சிவகிருஷ்ணன் சிவசுந்தரலிங்கம்
ஆசிரியர்: தேன்மொழியாள் கங்காதரன்



# தொலைக்காட்சியின் பயன்கள்



தொலைக்காட்சி மக்களுக்குரிய ஒரு புதுமையான தொழில்நுட்பத் துறையாகும். இது இன்று உலகம் முழுவதிலும் நன்கு வளர்ச்சி பெற்ற ஒரு துறையாக உள்ளது. இதில் பல நன்மைகளும் தீமைகளும் உள்ளன.

தொலைக்காட்சியைப் பார்ப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகளாவன: பல்வேறு வகைப்பட்ட காட்சிகளைப் பார்க்கலாம். எமக்கு விருப்பமான நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். வானிலை, விளையாட்டு, செய்திகள், மற்றும் சிறுவர் நிகழ்ச்சிகள் எனப் பலவற்றை வீட்டில் இருந்தபடியே பார்த்து மகிழலாம். திரைப்படங்களும் பார்க்கலாம். அதிக பணச்செலவின்றி தொடர்நாடகங்கள், போட்டி நிகழ்ச்சிகள் போன்றவற்றைப் பார்க்கலாம். இதனூடாக நிகழ்ச்சிகளைப் பார்த்துச் சுவைப்பதோடு, பல மொழிகளை அறியவும் கற்கவும் உதவும். மேலும் தொலைக்காட்சியினூடாக உடற்பயிற்சி சார்ந்த நிகழ்ச்சிகள், உணவு சார்ந்த நிகழ்ச்சிகள் எமக்கு மிக உதவும் நிகழ்ச்சிகளாகும்.

இவ்வளவு நன்மைகள் இருந்தாலும் தொலைக்காட்சி பார்ப்பதால் தீமைகளும் இருக்கத்தான் செய்கின்றன. செய்தித்தாள் வாசிக்கும் பழக்கம், புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம் என்பன நமது மக்கள் மத்தியில் குறைந்து வருவதற்கு தொலைக்காட்சி ஒரு காரணமாகின்றது. தொடர்ந்து தொலைக்காட்சி பார்ப்பதால் கண் பார்வை குறைகிறது. நம் மத்தியில் பலர் கண்ணாடி அணிந்துள்ளதை அறியும் போது மிக வேதனையாக இருக்கிறது. பிள்ளைகள் தொலைக்காட்சியைப் பார்த்து பொழுதைக் கழிப்பதால் அவர்களது கல்வி பாதிப்படைகிறது. பிழையான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதால் மக்கள் மத்தியில் தவறான நடத்தைகளும், அதனால் சமூகக் குற்றங்களும் அதிகரிக்கின்றன. மேலும் தொலைக்காட்சியைச்சிறுவர் முதல்பெரியோர்வரை அனைவரும் பார்ப்பதால், தமது பொழுதுபோக்காக இவற்றைக் கொள்வதால் அவர்கள் உடற்பயிற்சியில் அக்கறை கொள்வதில்லை. இது அவர்களின் உடற்பருமனுக்கு வழிகோலுவதோடு நோய்களையும் வருவித்து விடுகிறது.

எனவே தொலைக்காட்சியை அளவோடு பார்த்து அதன் நல்ல பயனை மட்டும் பெற்று, வளமாக வாழ நாம் அனைவரும் முனைவோமாக.

மாணவர்: கஜன் திருத்தணிகாசலம்
ஆசிரியை: தேன்மொழியாள் கங்காதரன்

## நான் கண்ட கனடாக் காலநிலை

கனடாவின் காலநிலையை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன இலைதுளிர் காலம், கோடை காலம், இலையுதிர் காலம், பனிக்காலம் என்பனவாகும்.

இப்பொழுது இலை துளிர் காலம் முடிந்து விட்டது. பனிக்காலம் தொடங்கி விட்டது. பனிக்காலம் சிறுவர்களுக்கு மிகவும் பிடித்த காலம். அவர்கள் பூம்பனியில் உருண்டைகள் செய்வார்கள். அவற்றை எறிந்து விளையாடுவார்கள். பூம்பனியால் மனித உருவம் செய்து அழகு பார்ப்பர். வெள்ளைத் துகள்களாக விழும் பூம்பனி எங்கும் கடலாக விரிந்து இருக்கும். இலை உதிர்ந்த மரங்கள், மலைகள் பூம்பனியால் மூடப்பட்டு அழகாகத் தோன்றும். பனிக்காலத்தில் குளிர் அதிகரிக்கும். மக்கள் வெளியில் செல்லும் போது பனிக்கால ஆடைகளை அணிவார்கள். பனிக்காலத்தில் பகல் குறைவாவும் இரவு நீண்டதாகவும் இருக்கும்.

பனிக்காலம் முடிந்ததும் பறவைகளின் ஒலிகள் கேட்கத் தொடங்கும். அவை அதிகாலையில் 'கீச்' 'கீச்' என்று ஆரவாரமாக ஒலியெழுப்பும். மரங்கள் துளிர்க்கும். எங்கும் இளம் பச்சை நிறமாகக் காணப்படும். சூரிய ஒளி உடம்புக்கு இதமாக இருக்கும். இரவு நேரம் படிப்படியாகக் குறையும். சிறுவர்கள் ஓடியாடி விளையாடத் தொடங்குவர். மொட்டுகள் மலரும்.

கோடை காலத்தில் நீண்ட விடுமுறை விடப்படும். சிறுவர்கள் விளையாடி மகிழ்வார்கள். இக்காலத்தில் மரங்கள் பசுமையாகக் காட்சியளிக்கும். பூக்கள் பல வண்ண நிறங்களில் பூத்திருக்கும். மரங்களில் காய்களும் பழங்களும் நிறைந்திருக்கும். பறவைகளின் ஒலிகள் மிக இனிமையாக இருக்கும்.

அடுத்து இலையுதிர் காலம் வரும். பச்சை இலைகள் மஞ்சள் இலைகளாக மாறும். காற்று வீசத் தொடங்கும். இலைகள் மரங்களில் இருந்து உதிர்ந்து வீதிகளில் இறைந்து கிடக்கும். பகல் நேரம் வரவரக் குறையும். இவ்வாறாக கனடாவின் காலநிலை நான்கு விதமாகக் காட்சி தரும்.

நன்றி

மாணவர்: மதுசா செல்வேந்திரன்
ஆசிரியர்: கோமளா திருத்தணிகாசலம்

## நான் 649 நல்வாய்ப்புச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றால்

நான் 649 நல்வாய்ப்புச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றால், எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியாக இருக்கும். கடவுளின் அருளால்தான் நாங்கள் நல்வாய்ப்புச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோம். நானும் எனது குடும்பத்தினரும் நல்ல முறையில் அனைவருக்கும் பயன் பெறும் வகையில் நல்ல திட்டங்களை வகுத்து அப்பணத்தைப் பயன்படுத்துவோம்.

நானும் எனது குடும்பத்தாரும் இலாப நோக்கம் இல்லாத நிறுவனம் ஒன்றை ஆரம்பித்து அதன் மூலமாக ஏழை எளிய மக்களுக்கு எங்களால் முடியக் கூடிய உதவிகளைச் செய்து "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்." என்ற வாசகத்திற்கு அமைய எல்லோருக்கும் நன்மை கிட்டும் வகையில் செய்வேன். எமது தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு வேண்டிய உதவியைச் செய்து எம் மக்களின் தேவைகளைப் நிறைவு செய்வேன்.

தற்போது எமது தாயகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்து எனது நல்வாய்ப்பை அனைத்து மக்களின் நல்வாய்ப்பாக பயன்படுத்துவேன்.

நன்றி

மாணவர்: தீபிகா சிறிதரன்
ஆசிரியர்: கோமளா திருத்தணிகாசலம்

## நான் கண்ட காலைக் காட்சி

அது ஒரு மார்கழித் திங்கள் காலைப் பொழுது. பனி நிறைந்த காலை. காலை 6:30 மணியளவில் அம்மா வந்து என்னை எழுப்பினார். கண்ணைக் கசக்கியபடி மிகவும் சிரமப்பட்டுக் கட்டிலை விட்டு எழும்பி வெளியே எட்டிப் பார்த்தேன். இருள் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருந்தது.

மெல்லிய பனி இன்னும் நிலத்தை நோக்கி சிறுசிறு தூவலாக விழுந்து கொண்டிருந்தாலும் அவற்றையும் மீறி வெளி வந்த கதிரவனின் ஒளி, நிறைந்திருந்த வெண்பனி மேல் பட்டுத் தெறித்து

தக தகவென மின்னியது. பார்க்கும் இடமெல்லாம் வெண்பனி அழகாகப் படர்ந்திருந்தது. கூரைகள், மரங்கள், கம்பங்கள் எங்கும் பனி. ஆங்காங்கே மக்கள் தலையெல்லாம் மூடியபடி நீண்ட காலணிகளை அணிந்த பாதங்களை பனியில் புதைத்து நடந்து கொண்டிருந்தனர். அவ்வாறு நடப்பது அவர்களுக்கு மிகவும் கடினமாக இருப்பது தெரிந்தது.

தூரத்தில் பனி தள்ளும் ஒரு இயந்திரத்தின் ஒலி மெதுவாக ஒலித்தது. முன் வீட்டில் வாகனம் ஆயத்த நிலையில் வைக்கப்பட்டு யாரோ ஒருவர் வாகனத்திலிருந்த பனியைத் தட்டி விட்டுக் கொண்டிருந்தார். இவற்றையெல்லாம் பார்த்தபடி அம்மா கொண்டு வந்த தேநீரை அருந்தியவாறே நானும் பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமானேன்.

நன்றி

மாணவர்: கிருஷாந்த் கோபிகிருஷ்ணா
ஆசிரியர்: கோமளா திருத்தணிகாசலம்

## நான் 649 நல்வாய்ப்புச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றால்

649 நல்வாய்ப்புச் சீட்டு மூலம் நல்வாய்ப்பு என் வீட்டுக் கதவைத் தட்டினால், முதலாவதாக எனது சின்னத்தம்பிக்கு உதவி புரியும் நிறுவனத்திற்குப் பணம் கொடுத்து அவர்கள் சேவை மேலும் சிறக்க உதவுவேன். தமிழீழத்தில் இருக்கும் எனது உறவினரைச் சென்று பார்த்து அவர்களுக்கும் அங்கு போரினால், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு உதவி தேவைப்படும் அனைவருக்கும் என்னாலான உதவிகளைச் செய்வேன்,

எனது பெற்றோருக்கு உள்ள கடன் சுமையை நீக்குவேன். அத்துடன் எனது குடும்பத்தினர் எல்லோரதும் தேவைகளை நிறைவு செய்வதுடன் உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்வேன். நான் படித்த பாடசாலைகளுக்கும், பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் என்னாலான சிறு உதவிகள் செய்வேன்.

எனது தம்பிக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டுதுடுப்பாட்டம். அதில் அவர் சிறந்தபயிற்சி பெறுவதற்குத் தேவையான சகல முயற்சிகளையும் எடுத்து, அவர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரனாகவோ, ஒரு பந்து வீச்சாளனாகவோ வர உதவுவேன்.

முழுப்பணத்தையும் செலவு செய்யாது வங்கியில் சேமித்து, உதவி தேவைப்படுவோருக்கு தேவையான நேரத்தில் உதவுவேன். எவ்வளவு பணமிருந்தாலும் நான் படித்துப் பட்டம் பெற்று ஒரு நல்ல நிலைக்கு வந்து அந்தப் பணத்தை மேலும் பெருக வைத்து எனது நாட்டிற்கும் வீட்டிற்கும் தொடர்ந்தும் உதவுவேன்.

நன்றி

மாணவர்: துஷிதா கோபிகிருஷ்ணா
ஆசிரியர்: கோமளா திருத்தணிகாசலம்

## நான் கண்ட கனடாக் காலநிலை

கனடா வடதுருவத்திற்கு அண்மையிலுள்ள ஒரு நாடாகும். இங்கு நான்கு பருவ காலங்களையும் மிகத் தெளிவாக பிரித்து அறிந்து கொள்ளலாம். அவையாவன பனிக்காலம், இலைதுளிர் காலம், கோடை காலம், இலையுதிர் காலம் என்பனவாகும்.

மார்கழி 22 முதல் பங்குனி 19 வரை பனிக்காலமாகும். இக்காலப்பகுதி மிகவும் குளிர் நிறைந்ததாகவும், குறைந்த பகல் பொழுதைக் கொண்டதாகவும் காணப்படும். பெரும்பாலான நாட்கள் பனிப்பொழிவுள்ளதாக நிலப்பகுதியெங்கும் பனி மூடி எங்கும் வெண்மையாகக் காணப்படும். வெப்பநிலை உறைநிலைக்குக் கீழே -20 இற்கும் அதற்கும் கீழேயும் செல்வதற்கான வாய்ப்புகள் காணப்படும். மரங்கள் இலைகள் எதுவுமின்றி பட்ட மரங்கள் போன்று காணப்படும்.

இதைத் தொடர்ந்து வரும் இலைதுளிர் காலம் ஆனி 20ம் திகதி வரை நீடிக்கும். பெயருக்கேற்ப இலைகள் துளிர்க்க ஆரம்பிக்கும் காலம் இக்காலம். வெப்பநிலை அதிகரித்து 8 இலிருந்து 15 வரை உயரும். குளிர்காலத்தில் இடம் பெயர்ந்து சென்ற பறவைகள் திரும்பி வர ஆரம்பிக்கும். உறங்கிக் கொண்டிருந்த உயிரினங்கள் உறக்கம் நீங்கி வெளியே வரும். மக்களின் மனநிலையும் புத்துணர்ச்சி பெற்று கோடை காலத்தை எதிர்கொள்ள ஆரம்பிக்கும்.

அடுத்து வருவது கோடை காலமாகும். இது புரட்டாதி 22ந் திகதி வரை நீடிக்கும். நீண்ட பகல் பொழுதையும் நீண்ட பாடசாலை விடுமுறையையும்

கொண்ட இக்காலத்தை பெரும்பாலானவர்கள் வெளியிலேயே கழிப்பர். வெப்பநிலை உயர்ந்து எங்கும் பசுமையாகக் காட்சியளிக்கும். வெப்பநிலை மிகவும்உயரும்நாட்களில்மக்கள்நீர்நிலைகளையும் கடற்கரைப் பகுதிகளையும் மக்கள் நாடிச் செல்வர்.

இறுதியாக வரும் இலையுதிர் காலத்தில் வெப்பநிலை குறைந்து செல்ல பச்சை நிறமாகவிருந்த மரங்கள் நிறம் மாறி சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள் என பலவர்ணங்களைக் கொண்டு மிக அழகாகக் காட்சி தரும். மரங்களிலிருந்து இலைகள் உதிரத் தொடங்கி இறுதியில் கிளைகள் மட்டும் காணப்படும். இவ்வாறாக கனடாக் காலநிலை மாறுபட்டுக் காணப்படும்.

நன்றி

மாணவர்: கிருஷாந்த் கோபிகிருஷ்ணா, துஷிதா கோபிகிருஷ்ணா

ஆசிரியர்: கோமளா திருத்தணிகாசலம்



## நான் கண்ட கனடாக் காலநிலை

கனடாவின் காலநிலையை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன இலைதுளிர் காலம், கோடை காலம், கோடை காலம், இலையுதிர் காலம் மற்றும் பனிகாலம் ஆகும்.

இலைதுளிர் காலம் என்பது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். இலையுதிர் காலத்திலிருந்து பனிக்காலம் வரை பட்ட மரங்கள் போல தென்பட்ட மரங்கள், செடிகள், கொடிகள் அனைத்தும் மெல்ல மெல்ல துளிர் விடத் தொடங்கும். ஒவ்வொரு நாளும் ஒரு சீரான வளர்ச்சியுடன் இலைதுளிர்வது பார்ப்பதற்கு அழகாக இருக்கும். பல கிழங்கு வகை பூக்கள் இந்தக் காலத்தில் தான் பூத்து குலுங்கும். இக்காலத்தில் வெவ்வேறு நாடுகளில் இருந்து வித விதமான பறவைகள் இங்கு பறந்து வந்து, கூடுகள் கட்டி, முட்டைகள் இட்டு, தமது இனத்திற்கான விரிவாக்கத்தினைச் செய்யும். இக்காலத்தில் இம் மரங்களில் இருக்கும்பறவைகள் காலையில் எழுப்பும் ஒலி கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். பனிக்காலத்தில் வெள்ளைப் பாய் விரித்தது போல் இருந்த நிலப்பரப்புகள் இக்காலத்தில் பச்சைப் பாய் விரித்தது போல் இருக்கும். வெப்பநிலையும் சற்று குளிரானதாகவும் மிகவும் இதமானதாகவும் இருக்கும்.

வெப்பநிலை மெல்ல மெல்ல உயர்ந்து செல்ல, கோடைகாலத்தில் வெப்பநிலை மிகவும் உயர்வாக இருக்கும். கூடுதலான வீடுகளில் வீட்டுத் தோட்டம் செய்து மக்கள் பயன் பெறுவர். இக்காலத்தில் சூரியன் மறையும் நேரம் இரவு ஒன்பது முதல் பத்து மணி வரை செல்லும்.

மெல்ல மெல்ல வெப்பநிலை குறைய மரங்களில் இருக்கும் இலைகள் நிறம் மாறிக்கொண்டு வருவதைப் பார்க்க மிகவும் அழகாக இருக்கும். ஒவ்வொரு விதமான மரங்களின் இலைகளும் வெவ்வேறு நிறங்களில் தோற்றமளிக்கும். இதமாக வீசத் தொடங்கும் காற்றில் இலைகள் எல்லாம் தரையில் பரந்து காணப்படும். மரங்களும் களை இழந்து பட்ட மரங்கள் போல காட்சி தரும்.

வெப்பநிலை குறைந்து செல்ல குளிர் கூடத் தொடங்கும். குளிர் தொடங்கி பனிக்காலம் வந்தவுடன், பனிப்பொழிவு ஆரம்பிக்கும். நிலத்தில் விழுந்த பனி வெள்ளைப பாய் விரித்தது போல காட்சியளிக்கும். பனி, குளிர் கூடியும் குறைந்தும் பனிப்புயல், குளிர் நிலை எச்சரிக்கை என்று வேறு வேறு விதமாக காலநிலை மாறி மாறிக் காணப்படும். மக்கள் குளிரிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அதற்கேற்ற ஆடைகளை அணிவார்கள். இவ்வாறாக கனடாவின் காலநிலை வேறுவகைப்படும்.

நன்றி.

மாணவர்: தீபிகா சிறிதரன்

ஆசிரியர்: கோமளா திருத்தணிகாசலம்

அம்மாவை மிகவும் பிடிக்கும். ஆனால் எங்கள் தாய் மொழியாம் தமிழை நாம் எங்கள் தாயைவிட மேலாக விரும்பிப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். எங்கள் அம்மாவிற்கு ஒரு துயரம் வந்தால் நாங்கள் துடிப்பதை விட அதிகமாக தமிழிற்கு ஒரு துன்பம் வந்தால் நாங்கள் துடித்தெழ வேண்டும்! தமிழைப் பழிப்பவரைக்கோபம்கொண்டெழுந்துதட்டிக்கேட்க வேண்டும். தமிழை அழிக்க துணிபவரை ஒருநாளும் சும்மா விடக்கூடாது!


தமிழின் பெருமை அதன் தொன்மையிலில்லை. அதன் தொடர்ச்சியிலேயே உள்ளது. தங்கத்தமிழும் தமிழீழ மண்ணும் எங்கள் இரு விழிகள்!

தமிழைப் போற்றுவோம்! நல்ல தமிழராய் வாழ்வோம்! தமிழரோடு தமிழில் பேசி தரணியில் தமிழ் நிலைத்து நீடுழி வாழ நல்ல தமிழர்களாக உழைப்போமாக!

வாழ்க தமிழ்! வளர்க தமிழர்!

மாணவர்: திவ்யா பிரபாகரன்

ஆசிரியர்: இந்திரா திரு



## காலைக் காட்சி

இறைவன் படைப்புகள் ஆயிரம், அதில் ஒவ்வொன்றுமே ஒவ்வொரு வகை. நீல நிற வானில் செக்கச் செவ்வேல் என தகதகவென்று அடிவானம் சிவக்க, சந்திரன், நட்சத்திரங்களை தன் ஒளியால் மறைந்து வெளிவரும் சூரிய உதயம் காலைக் காட்சியின் முதன்மையான சிறப்பாகும். இது இறைவனின் படைப்புகளில் ஒரு அற்புதம் ஆகும்.

சேவல் கூவி பொழுது விடியும் என்பது போல, சூரியனை கூவிக் கூவி அழைத்து எல்லோரையும் எழுப்பி விடும் சேவல்களின் அழைப்புகளும், பறவைகளில் நாங்களும் சளைத்தவர்கள் இல்லை, எங்களுக்கும் காலை உதயத்தில் பங்குள்ளது என்று கரையும் காகங்களும், கடலோர அலைகளின் ஆனந்த சந்தங்களும், காலையில் உற்சாகத்துடன் ஏலேலோ ஏலசா போடும் மீனவர்களின் கூச்சல்களும், தென்னங்கீற்றுகளில் காற்று அமைக்கும் இனிய இசைகளும், காலை நேரத்துக் காற்றில் அசைந்து ஆடும் புது பூக்களின் அசைவுகளும், அத்துடன் பரவும் மலர்களின் நறுமணங்களும், பாலாடை போல் சீருடை அணிந்து செல்லும் மாணவக் கூட்டமும், காலைப் பொழுதைக் கலகலக்க வைக்க, நாட்டை பட்டினியில் இருந்து காப்போம் என்று கையில் அரிவாளுடன் வீரநடை போடும் உழவர்களும், அவர்களின் வரவை ஆவலோடு எதிர்ப்பார்த்து நெற்கதிர்களுடன் அசைந்தாடும் வயற்கதிர்களும், நாங்கள் இழந்த நாட்டையும் அதன் காலைப் பொழுதையும் எங்களுக்கு நினைவு படுத்துகிறது.

மாணவர்: நிசான் பற்றிசன்

ஆசிரியர்: அரியதவராணி இராசநாதன்


வள்ளுவர்

# வன்னியின் சிறப்புகள்

வடக்கே யாழ்ப்பாணத்தையும், தெற்கே அநுராதபுரத்தையும், கிழக்கே திருகோணமலையையும், மேற்கே மன்னாரையும் எல்லைகளாகக்கொண்ட பெருநிலப்பரப்பே வன்னி எனப்படும். பழந்தமிழ் மக்களின் முதன்மையான பகுதி வன்னியாகும். இதற்குப் பல சான்றுகள் உண்டு. அநுராதபுரமும் தமிழர் பிரதேசமென "இலங்கையில் வரலாற்று உறவுகள்" என்ற நூல் கூறுகிறது.

பெரிய புளியங்குளத்தில் காணப்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் சில தமிழ் எழுத்துகளைக் கொண்டிருந்தமையால் அதிலிருந்து அங்கு நிலவிய தமிழ் சிற்றரசுகளின் வாணிபச் சிறப்பையும், ஆட்சிச்சிறப்பையும் அறிய முடிகிறது. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம், தொண்ணூறாம் ஆண்டுகளில் பூநகரியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் போது பல நாடுகளுக்குரிய காசுகள், மட்பாண்டங்கள், பிராமிக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கிரேக்க, உரோம, சீன, அரேபியக் காசுகளும் சோழ, பாண்டிய, யாழ்ப்பாண அரசுகளின் காசுகளும் கி.மு ஐந்தாம் நூற்றாண்டுக்குரிய காசுகளும் அடங்கும்.

பொன்பரிப்பு, மாதோட்டம், குஞ்சுப்பரந்தன் ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள், எலும்புக் கூடுகள் இலங்கையின் பழங்குடியினர் தமிழர் என்பதற்குச் சான்றுகளாக அமைந்துள்ளன. திராவிட இனத்துக்குரிய எலும்புக் கூடுகள் வன்னியில் கண்டெடுக்கப்பட்டமைக்கு மேலே கூறப்பட்ட சான்றுகளின் மூலம் வன்னி ஒரு மிகப் பழைமையான நகரம் என்பதையும் இங்கே வெளிநாட்டவரின் வருகையும் அவர்கள் மூலமாக






வணிகத்தின் சிறப்பும், வன்னி மன்னர்களின் ஆட்சிச்சிறப்பும் வெளிப்படையாகிறது.

மேற்குறிப்பிட்ட சான்றுகள் அனைத்தும் வன்னி மண்ணில் தமிழர்கள் தான் பழங்குடியினர் என அறிய முடிகிறது. தனக்கு எதிராக நடந்த அடக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பினை வெளிப்படுத்தியமையாலும் வீரம் மிக்க போர் வலிமையாலும் வீர உணர்வினாலும் வன்னிமண் 'அடங்காப்பற்று" என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றது என அறிகிறோம்.

மாணவர்: அபிநயா திருச்செல்வராசா

ஆசிரியர்: தேன்மொழியாள் கங்காதரன்

# கனடாவில் இளையோர் நிலை

கனடா ஒரு பல்பண்பாட்டு நாடாகும். இங்கு பாலர் முதல் முதியோர் வரை எல்லோருக்கும் சம உரிமையும் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது. இளையோர் கவனத்தைத் திசைதிருப்பும் வகையில் உலகில் பல வழிகள் உண்டு. பொருளாதாரம், அரசியல், பொழுதுபோக்கு, சினிமா, கல்வி, மதவழிபாடு, மொழி, விளையாட்டுத்துறை என்பன அவற்றுட் சிலவாகும்.

சமூகத்தைப் பாதிக்கும் அரசியலில் இளையோர் இணைந்து கொண்டு ஊர்வலங்கள், போராட்டங்களில் ஈடுபட்டு அவற்றை முகம் கொள்கிறார்கள்.

எமது சமுதாயத்தில் கூடிய அளவு அரசியலில் ஈடுபடும் இளையோர்கள், அவர்களுடைய எதிர்காலத்தில் பெரிய பாதிப்பை அடைகிறார்கள். இதனால் உயர்தரப் பாடசாலை, பல்கலைக்கழகத்தில் படிக்கும் மாணவர்கள் கல்வித்துறையில் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கல்வி பாதிக்கப்படுவதனால் வேலை வாய்ப்பையும் இழக்கிறார்கள். படிப்பு முடிந்து நல்ல வேலை எடுத்தபின் அரசியலில் ஈடுபட்டால் அவர்கள் வாழ்க்கை பாதிக்கப்படாது.

பிள்ளைகளுக்கு விளையாட்டு ஒரு பொழுது போக்காகும். எமது இனத்தில் இருக்கும் எல்லா விளையாட்டுக் கழகங்களும் அரசியல் சார்பில் இருப்பதால் எமது சமுதாயத்தில் உள்ள எல்லாப் பிள்ளைகளும் எம்மவர் விளையாட்டுக் கழகங்களில் பங்குபற்ற முடியவில்லை. இதனால் மற்ற சமூகத்தில் இருக்கும் விளையாட்டுக் கழகத்துக்கும், அரசு சார்புடைய நிறுவனத்துக்கும் (Recreation Centre) போகிறார்கள். இதனால் அதிக அளவு தமிழ் பிள்ளைகள் எமது தமிழ் சமூக நிறுவனத்தில் இணையும் வாய்ப்பை இழக்கிறார்கள். இதனால் மற்ற சமூகத்துடன் சேர்ந்து அவர்களின் பழக்க வழக்கங்களைப் பின்பற்றும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

இந்நாட்டில் உள்ள கல்வி கற்பிக்கும் முறையும் பிள்ளைகள் சுயமாக இயங்கும் தன்மையைப் கற்பிப்பதால் அவர்கள் சுயமாக இயங்குவதற்கு தைரியத்தைக் கொடுக்கிறது. இதனூடாகப் பல பிள்ளைகள் பெற்றோருடன் நெருக்கமாக இருக்கும் வாய்ப்பை இழக்கிறார்கள். இதனால் இளைஞர்கள் பெற்றோருடனோ, சகோதரர்களுடனோ, உறவினருடனோ மனம் விட்டுப் பேசுவதில்லை. பல பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் உறவினருடன் உள்ள நெருக்கமான உறவு நிலை, பிறரை மதிக்கும் தன்மை என்பன இல்லாமல் போகின்றன.

இங்குள்ள இளைஞர்கள் பலர் பெற்றோர் சொல் கேட்டு நடப்பதில்லை. அவர்களை மதிப்பதுமில்லை. தங்கள் விருப்பப்படி வாழ முனைகிறார்கள். தங்கள் விருப்பப்படி நடக்கிறார்கள். கடைவீதிகளில் குழுக்களாகத் திரிகிறார்கள். இது தீய செயல்கள் செய்யும் குழுக்களுடன் சேரக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன.

இளைய தலைமுறையினர் பலர் நமது பண்பாட்டுச் சடங்கு, சம்பிரதாய விழாக்களுக்கு வருவதில்லை. கோவில்களுக்குப் போவதில்லை. சமய சம்பந்தமான சொற்பொழிவு கேட்பதில்லை. இதனால் அவர்களுக்கு சமய சம்பந்தமான அறிவு கிடைப்பதில்லை. சில இளைஞர்கள் இதற்கு மாறாக கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் பண்ணி, சடங்குகள், மற்றும் பண்பாட்டு விழாக்களுக்குச் செல்பவர்களும் இருக்கிறார்கள். இயல், இசை, நாடகத்தில் ஈடுபட்டு தமது திறமையைக் காட்டி, பல சாதனைகளைப் படைத்த இளைஞர்களும் எம்மிடையே இருக்கிறார்கள்.

75வீதமான இளையோர் சமய பண்பாட்டு நிகழ்வுகளுக்கு வருவதில்லை. பலர் எமது பண்பாடு தெரியாமல் வளர்கிறார்கள். மற்ற சமுதாயத்தின் பண்பாட்டில் வளரும் இளைஞர் தான் அதிகமாக உள்ளனர்.

இதனால் பழைய தலைமுறைக்கும் புதிய தலைமுறைக்கும் இடையில் உள்ள "தலைமுறை இடைவெளி" (Generation Gap) அதிகரிக்கிறது. இங்குள்ள வசதி வாய்ப்புகளால் பல பிள்ளைகள் திசைமாறிப் போவதற்கு ஏதுவாகிறது.

